இறக்கை: 10 இறகு: 6

# காக்கைச் சிறகினிலே

இலக்கிய மாத இதழ்

காக்கை கரவா கரைந்துண்ணும்

ஜூன் 2021 | விலை ₹40



## கொரோனாவை ஒழிக்கும் கூட்டுச் சிகிச்சைமுறை!

கவனம் கொள்ளுமா தமிழ்நாடு அரசு?

மருத்துவர் அருள் அமுதன்

## வந்துவிட்டார் ஸ்டாலின்... விடியல் தருவாரா?

நினைவேந்தல்


க. சந்திரசேகரன்
muhilnilavu@gmail.com

# அப்படியா...!



**கா**க்கை இதழை 2011இல் தொடங்கியபோது பரவலாக வாசிப்பாளர்களிடத்திலே கொண்டுபோய்ச் சேர்க்க வேண்டும் என்பதற்காக, தமிழகத்திலுள்ள சுமார் 300 வாசிப்பாளர்களின் பட்டியலை எடுத்து அவர்களுக்கு ஒரு ஐந்து ஆண்டுகளாக இதழை இலவசமாக அனுப்பிக் கொண்டிருந்தோம். வெகு சிலரைத் தவிர இதழ் கிடைத்தது என்கிற தகவல்கூட பலரிடமிருந்து வரவில்லை. பின்னர் அவர்களுக்கு இதழ் அனுப்புவதை நிறுத்தினோம். சிலர் அமைதியாகிவிட்டார்கள். சிலர் சந்தா செலுத்தி இதழைத் தருவித்தார்கள். வாசிப்பாளர்களிடத்திலேயே சிற்றிதழ்களுக்கு இருக்கிற மரியாதை அவ்வளவுதான்.

ஆனால், எழுத்தாளர் கி.ராஜநாராயணன் அப்படி அல்ல. படைப்பில் உச்சம் தொட்டவர்; கிராமிய வாழ்வியலை மக்கள் தமிழில் பதிவு செய்தவர்; எழுத்துலகில் பலருக்கு முன்னத்தி ஏராக இருந்தவர்; காக்கையை முதன்முதலில் அங்கீகரித்து கரிசல் இலக்கிய விருது தந்தவர். எழுத்தாளர்களிடத்தும் படைப்பாளர்களிடத்தும் வாசகர்களிடத்தும் தொடர்ந்து உரையாடல் செய்து கொண்டிருந்தவர். சாகித்திய அகாதமி உள்ளிட்ட உயரிய விருதுகளைப் பெற்றவர் எனத் தமிழ்மக்களால் கொண்டாடப்பட்ட கி.ரா. இலக்கிய உலகத்திற்கு அப்பாலும் தனது பத்திரிகை வாசிப்பை, கவனத்தை ஆழப்பதித்தவர்.



இதழ் கிடைத்தது கிடைக்கவில்லை என்பதை அவர்களுக்கும் உடனுக்குடன் அஞ்சல் அட்டையில் தகவல் தெரிவித்துவிடுவார்.

நிலவளம் இதழின் உதவி ஆசிரியராக, பொறுப்பாசிரியராக ஆசிரியராக சுமார் 33 ஆண்டுகள் அந்த நிறுவனத்தில் பணியாற்றிய காலத்தில் அந்த இதழுக்கென்று ஒரு முகமதிப்பை ஒரு அடையாளத்தை என்னால் உருவாக்கவே முடியவில்லை. அது, அரசு அதிகாரிகளின் கீழ் எழுதுகிற எழுத்தர் பணியாக இருந்ததே தவிர எழுத்தாளர் பணியாக இருக்கவில்லை. தலைமைப் பதவிக்கு வருகிற அதிகாரிகள் என்ன நினைக்கிறார்களோ அதை மட்டுமே செய்ய வேண்டும். அதைத்தாண்டி எதையாவது செய்ய நினைத்தால், அவர்கள் அளிக்கிற குறிப்பாணைகளுக்கும் குற்றச்சாட்டுக் குறிப்பாணைகளுக்கும் விளக்கம் அளித்தே பாதிக்காலம் கழிந்துவிடும். எனவே, அவர்கள் கிழித்த கோட்டுக்குள்ளேயே செயல்பட வேண்டிய தேவை இருந்தது.

அத்தி பூத்தாற்போல சுந்தரராசன் என்கிற கூடுதல் பதிவாளர் ஒருவர் அந்நிறுவனத்தின் தலைமைப் பொறுப்புக்கு வந்தார். நல்ல வாசகர்; கொஞ்சம் வாசிக்கக் கூடியவர். பதவியேற்ற சில மாதங்களிலேயே நிலவளம் மீது கவனம் கொண்டார். விவசாய வாழ்வியலை மையமிட்ட கதைகளையும் வாங்கிப் பிரசுரியுங்களேன்... என்றும் ஊக்கம் தந்தார். அந்த நல்வாய்ப்பைப் பயன்படுத்தி பா. செயப்பிரகாசம், பூமணி, சோ. தர்மன், சு. சமுத்திரம், திலகவதி, மேலாண்மை பொன்னுசாமி, கொ. மா.கோதண்டம் உள்ளிட்ட எழுத்தாளர்களிடமெல்லாம் கதைகளைப் பெற்று வெளியிட்டு வந்தேன்.

நிலவளத்தில் பன்னிரண்டு இதழ்களுக்குமேல் ஓவியர் மருதுவின் மகத்தான ஓவியங்களுடன் 'கிராமங்களின் கதை' என்கிற தலைப்பில் பா.செயப்பிரகாசம் எழுதிய தொடர்தான் பின்னர் 'தெக்கத்தி ஆத்மாக்கள்' எனும் நூலாக வெளிவந்தது. அந்த வகையில் கி.ரா. அவர்களிடமும் ஒரு கதை கேட்டேன். முன்பின் பழக்கமில்லை; பேசியதில்லை; பார்த்ததுகூட இல்லை. 'ரொம்பக் காலத்துக்கு முன்னாலேயே உங்க பத்திரிகைய பாத்துருக்கம்யா... செயப்பிரகாசம், பூமணி எழுத்தெல்லாம்கூட பார்த்தேன். அரசாங்கப் பத்திரிகையில எங்க எழுத்தெல்லாம் போடனுமுன்னு நினைக்கிறீங்களே.. பிறகென்ன...? உங்களுக்கு ஒன்னு எழுதித்தாரேன்...' என்றார்.

அப்படி அவர் நிலவளம் இதழுக்காக எழுதிய கதைதான் 'அப்படியா'. 2002 மே இதழில் வெளியானது. 'கீல்வாதம் வந்து மூட்டுக்கால் வீங்கி நடக்க முடியாத பெரியவர் ஒருவர் வேரோடு தோண்டி எடுத்த வேப்பமரத்து விறகில் சுட வைத்த தண்ணீரைக் குளித்து வர கீல்வாதம் குணமாகியதாக' அந்தக் கதை முடியும். அவ்வளவு அற்புதமான எழுத்து.

கதையைப் பிரசுரித்துவிட்டு அதற்கான கௌரவத் தொகையாக ரூ. 150 மட்டும் அவருக்குக் காசோலை மூலம் அனுப்பி இருந்தேன். காசோலையைப் பெற்றுக்கொண்டவுடன் அவர் பேசியதுதான் இன்னும் மறக்கமுடியவில்லை. 'நூத்தம்பது ரூபா அனுப்பியிருந்தீக. ரொம்பச் சந்தோசம். ஆனா என்னாட்டம் எழுத்தை மட்டுமே வருமானமா கொண்டிருக்கிறவங்களுக்கு இது சொற்பமான தொகை. முடிஞ்சா கொஞ்சம் உயர்த்திக் குடுங்க'.

மனசு வலித்தது. எவ்வளவு பெரிய எழுத்தாளர்? இவ்வளவு எளிமையாய் ஒரு கோரிக்கை வைக்கிறாரே என நெகிழ்ந்து போனேன். அடுத்த நாளே தலைமை அதிகாரியைச் சந்தித்து விவரத்தை எடுத்துச் சொன்னேன். நூற்றைம்பது என்பதை இருநூற்றைம்பதாக உயர்த்தி ஆணையிட்டார். அந்த ஆணையை நடைமுறைப்படுத்தத் தொடங்குவதற்குள் அந்த அதிகாரி இடப்பெயர்வில் வேறு பணிக்குப் போய்விட்டார். புதிய அதிகாரி வந்தார். 'அரசாங்கப் பத்திரிகை, அதுவும் விவசாயப் பத்திரிகை. அதில் விவசாயிகளைப் பற்றி மட்டும் எழுதினால் போதும். கதையெல்லாம் எதற்கு? என்றார். முடிந்தது கதை.

காக்கைச் சிறகினிலே
காக்கை கரவா கரைந்துண்ணும்

இறக்கை: 10 இறகு: 6

திருவள்ளுவராண்டு 2053

ஆனி
ஜூன் 2021

ஆசிரியர்
வி. முத்தையா
9841457503

பொறுப்பாசிரியர்
க. சந்திரசேகரன்
9715146652

ஆசிரியர் குழு
இரா. எட்வின்
முகிலன்
அமரந்த்தா
கசன்

தொடக்க கால நெறியாளர்கள்
கி. பி. அரவிந்தன்
வீர. சந்தானம்

நெறியாளர்கள்
டிராட்ஸ்கி மருது
க. பஞ்சாங்கம்
கே. எம். வேணுகோபால்

புலம்பெயர் நாடுகளுக்கான
தொடர்புக்கு:

கனடா:
வி. மகேந்திரன்
V. Mahenthiran
Mahenthiran_v@hotmail. com

ஐரோப்பா:
க. முகுந்தன்
K. Mukunthan
kmukunthan@gmail. com

காக்கையில் வெளியாகும் கதை, கவிதை மற்றும் கட்டுரைகளின் கருத்துகள், கட்டுரையாளர்களின் கருத்தாகும். காக்கையின் கருத்தாகாது.

# வந்துவிட்டார் ஸ்டாலின்... விடியல் தருவாரா?



தமிழ்நாட்டில் திராவிட இயக்க அரசியலை எந்தவிலை கொடுத்தாவது, கட்டுப்படுத்திட வேண்டும் என்கிற வெறிகொண்டு, தேர்தல் களத்தில் இட்டுக்கட்டிய பொய்ப் பிரச்சாரங்களையும் பலமுனைப் போட்டிகளையும் கடுமையான எதிர்ப்புகளையும் உருவாக்கிய கெடுமதியாளர்களின் தந்திரத்தை தவிடு பொடியாக்கிக் காட்டியிருக்கிறார்கள் தமிழ்நாட்டு மக்கள்.

தனது நீண்ட கள அனுபவங்களாலும் ஐம்பது ஆண்டுகால அரசியல் சாதுரியத்தாலும் அத்தனை எதிர்ப்புகளையும் புறந்தள்ளி களத்தில் மிகுந்த கவனத்துடனும் நிதானத்துடனும் உறுதியான, சனாதனத்துக்கு எதிரான, சனசாயக, சகோதர சக்திகளை நம்பிக்கையான கூட்டாளிகளாய் ஆக்கிக் கொண்டதன் மூலம் வெற்றிக்கோட்டை எளிதாகத் தொட்டிருக்கிறார் திரு. முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் என்பதும் முக்கியமானது.

அதுமட்டுமல்ல, திராவிட இயக்கத்தில் வெற்றிடம் என்பதே இருக்காது; அடுத்தடுத்த தலைமுறைகள் அதை இட்டு நிரப்பிக் கொண்டே இருப்பார்கள்

காக்கைச் சிறகினிலே
காக்கை கரவா கரைந்துண்ணும்

**ஒவ்வொரு மாதமும் 1ஆம் தேதி உங்கள் கைகளில்**

ஒவ்வொரு மாதமும்
29 அல்லது 30ஆம் தேதியில்
'காக்கைச் சிறகினிலே'
அஞ்சல் செய்யப்படுகிறது.
5ஆம் தேதிக்குள்
இதழ் கிடைக்கப்பெறாதவர்கள்
தொடர்புகொள்ள வேண்டிய
செல்பேசி எண்: **98414 57503**

**உறுப்பினர் கட்டணம்**

தனி இதழ் விலை.......................... ரூ. 40
ஆண்டுக் கட்டணம்....................... ரூ. 400
இரண்டு ஆண்டுக் கட்டணம்....... ரூ. 750
ஐந்தாண்டுக் கட்டணம்................. ரூ. 2000
மாணவர் சந்தா ................................ ரூ. 300

(மாணவர்கள், கல்வி நிறுவனத் தலைவர் அல்லது துறைத் தலைவர் சான்றிதழோடு விண்ணப்பிக்க வேண்டும்)

காசோலைகள்,
வங்கி வரைவோலைகள் அனைத்தும்

KAAKKAI,
A/c No. **60111010005660**
CANARA BANK,
TRIPLICANE, CHENNAI - 5.
IFSC: **CNRB0016011**

என்ற பெயருக்கு, சென்னையில் மாற்றத்தக்கதாக அனுப்ப வேண்டும். பணவிடை (மணியார்டர்) மூலமும் சந்தா செலுத்தலாம்.

**வெளிநாட்டு உறுப்பினர் கட்டணம்**

ஆண்டுக் கட்டணம்........................ **$ 40**

உறுப்பினர் கட்டணத்தை

KAAKKAI,
A/C NO. **60111010005660**
CANARA BANK,
TRIPLICANE, CHENNAI - 5.
என்ற பெயருக்கு, சென்னையில் மாற்றத்தக்க வகையில் அனுப்ப வேண்டும்.

**தொடர்பு முகவரி:**

காக்கை, 288, டாக்டர் நடேசன் சாலை,
திருவல்லிக்கேணி, சென்னை-600 005.
செல்பேசி: 98414 57503,
தொலைபேசி : 04428471890
மின்னஞ்சல்:
**kaakkaicirakinile@gmail.com**
முகநூல்:
**www.facebook.com/kaakkai.cirakinile**


என்பதையும் அது ஒரு வரலாற்றுத் தொடர்ச்சி என்பதையும் தனது ஆளுமை மிக்க தலைமைத்துவத்தால் அரசியல் எதிரிகளுக்கு மெய்ப்பித்துக் காட்டியிருக்கிறார் மு.க. ஸ்டாலின்.

கடும் நெருக்கடியான நேரத்தில் ஆட்சியதிகாரத்துக்கு வந்திருக்கிற மு.க. ஸ்டாலின் அவர்களின் முன்னால் நின்றுகொண்டிருக்கும் மிகப்பெரிய பிரச்னை கொரோனா. இந்தநோய், குடும்பத்தில் ஒருவரைத் தாக்கிவிட்டால் குடும்பத்தையே காவு கேட்கும் கொடிய வகைப் பெருந்தொற்று என்பதால் தமிழ்நாடு முழுவதும் ஓயாத அழுகைக்குரல் ஒலித்துக்கொண்டேயிருக்கிறது. பெருந்தொற்றை கட்டுக்குள் கொண்டுவர அரசு எடுத்துவரும் தொடர் நடவடிக்கைகள் திருப்திதருவதாக சென்னை உயர்நீதிமன்றம் கருத்துத் தெரிவிப்பது ஆட்சிக்குக் கிடைத்திருக்கிற முதல் அங்கீகாரம்.

பெருந்தொற்றுக்குத் தேவையான மருந்துகளையும் தடுப்பூசிகளையும் பெறுவதற்கு ஒன்றிய அரசை மட்டுமே நம்பிக் கொண்டிருக்காமல் உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் உள்ள உற்பத்தி நிறுவனங்களிடமிருந்தே நேரடி கொள்முதல் செய்வதற்கான பன்னாட்டு விலைப்புள்ளி முறைக்கு நகர்ந்திருப்பதன் மூலம் அரசு தனது செயல் வேகத்தில் அடுத்த கட்டப் பாய்ச்சலுக்குத் தயாராகி விட்டதை உணர்த்துகிறது. ஒரு மாநிலத்தின் நலனை முன்னிறுத்துகிற அரசியல் தலைவர் ஒருவர், தமது மக்களைக் காப்பாற்ற எந்த எல்லைக்கும் போகமுடியும் என்பதை உணர்த்துகிற நகர்வு இது.

இதே போன்றதொரு பாய்ச்சலை அனைத்துத் துறைகளிலும் முதல்வர் வெளிப்படுத்த வேண்டும். குறிப்பாக கல்வி, மருத்துவம், இடஒதுக்கீடு, வேலைவாய்ப்பு, வேளாண்மை தொழில்துறை உள்ளிட்ட துறைகளில் மாநில அரசு இழந்து நிற்கிற உரிமைகள் அனைத்தையும் மீட்டெடுக்க வேண்டும். அந்த மீட்டெடுப்பு வெறும் அதிகார கைமாற்றம் என்பதாக மட்டுமில்லாமல் மாநில சுயாட்சிக்கான உரிமைகளை நிலைநிறுத்துகிற வலிமையான அரசியல் முடிவுகளாக அவை வலுப்பெற 'மாநிலத்தில் சுயாட்சி ஒன்றியத்தில் கூட்டாட்சி' என்கிற உயிர்ப்பான முழக்கம் மீண்டும் முன்னெடுக்கப்பட வேண்டும். நாடு தழுவிய வகையில் இதற்கான அரசியல் முன்னெடுப்பை அரசியல் களத்தில் கொண்டுவந்து நிறுத்துவதன் மூலம் அதை மாநிலங்களின் உரிமைக் குரலாக ஓங்கி ஒலிக்கச்செய்ய வேண்டும்.

**மருத்துவர் அருள் அமுதன்**
arul.amuthan@manipal.edu

பத்தாம் ஆண்டு சிறப்புக் கட்டுரை

# கொரோனாவை ஒழிக்கும் கூட்டுச் சிகிச்சைமுறை!

## கவனம் கொள்ளுமா தமிழ்நாடு அரசு?

**என் உடம்பு எனக்கு கோவில் என்றால், என் உயிர் என்னுள்ளே குடிகொண்டிருக்கும் கடவுள் (சிவம்) என்றால், அந்தசிவம் போனபிறகு நான்சவம் ஆவேன். இதைப்போலத்தானே ஒவ்வொரு மனிதனும் கடவுள் குடிகொள்ளும் நடமாடும் கோவில்கள். எனவே அத்தனை கோவில்களையும், அத்தனை மனித உயிர்களையும் மதிக்க வேண்டும் என்ற சமத்துவ சிந்தனையை முதலில் விதைத்த சிந்தனைவாதிகள் சித்தர்கள்.**

உலகப்போர்கள் வந்து பல ஆண்டுகள் ஆயிற்று – அதன் விளைவுகள் எப்படி இருக்கும் என்று பார்க்கும் வாய்ப்பு இன்று!

பக்தியின் ஆழத்தை இறைவன் சோதனை செய்த நிகழ்வுகள் புராண நூல்களில் மட்டுமே வாசித்திருக்கிறோம் – இன்று நேரில் காண்கிறோம்.

தன் அணிகலன்கள் ஒவ்வொன்றும் சிதைக்கப்படுவதன் வன்மத்தை இயற்கை ஒட்டுமொத்தமாக மனித குலம் மீது காட்டுகிறது!

பிறப்பு முதல் இறப்பு வரை எதையோ தேடித்தேடி ஓடிக்கொண்டே இருந்த மனிதனுக்கு, சிந்திக்க வேண்டி ஒரு சிறிய இடைவெளி!

“கடவுளை மற; மனிதனை நினை” என்னும் முழக்கம் இன்று சொல்லாமல் சொல்ல உணர்த்தப்படுகிறது.

பசி வந்தால் பத்தும் பறந்து போகும் என்று படித்த நமக்கு, உயிர்பயம் வந்தால் எதுவெல்லாம் பறந்து போகும் என்பதற்கு நாமே சாட்சியாகி இருக்கிறோம்.

நம் கண்முன்னே, உடன் படித்தவர்கள், நண்பர்கள், இளைஞர்கள், குழந்தைகள் என இளையோர் நம்மையும் முந்திகொண்டு நித்திய இளைப்பாறுதலை அடைவது மிகக்கொடுமை!

கண்ணுக்கு தெரியாதவைகள்.. அஞ்சு பூதங்களானாலும் சரி.. கடவுள்களானாலும் சரி, பேய்களானாலும் சரி..அவைகளுக்குத்தான் அதீத சக்தி இருந்திருக்கிறது. அந்த வரிசையில் இன்னொரு கண்ணுக்குத் தெரியாத…severe acute respiratory syndrome coronavirus 2 என்னும் கொடிய நோய்க் கிருமி… அடிக்கடி உருமாறி நிகழ்காலத்தையே கேள்விக்குறியாக்கிவிட்டது. இதற்கென இன்னும் நிரந்தர தீர்வு (definite cure) எதுவும் இல்லாதபோது, நமது பாரம்பரிய மருத்துவமாம் சித்த மருத்துவம் தமிழக மக்களுக்கு நம்பிக்கையை ஊட்டிக்கொண்டு இருக்கிறது. முதல் அலை தானாகவோ அல்லது நவீன அலோபதி மருந்துகளாலோ அல்லது கபசுர குடிநீர் போன்ற நோய் எதிர்ப்பை அதிகப்படுத்தும் மூலிகை மருந்துகளாலோ ஓரளவு கட்டுக்குள் வந்துகொண்டிருந்த சமயம், அடுத்த வலுவான அலை நமக்கு பலவற்றை உணர்த்துகிறது. வரலாற்றில் ஒவ்வொரு இக்கட்டான சூழ்நிலைகளும் பல கண்டுபிடிப்புகளை, சீர்திருத்தங்களை நோக்கி மனிதகுலத்தை தள்ளியிருக்கிறது. இந்தச் சூழ்நிலையில், உலக அளவில், மருத்துவதுறையில் செய்யவேண்டிய ஒரு சீர்திருத்தம் இருக்கிறது, அது ஆரோக்கியமான எதிர்கால சந்ததிகளை மனதில் வைத்து திட்டமிடப்பட வேண்டிய ஒன்று. இந்தக் கட்டுரை அதன் தேவையையும், எவ்வாறு அதை தமிழக மண்ணில் செயல்படுத்துவது என்பதையும் ஆழமான பார்வையில் தொலைநோக்குச் சிந்தனையுடன் விவரிக்கிறது.

## தமிழனின் சித்த மருத்துவம்:

பழங்காலத்தில், பேய்களும், கடவுள்களும்தான் நோய்களுக்குக் காரணம் எனவும், அவர்களை சாந்தப்படுத்த வேண்டும் என்றும் மந்திரங்களுடனும் சிலைகளுடனும் ஒரு கூட்டம் கிளம்பிய போது,

**உள்ளம் பெருங்கோயில், ஊன் உடம்பு ஆலயம்**
**வள்ளல் பிரானார்க்கு வாய் கோபுர வாசல்**
**தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்**
**கள்ளப் புலன் ஐந்தும் காளா மணிவிளக்கு**

என புதிய திசையைக் காட்டியது திருமந்திரம். அதாவது, சதையை உடைய உடம்பு தான் ஆலயம் என்றும், உள்ளம்தான் அதன் கருவறை என்றும், வாய்தான் கோவிலின் கோபுர வாசல் என்றும், உயிர் தான் அங்கே கடவுளாக வழிபடக்கூடிய சிவன் என்றும், ஐம்புலன்கள்தான் கோவிலின் அலங்காரவிளக்குகள் என்றும் கூறி, சிலைகளைக் கொண்டுள்ள கோவிலை விடவும், ஒவ்வொரு மனித உடலும் ஒரு கோவில்தான் என்ற புதிய சிந்தனையை விதைத்தனர் சித்தர்கள். என் உடம்பு எனக்கு கோவில் என்றால், என் உயிர் என்னுள்ளே குடிகொண்டிருக்கும் கடவுள் (சிவம்) என்றால், அந்தசிவம் போனபிறகு நான்சவம் ஆவேன். இதைப்போலத்தானே ஒவ்வொரு மனிதனும் கடவுள் குடிகொள்ளும் நடமாடும் கோவில்கள். எனவே அத்தனை கோவில்களையும், அத்தனை மனித உயிர்களையும் மதிக்க வேண்டும் என்ற சமத்துவ சிந்தனையை முதலில் விதைத்த சிந்தனை வாதிகள் சித்தர்கள்.



**உடம்பினை முன்னம் இழுக்கென்று இருந்தேன்**
**உடம்புக்குள்ளே உறு பொருள் கண்டேன்**
**உடம்புளே உத்தமன் கோயில் கொண்டானென்று**
**உடம்பினை யான் இருந்து ஓம்புகின்றேனே**

**– திருமந்திரம்**

முன்பு உடம்பினை பாரம்பாக/ கீழாக நினைத்தேன், ஆனால் உடம்புக்குள்ளேதான் இறைவன் (உறு பொருள், உத்தமன்) இருக்கின்றான் என்று என்றைக்கு நான் தெரிந்து கொண்டேனோ, அன்றிலிருந்தே, இந்த பொக்கிஷமான உடம்பை நான் இருந்து ஓம்புகின்றேன் என்று திருமூலர் கூறுகிறார். உடலை ஓம்புவது என்பது விருந்து ஓம்புதல் மாதிரியே, அதாவது உடலைப் பராமரிப்பது (சேவை செய்தல்) ஆகும், அதற்காக உருவாக்கப்பட்ட வைத்தியம் தான் சித்த வைத்தியம்.

**உடம்பார் அழியில் உயிரார் அழிவர்**
**திடம்பட மெய் ஞானம் சேரவு மாட்டார்**
**உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே**
**உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே**

**– திருமந்திரம்**

உடல் என்னும் கோவிலை பராமரிப்பதே பிரதானம் என்று சித்தர்கள் சொல்கின்றனர். அந்த உடம்பை எப்படி வளர்க்க வேண்டும்? அதன் உபாயம் (*technique*) என்ன? என்பதைப் பற்றிய ஆராய்ச்சியின் விளைவே சித்த மருத்துவம். இந்த சித்த மருத்துவத்தைப் பயன்படுத்தித்தான், தன் உடலை பராமரித்ததாக திருமூலர் சொல்கிறார். உடனே சில மொழியியல் ஆய்வர்கள் எங்காவது சித்த மருத்துவம் என்ற பெயர் சங்க கால நூல்களில் சொல்லப்பட்டிருக்கிறதா என்று கேட்பர். உண்மைதான் எங்குமே சொல்லப்பட்டவில்லை. ஆனால், தமிழ் மக்கள் இதைக் கண்டுபிடித்த சித்தர்களின் நினைவாக சித்த வைத்தியம் என்று அழைக்கத்தொடங்கினர் என்பதையும் நாம் தெரிந்து கொள்ள வேண்டும்.

மனித உடலின் உள்ளிருக்கும் கடவுளை அறிந்துகொள்ள தன்னுள்ளேயே கடவுளைத் தேடும் (*internal search, self realization*) யோகக் கலையை அறிமுகம் செய்தவர்கள் தமிழ் சித்தர்கள். முதல் சித்தன் சிவனை யோகாவின் கடவுளாகவும், பதஞ்சலியை யோகாவின் தந்தையாகவும் உலகோருக்குச் சொன்னான். தற்போது தெரியும். அதே ஆதிசித்தன் சிவன்தான் சித்தாவுக்கும் மூலம் என்பதையும் இங்கு சொல்லியாக வேண்டும். பதஞ்சலியும், திருமூலரும் ஒரே வகுப்பில் (*same batchmate*) பயின்ற எட்டு மாணவர்களாக இந்த யோகாவைக் கற்றதாக திருமூலர் பின்வரும்பாடலில்சொல்லியிருப்பதை மறைத்துவிட்டனர்.

**நந்தி அருள்பெற்ற நாதரை நாடிடின்**
**நந்திகள் நால்வர் சிவயோக மாமுனி**
**மற்று தொழுத பதஞ்ச்சலி வியாக்ரமர்**
**என்றிவர் என்னோ டெண்மரு மாமே**

**– திருமந்திரம்**

இந்த பதஞ்சலியும், திருமூலரும் தமிழ் மொழியில் பல சித்த மருத்துவ நூல்களை எழுதியுள்ளனர். இருவரும் யோகத்தைப் பற்றி புத்தகங்கள் எழுதியிருந்தாலும், பதஞ்சலியின் எழுத்து சமஸ்கிருத்தில் இருந்ததால், அவருக்கு உலக அங்கீகாரம் வாங்கிக் கொடுத்துவிட்டனர் சமஸ்கிருத ஆதரவாளர்கள். அதே கருத்துக்களை திருமூலர் தமிழில் எழுதியதற்கு, இன்று தமிழ் உலகம் மிகப்பெரும் தண்டனையை அவருக்கு கொடுத்து விட்டதாகவே நான் கருதுகிறேன். தமிழகத்தில் பொறியியல் படித்து விட்டு, வெளிநாடு சென்ற நண்பனுக்கும்,உள்ளூரில் அதுவும் கிராமத்தில் சேவை செய்யும் இன்னொரு நண்பனுக்கும் உள்ள வித்தியாசம் தான் இந்த பதஞ்சலிக்கும் திருமூலருக்கும். தமிழ் மக்கள் சித்தர்களுக்கும் சித்த மருத்துவத்துக்கும் செய்த இந்த வரலாற்றுப் பிழையை நம் தலைமுறையிலேயே திருத்தியாக வேண்டும்.

பதஞ்சலி கடைசிக்காலத்தை ராமேஸ்வரத்தில் கழித்து, யோகத்தில் ஆழ்ந்து அங்கு சமாதியான

இடத்தில்தான் பிற்காலத்தில், ராமேஸ்வரம் சிவன் கோவில் கட்டப்பட்டதாக சித்த நூல்கள் சொல்கின்றன. தமிழ் சித்தர்களை கடவுள் போலும், வித்தை காட்டுபவர்கள் போலும், கடவுள் அவதாரங்கள் போலும், கடவுள் மறுப்பாளர்கள் போலும் பலர் நம்புகின்றனர். அவர்களைப்பற்றிய சுவாரசியமான, கண்டிப்பாக அனைவரும் தெரிந்திருக்க வேண்டிய மறைக்கப்பட உண்மைகள் நிறைய உண்டு. அது பற்றியெல்லாம் பின்னர் எழுதுகிறேன். ஓகம் எனும் யோகம் என்றாலே சமஸ்கிருதம், இந்து மதம் என்றும் பெருமைப்படும் உலகோருக்கு, அது தமிழனின் கலை என்பதை உரக்கச் சொல்ல நாம் கடமைப்பட்டுள்ளோம்.

அடுத்த மனிதரைத் தொட்டாலே பாவம், அவன் குறிப்பிட்ட சாதியில் பிறந்ததே கர்மா, அவனின் நோய்களும் கர்மத்தாலேயே வருகிறது என்கிற சனாதன அணுகுமுறைக்கு எதிராகக் கிளம்பியதுதான் சித்த மருத்துவம். இங்கு, மனிதனைத் தொட்டு கைகளில் நாடி பார்க்கவேண்டும், நோய்களை மருந்துகளால் பார்க்க வேண்டும், என்பது தான் முதன்மை. ஆண்டவன் கர்மாவுக்கு ஏற்ப கொடுத்த நோய்களை குணப்படுத்த முயல்வதே முதல் இறை மறுப்புதான், முதல் விஞ்ஞான சிந்தனைதான். எனவே, இந்திய நாட்டின் முதல் மருத்துவ அறிஞர்கள் தமிழ் நாட்டிலிருந்து கிளம்பிய சித்தர்களே. கடவுளை அடைய முயற்சிப்பவன் பக்தன், அடைந்தவன் சித்தன். எனவே அவர்களை கடவுளுக்கு நிகராக மதிப்பளித்து, வானுயர தெய்வத்துள் வைத்து, சித்தர் வழிபாடுகளே இங்கு இருந்திருக்கிறது. தாவரங்களின் பெயர்கள், விலங்குகள், தாது உப்புக்கள், நோய்களுக்கான குறிகுணங்கள், நோயின் பெயர்கள், வைத்திய முறைகள், உணவு வகைகள், மருந்துகள் செய்யும் முறைகள் என ஆயிரக்கணக்கான, தமிழ் அகராதியில் சேர்க்கப்படாத தமிழ் அறிவியல் சொற்களை இன்னமும் சித்த மருத்துவம் தன்னகத்தே கொண்டுள்ளது.

### சித்த மருத்துவம் செத்த மருத்துவமா?

தமிழ் மக்களின் புராதனமான ஆரோக்கிய வாழ்வு முறையானது, நாட்டு வைத்தியம், பண்டுவம், சித்த வைத்தியம், ஆயுள் வேதம் (சிலப்பதிகாரம் குறிப்பிடுவது) என்று பல பெயர்களில் அழைக்கப்பட்டு, இன்றுவரை தமிழ் மக்களின் ஆரோக்கிய வாழ்வை தீர்மானிக்கும் சக்தியாக இருக்கிறது. நான்கு வேதங்களைக் கொண்ட ஆரியர்கள், ஐந்தாவது வேதமாக இந்த தமிழனின் ஆயுள் வேத்தை, ஆயுர்வேதமாக தன்னகத்தே கொண்டனர் என்பது, ஒரு நம்பிக்கை. இந்த வரிகளுக்கு பல்வேறு ஆராய்ச்சிகளுக்கான தேவை இருக்கிறது. தமிழன் உலகெல்லாம் பரந்து விரிந்து சென்ற போது, அவன் கையோடு எடுத்துச்செல்ல மறந்த இந்த துறைதான் சித்த மருத்துவம். மேடை நாடகங்கள் இன்று சினிமாவாகவும், கையெழுத்துப் பிரதிகள் இன்று இணைய பத்திரிகைகளாகவும், தெருக்கூத்துப் பாடல்கள் இன்று ராக் ஆல்பங்களாகவும், மாட்டு வண்டியின் சக்கரம்





இன்று உலகத்தையே இயக்கும் இயந்திரங்களின் சக்கரங்களாகவும் நவீனமயமாகிவிட்ட போது, இன்னமும் தமிழன் அறியாமையால் ஒளித்து வைத்திருக்கும் ஒரு மருத்துவ முறைதான் சித்த மருத்துவம். நமக்கு தெரிந்ததெல்லம் ஏதோ, சிட்டுக்குருவி லேகியமும், இப்போது கபசுர குடிநீரும் தான், இவையெல்லாம் ஒரு டிரையிலர்தான். கொஞ்ச நேரம் உட்கார்ந்து சித்தாவின் முழுக்கதையையும் கேட்க தமிழனுக்கு நேரமில்லை, முழுக்கதையும் தெரிந்தவர்கள் இப்போது முதிர் வயதில் கேட்பாரற்று கிடக்கின்றனர். அதன் ஆழமும் அகலமும் தெரிய முற்பட்டவர்கள் கடைசியில் இயற்கையின் ரகசியங்களை அறியும் வாய்ப்பையும், முக்திபெறும் உத்தியும் அறிந்து, புளியம்பழத்தில் எவ்வாறு பழம் ஓட்டுடன் ஒட்டாது தனித்து இருக்குமோ, அதைப்போலவே, உலகப்பற்றற்று, விளம்பரம் தேடாமல் தனித்திருக்கின்றனர்.

தமிழ் என்ற மொழி தனித்துவமானதாயின், தமிழ் குடிகள் மூத்த குடிகள் என்பது உண்மையாயின், போர் புரிந்து பெற்ற விழுப்புண்களை ஆற்றியது உண்மையாயின், தமிழ் தாத்தாக்கள் (திருவள்ளுவர் உட்பட) கூறிய அறம் தனித்துவமாயின், தமிழர் உணவு தனித்துவமாயின், அவர்களுக்கு நோய்கள் வந்தபோதெல்லாம் தீர்த்து இதுகாறும் இந்த இனம் விருத்தியாகியிருக்கிறது எனில், தனித்த ஒரு மருத்துவ மரபு இருந்திருக்கக் கூடும் என்பதை கூட நாம் ஏன் யோசிக்க வில்லை? திருக்குறள் நால்வேதங்களின் சாராம்சம் என்று அங்கொருவன் கூவினால், இது தமிழரின் தனித்த ஆன்மீகவியல் (Tamil philosophy) என்று ஆர்ப்பாட்டம் செய்யும் நாம், சமஸ்கிருதத்தின் ஆயுர்வேத வைத்திய மரபைதான் தமிழன் சித்தா என்று வைத்திருக்கிறான், அவனுக்கென தனியான மருத்துவ மரபு இல்லையென கூவும் குரல்களுக்கு எதிர்க்குரல் எழுப்பவில்லையே? மாற்றான் தோட்டத்து மல்லிகையும் மணக்கும் என்பதைப் போல, நம் வீட்டு மல்லிகையை அரளிபூவைபோல நசுக்கிவிடும் மன நிலையை நாம் மாற்ற வேண்டுமா? அதற்கு தமிழ்பேசும் ஒவ்வொருவரும் சித்தர் இல்லையா? மருத்துவத்தைப் பற்றி தெரிந்திருக்க வேண்டும். தமிழ் மேடைகளில் சித்த மருத்துவத்துக்கு இடம் தர வேண்டும். தமிழ் ஊடகங்கள்-எழுத்தாளர்கள் சித்த மருத்துவத்தைப் பற்றி பேச வேண்டும். மாட்டு கோமியத்துக்கு இந்திய அளவில் எழும் குரல், சித்த மருந்துகளுக்கு தமிழகத்தில் எழாதது வருத்தமே.

உலக அளவில், சீன, சமஸ்கிருத, தமிழ், உருது

போன்ற பழம் மொழிகளுக்குடையே இப்போது ஒரு அறிவியல் போட்டி நடக்கிறது, அதாவது தனக்கென்ற பாரம்பரிய மருத்துவ அறிவியலுக்கான போட்டி. இங்கு மத்திய அரசு வழக்கம்போல, சமஸ்கிருதம் சார்ந்த ஆயுர்வேதத்தை மட்டுமே உலகுக்குக் காட்டிக்கொண்டிருக்கிறது. தமிழ் மொழிக்கென தனி நாடு எதுவும் இல்லாத நிலையில், தமிழ்நாடு தான் சித்த மருத்துவத்தை தமிழ் தேசிய மருத்துவமாக அறிவிக்க வேண்டும். பாட்டி செய்த உணவுகளின் அந்த உருசியை நம் தாயின் சமையல் தருவதில்லை. தாயின் சமையல் உருசியை மகள் தருவதில்லை... கழுதை தேய்ந்து கட்டெறும்பு ஆனகதை இந்த சமையலில் மட்டுமல்ல, சித்த மருத்துவத்திலும்தான். ஆனால், சமையலுக்கென்று வரையறுக்கப்பட்ட (standardized) பாடத்திட்டத்துடன் படிப்புகள் வந்தது போலவே, சித்தாவுக்கும் படிப்புகள் வந்துவிட்டன. இலங்கையில் கூட தமிழர்கள் மிகவும் சிரமப்பட்டு, தன் பாரம்பரியத்துக்கு பெருமை சேர்க்க வேண்டி, இரண்டு சித்த மருத்துவக் கல்லூரிகளை (வடக்கு மற்றும் கிழக்கு மாநில தமிழ் அரசுகள்) நடத்தி வருகின்றன. இது தமிழனின் முக்கியப் பொறுப்பு என்பதை நாம் அவர்களிடமிருந்து கரம்கொள்ள வேண்டும். அவர்கள் MD (சித்தா) படிக்க தமிழ்நாடு வருகின்றனர். கடந்த கால தமிழ் நாடு அரசுகள் சித்த மருத்துவத்துக்கு சிறந்த ஆதரவு தந்துதான் இருக்கிறார்கள். தமிழ் நாட்டில், 10 க்கும் மேற்பட்ட சித்த மருத்துவ கல்லூரிகள் உள்ளன. அலோபதியை போலவே 51/2 ஆண்டுகள் இளம்கலை படிப்பும் (BSMS), பட்ட மேற்படிப்பும் (MD), Ph.D. படிப்பும் உள்ளன. BA/MA தமிழுக்கு அடுத்த படியாக, தமிழின் சித்த மருத்துவம்தான் இந்த UGC மற்றும் மத்திய அரசின் அங்கீகாரம் பெற்ற செம்மைப்படுத்தப்பட்ட படிப்புகளாக இருக்கிறது. அரசியல்வாதிகள், தமிழறிஞர்கள், தமிழ் போராளிகளாகிய நமக்கு தெரியவில்லை என்பதால், சித்த மருத்துவம் செத்த மருத்துவம் அல்ல.

இத்தாலியின் சமையலுக்கு முன்னால் தமிழ் சமையல் போட்டி என்று போட முடியாமல் இருக்கலாம், ஆனாலும், தமிழ் நாட்டின் அடுக்களைகளும், தமிழனின் வயிறும் கேட்பது தமிழ் சமையலைத்தானே. என்றோ ஒரு நாள் உருசிக்காக, அல்லது தேவைக்கு மட்டும் இத்தாலியன் உணவுகளை தின்பது நல்லதுதான். தினமும் தின்னுவதற்கு நமக்கு நம் மரபு உணவுகள் எவ்வளவு முக்கியமோ அவ்வளவு முக்கியம் நம் சித்த மருத்துவம். தமிழனின் மரபணு நமது உணவுக்கும், மரபு மருத்துவத்துக்கும் பழக்கப்பட்டு இரண்டாயிரம் ஆண்டுகள் ஆகிறது. அதிலிருந்து விலகிச் செல்ல செல்ல, அதற்குண்டான ஆரோக்கியக் கேட்டை நாம் அனுபவிக்க வேண்டிவரும். சித்த மருத்துவம் ஒரு போதும் சாவதில்லை. மனித குலத்துக்காக சித்தர்களால் உருவாக்கப்பட்ட இந்த மருத்துவம், தமிழகத்தில் புதைக்கப்பட்டால், வேறு எங்கோ, எதோ பெயரில், அந்த மக்களுக்கு பயனை தந்து கொண்டுதான் இருக்கும். தமிழர்களின் சித்தமருத்துவத்தை கேரள சேட்டன்கள், கேரள ஆயுர்வேதமாக பெயரிட்டு, மிகப்பெரும் பொருளாதாரத்தை கேரளத்துக்கு ஈட்டி தருகின்றனர். திருக்குறளை சமஸ்கிருதத்தில்




பெயர்த்து வெளியிட்டு விட்டு, சமஸ்கிருத திருக்குறள்தான் ஆதி நூல் என்று கிளம்பினால், நாம் என்ன செய்ய இயலும்? சித்த மருந்துகளும் இன்று அப்படித்தான், வேறு மொழிகளில், வேறு மாநிலங்களில் மக்களுக்கு பயன்பட்டுக் கொண்டுதான் இருக்கிறது. சித்த மருத்துவத்தால் தமிழுக்கும் தமிழர்களுக்கும் என்றும் பெருமையே.

எவனோ ஒளித்து வைத்த இந்தியாவை எவனோ தேடிக் கண்டுபிடித்த பிறகே அது உலக வரைபடத்தில் சேர்க்கப்பட்டிருக்கும். அதேபோலத்தான், இப்போது சித்த மருத்துவத்தை உலக வெளியில் காட்டத் தவறினால், தமிழுக்கு நாம் செய்யும் மன்னிக்க முடியாத துரோகமாகிவிடும். வாய்ப்பு கிடைக்கும் போதெல்லாம், அப்துல்கலாமும், மோடியும் திருக்குறளையும் திருமந்திரத்தையும் சொல்லத் தவறியதில்லை. அதைப் போலவே, நாம் சித்த மருத்துவத்தையும் சொல்லத் தவறக்கூடாது.

**மறுப்பது உடல் நோய் மருந்தெனலாகும்**
**மறுப்பது உள நோய் மருந்தென சாலும்**
**மறுப்பது நோய் இனி வராதிருப்ப**
**மறுப்பது சாவையும் மருந்தெனலாகும்**
**– திருமூலர் கற்பவிதி**

மருந்து என்றால், அது உடல் மற்றும் உள்ள (மன) நோய்களைப் போக்கவேண்டும், அவைகளை வராமல் தடுக்க வேண்டும் (preventive care), அது சாவையும் (முதுமையையும்) தள்ளிப்போட வேண்டும் என்று இந்தப் பாடலில், திருமூலர் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே, அன்றிருந்த பாரம்பரிய மருத்துவ முறைகளுக்கு சவால் விட்டிருக்கிறார். அந்த சவாலை ஏற்று, மக்களுக்கு பலனளிக்கும் வகையில்தான் சித்த மருத்துவத்தை சித்தர்கள் வடிவமைத்துள்ளனர். இந்த 21 ஆம் நூற்றாண்டில் தான், geriatric medicine, regenerative medicine, stem cell therapy என்று முதுமையை வெல்லும் யுக்திகளைப் பற்றி மருத்துவத் துறை சிந்திக்கத் தொடங்கி உள்ளது. இதற்கென்றே, திருமூலர் போன்ற எல்லா சித்தர்களும், காயகல்பம் (காயகற்பம்) என்ற ஒரு உயரிய துறையை வைத்திருக்கிறார்கள். யோகா என்பது, அந்த காயகல்பத்தின் ஒரு பயிற்சிமுறை ஆகும். எனவே சித்த மருத்துவம், இன்னும் பல தலைமுறைகளுக்கும் கூட பலன்தரும் நோக்கிலேதான் அன்றைக்கே வடிவமைக்கப்பட்டுள்ளது.

எனக்குத் தெரிந்து, உலகத் தமிழர்கள், இனிமேல் சித்தாவை மையப்படுத்தினால் மட்டுமே, தமிழ் மொழிக்கு அறிவியல் மொழி என்ற பெருமை கிடைக்கும், தமிழ் சமூகத்துக்கு ஒரு அங்கீகாரம் கிடைக்கும், அதன் வழியாக தமிழகப் பொருளாதாரம் பெருகும், பெருமளவு வேலை வாய்ப்புகளை அள்ளித்தரும், வருங்கால சந்ததியினர் நோய் நொடியில்லாமல் வளர்வர். இதைப் பற்றிய விரிவான கட்டுரைகளை நான் ஏற்கனவே எழுதி விட்டதால், இங்கு தவிர்க்கிறேன்.

### ஒருங்கிணைந்த மருத்துவம் (Integrative Medicine):

அலோபதியில் ஒரு மூலக்கூறுதான் ஒரு மருந்து. ஆனால், பல மூலக்கூறுகளை உள்ளடக்கிய ஒரு மூலிகையோ அல்லது அவ்வாறு பல மூலிகைகள் சேர்ந்தோதான் *(polyherbal formulation)* சித்தாவில் ஒரு மருந்து. இந்த வரையறையிலேயே சித்தா போன்ற பாரம்பரிய மருந்துகள் நிராகரிக்கப்படுகின்றன. ஒரு மூலக்கூறை உட்கொண்ட பிறகு எங்கு போகிறது, எவ்வளவு நேரம் தங்குகிறது, கல்லீரல் அதை எப்படி உருமாற்றம் செய்து எந்த வழியாக எவ்வளவு நேரம் கழித்து உடலை விட்டு வெளியேற்றுகிறது என ஒவ்வொரு மூலக்கூறின் சாதகமும் அக்குவேறு ஆணிவேறாக பிரித்து மேய்ந்த பிறகே அதற்கு மருந்து என்ற அந்தஸ்து கிடைக்கும். உதாரணமாக 'பாராசிட்டமால்' என்ற மருந்து 6 மணி நேரம் உடலில் தங்கி சுரத்தை குறைக்கும், சரியாக 6 மணி நேரம் கழித்த பிறகு சுரம் மறுபடியும் எட்டிப் பார்க்கும். இதை அடிப்படையாக வைத்துத்தான், ஒவ்வொரு 6 மணி நேரத்திற்கொருமுறை இந்த மருந்தை உண்ண வேண்டும் என்று மருத்துவர் அறிவுறுத்துவார், ஆக, அத்துணை ஆராய்ச்சிகளும் முடிந்த பிறகுதான், ஒரு புதிய மருந்தை மனிதன் உட்கொள்ள அனுமதிக்கிறது அலோபதி மருத்துவ முறை. இடையில் ஒரு வேளை, அந்த மருந்தில் ஆபத்து இருக்குமானால், அதன் மருந்து அந்தஸ்தை நீக்கவும், தரக்கட்டுப்பாட்டு அமைப்புகள் அரசால் இயங்கி வருகின்றன. ஆனால், இப்படி எந்த விதமான அறிவியல் தரவுகளும் இல்லாமல், நம் பாரம்பரியம் என்ற ஒரே காரணத்துக்காக சித்த மருந்துகளை ஏற்றுக்கொள்ளுங்கள் என்றால், அது அத்தனை எளிதானது அல்ல. நம்பிக்கை சார்ந்த ஒவ்வொரு விடயமும் அது கடவுளே ஆனாலும் சரி, இளைய சமுதாயம் கேள்விகள் கேட்கிறது. ஒவ்வொரு சித்த மூலிகைகளையும் அதன் சாதகத்தை அலசி ஆராய பல கோடிகள் வேண்டும், பல ஆண்டுகளும் ஆகும். ஆனால், இதை சரிகட்ட வேறு ஒரு வழி இருக்கிறது. அதாவது, ஏற்கனவே பெருவாரியான மக்களால் உண்டுவரப்படும் ஒவ்வொரு சித்த மருந்துகளுக்கும் என்ன பக்கவிளைவுகள், அது என்ன மாதிரியான பலன்களைத் தருகிறது, என்ற விடயங்களை ஆவணப்படுத்தினால், சில வருடங்களில், அந்த மருந்துகளின் அறிவியல் சாதகத்தை எழுதி விடலாம். உண்மையிலேயே சிறப்பாக இருக்கும் சித்த மருந்துகளை மட்டும், அடுத்த கட்ட முழு ஆய்வுகளுக்கு எடுத்துச் செல்லலாம். இதைத்தான் பின்னோக்கு மருந்தியல் ஆராய்ச்சி *(Reverse Pharmacology)* என்று அழைப்பர். இதைப் பற்றி பிறகு விரிவாக எழுதுகிறேன்.

**ஆண்டவன் கர்மாவுக்கு ஏற்ப கொடுத்த நோய்களை குணப்படுத்த முயல்வதே முதல் இறை மறுப்புதான், முதல் விஞ்ஞான சிந்தனைதான். எனவே, இந்திய நாட்டின் முதல் மருத்துவ அறிஞர்கள் தமிழ் நாட்டிலிருந்து கிளம்பிய சித்தர்களே. கடவுளை அடைய முயற்சிப்பவன் பக்தன், அடைந்தவன் சித்தன்.**

அலோபதியில் இரண்டு மூலக்கூறுகளை (மருந்துகளை) சேர்த்து ஒரே மாத்திரையாக *(fixed dose combiaiton)* பயன்படுத்துவதற்கே அத்தனை ஆராய்ச்சிகள் செய்ய வேண்டியுள்ளது. தமிழகத்தில் இன்னமும் ஒரு பழக்கம் இருக்கிறது. பெற்றோர் பார்த்து ஏற்பாடு செய்யும் திருமணத்தில், மணமகன் மணமகள் இருவரும் ஒருவரை ஒருவர் பார்ப்பது கடைசி கட்டம்தான். அதற்கு முன்பே, இருவரின் சாதக பொருத்தங்களும் தீவிரமாக அலசப்படுகிறது. சாதி, மதம், மொழி, பெற்றோர் மற்றும் குடும்ப பின்னணி, வேலை, சம்பளம் என்று பல ஆராய்ச்சிகளுக்குப் பிறகே, இருவரும் நேராகப் பார்த்துக் கொள்ளும் படலம் ஏற்பாடு செய்யப்படுகிறது. எல்லாம் ஒத்து வந்தாலேயே இருவரும் இணைய அனுமதிக்கப்படுவர். பெற்றோருக்கு, தங்கள் பிள்ளைகள் நன்றாக இருக்க வேண்டும் என்னும் அதீத ஆசையால்தான் இப்படி எல்லாம் செய்கின்றனர். மணமுறிவு பெற்ற அல்லது ஒருவர் இளம்வயதிலேயே மரணம் அடையும் பல தம்பதியர் கூட இந்த ஆராய்ச்சிகளை செய்து பின்னர் இணைந்தவர்கள் தான் என்பது ஒரு குறிப்பு. இதை போலத்தான், அலோபதி சித்த மருந்துகளை இணைத்து கொடுக்கும் போது எதாவது தீய விளைவுகள் நோயாளிக்கு ஏற்பட்டு விடக்கூடாது என்ற நல்ல எண்ணத்தால் தான், ஆராய்ச்சிகள் இல்லாத ஒருங்கிணைந்த மருத்துவ முறைக்கு அவ்வளவு எளிதில் அங்கீகாரம் கிடைப்பதில்லை. ஆனால், சிறிய வயதிலேயே முறைப்பையனாக முறைப்பெண்ணாக வளர்ந்த இருவரையோ அல்லது முழு வீச்சில் காதலித்துவிட்ட இருவரையோ அல்லது திருமணத்துக்கு முன்பே கர்ப்பமாகிவிட்ட இருவரையோ, தீவிர ஆராய்ச்சிகள் இல்லாமல் ஏற்றுக்கொள்ள வேண்டிய சூழ்நிலைக்கு பெற்றோர் தள்ளப்பட்டு விடுகின்றனர். இந்த குறுக்கு வழியைத்தான் இப்போது, ஒருங்கிணைந்த சித்த மருத்துவ முறைக்கு கடைபிடிக்க வேண்டி இருக்கிறது, ஏனென்றால், ஏற்கனவே தமிழக மக்கள் அலோபதி மற்றும் சித்தா என இரு மருத்துவ முறைகளையும் இணைத்தே பல ஆண்டுகளாக உரிமையுடன் பயன்படுத்தியும் அதன் பலனை அனுபவித்தும்தான் வருகின்றனர். உதாரணமாக நீரிழிவு நோய்க்கு அலோபதி மாத்திரைகளுடன், சித்தா மூலிகை பொடிகளும், யோகமும், கைவைத்தியங்களும்

சேர்த்தே மக்கள் பயன்படுத்தத் தவறுவதில்லை. ஆனால், இது அலோபதி மருத்துவருக்குத் தெரியாது. இந்த நிலையில் அரசு ஒரு சிறந்த நேர்மையான மருத்துவர்கள் குழுவை (நிபுணர்கள் உலகின் எந்த முறையில் இருந்தாலும் இணைத்து) உருவாக்கி, இதற்கு முடிவு எடுக்கலாம். இது சாத்தியமான ஒன்றுதான்.



## சித்த மருத்துவமும் கோரோனாவும்:

முதலில் தோன்றிய உயிர் ஏதோ ஒன்றை தின்றுதான் வாழ்ந்திருக்கும், அதற்கு ஒரு சீக்கு (நோய்) வந்த போது தன்னைதானே குணமாக்கிகொள்ள ஒரு யுக்தியை பயன்படுத்தி இருக்கும். வைரஸ் என்ற கிருமிகளுக்கும் மனிதனுக்கும் அன்று தொட்டு இன்றுவரை தொடரும் யுத்தத்துக்கு, அவ்வப்போது மனித குலம் ஏதோ ஒரு உணவு/மூலிகைகளை தின்றுதான், தன் இனத்தை இன்னும் விருத்தி செய்து கொண்டு இருக்கிறான்.

இன்று தமிழ் மக்களைக் காப்பாற்ற வக்கில்லாமல் இல்லை. சித்தாவுக்கான மேடை இல்லாமல், எப்படி ஆடுவது என்பதுதான் நிதர்சனம். கோரோனாவை பொறுத்தவரை, அரசு சொன்னாலும் சொல்லாவிட்டாலும், தமிழக மக்கள் தாங்களாகவோ அல்லது தங்களுக்கு தெரிந்த சித்த வைத்தியர்கள்/மருத்துவர்களின் ஆலோசனையின் பேரிலோ ஆரம்பத்திலிருந்தே ஏதோ ஒரு வைத்திய முறைகளை அடுக்களை அளவில் அமுல்படுத்திதான் வந்திருக்கிறார்கள். இவைகள் என்னென்ன - பலன் தருகிறதா - பலன் இல்லையா - அலோபதி மருந்துகளுடன் சேர்த்து உண்ணும் போது என்ன நடக்கிறது என்ற எந்த ஒரு ஆவணப்படுத்துதலும் கடந்த ஒரு வருடமாக நடக்கவில்லை. முதலில் நாம் செய்திருக்க வேண்டியது இதுதான். அமெரிக்கா, இங்கிலாந்து மற்றும் ஸ்வீடன் போன்ற மூன்று நாடுகளிலும் கடந்த ஒரு வருடமாக 4 லட்சத்து 50 ஆயிரம் மக்களிடம் நடத்தப்பட்ட ஆய்வு முடிவுகள் ஏப்ரல் 2021 ல், BMJ Nutrition, Prevention & Health, என்ற ஆராய்ச்சி இதழில் வெளியிடப்பட்டது. ஒரு வருடமாக எந்த வகையான உணவுப் பழக்கத்தைக் கொண்டவர்களிடம் கொரோனா அண்டவில்லை என்பதே அந்த ஆராய்ச்சி. Omega-3 fatty acid, pro-biotic, vitamin D, multivitamins போன்ற supplements களை தொடர்ந்து எடுத்து கொண்டவர்களுக்கு கோரோனாவிலிருந்து பாதுகாப்பு உறுதி செய்யப்படிருக்கிறது. தமிழகத்தில் நாம் இதை செய்யத் தவறி விட்டோம். இனியும் செய்ய முடியும் என்பதை அரசு உணர்ந்து கொள்ள வேண்டும்.

ஏறக்குறைய 6000 நூல்களை தமிழில் கொண்டுள்ள சித்த மருத்துவ முறையில் 64 வகையான சுரங்களும், 13 வகை சன்னிகளும் (complications associated with fever) மற்றும் 21 வகையான கப (ஐய்யம் அல்லது சிலேற்பன) நோய்களும் கொரோனாவுடன் சம்பந்தப்பட்டுள்ளன. அதற்கான ஏறக்குறைய 50 க்கும் மேற்பட்ட சித்த மருந்துகளும் புழக்கத்தில் உள்ளன. நிலவேம்பு குடிநீரில் ஆரம்பித்து லிங்க செந்தூரம் (medicated mercury), தாளக கருப்பு (medicinal arsenic) வரையிலும் பல மருந்துகள் இங்கே புழக்கத்தில் உள்ளன. ஆனால், சிறுபான்மையாக இருக்கும் BSMS படித்த சித்த மருத்துவர்களால் மட்டுமே கொரோனாவுக்கான சித்த மருந்துகளை வெளிக்கொணர முடியாது. அதுபோல, சித்தாவை அல்லது அலோபதியை மட்டுமே வைத்து அனைத்து கட்டங்களிலும் அனைத்து கொரோனா நோயாளிகளையும் சரிசெய்து விட முடியாததால், இரண்டையும் இணைத்து ஒருங்கிணைந்த மருத்துவ முறையை தமிழக அரசு முன்னெடுக்க வேண்டியது காலத்தின் கட்டாயம்.

## கபசுர குடிநீர் மாத்திரையும் நிலவேம்பு மாத்திரையும்:

பதினைந்து மூலிகைகளைக் கொண்ட கபசுர குடிநீராகட்டும், ஒன்பது மூலிகைகளைக் கொண்ட நிலவேம்பு குடிநீராகட்டும், இரண்டுமே கொரோனா கிருமியை அழிப்பதிலும், கோவிட் நோயாளியை தேற்றுவதிலும், அற்புதமாக வேலை செய்கிறது, ஆனால் அது கசப்பாக இருக்கிறது, சிறு குழந்தைகளால் குடிக்க முடியவில்லை, வயிற்றுப்புண் இருப்பவர்கள் குடித்தால் வாந்தியாகிறது, வெறும் வயிற்றில் குடித்தால் குடலை பிரட்டுகிறது, தொடர்ந்து பல நாட்கள் குடித்தால் வயிற்றில் வாய்வு தொல்லை வருகிறது என இதற்கென ஒரு மறுபக்கமும் இருக்கிறது. 5 கிராம் பொடியை எடுத்து, குடிநீர் தயார் செய்யவும் என்று அறிவுறுத்துதல் கொடுக்கப்பட்டாலும், அனைவரும் ஒரே மாதிரி தயார் செய்வதில்லை. மூலிகைபொடியானது, டப்பாவின் அடிப்பாகத்தில் மாவுபோலும், மேல்புறம் திருதிராகவும் (உதிரி) உள்ளது, எனவே முதலில் பயன்படுத்தப்படும் திருதிரு பகுதிக்கும், அடியில் உள்ள மாவுபோன்ற பகுதிக்கும் அடிப்படையில், மூலக்கூறுகளின் வேறுபாடு இருக்கும், அதனால் சில நேரம் பலனளிக்காமல் போகலாம் அல்லது பக்கவிளைவுகள் வரலாம். எனவே உடனடியாக இந்த குடிநீர்களை மாத்திரை வடிவில் மாற்றி அரசு மக்களுக்கு வழங்க வேண்டும். அப்போது, ஓரளவுக்கு அதன் முதற்கட்ட standardization level ஐ எட்டி விடலாம். இந்த அடிப்படையைக் கூட நாம் சிந்திக்காமல் இருப்பதுதான் கவலையளிக்கிறது.

கோடிக்கணக்கான மக்கள் இந்த மூலிகைகளை தொடர்ந்து கடந்த ஒரு வருடமாக பயன்படுத்தி வருவதால், இன்னேரம் இந்த பூமியில் அந்த மூலிகைகள் அழிந்தேகூட போயிருக்கும். பல மூலிகைகள் மழைகாலத்தில் மட்டுமே கிடைக்கக்கூடியவை, பல வெளியூர்களிலிருந்து வர வேண்டியிருக்கும். ஆக, தொடந்து இந்த மூலிகைகளை

பல மாதங்களாக வேருடன் பிடுங்கி எடுப்பதால், இந்த குடிநீரில் அனைத்து மூலிகைகளும் தரமாக சேர்க்கப்படுகிறதா என்ற கேள்வி எழும். எனவே அதற்கு மாற்றாக, வேறு சித்த மருந்துகளை பயன்படுத்த அறிவுறுத்த வேண்டியது சித்த மருத்துவர்களின் கடமையாகும். செடியும் கொடிகளும் இல்லாவிட்டால் சித்தா இல்லை. எனவே, இயற்கையைப் பாதுகாக்கும் பொருட்டு பல செயல்பாடுகளை முன்னெடுக்க வேண்டியிருக்கிறது. மூலிகை விவசாயம், வரள்நில மூலிகை விவசாயம், மூலிகை மதிப்புகூட்டு பொருள்கள், ஏற்றுமதி இறக்குமதி, மருத்துவ சுற்றுலா என தமிழ் நாட்டின் தலையெழுத்தையே மாற்றி போடும் அளவுக்கு, ஏன் டாஸ்மாக்கின் வருமானத்தையே அரசு நம்பாமல் இருக்கக்கூட, இந்த சித்தா வணிகம் வழிவகுக்கும்,

## கொரோனாவுக்கான ஒருங்கிணைந்த சித்த மருத்துவம்:

தமிழகத்தைப் பொறுத்தவரையில் சித்த மருத்துவம்தான் தேசிய மரபு மருத்துவமாகவும், மற்றவை எல்லாம் (அலோபதி, ஆயுர்வேதா, யுனானி, ஹோமியோபதி) நமக்கு மாற்று மருத்துவமாகவும் அறிவிக்கப்பட வேண்டும். யோகா என்பது சித்த மருத்துவத்தின் ஒரு பகுதிதான், அதனால் அதை சித்த மருத்துவர்களே பார்த்துக்கொள்வர்.

“வேர்பாரு தழைபாரு, மிஞ்சினக்கால் மெல்ல மெல்ல பற்ப செந்தூரம் பாரே” என்பதன் பொருள், முதலில் மூலிகைகளை கொண்டு பார்க்க வேண்டும், அதில் தீராவிட்டால், பற்பம் செந்தூரம் போன்ற உயர் சித்தா மருந்துகளை பயன்படுத்த வேண்டும். அதிலும் தீராத நோய்களுக்கு மட்டுமே, நவீன அலோபதி மருத்துவம் தேட வேண்டும். மக்களின் நோய்களுக்கு, முதலில் சித்த மருத்துவர்களைத் தான் அணுகி வைத்தியம் பார்க்க வேண்டும், தேவைப்படின் மாற்று மருத்துவ முறைகளை சேர்த்தும், அவற்றில் முடியாத போது கடைசியாக அலோபதி வைத்திய முறைப்படி உயிரை காக்கவும் வேண்டிய மன பக்குவத்தையும், நடைமுறையையும் கொண்டுவர வேண்டும். பல சித்த மருத்துவர்கள் கூடுதலாக MBBS படித்து இருக்கிறர்கள், பல MBBS மருத்துவர்கள் சித்தாவின் மீது நம்பிக்கை உடையவர்களாகவும் இருக்கிறார்கள். பல MBBS மருத்துவர்களின் குடும்ப உறுப்பினர்கள் அல்லது நெருங்கிய நண்பர்கள் சித்த மருத்துவர்களாகவோ அல்லது தனது குடும்ப உறுப்பினரகளுக்குசித்தவைத்தியம்மேற்கொண்டதன் பேரிலோ, சித்தா மீது ஒரு நல்லெண்ணம் இருக்கும். பல சித்த மருத்துவர்கள் என்னைப்போன்று நவீன அறிவியலின் பல்துறைகளில் மேற்படிப்பு பயின்று சித்தா வளர்ச்சிக்கு பணிசெய்ய வாய்ப்புகளை தேடிக்கொண்டும் இருப்பர். இந்த மாதிரியான ஒட்டுரக (interdisciplinary or hybrid Siddha doctors) மருத்துவர்களை இணைத்து குழு உருவாக்க வேண்டும்.

இந்த குழு, கோவிட் நோயாளியின் ஒவ்வொரு குறிகுணத்துக்கும் என்னென்ன சித்தா/அலோபதி மருந்துகள் பயன்படுத்த வேண்டும், ஒவ்வொரு கட்டத்துக்கும் என்னென்ன மருந்துகள் உண்டு, எந்த நிலைவரை சித்தா மருந்துகள் வேலை செய்யும், அதன் எல்லை என்ன, எந்த நிலையில் இரண்டு வைத்திய முறைகளும் சேர்த்து பயன்படுத்த வேண்டும், எந்த நிலையில் முற்றிலும் அலோபதியிடம் நோயாளியை ஒப்படைக்க வேண்டும் என்பன பற்றிய விரிவான விவாதம் நடத்த வேண்டும். இந்த முதற்கட்ட வேலை முடிந்தால், 70% கோரோனா பாதித்த மக்களை வீட்டில் இருந்த படியே நாம் குணப்படுத்த முடியும், 20% நோயாளிகளை ஒருங்கிணைந்த மருத்துவ மையங்களில் கூட்டு சிகிச்சை மூலம் குணப்படுத்த முடியும். வெறும் 10% மட்டுமே தனித்த அலோபதிமுறைக்கு செல்லக்கூடும். இதனால், அரசுக்கு செலவு குறையும், பக்க விளைவுகள் குறையும், சிறந்த பலன் கிடைக்கும்.

இந்தத் திட்டத்தை முதலில் ஏதோ ஒரு மையத்தில் அல்லது மாவட்டத்தில் சோதனை முறையில் ஆரம்பிக்க வேண்டும். ஏகப்பட்ட நோயாளிகள் தாங்களாகவே இந்த கூட்டு சிகிச்சைக்கு வருவார்கள் என்பதும் அரசு யாரையும் நிர்பந்திக்க வேண்டியதில்லை என்பதும் கூடுதல் சிறப்பு. நோயாளிகளை கொரோனா நோயின் தீவிரத்தன்மை, நுரையீரல் பாதிப்பு, பலவிதமான துணை நோய்களை கொண்டவர்கள் என பல குழுக்களாகப் பிரித்து, ஏற்கனவே திட்டமிட்ட படி சித்தா மட்டும் அல்லது ஒருங்கிணைந்த வைத்திய முறை அல்லது அலோபதி மட்டும் என்று மூன்று வகையான வைத்திய முறைகளை செய்து அதன் முடிவுகளை ஆராய வேண்டும். ஒவ்வொரு நோயாளியையும் அறிவியல் முறைப்படி அணுகி, கூட்டுச் சிகிச்சை முறைகளை கொடுத்து, ஆவணப்படுத்தும் போது, ஒரு மாதத்திற்குள் நமக்குத் தேவையான முதல் கட்ட ஆராய்ச்சி முடிவுகள் கிடைத்துவிடும். அதன் பின், அதை தமிழகம் முழுதும் அடுத்த நாளே விரிவு படுத்தலாம். இந்த ஒருங்கிணைந்த சிகிச்சைமுறையானது, கொரோனாவோடு முடிந்து விடாமல், இன்னும் வருங்காலங்களில், பல நாட்பட்ட நோய்களுக்கும் சிறப்பான முன்னெடுப்பாக அமையும்.


### மருத்துவர் அருள் அமுதன்

மரு. அருள் அமுதன் சித்த மருத்துவத்தில் M.D பட்டம் பெற்றவர்; பரம்பரை சித்த மருத்துவக் குடும்பப் பின்னணி கொண்டவர். மருந்தியல் பாடத்தில் (pharmacology) முனைவர் பட்டம் பெற்றவர். MSc Yoga and Naturopathy பட்டமும் பெற்றவர். கர்நாடக மாநிலம் மங்களூரிலுள்ள மணிபால் பல்கலைக்கழகத்தின் Integrative Medicine துறையில் பேராசிரியராகவும், சித்த மருத்துவத் துறையின் பொறுப்பாளராகவும் உள்ளார். சித்த மருத்துவத்தில் பல ஆய்வுக் கட்டுரைகளை முன்னணி ஆய்விதழ்களில் வெளியிட்டுள்ளார். உலக மயச்சூழலில் சித்த மருத்துவத்தின் வளர்ச்சி எப்படி இருக்க வேண்டும் என்பது குறித்து வலைத் தமிழ் இணையத்தில் தொடர் கட்டுரைகள் எழுதியுள்ளார்.

கட்டுரை

மருத்துவர் சு. நரேந்திரன்

# பண்டைய மருத்துவத்தின் மரபுச் செல்வங்கள்

**“மெய் தெரி வகையின் எண் வகை உணவின் செய்தியும் விரையார்”**
**(தொல்காப்பியம்)**
**எட்டு வகையை நெல், புல், வரகு, தினை, சாமை, இறுங்கு, தோரை, இராகி என அடியார்க்கு நல்லார் குறிப்பிடுகிறார். பயறு, உளுந்து, கடுகு, கடலை, எள்ளு, கொள்ளு, அவரை, துவரை என மற்றொரு உரையாசிரியர் சுட்டுகிறார். இதில் உள்ள சத்துக்கள் பொதுவாகவே உடலில் சர்க்கரையை மெதுவாக உயர்த்தும். ஆகவே இது நீரிழிவுக்குத் தடுப்பாகும் என்பது தமிழர்கள் கண்ட உணவு.**

பண்டைய கால மருத்துவ மரபுச் செல்வங்களை அறிய இலக்கிய இலக்கண நூல்களும், அவற்றின் உரைகளும் அவ்விலக்கியங்களுக்குத் துணையாகக் கல்வெட்டுக்களும், தொல்லியல் சான்றுகளும் துணை நிற்கின்றன. (எ. கா.) தொல்காப்பியம், சங்க இலக்கியங்கள் போன்ற நூல்களுடன் கணக்கதிகாரம், அகத்தியர் குழம்பு, போகர்வைத்தியம், சித்தாராரூடச்சிந்து, சரபேந்திர வைத்திய நூல்கள்.

நம் மருத்துவ தொழில்நுட்பங்கள் தலைமுறை தலைமுறையாக வாய்வழியாகச் சொல்லப்பட்டு வந்தது. ஒரு நிறுவன வழி கற்றல் இல்லை. ஆகவே கற்பித்தல் பொதுமையை எய்தவில்லை. இத்தொழில்நுட்பம் வருவாய்க்குரியதாய் இருந்ததால் ஒரு குறிப்பிட்ட சமூகச் சூழலுக்குள்ளேயே சுழன்று வந்தது. ஆகவே தனியான மருத்துவ நூல்களைக் காண இயலவில்லை. ஆனாலும் தமிழரின் சிந்தனை மரபுகளை இந்தியப் பின்புலத்தில் வைத்து, பிறகு கிரேக்க, அரேபிய சிந்தனையோடு ஒப்புநோக்கும்போது நம் மரபுச் செல்வங்களின் உயர்வும், சிறப்பும் வெளிப்படுகிறது. இவைகள் அனைத்தும் சோதனைக்கு அதிகம் ஆளாகாது, அனுபவத்தாலும் கூர்ந்த நோக்காலுமே பதிவு செய்யப்பட்டவை.

சங்கப்புலவர் அறிவியலாளர்கள் அல்லர். ஆனால் அறிவியல் உண்மைகளைப் பாடல்களில் பொதிந்து வைத்துள்ளனர். பரிணாமக் கொள்கை கருவியல், உலகத் தோற்றம் பற்றிய பொருள் முதல்வாதக் கருத்து, உயிரினங்களின் உறுப்புகள், மருத்துவ உணவுகள் ஆகிய பல செய்திகளைப் புலவர்கள் பாடியுள்ளனர்.

இவ்விலக்கிய உரையாசிரியர்களும் செய்திச் சுரங்கங்களாக விளங்குகின்றனர். தமிழ் மக்களின் வாழ்வியலை அறியவும், ஆராயவும் பெரிதும் உதவும் முதல் நூல் தொல்காப்பியம். இந்நூலில் பொருளதிகாரத்தில் பல மருத்துவக் குறிப்புகள் காணப்படுகிறது. இதில் நோய், பிணி என இரண்டு சொற்கள் உடல்நலக் குறைவைச் சுட்டுகிறது. நோய் தீர்ந்துவிடும், பிணி நீங்காது பிணித்துக்கொள்ளும், பிறவி, காமம் பசியை தமிழ்ச் சான்றோர் பிணி என்றனர். “பையுளும் சிறுமையும் நோயின் பொருள்” (தொல்) இவைகள் ஒருவனுக்கு உள்ளத்தாலும், உடலாலும் துயரங்கள் தருவன / நோய் வகைப்பாடு குறிப்புகள் இலக்கியத்தில் இல்லை எனினும் “வீவரு கடுநோய்”, “அரும் பிணி” என்ற சொல்லாட்சிகள் அமைந்துள்ளன. நோயில் இருவகைப்போக்கைக் காண முடிகிறது.

1. இயற்கைக்கு அப்பாற்பட்டவை
2. இயற்கை நிகழ்வே என்ற புறவய நோக்கு.

புறவயச் சிந்தனை: பசிப்பிணி “கடும்பசி கலக்கிய இடும்பை கூர் நெஞ்சம்” (புறம்) பிணி போக்கும் மருந்து =உணவு - இதைக் கொடுப்பவன் - பசிப்பிணி மருத்துவன். சிறுகுடி குடிக்கிழான் மகன் பண்ணனைச் சோழன் நலங்கிள்ளி இவ்வாறு போற்றுவான். பசிப்பிணியை ‘வயிற்றுத்தீ’ என்று புறநானூறு செப்பும். மணிமேலை ‘யானைத்தீ’ என்கிறது. “ஆணைத்தீ நோய் அரும்பசி களைய” என்கின்றது.

மணமாகாத பெண்களுக்குக் களவுக் காலத்தில் பசலைநோயால் மேனி மாறுபாடு ஏற்படும். “வண்ணம் பசந்து புலம்புங்காலை” (தொல்காப்பியம்) இது உள்ளத்தில் ஏற்படும் உளவியல் மாறுபாடு. காமம்; உளநோய், நல்லறிவை இழக்கச் செய்யும். “நல்லறிவிழந்த காமம்”. (குறுந்தொகை) இந்நோய்க்கு



மருந்து யாரேனும் தரமுடியுமா? காமப்பிணிக்கு வள்ளுவர்

“பிணிக்கு மருந்து பிரன்மன் அணியிழை

தன்னோய்க்குத் தானே மருந்து” என்று ஒரு மருந்தைக் கூறுகின்றார்.

தலைவனைப் பிரிந்த தலைவி தலைவனை நினைத்து, குளிக்காமல் இருப்பதால் தேமல் என்ற சுணங்கு தோன்றும். “பொன் என ஆகத் தரும்பிய சுணங்கும்” (அகம்) இது புறத்தூய்மை இல்லாதவர்க்குத் தோன்றும். சங்ககாலத்தில் தொழுநோயை, “காரக் குறைந்த கரைப்பட்ட நோய்” (கலித்தொகை) என்றனர். பிறகு குறைந்து முடமாக்கும் நோய் என்றதால் குட்டநோய், என்றனர். அதன் பிறகு வடுவினால் கருநிறத் தழும்பு ஆகி ‘கருங்குட்டம்’ ஆகியது. இது நாலடியாரில் தொழுநோய் என சுட்டப்படுகிறது. சூலைநோய் கூரிய ஆயுதத்தால் வயிற்றில் குத்துவது போன்ற கடும்வலி ஏற்படுத்தும் என்று திருநாவுக்கரசர் புராணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதே நோய் ஏயர் கோன் கலிக்காமர் நாயனார் புராணத்திலும் சுட்டப்பட்டுள்ளது.

மாரடைப்பு அதிர்ச்சி (Fear) ஆகும். அதிர்ச்சி உண்டாகும்போது பயம் ஏற்படும் “அதிர்வும் விதிர்வும் நடுக்கச் செய்யும்” (தொல்).

இதேபோல குறளில்,

“எதிரதாக் காக்கும் அறிவினார்க்கில்லை/ அதிரவருவதோர் நோய்” என்று கூறப்படுகிறது. இன்னம் தெளிவாகத் திருமந்திரத்தில் “அடப்பண்ணி வைத்தார் அடிசிலை உண்டார்/மடக்கொடி யாரோடு மந்தணங் கொண்டார் / இடப்பக்கமே இறை நொந்தது என்றார் / கிடக்கப் படுத்தார் கிடந் தொழிந்தாரே” என்று சொல்லப்படுகிறது.

மருந்தின் இலக்கணம் என்ன? உடலுக்கும் உள்ளத்துக்கும் ஏற்படும் நோய்களைத் தடுப்பதும் நீக்குவதுமான பொருளே மருந்து.

“வாயுரை வாழ்த்தே வயங்க நாடின் வேம்பும் கடுவும் போல வெஞ்சொல்” (தொல்)

நல்லமருந்து: நோயை மட்டுப்படுத்தி நோயாளிக்குத் தீங்கு நேராது காக்க வேண்டும். “இன்னுயிர் செய்யும் மருந்தாகிப் பின்னிய” (கலித்தொகை)

அம்மருந்து பொறுக்க முடியாத துன்பத்தைப் போக்கும்படி இருக்க வேண்டும்.

**“அருந்துயிர் ஆரஞர் தீர்க்கும்**
**மருந்தாகிச் செல்வம் பெரும” (கலித்தொகை)**

பின் விளைவுகள், இன்றி விரைவாகத் தீர்க்க வேண்டும்.

**“என்னுள் இடும்பை தணிக்கும் மருந்தாக நன்னுதல் ஈத்த இம்மா”. (கலித்தொகை)**

நல்லுடம்பில் மருந்து நல்லொழுக்கத்தால் பேணப்பட்ட உடம்பில் பலன் மிகுதி. நோய் எதிர்ப்பு சக்தி கூடி இருப்பின் மருந்து சிறப்பாக வேலைசெய்யும்.

**“திருந்திய யாக்கையுள் மருத்துவன் ஊட்டிய மருந்து போல் மருந்தாகி மன்னுவப்ப” (கலித்தொகை)**

மருத்துவன் நோயுற்றவரின் உடல் நிலைகளை நன்கு ஆராய்ந்து அவரது தடுப்பாற்றல் அல்லது திருந்திய யாக்கைத் தன்மைக்கு ஏற்றவாறு மருந்து கொடுக்க வேண்டும். கொடுக்கப்பட்ட மருந்து உண்மையான மருந்தாகி நோயைப் போக்க வேண்டும். அவ்விதம் அமைந்தால் மருத்துவரும், நோயாளியும் மனம் மகிழ்வர்.

மருத்துவ அறம் என்ன?

**“அரும்பிணி உறுநர்க்கு வேட்டது கொடா அது**
**மருதாய்ந்து கொடுத்த அறவோன் போல்”**
**(நற்றிணை)**

**கள் மயக்கம் தருவதற்கு அன்று நெல்லால் செய்யப்படும் (நறவு), பனங்கள், வெப்பமுடைய கள், தேனாலாகிய கள் ''இன் கடு ங்கள்'' (குறு) எனப்பட்டது. போருக்குச் செல்லவும், குளிருக்கும் நறவு. வழிநடை வலிக்கும் கள். சித்தமருத்துவத்தில் அன்ன பேதி செந்தூரம் செய்ய – அனுபானமாக, ''கள்'', பயன்படுத்தப்படுகிறது. இம்மருந்து இரத்தசோகைக்கு ஏற்றது.**

என்ற வரிகள் மருத்துவன், நோயாளி, நோயின்தன்மை காலம் ஆகியவைகளைக் கணக்கெடுத்து மருத்துவம் செய்ய வேண்டும் என்பதைத் தெளிவுபடுத்துகிறது.

தலைக்குத்து மருந்து: மருத்துவன், தாமோதரனார் திருவள்ளுவ மாலையில் சிந்திற் சர்க்கரை, சுக்குப்பொடி, தேன் கலந்து மோந்தால் தலைவலி குணமாகும் என்று குறிப்பிட்டுள்ளார். இம்முறை, சித்த மருத்துவத்தில் 'பொட்டணம்" எனப்படுகிறது.

பசிப்பிணி போக்கும் கருநாவல்: பன்னீராண்டு காலம் பசிவராமல் தடுக்கும் அரிய கருநாவற்கனி, (மணிமேகலை – விருச்சக முனிவன் கதை) –

"பெருங்குலைப் பொன்னைக் கருங்கனியனைய தோர் / இருங்கனி நாவற்பழம்"

உயிர் காக்கும் அற்புத அரிய மருந்துகள் (கம்ப-யுத்த காண்டம்) – இறந்தவர் பிழைக்க, ஒரு மருந்து பிளந்த உடலை ஒட்ட ஒரு மருந்து படைக்கல ஆயுதங்களை வெளிப்படுத்த, ஒரு மருந்து / உருவம் குலைந்தபோது மீண்டும் பழைய உருவினைக் கொடுக்க ஒரு மருந்து அது உண்மையான மருந்து.

"மாண்டாரை உய்விக்கும் மருந்தொன்றும் / உடல் வேறு வகிர்களாகக் / கீண்டாலும் பொருந்து விக்கும் ஒரு மருந்தும் / படைக்கலங்கள் கிளைப்ப தொன்றும் / மீண்டேயும் தம்முருவை அருளுவதோர் மெய்ம் மருந்து முள" என்றும், அடுத்த பாடலில் இவைகள் இன்ன ஆற்றலுடையன என்பத்தையும் விளக்குகிறது.

**"சல்லியம் அகற்றுவது ஒன்று / சந்துகள் புல்லுறப் பொருத்துவது ஒன்று / பயின் நல்லுயிர் நல்குவதும் ஒன்று /. நன்னிறம் தொல்லையது ஆக்குவது ஒன்று"**

அதாவது ஆயுதங்களை வெய்ப்படுத்துவது – சல்லிய கரணி

மாண்டாரை உய்விக்கும் மருந்து – சஞ்சீவ கரணி உடம்பு பிளவை பொருத்துவது – சந்தான

கரணி உயிரை மீட்கும் மருந்து – மிருத சஞ்சீவினி

இம்மருந்தினால் கண்சிமிட்டும் நேரத்தில் உயிர் மீளும். "வீயும் உயிர் மீளும் மருந்து எனல் ஆகியது / வாழி மணியாழி" (சுந்தர காண்டம்).

உரையாசிரியர் அடியார்க்கு நல்லார் தம்பதியர் ஊடலுக்கு மருந்து சஞ்சீவ கரணிபோல் இல்லையே என்று வருத்தம் தெரிவிக்கிறார். இம்மருந்துகள் பொருட்டொகை நிகண்டிலும் காணப்படுகிறது. சித்தர்கள் இம்மருந்துகள் கிடைக்கும் இடத்தைக் கூறுகின்றனர். அவைகள் கொங்கு நாடு, குடகு நாடு, சேரநாடு. மூலிகை வளரும் இடம் அட்டமங்கலம் என அவர்கள் பெயரிட்டுள்ளனர். இது மேற்குத் தொடர்ச்சிமலையாக இருக்கக்கூடும்.

## அழகுக்கு மருந்து

கோவலனுடன் உலாவி வர ஒப்பனை செய்ய கலைச்செல்வி மாதவி பத்துவகை துவர், ஐந்து வகை விரை, முப்பத்திரண்டு வகை ஓமாலிகை என – 47 ஒத்த செயல்படும் கூட்டுப்பொருள்கள், ஊறிய நீரில் நீராடினாள். கூந்தலுக்கு அகில் புகை, நிறம் கொடுக்க, வளர – "மான் மதக் கொழுஞ் சேறூட்டி" அலங்கரித்தனர். இது கத்தூரி குழம்பு என்ற சவ்வாது ஆகும்.

கூந்தல் வளர "கடுகு கலந்த கைப்பிடி எண்ணெய்" (தொல்காப்பியம்) உதவியது.

## குரல் வளம் தரும் மருந்து

பஞ்ச மரபு நூல் இசைமேதை சேறை அறிவனார் எழுதியது. "திப்பிலி, தேன், மிளகு, சுக்கினோடிப்பூரல் / தும்பில்லா, ஆன்பால், தலைக்கடை – ஒப்பில்லா வெந்நீரும், வெண்ணெயும் / மெய்ச்சாந்தும் / பூசவிவை, மன்னூழி வாழும் மகிழ்ந்து". திப்பிலி, தேன், மிளகு, சுக்கு, இம்பூரல், பசும்பால், தலைக்கடை மெய் சாந்து இவைகளை வெண்ணெய்விட்டு அரைத்து வெந்நீரில் குழைத்து பூசிவர குரலின் வளம் அதிகரிக்கும்.

## நோய் வராது பாதுகாக்க மருத்துவம்:

சங்க – இலக்கியத்தில் அதிகமாக மருந்து கூறாத நிலையில் குறளில் விதி விலக்காக மருந்து இல்லா மருத்துவமாக நோய் வராது, பாதுகாக்கும் முறை கூறப்படுகிறது. "முன் உண்டது அறச் செரித்து அறிந்து உண்பது. செரிமானம் அறிந்து உண்பது. ஒத்துக்கொள்வதை, நன்கு பசித்தபின் உண்பது. ஒத்துக்கொள்வதிலும் அளவாக உண்பது. நிரம்ப தின்னியிடம் நோய் குடிகொள்ளும். பசி அளவு தெரியாமல் மிக உண்டால் நோய் அளவின்றி உண்டாகும். இதுவே உடலை பாதுகாக்கும் முறைகள். இக்கருத்துக்களே சித்த மருத்துவத்தில் "பத்தியம்" எனப்படுகிறது. இன்ன நோய்க்கு இன்ன காய்கறி உண்ண வேண்டும் அல்லது கூடாதவை எவை என்பதைக் குறிப்பதே இதன் கருத்து ஆகும்.

தடுப்பு முறை 'கோபம் முகத்தில் தோன்றும்

நகையையும் உவகையையும் கொன்றுவிடும் ஏன் ஒருவனையே கொன்றுவிடும்.'

ஒழுக்கம் இல்லையேல் நோய்: பிறர் மனைவியிடம் இன்பம் துய்ப்பவன் நோய்வாய்ப்படுவான். இதை, "பிறர்க்கு உரியாள் தோள் தோயாதார்" என்று வள்ளுவர் குறிப்பிடுகிறார்.

இதேபோல் "ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம் / உயிரினும் ஓம்பப்படும்" என்ற குறள் வழியாகக் குறளாசிரியர் எய்ட்ஸ் என்ற உயிர்க் கொல்லி நோய்க்குத் தடுப்பு மருத்துவம் கூறுவது சிறப்பான செய்தியாகும்.

உடலுக்கு ஏற்ற வாழை "குமரி வாழையின் குருந்தகம் விரிந்தீங்கு அமுதம் உண்க." (சிலம்பு) என வாழையிலையில் உணவு உண்டதைத் தெரிவிக்கிறது.

## தடுப்புமுறை

உண்டபின் மெல்ல உலாவுதல் அவசியம். இதற்கு உணவு மண்டபத்துடன் நூறடி நீள நடை மண்டபம் இருந்துள்ளதை (சீவகசிந்தாமணி உரை) உரைக்கிறது. இக்கருத்தை ஒட்டியே வள்ளலார் உலாவுதலைக் குறிப்பிடுகிறார். நம்நாடு வெப்பநாடு "உண்பது நாழி உடுப்பவை இரண்டே" (மேலாடை இடையிடை) போதுமானது என்பதே நம் முன்னோர் கொள்கை.

மன அழுத்தமே (stress) 70% நோய்க்கான காரணம். ஆகவே குடும்பம், அரசாட்சி, பணியாளர்கள், சமூகத்தில் வாழ்வோர், சான்றோர் ஆகியோர் நாம் விரும்பும்படியே அமையின் முதுமை என்னும் சிதைவு வராது நரைமுடி வராது என்கிறார் இப்பாடலாசிரியர் பிசிராந்தையார் என்னும் புலவர். இவர் இப்பாடலில் தெய்வத்தையோ கிருமியையோ அல்லது பேய் பிசாசுகளையோ அல்லது மருந்துகளையோ கூறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

**"யாண்டு பலவாக நரையில வாகுதல்**
**யாங்கா கியரென வுனவுதி ராயின்**
**மாண்ட என் மனைவியோடு மக்களும் நிரம்பினர்"**

## சமயலறை மருத்துவம்

நமது மருத்துவம் சமயலறையில் தொடங்குகிறது. அஞ்சறைபெட்டி பொருட்கள் (வீட்டு மருந்து) மருத்துவத்தின் மூலப்பொருள்கள் ஆகும். இது உணவாகவும் அமைந்தது. "கருங்கொடி மிளகின் காய்துணர் பசுங்கறி" (மலைபடுகடாம்) "இஞ்சி மஞ்சள் பைங்கறி பிறவும்" உப்பு அளவாக இருக்க வேண்டும், நெல்லின் அளவிற்கு உப்பு விற்கப்பட்டது "உப்பு அமைந்தற்றால் புலவி, அது சிறிது மிக்கற்றால் நீளவிடல்" இது காதலர் பொய் கோபத்திற்கு ஒப்புமை காட்டப்பட்டது. பொய்க்காதலும், கெடும் உணவும் கசந்துவிடும். உணவில் அறுசுவை அவசியம் (இனிப்பு, துவர்ப்பு, கார்ப்பு, உவர்ப்பு, கைப்பு, புளிப்பு")

"அறுசுவை உண்டி அமர் தில்லால் ஊட்ட" இது

ஆற்றல், வீறு, வளம், தெளிவு மென்மை, இனிமை தரும்.

## உணவுக்கான மருத்துவ நெறி

இவ்வுணவை காலம், இடம், உடல், வயதுக்கு ஏற்றவாறு திட திரவ உணவு என பிரித்து உண்டனர் தமிழர். அவை எட்டு வகைப்படும்.

"மெய் தெரி வகையின் எண் வகை உணவின் செய்தியும் விரையார்" (தொல்காப்பியம்)

எட்டு வகையை நெல், புல், வரகு, தினை, சாமை, இறுங்கு, தோரை, இராகி என அடியார்க்கு நல்லார் குறிப்பிடுகிறார். பயறு, உளுந்து, கடுகு, கடலை, எள்ளு, கொள்ளு, அவரை, துவரை என மற்றொரு உரையாசிரியர் சுட்டுகிறார். இதில் உள்ள சத்துக்கள் பொதுவாகவே உடலில் சர்க்கரையை மெதுவாக உயர்த்தும். ஆகவே இது நீரிழிவுக்குத் தடுப்பாகும் என்பது தமிழர்கள் கண்ட உணவு.

## இறப்பைத் தள்ளிப்போட மருந்து

நெல்லிக்கனி குறித்த செய்தி அதியமான் - ஔவை வாழ்க்கையின் வரலாற்றுச் செய்தி, "சிறியிலை நெல்லித்தீங்கனி" (புறம்) "புன் காழ் நெல்லிப் பைங்காய் தின்றனர்" (அகம்) நெல்லியில் கரு நெல்லிக்கனி மரணத்தை வெல்லும் இது காயகற்ப வகையைச் சார்ந்தது.

## கள்ளும் உணவானது

கள் மயக்கம் தருவதற்கு அன்று நெல்லால் செய்யப்படும் (நறவு), பனங்கள், வெப்பமுடைய கள், தேனாலாகிய கள் "இன் கடு ங்கள்" (குறு) எனப்பட்டது. போருக்குச் செல்லவும், குளிருக்கும் நறவு. வழிநடை வலிக்கும் கள். சித்தமருத்துவத்தில் அன்ன பேதி செந்தூரம் செய்ய - அனுபானமாக, "கள்", பயன்படுத்தப்படுகிறது. இம்மருந்து இரத்தசோகைக்கு ஏற்றது.

## நோய்த் தடுப்பு முறை:

மனதார வாழ்த்தும் மரபு தமிழர் மரபு. "நோயினை ஆகுமதி பெரும" / "நோயிலர் ஆகநின் புதல்வர்". (புறம்) தனிமனித தூய்மை "புறந்தூய்மை நீரால் அமையும்" என போற்றப்பட்டது. மாதவிலக்கில் புணராதே. வீட்டைச் சாணமிட்டுப் பெருக்கி சுத்தம் செய் என்றனர். "பைஞ்சேறு மெழுகிய படிவ நல் நகர்" (பெரும். பாண்) மனைகளில் வேம்பு: "தீங்கனி இரவமோடு வேம்பு மனை செரீஇ." சேமக்கலனை "அற்சிர வெய்ய வெப்பத்தண்ணீர்/சேமச் செப்பில் பெற் இயரோ நீயே" (குறுந்தொகை) என்ற பாடல்வரி சுட்டியுள்ளது. - இதுவே இன்றைய பிளாஸ்க் எனலாம்.

## உடல் பருமனுக்கு உடற்பயிற்சி அவசியம்.

மன்னர் வாழும் தலைநகரில் பந்தாடும் இடத்தை "பற்தெறிந்து இளையராடு பூமியே" என்கிறது. சீவகசிந்தாமணி: பெண்களும் பந்தாடினர். கால் பந்து, கைபந்து, மேலே பந்தை வீசி பிடித்து விளையாடும் பழக்கமும் தமிழர்களிடம் (பாலகாண்டம்) இருந்தது. பரதவ மகளிர் பனை

நுங்கின் நீரையும் கரும்புச்சாரையும் கலந்து மென்பானமாகப் பருகி கடலில் பாய்ந்து நீராடினர் *(Health drink).*

போருக்கு உரிய மருந்தை உடன் எடுத்துச் சென்றனர்.

"அஞ்சனம், மனோசிலை, அணி அரிதாரம் / துத்தம் மாஞ்சி அத்தவத்திரவம் / திப்பிலி. இந்துப் பொப்பு முறையமைத்துத் / தாழி மேதை தவாத துவர்ச்சிகை / வண்ணிகை வங்கப்பாலையொடு இன்ன / மருந்துறுப்பெல்லாம் ஒருப்படுத்து அடங்கி".

அடிப்பட்ட வேதனை தீர்க்க இசை. யாழினால் பல்லிசை இசைத்தும் / ஆம்பல் என்னும் குழலை ஊதியும், காஞ்சிப்பண்ணைப் பாடியும் மருத்துவம் புரிந்தனர். "யாழொடு பல்லியங் கறங்க

**"கைபயப் பெயர்த்து மையிழு திழுகி
ஐயவி சிதாதி ஆம்பல் ஊதி
இசைமணி எறிந்து காஞ்சிபாடி" (புறம்)**

அடிபட்டு கிடப்பவனுக்கு இசை போதுமா? என்ன மருத்துவம் செய்ய வேண்டும். குலசேகர ஆள்வார் - நாலாயிரம் திவ்யபிரபந்தத்தில்

**"வாளாலறுத்துச் சுடினும் மருத்துவன் பால்
மாளாத காதல் நோயாளன் போல்"**

என்று கூறுகிறார்.

அதே கருத்தில் கம்பர் (யுத்த காண்டம் கும்பகர்ணன் வதை படலம்)

**"உடலிடைத் தோன்றிற்றொன்றை அறுத்ததன்
உதிரம் மாற்றி சுடலுறச்சுட்டு வேறோர்
மருந்தினால் துயரம் தீர்வர்"**

என்று செப்புகிறார்.

உள்ளே மாட்டிக் கொண்ட ஆயுதம் வெளியேற்ற பிளவுசெய்யாது கம்பர் காந்த சிகிச்சையைப் பரிந்துரைக்கிறார். (Magnet - மீட்சிப் படலம்)

**"ஆயில்வேல் நீங்களது இப்பொழுதகன்றது
காந்தமாம் மணியின்று வாங்க"**

இதுபோலவே மற்றொரு பாடலில் (மீட்சிப்படலம்) கைகேயி வரமானது கூறிய வேல் போல் குத்தியது தசரதனை - இராமன் தரசதன் மார்பகத்தைத் தழுவியதால் துன்பம் நீங்கியது. காந்தத்தால் வேலாயுதம் நீங்கியதுபோல் இது கம்பனின் உவமை.

மரப்பொந்து புண் : எப்படி மருத்துவம் செய்யப்பட்டது! ஆழமான புண்ணில் நெய் தோய்ந்ததுணி வைத்து நெய்பத்தலில் கிடத்தி, இரும்புத் துண்டை அகற்றி, எலி முடி ஆடை போர்த்தி வீரர்களுக்குச் சிகிச்சை நடைபெற்றது. (சீவக)

புண்ணில் பஞ்சு வைத்துக் கட்டப்பட்டது.

"கது வாய் போகிய நுதிவாய் எகமோடு / பஞ்சியும் களையாய் புண்ணர்" (புறம் P. T. சீனிவாசய்யங்கார் உலகில் பஞ்சைக் கண்டுபிடித்தது தமிழர் எனக் கூறுகிறார். )

இறந்தவரைத் தைலத்தோனியிட்டுப் பிணத்தைப் பத்திரப்படுத்தினர்

காப்பியத்தில் கம்பர் - தசரதன் இறந்த பிறகு அவனுக்கு இறுதிச் சடங்கு நிறைவேற்றுவதில் காலதாமதம் ஆகிய பொழுது தைலத்தோணியிட்டு பாதுகாக்கப்பட்டது (தைலமாட்டுப்படலம்) என்பதை

**"தையல் கடல் நின்றெடுத்து அவனை
தயிலக் கடலின் தலையுய்த்தான்"**

எனச் சுட்டுகிறார்.

இக்காட்சி 12ஆம் நூற்றாண்டு அழகர் கோவிலில் ஓவியமாக உள்ளது. காப்பியத்தில் மற்றொரு இடத்தில் (யுத்த காண்டம்) இந்திரஜித்தின் மறைவு கேட்டு இராவணன் அவன் அழிவிற்குக் காரணமாக இருந்தவர்களை தான் அழிக்காவிடில் தன்னைத் தைலத்தோனியிடுமாறு சபதம் செய்கிறான்.

மருத்துவர்கள் தனி வீதிகளில் அமர்த்தப்பட்டனர். இது சிலம்பில் ஆயுர்வேத மருத்துவ வீதி எனப்பட்டது. அவர்கள் வசித்த ஊர் (திரு. குரங்காடுதுறை அருகில்) மருத்துவக்குடி எனப்பட்டது. "மருந்தாய்ந்து கொடுத்த அறவோன்" என மருத்துவர் புகழப்பட்டனர். மருத்துவருக்கு உதவி செய்பவர் பெண் தாதி, புறத்துறை மகளிர் என்றும்; திருமுக்கூடல் கல்வெட்டில் மருந்தாகும் பெண்டுகள் என்றும் சிலம்பு, மணிமேகலையில் செவிலி, காவற்பெண்டு, தாதி என்றும் குறிக்கப் பெறுகின்றனர். இந்த பொதுக் கருத்து மேலை நாட்டில் பிளாரன்ஸ் நெட்டிங்கேலினால் 1860இல் தலைதூக்கியது என்பது வரலாறு.

சங்க காலத்தில் பொருள் கொடுத்து மருந்து பெறவில்லை. ஏனெனில் பெரும்பாலும் மூலிகை மருந்து விலை கொடுத்தால் பொருளாதார ஏற்றத்தாழ்வு ஏற்படும் என எண்ணினர்.

சங்க காலத்திற்குப் பிறகே அறுவை மருத்துவர்களுக்குச் சல்லிய விருத்தி, சல்லிய கிரியா போகம் என்றும், மருத்துவர்களுக்கு வைத்தியவிருத்தி, ஆதுலர் போகம் என்றும் விஷ விருத்தி விஷக்கடி மருத்துவர்களுக்கும் கொடையாக வழங்கப்பட்டது. ஆனால் 11 ஆம் நூற்றாண்டின் திருமுக்கூடல் கல்வெட்டின்படி மருத்துவர்களுக்கு நெல்லும், பொற்காசுகளும் ஊதியமாக வழங்கப்பட்டுள்ளது அறியப்படுகிறது.

அறுவைக்கான கருவிகள் 26 இருந்ததை அகத்தியர் நயனவிதி 500 இல் குறிப்பிடப்படுகிறது. இவைகள் கத்தி, குறும்பி போன்றவையே ஆகும். வயிற்றுருப்புகளை இவைகளை வைத்து அறுவை சிகிச்சை மேற்கொள்ள முடியுமா என்பது கேள்விக்குறியே ஆகும்.

## அறுவை மருத்துவம் மேம்படாது இருந்ததற்கான காரணம் என்ன?

மருத்துவம் மறைபொருளாகப் போதிக்கப்பட்டது. அறுவை மருத்துவம் கற்க அடித்தளம் பிணத்தை அறுத்து உடல் கூறை அறிந்து கொள்வது அவசியம். ஆனால் தமிழ்நாட்டில் சமய சம்பிரதாயப்படி இறந்தவர் உடல் எரிக்கப்பட்டதால் இது

நடைபெறவில்லை. புத்தம், சமணம் ஆகியவை கொல்லாமை கொள்கையைப் போதித்தது. மேலும் மனுநீதியைக் கடைப்பிடிக்க எண்ணிய மேட்டுக்குடி மக்கள் அறுவைச் சிகிச்சையை நாடவில்லை. ஏனெனில் பிரேதத்தை தொட்ட ஒருவன் யதேச்சையாக தொட நேர்ந்தால் குறிப்பதன் மூலம் மீண்டும் ஒருவன் தனது பரிசுத்தத்தைப் பெறுவான் என்று நம்பினர். வருணாசிரமம், இந்திய மண்ணில் தோன்றிய பின் கடுமையான எதிர்வினை கை, கால்களால் செய்யப்படும் உடல் உழைப்புக்கு ஏற்பட்டது. ஆகவே உடல் உழைப்பை மேட்டுக்குடி மக்கள் தவிர்த்தனர். இதனால் அறிவு ஜீவிகளுக்கும் உடல் உழைப்பு செய்கிறவர்களுக்கும் ஒரு விரிவு ஏற்பட்டது. அதாவது தலைக்கும், கைக்கும் ஒரு விரிவு எனலாம். இது நிலப்பண்ணை முறை (Fedal mentality) கோட்பாடு வந்தபிறகு இது மேலும் தலை தூக்கியது. இதனால் தமிழகத்தில் 18 வகை தாழ்த்தப்பட்ட இனங்களுள் ஒன்றான நாவிதர்களிடம் அறுவை மருத்துவமும், வண்ணார்களிடம் மகளிர் மருத்துவமும் சென்றடைந்தது. இதற்குச் சிறந்த (எ. கா) கொங்கு மண்டலச் சதகத்தில் இடம்பெறும் வயிற்றறுப்பு பிரசவம் செய்த நாவிதச்சி. இவள் கொங்கநாடு காந்தபுர மன்னனின் மகளுக்கு - குழந்தை குறுக்குவாட்டில் இருந்து வெளியே வராது இருந்ததினால் அறுவைச் சிகிச்சை மூலம் குழந்தையைக் காப்பாற்றினாள் என்பது ஆகும்.

இதுபோல முதலாம் இராஜ ராஜ சோழனின் (கி.பி. 1016) கல்வெட்டின்படி குந்தவை நாச்சியார் நிலம் வாங்கி அரையன் உத்தம சோழன் (ராஜேந்திர சோழ பிரயோகத்திரையன்) ஆகிய அம்பட்டனுக்கு சல்லிய கிரியா போகமாக (அறுவை மருத்துவ தொழில் விருத்தியடையச் செய்வதற்கான மானியம்) வழங்கியிருப்பது தெரியவருகிறது.



“மூக்கிழந்தோர் மாற்று மூக்கு ஒட்டறுவை முறை, “சமூகத்தினர் சற்று அறுவறுப்புடன் நோக்கிய நாவிதர் கண்டுபிடிப்பே” என்கிறார் டி. டி, கோசாம்பி. மேல் குடிமக்களுக்கு அறுவை மருத்துவத்தில் பங்கு இல்லை. உடலை முதன்மைப்படுத்தியதால் தான் தந்திரர் இரசவாதம், இரசாயனம் போன்ற அறிவியலை வளர்க்க முடிந்தது. வைதீகர் தூய ஆன்மாவைத் தேடியதால் உடம்பின்மீது கவனம் செலுத்தவில்லை. ஆகையால் பிணங்களை வைத்து கீழ்சாதியினரே அறுத்து ஆராய்ந்தனர். ஆகையால் அறுத்தவனுக்கு ஊதியம் குறைவு, இது திருமுக்கூடல் கல்வெட்டு மற்றும் திருவரங்கம் கல்வெட்டுகள் மூலம் அறியப்படுகிறது. நாவிதரே உலகெங்கும் அறுவையை ஆரம்பகட்டத்தில் செய்துள்ளனர் என்பது ஒரு கூடுதல் செய்தியாகும்.

## மகப்பேறு மருத்துவம்

திருமந்திரத்தில் கருவில் தாய், தந்தை உயிர் அணுக்கள் எவ்வாறு கலந்து குழந்தை உண்டாகிறது என்பதை “புருடன் உடலில் பொருந்து மற்று, ஓரார் / திருவின் கருக்குழி தேடிப் புகுந்தது” உருவம் இரண்டாக ஓடி விழுந்தது” பெண்ணின் கருக்குழியில் ஆணின் ஜீவ அணுக்கள் ஓடி விழுந்து இரண்டாகும் என்பதை இன்றைய (Genetic) அறிவியலோடு ஒத்து நிற்பதை அறிய முடிகிறது.

அடுத்து “மோகத்தில் ஆங்கொரு முட்டை செய்தானே” என்ற வரிகள் இருவரது மயக்க நிலையிலும் ஒரே ஒரு கருமுட்டையே வெல்லும் தன்மை கொண்டது என்பது இன்றைய மருத்துவ உண்மையைப் புலப்படுத்துகிறது.

கரு அதன் வளர்ச்சி பற்றி மாணிக்கவாசகர்

**“மானுடப் பிறப்பினுள் மாதா உதிரத்து**
**ஈனமில் கிருமிச் செருவினில் பிழைத்ததும்”**

என்று 10 மாதம் கருப்பையில் ஏற்படும் கரு வளர்ச்சி நிலையை தம் போற்றி திருஅகவல் பகுதியில் மிக நுட்பமாக விளக்குகிறார்.

## பாரம்பரியக் கூறுகள்

“மெய்யோடிடையினும் உயிரியல் திரியா” (தொல்காப்பியம்)

இதில் உட்கருத்தாக உயிர் தத்தம் உடம்போடு இணைந்தாலும் அவ்வுயிரின் தன்மையில் இருந்து திரியாது. அதாவது உயிரின் பாரம்பரியக் கூறுகள் மாறாது (Hereditary Character) மற்றொரு இடத்தில் “தந்தையர் ஒப்ப மக்கள்” எனப்படுகிறது. இது மரபு வழி பண்பு (Genetic Character) ஆகும்.

பாரம்பரிய பண்பியல்: சாயல் பிறக்கும் குழந்தையிடம் பதிந்துவிடும்.

பெற்றோர் + தாத்தா + முப்பாட்டனார் + மூதாதையர், என்பதை “ஏயம் கலந்த இருவர்தம் சாயத்துப் பாயும் கருவும் உருவும் எனப்பல. காயம் கலந்தது காணப்பதித்தபின்” என்று திருமூலர் கூறியுள்ளார்.

கருவளர்ச்சியில் ஆரம்பத்தில் மசக்கை கருவுற்ற தாய்க்கு ஏற்படும். இம்மாற்றம் “வாயா நோய்” என்று குறிப்பிடப்படுகிறது. இது முதல் மூன்று மாதங்களில் தோன்றும் மசக்கை ஆகும். இப்போது அப்பெண் மண், புளியைத் தேடுவர் (Picca). இது “பசும் புளி வேட்கைக் கடுஞ்சூல் மகளிர்” (குறுந்தொகை)

“வயவுறு மகளிர் வேட்டுணின் அல்லது

பகைவர் உண்ணா அரு மண்ணினையே” என்றும் கூறப்பட்டுள்ளது.

கருச்சிதைவிற்கு ஊக்கமளிக்கக்கூடாது என்று சங்க காலத்தில் வற்புறுத்தப்பட்டது. மீறினால் அறம் அவர்களைத் தண்டித்துவிடும் என நம்பப்பட்டது. “மாணிழை மகளிர் கருச்சிதைத் தோர்க்கும் / உய்தி இல்லென அறம் பாடிற்றே” (புறம்)

பிறக்கும் குழந்தைகள் அனைத்தும் குறைபாடு இன்றி பிறப்பதில்லை. கவை மகன் என்னும் ஒரு

வகை பிறவிக்குறைபாடு 10 இலட்சத்தில் ஒருவருக்கு ஏற்படும். இது வியப்பான பிறவியான சாயிமிய இரட்டையர்கள் ஆகும். "கவை மக நஞ்சு உண்டா அங்கு / அஞ்சுவல் பெரு / என் நெஞ்சத்தானே" (குறுந்தொகை)

பிரசவத்திற்குப் பிறகு எல்லோருடனும் உறங்கக் கூடாது. மகப்பேற்றுக்குப் பிறகு மகளிர் சில நாட்களுக்குத் தனிமைப்படுத்தப்படுவர். இதைத் தொல்காப்பியர் "புனிறு தீர் பொழுதின்" எனக் குறிப்பிடுவார்.

கருவியல் 'ஆண் பெண் தோற்றம்' பாலினக் கீற்றுகளும், பண்பினக்கீற்றுகளும் சேரும்போது ஆணா? பெண்ணா? என்று நிர்ணயிக்க முடியும். இதில் தவறு நேர்ந்தால் அலியாகிவிடும்.

**"ஆண்மிகில் ஆணாகியும் பெண்மிகில்**
**பெண்ணாகவும் பூண் இரண்டும் ஒத்துப் பொருந்தில்**
**அலியாகும். "**

மருத்துவ மனைகள்: உள்ளத்திற்கும் உடலுக்கும் மருத்துவம் பெற மருத்துவமனை தேவை. சக்கரவாளக் கோட்டம். துயரங்களைத் துடைப்பதையே தொழிலாகக் கொண்ட துறவிகள் வாழ்ந்த இடம். இங்கு மன உளைச்சல் நீக்கப்பட்டன. இது "துக்கம் துடைக்கும் துகளரு மாதவர் / சக்கர வாளக் கோட்டம் உண்டு" என்று கூறப்பட்டுள்ளது.

அடுத்து ஒரு பொது இடம், உலக அறவி என்று அழைக்கப்பட்டது. இவ்வாறு அழைக்கப்பட்ட மடாலயங்களில் அன்னதானம் அபயதானம், ஔடததானம், சாத்திர தானம் என தானங்கள் வழங்கப்பட்டன. இதில் நாம் கவனத்தில் கொள்ள வேண்டியது மருந்து இலவசமாக வழங்கப்பட்டது என்பது ஆகும்.

## தஞ்சை மருத்துவமனைகள்:

தஞ்சை (சுந்தர சோழ விண்ணாக ஆதுலசாலை) கும்பகோணம் திருவிசலுர், வேம்பத்தூர் - திருப்புகலுர் ஆகிய ஊர்களில் மருத்துவமனைகள் இருந்துள்ளன. இராசேந்திரன் கல்வெட்டின்படி நோயாளி ஓய்வெடுக்க சத்திரமும், அங்கு சத்துணவும் இலவசமாக வழங்கப்பட்டதும் அறியப்படுகிறது.

மருத்துவமனைக்கு ஓர் எடுத்துக்காட்டாக திருமுக்கூடலில் ஓர் மருத்துவமனை இருந்துள்ளதை 11ஆம் நூற்றாண்டு கல்வெட்டின்படி அறிய முடிகிறது. 15 படுக்கைகள், ஒரு மருத்துவர், ஒரு அருத்துவர், இரு உதவியாளர், இரு பெண் பணியாளர், ஒரு நாவிதர், ஒரு நீர் கொணர்வோர் என்று அம்மருத்துவமனையில் பணிபுரிந்ததை அறிய முடிகிறது.

## சித்த மருத்துவத்தின் சிறப்பு என்ன?

நாடி பிடித்துப் பார்த்து நோய் இன்னது என அறியும் முறை சித்த மருத்துவத்திற்கே உரியது. தனித்தனி உலோக வகைகளை மாற்றும் இராசாயன முறை இம்மருந்திற்கு மட்டும் உரியது. இதுபோல 1. உப்பு, 2. உலோகம், 3. பாதரசம் ஆகியவைகளை மருந்தாக்கும் முறைகளைக் கூறுவது சித்த மருத்துவம். சித்தர்களின் கொள்கை மக்கள் சாகாமல் நீண்டகாலம் வாழலாம் என்பதே. இதற்கான பயிற்சியும், காயகற்பமும் நூல்களில் சொல்லப்பட்டுள்ளன.

சித்தமருத்துவம்: மணி, மந்திரம் மருந்து ஆகியவைகளை உள்ளடக்கியது. மணியை இரசமணி(பாதரசம்) என்று கூறுவர். மாந்தீரிகம், கோரக்கர் மாந்தீரிகம், கருவூரார் அஷ்டமாசித்து போன்ற நூற்களில் காணப்படுகிறது.

மருந்து உடலுக்கும் 'மந்திரம் மனதுக்கும்' மணி ஆன்ம நலத்திற்கும் பயன்படும். இம்மூன்றும் இணைந்து செயல்படுவதே மரணமில்லாப் பெருவாழ்வு. இவற்றில் மணி, மந்திரம் ஆகியன இக்காலத்தில் மறைந்து கிடக்கின்றன. மணி, மந்திரம், மருந்து பக்தி இலக்கிய காலத்தில் இருந்துள்ளதை அப்பரடிகளால் அறிய முடிகிறது.

**"மந்திரமும் தந்திரமும் மருந்துமாகி**
**தீராத நோய் தீர்த்தருள வல்லான் தன்னை"**

என்ற வரிகள்மூலம் அறியலாம்.

இக்காலகட்டத்தில் இறைவனே எல்லாம் என்பதனால் - சித்தர் மரபு காக்கப்படாமல் போயிற்று.

சித்தர்கள் தாழ்ந்த உலோகத்தை உயர்ந்த உலோகமாக்க முடியும் என கூறி அதற்கான மறைமொழியையும் கூறியுள்ளனர். இதில் ஒன்று - "சிவாய நம எனில் செம்பு பொன்னாகும்" என்பது. இவர்கள் யோகம் மூலம் மூச்சுக்காற்றைக் கட்டுப்படுத்தவும் அறிந்திருந்தனர்.

தமிழர் மருத்துவ மாண்பை அறிந்த மன்னர் சரபோஜி "சரபேந்திரர் ரத்னாவளி" எனும் நூலை 5000 மருத்துவக்குறிப்புகளுடன் புலவர்கள் உதவியுடன் எழுதியுள்ளார். ஐரோப்பியர்களும் இதேபோன்ற செயல்களைப் பலவிதங்களில் செய்திருப்பது வியப்பை அளிக்கிறது. (எ. கா. ) வீரமாமுனிவர் நசகாண்டம், ரண வாகடம், அனுபோக வைத்திய சிந்தாமணி என்ற நூல்களை எழுதியுள்ளார். இது வாகடத்திரட்டு என்று ஒரு நூலாக 100 ஆண்டுகளுக்கு முன்பு வெளியிடப்பட்டுள்ளது. தரங்கையில் பணிபுரிந்த பாதிரியார் கிரண்லர், அகஸ்தியர் 200 எனும் நூலை ஜெர்மானியில் மொழிபெயர்த்து 'தமிழ் மருத்துவர்' எனும் நூலை எழுதியுள்ளார். இதுபோலவே தியோடர் லுட்விச் அகஸ்தியர் சுவடிகளை மொழிபெயர்த்துள்ளார். இதை போலவே ஓயிட்லா அன்சிலியும் அகஸ்தியர் வைத்தியம் 500 எனும் நூலை எழுதியுள்ளார். இந்நூலை அன்றைய காலனி அரசு 1813இல் வெளியிட்டுள்ளது.

வள்ளலார் 485 மூலிகைக் குறிப்புகளை எந்தெந்த உலோகத்துடன் கலந்து மருந்து தயாரிக்க வேண்டும் என்று சஞ்சீவ மூலிகை என்ற உரைநடை நூலில் விளக்குகிறார்.

மேற்கண்ட குறிப்புகளின் மூலம் கொடிகட்டி பறந்த தமிழனின் மருத்துவ மரபுச் செல்வங்களை அறிய முடிகிறது என்றால் அது மிகையில்லை.

●

கட்டுரை

ரவிசுப்பிரமணியன்

“யாரும் இருக்கும் இடத்தில் இருந்துகொண்டால் எல்லாம் சௌக்கியமே”

# நானும் கொரோனாவும்



**ஆறு மணிக்கு போன எனக்கு, இரவு 12 மணிக்கு வார்டு ஒதுக்கினார்கள். அதுவரை எக்ஸ்ரே, பிளட் டெஸ்ட், ஈஸிஜி, சிடி ஸ்கேன் என்று ஒவ்வொன்றிற்கும் வரிசையில் நின்று எடுத்து பின் அட்மிஷன் க்யூவில் நின்று படுக்கை ஒதுக்கப்பட்டு வந்து சேர்ந்தேன். அதுவரை பாத்ரூம் போகவில்லை. சாப்பிடவில்லை. சாப்பாடும் இல்லை. படுக்கைக்கு வந்தால் அது படுக்கையா என்று எனக்கு புரியவில்லை. எல்லா இடமும் நாற்றம். தூசி. இருமல் சத்தம். மூச்சு திணறும் முனகல் சத்தம்.**

சென்ற ஆண்டு 2020 பிப்ரவரி இறுதி தொடங்கி பத்து மாதம் ஊரடங்கில் வீட்டில் முடங்கிக் கிடந்த ஏக்கத்தில் 2021 ஜனவரி தொடங்கி மார்ச் வரையில் தொடர்ந்து இலக்கிய கூட்டங்களுக்காக பல ஊர்கள் செல்ல ஆரம்பித்தேன். மாசத்தில் சில நாட்களே வீட்டிலிருந்தேன். ஏப்ரல் 1ஆம் தேதி விஜயா பதிப்பகம் வேலாயுதம் அண்ணன் அவர்கள் கோவையில் ஏற்பாடு செய்த இலக்கியக் கூட்டத்துக்கு சென்றுவிட்டு 3ஆம் தேதி சென்னை திரும்பினேன்.

4ஆம் தேதி முதல் ஜுரம், இருமல் இருந்தது. அது சாதாரண ஜுரம் என்று அசட்டையாக இருந்துவிட்டேன். இடையில் தேர்தல் வந்தது. உடம்பு முடியவில்லையே என்று வீட்டிலிருந்தால், “என்ன ஆனாலும் நீ ஓட்டு போட்டே ஆகணும்; வா வா, பூத் சிலிப் இங்க எங்க கையில் இருக்கு” என்று என் அனுகூல சத்ருக்கள் தொடர்ந்து என்னை போனில் அழைத்தபடி இருந்தனர். வேறு வழியின்றி சென்றேன். வாக்குச்சாவடி வாசலில் நெற்றியில் கருவி வைத்து ஜுரம் எவ்வளவு இருக்கிறது என்று பார்த்தவர், “போட முடியாது போ போ” என்று இரண்டு தடவை அந்த கருவியை ஆட்டிவிட்டு, மூன்றாம் முறை அதே கருவியையே ஆட்டி, “சரி போ” என்று உள்ளே அனுமதித்தார். அரசின் பிரதிநிதி சொல்வதை கேட்க வேண்டுமல்லவா. தவிர போடாமல் வந்தால் வெளியில் இருக்கும் நண்பர்கள் என்னை ஜாதி பிரதிர்ஷ்டடம் செய்யவும் வாய்ப்பிருந்ததால் வாக்களித்து திரும்பினேன். வரும்போது என்ன நமக்குத்தான என்று கேட்கும் போது ”பின்ன” என்று அசட்டு ஜுர சிரிப்புடன் சொல்லி திரும்பிவிட்டேன்.

இதற்கிடையில் கவிஞரும் எழுத்தாளரும் மொழிபெயர்ப்பாளருமான என் நண்பர் மருத்துவர் வசந்த் செந்திலிடம் போனில் ஆலோசனை பெற்று மாத்திரை மருந்துகள் வாங்கி சாப்பிட்டுக்கொண்டு இருந்தேன். மாத்திரைகள் எழுதி அனுப்பியபின் அவரும், “ஆர்சனிக் ஆல்பம், கபசுர குடிநீர், கசாயம், மூலிகை தேநீர் எல்லாம் குடியுங்கள். ரெண்டு வேளை ஆவி பிடிங்க; பாத்துக்கலாம்” என்றார். நமக்கெல்லாம் எப்படி கொரோனோ வரும் என்று நான் நினைத்தது போல மருத்துவரும் நினைத்துவிட்டார்.

நாள் செல்ல செல்ல இருமல் கூடியது. ஜுரம் நிற்கவில்லை. 9ஆம் தேதி வேறு சில ஜுரங்கள் இருக்கிறதா பார்க்கலாம் என்று நண்பர் டெஸ்ட்கள் எழுதி தந்தார். எடுத்தேன். மாலையே வேறு ஜுரங்கள் ஏதும் இல்லை என்று வந்துவிட்டது. அப்போதுதான் எனக்கு சந்தேகம் வலுக்க 11ஆம் தேதி கோவிட் பரிசோதனை எடுக்கச் சென்றேன். பெரும் ரேஷன் கடை கூட்ட நெரிசலில் ஜாதக குறிப்பு தவிர சகலமும் பூர்த்தி செய்த படிவத்தைக் கொடுத்து விட்டு இரண்டரை மணி நேரம் காத்திருந்து சோதனைக்குக் கொடுத்து வந்தேன்.

மாலை 4 மணிக்கெல்லாம் முடிவு பாசிட்டிவ் என்று வந்துவிட்டது. அதை கையில் வைத்துக்கொண்டு கையில் பணமுமில்லையே என்று திக்குதிசை தெரியாமல் திகைத்துக்கொண்டிருந்தேன். அப்போது வழக்கறிஞரும் பேச்சாளரும் எழுத்தாளருமான சகோதரி சுமதி போனில் அழைத்தார். “என் கதை கலைமகளில் வந்திருக்கு படிச்சிங்களா” என்றார். நான் இருக்கும் நிலையைச் சொன்னதும் உடனடியாக எங்கெங்கோ அரசு மருத்துவமனைகளை விசாரித்து, எங்கும் இடம் இல்லை என அறிந்து, மருத்துவர் சுதா சேஷைய்யன் மூலமாக ஸ்டான்லி மருத்துவமனையில் இடமிருக்கிறது என்று தெரிந்து போகச்சொல்லி

உடனடியாக எல்லா உதவிகளையும் செய்தார். தனியார் மருத்துவமனைக்கு போகும் வசதியில்லாததால் வாழ்வில் முதல் முறையாக சிகிச்சைக்காக ஒரு பொது மருத்துவமனைக்குச் சென்றேன்.

மருத்துவமனைக்கு பிக்னிக் போவது போல, எல்லா பொருட்களையும் எடுத்துக்கொண்டு சென்று கொண்டிருந்தேன். அப்போது சுதா சேஷையனே போனில் பேசி, "நான் அங்க சொல்லிருக்கேன்; நல்லா கவனிச்சிப்பாங்க" என்று இரண்டு மருத்துவர்களின் அலைபேசி எண்களை தந்தார். நன்றி சொல்லிவிட்டு ஒருவாறு பல பிரயத்தனங்களுக்கும் பிறகு, அந்த அட்மிஷன் பகுதியை அலைந்து திரிந்து அடைந்தேன். அங்கும் சரவணா ஸ்டோர்ஸ் அளவு கூட்டம் இருந்தது. இந்த உடல் நிலையோடு என்ன செய்யப்போகிறோம் என்று அயர்ச்சியாக இருந்தது. இந்த சனியன் வந்தால் யாரும் கூட வர முடியாது. அங்கு உடலெல்லாம் முகக்கவசம் அணிந்த மருத்துவர்கள், பணியாளர்கள், நர்ஸுகள் தவிர, பார்த்தவர்கள் எல்லோருக்கும் பெரும்பாலும் ஜுரம். பலர் இருமிக்கொண்டிருந்தனர். சிலர் உட்கார முடியாமல் பாதையிலேயே படுத்தும் கிடந்தனர். ஒரே பேச்சு சத்தம். சத்தமில்லா அழுகை. செறுமல்கள். கொட கொட ஸ்டெச்சரிலும், கால் வைக்கும் இடத்தில் தாம்பு கயிறு கட்டப்பட்ட வீல் சேரிலும் மருத்துவ பணியாளர்கள் யார் யாரையோ தள்ளிக்கொண்டு போனார்கள். எனக்கு டீன் சுதா சொல்லியிருந்தும் அந்த மருத்துவர்களால் ஒன்றும் செய்ய முடியாத நிலை. எல்லோரும் போனில் இருந்தார்கள். மிச்ச நேரத்தில் அவ்வப்போது வேலைகள்.

ஆறு மணிக்கு போன எனக்கு, இரவு 12 மணிக்கு வார்டு ஒதுக்கினார்கள். அதுவரை எக்ஸ்ரே, பிளட் டெஸ்ட், ஈஸிஜி, சிடி ஸ்கேன் என்று ஒவ்வொன்றிற்கும் வரிசையில் நின்று எடுத்து பின் அட்மிஷன் க்யூவில் நின்று படுக்கை ஒதுக்கப்பட்டு வந்து சேர்ந்தேன். அதுவரை பாத்ரூம் போகவில்லை. சாப்பிடவில்லை. சாப்பாடும் இல்லை. படுக்கைக்கு வந்தால் அது படுக்கையா என்று எனக்கு புரியவில்லை. எல்லா இடமும் நாற்றம். தூசி. இருமல் சத்தம். மூச்சு திணறும் முனகல் சத்தம். அந்த பொது கழிப்பறை பஸ்டாண்ட் கழிப்பறையை விட ஒரு மோசமான நரகமாக இருந்தது. கண்ணுக்கு நேரே பிளாஸ்டிக் பேப்பரில் மனிதர்களை சுற்றிக்கொண்டு போனார்கள். பெரும் பீதியோடு அந்த படுக்கையில் கையில் கொண்டு போயிருந்த போர்வையை விரித்து காற்று தலையணையை ஊதி படுத்துக்கொண்டேன். மின்விசிறி வேறு எங்கோ சத்தமாக சுத்திக் கொண்டிருந்தது. ஒவ்வொரு படுக்கைக்கும் எப்படி மின்விசிறி வைக்க முடியும். வேர்த்துக்கொட்டியது. பக்கத்தில் ராஜ்மோகன் பாபு என்று ஒருவர் படுத்திருந்தார். அந்த பன்னிரண்டு மணியிலும் எழுந்து உட்கார்ந்து வாங்க வாங்க என்று விருந்துக்கு வந்திருப்பவன் போல் உபசரித்தார். "கொரோனாவா" என்றார். "ஆமாம்" என்றேன்.

"எத்தனை நாள் ஆச்சு."

"இன்னைக்கு தான் டெஸ்ட் எடுத்தேன் தெரிந்தது."

"பயப்படாதிங்க நல்லா ஆயிடும்"

அந்த வார்த்தை அப்போது எனக்கு தேவைப்பட்டது.

"சாப்ட்டிங்களா."

"இல்லை எதும் சாப்பிடலை."

சட்டென சற்று தள்ளி யாரோ ஒரு படுக்கையில் இருந்தவரிடம் போய் அவர் சொல்ல, படுத்திருந்த அவர் அந்த அர்த்த ராத்திரியில் கட்டிலுக்கடியில் இருந்த பையை திறந்து, ஒரு குட் டே பிஸ்கட் பாக்கெட்டும், ஒரு மேரி பிஸ்கட் பாக்கெட்டும் கொண்டு வந்து தந்தார். "பசிச்சவங்களுக்கு என் கையால தரணும்; அதனால எந்திரிச்சு வந்தேன்" என்று இருமலுக்கிடையே சொன்னார். இரண்டு பிஸ்கட் பாக்கெட் இரவு உணவாக அமைந்ததும் என் வாழ்வில் அன்றுதான். சாப்பிட்டதும் ராஜ்மோகன், "மூச்சு திணறல் இருக்கா" என்று கேட்டார். அவர் கேட்டதும் எதோ திணறுவது போல் இருந்தது. "பரவாயில்லை. மூச்சு திணறல் இருந்தால், இப்படி எடுத்து வச்சிக்கங்க" என்று தன் பின்னால் இருந்த ஆக்ஸிஜன் முகமூடியை எடுத்து முகத்தில் மாட்டி காண்பித்தார். அந்த அர்த்த ராத்திரி குறை வெளிச்சத்தில் பக்கத்து கட்டிலில் ஒரு சின்ன விண்வெளி வீரர் படுத்திருப்பது போல இருந்தது எனக்கு. என் தலைக்கு பின்னாலும் ஒரு ஆக்ஸிஜன் மாஸ்க் இருந்தது. ஆனால், எடுக்கவில்லை. எத்தனை பேர் உபயோகப்படுத்தியதோ இந்த சுத்தமற்ற படுக்கை, கழிப்பறைகள் போல என்று எண்ணிக்கொண்டேன். அங்கங்கே இருமல் சத்தம் விட்டு விட்டு கேட்டபடி இருந்தது.

அதிகாலை நாலு மணிக்கு மூச்சு விட சிரமம் போல தோன்றிற்று. பின்னால் திரும்பி மாஸ்க்கை தேடினால் அதை காணும். ராஜ்மோகனை தொடாமல் எழுப்பி, "என்னங்க ஆக்ஸிஜன் மாஸ்க்கை காணுங்க" என்றேன்.

"வேற யாராவது சீரியஸ் பேஷண்டுக்காக எடுத்துட்டு போயிருப்பாங்க" என்று சொல்லிவிட்டு திரும்பி படுத்துக்கொண்டார்.

என்னை சுற்றி என்ன நடக்கிறது. நாம் இருக்க போகிறோமோ. இல்லை முடிவு நெருங்கிவிட்டதா என்று தோன்றிக்கொண்டிருந்தது. இந்த மூச்சுத் திணறலே இது போன்ற பயத்தினால்தான் என்று அப்பறம் தோன்றியது.. 'சே. நாம எவளோ பெரிய கவிஞன் எத்தனை பேருக்கு புத்தி சொல்றவன். மரணத்தை கம்பீரமாக எதிர்கொள்வோம்' என்று சற்று உள் நடுக்கத்துடன் சொல்லிக்கொண்டே வழக்கமான அரைத் தூக்கத்துக்குப் போனேன்.

காலை சாப்பாடு எப்போது வரும் என்று காத்திருந்தேன். ஒரு வழியாய் எட்டு மணிக்கு வந்தது. அரசாங்க சாப்பாடு, காண்ட்ராக்ட்காரர்களிடம் கொடுத்து செய்ய சொன்னது. தரகுத்தொகை எல்லாம் போக, அது எப்படி இருக்குமோ, அப்படி இருந்தது. பசியாய் கிடந்தவனுக்கு ருசிக்கென்ன உரிமை இருக்கிறது. கடகடவென சாப்பிட்டேன்.

நர்ஸ்கள் வருகிறார்கள்; மருத்துவர்கள் வருகிறார்கள்; எல்லோரையும் பார்க்கிறார்கள்; என்னை மட்டும் ஏதும் கேட்கவில்லை, பார்க்கவில்லை. இரவு வரை இதே கதி. எந்த மாத்திரை மருந்து ஊசி ஏதுமில்லை. இதற்கிடையில் சுதா, "உங்களை நல்லா கவனிச்சிக்க சொல்லிருக்கேன்; நல்லா கவனிச்சிக்கறதா போன்ல எனக்கு சொன்னாங்க. பயப்படாதிங்க தைரியமாக இருங்க" என்றார். அவர் டீன். அவரிடம் போய் இந்த பஞ்சாயத்தை எல்லாம் ஏன் சொல்ல வேண்டும் என்று தோன்றிற்று. "ஆமா, ஆமா சரிம்மா ரொம்ப ரொம்ப நன்றிம்மா" என்று மையமாக சொல்லி வைத்தேன்.

ராஜ்மோகனுக்கு ஏதோ மருத்துவமனையில் உள்ளவர்கள் மூலம் செல்வாக்கு இருந்தது. அவருக்கென தனி சாப்பாடு வந்துகொண்டிருந்தது. "ஆஸ்பத்திரி சாப்பாட்டையும் வேஸ்ட் பண்ணக்கூடாதில்ல சார்" என்று அதையும் சாப்பிட்டுக்கொண்டு இருந்தார். தவிர, எப்போதும் எதோ ஒரு பழத்தை சாப்பிட்டபடியே இருந்தார். கறி மீன் குழம்பும் வந்துகொண்டிருந்தது. அந்த ஒல்லியான உடம்பு எப்படி இவ்வளவையும் கொள்கிறது என்று எனக்கு ஆச்சரியமாக இருந்தது. அவர் எப்போது எங்கே போய் ஷேவ் பண்ணுகிறார் என்பதும் புதிராக இருந்தது. அவர் ஒரு வாரமாக இருப்பதால் ஐம்பத்தி ஐந்து வயசு மாப்பிள்ளை போல இருந்தார். "ஏன் வீட்டுக்கு போகல" என்று கேட்டேன். "நான் தர்மபுரி சார். வீட்ல பாக்க ஆள் இல்ல. அதனால இங்கயே குவாரண்டைன் இருந்துட்டு போகலாம்னு இருக்கேன்" என்றார். அவரை மருத்துவமனை உபத்திரவங்கள் எதுவும் பாதிக்கவில்லை. இவன் மட்டும் எப்படி இப்படி இருக்கான் என்று மற்ற படுக்கைகாரர்கள் நினைக்கும் படி போனில் சினிமா பாடல்களை கேட்டுக்கொண்டு எல்லாரையும் "எப்படி இருக்கிங்க" என்று விசாரித்தபடி உற்சாகமாக வலம் வந்துகொண்டு இருந்தார். எல்லோருக்கும் அந்த மனம் வாய்ப்பதில்லை. கடவுள் கிருபை அது.

இரண்டாம் நாள் காலை மாத்திரை டிரேயோடு வந்த நர்சிடம் கேட்டேன்: "ஏன் எனக்கு மட்டும் எந்த மாத்திரையும் தரவில்லை; முந்தாநாள் இரவு வந்தேன்" என்றேன். "எல்லாம் சரியான இந்த ராஜ்மோகனுக்கு கூட தருகிறீர்களே" என்று கேட்டேன். உடனே அவர் கடகடவென்று கத்தரிக்கோலால் ஒற்றை ஒற்றை மாத்திரைகளாக வெட்டி தந்தார். "இதெல்லாம் எதுக்கு, என்ன" என்று கேட்டேன். "ஒண்ணும் பேசாதிங்க சாப்டுங்க" என்றார். "நான் போலீஸ் டிப்பார்ட்மெண்ட்" என்றேன். "அதுக்கு என்ன இப்ப. இங்க எல்லாரும் ஒண்ணுதான் தெரியும்ல்ல. நேத்து அங்க படுத்திருந்தவர் என்ன ஆனார்ன்னு பாத்திங்கள்ல" என்று ரெண்டு படுக்கை தள்ளி இருந்த பெட்டை காண்பித்தார். அதற்குள் அதில் வேறொரு புதியவர் படுத்து இருமிக்கொண்டிருந்தார். "நெடு நல் உளனொருவன் இன்றில்லை என்னும் பெருமை உடைத்து இவ்வுலகு" என்று வள்ளுவன் சொன்னது போல அவர் சாதாரணமாய்ச் சொன்னார். நான் அதுக்குப்பிறகு எதும் பேசவில்லை. அப்புறம் அவரே வந்து இது பாரசிட்டமால், இது ஆண்டி பயாட்டிக், இது இரும்புச் சத்து, இது இருமலுக்கு, இது விட்டமின் சி என்றார். நம்பித்தானே ஆகவேண்டும். மாத்திரைகளை இப்போ சாப்பிடலாமா என்றேன். "ம்" என்றார். அதற்குள் டியூட்டி மருத்துவர் என் கையில் உள்ள மாத்திரைகளைக் கேட்டார். ஏன் என்றேன். "இப்பதான் உங்க சிடி ஸ்கேன் உட்பட எல்லா டெஸ்ட் ரிப்போர்ட்ஸும் வந்திருக்கு. அதுக்கு தக்க தான் மாத்திரைகள் தரணும்" என்று சொல்லி அதை நர்சிடம் திருப்பி கொடுத்துவிட்டார். எனக்கு ஒன்றும் புரியவில்லை. பிறகு ரெண்டாம் நாள் மதியமாய் வந்து ஏதேதோ மாத்திரை கொடுத்தார்கள். சாப்பிட்டேன். ஜுரம் நிற்கவில்லை. வயிறெக்கி வரும் இருமல் கூடிக்கொண்டே வந்தது. இரண்டாம் நாளும் மருத்துவர்கள் யாரும் வந்து ஏதும் கேட்கவில்லை. சுதா போன் செய்து, "என் அசிஸ்டண்ட் ஒருத்தரை நாளை வந்து பார்க்க சொல்லிருக்கேன், பயப்படாதிங்க; நல்லாயிடும், தைரியமா இருங்க" என்றார். இதற்கிடையில் ஏப்ரல் 14ல் நம் நண்பர்கள் போனில் தமிழ் புத்தாண்டு வாழ்த்துக்கள் அனுப்பி கொண்டாடிக் கொண்டிருந்தார்கள். சதா போனில் சத்தம் கேட்டபடி இருந்தது. பார்க்கவும் முடியவில்லை. பதில் சொல்லவும் தெம்பில்லை.

இரண்டாம் நாள் இரவு நான் கிளம்பிவிடலாம் என்று ஒருவாறு முடிவெடுத்து ராஜ் மோகன் தூங்கும் வரை காத்திருந்து, நர்ஸ் கேபினில் இல்லாத நேரம் பார்த்து இரவு கிளம்பினேன். வாசலில் பிடித்துக்கொண்டார்கள்.

"எங்க போறிங்க."

"ட்ரீட்மெண்ட் சரியில்ல. நான் கிளம்புறேங்க" என்றேன்.

"போக முடியாது."

"ஏங்க சரியான ட்ரீட்மெண்டும் இல்லை போகவும் விடமாட்டங்கிறிங்க. சாகிறதுன்னா கூட நான் வீட்ல போய் சாகிறேன். இந்த பிளாஸ்ட்டிக் பேப்பர்ல்லல்லாம் சுத்தி போறதல்லாம் பாத்தா பயமா இருக்கு" என்றேன்.

"விடமாட்டோம். அப்பறம் நாளைக்கு கொரோனோ நோயாளி தப்பி ஓட்டம்ன்னு பேப்பர்ல வரும். எஃப்.ஐ.ஆர். பதிவு பண்ணி போலீஸ் கேஸாயிடும்' உங்க ஆதார் கார்டு எல்லாம் இங்க இருக்கு" என்றார் அந்த 'வாட்ச் வுமன்'.

'ச்சே, இந்த நிலையில் இது வேறயா. என்ன வாழ்க்கைடா இது. நிம்மதியா சாவக்கூட உரிமை இல்லாம பொயிடுச்சே. ஜெயிலை விட மோசமா இருக்கே' என்று படுக்கைக்குத் திரும்பினேன். ஏழைகளுக்கு வியாதியே வரக்கூடாது என்ற நினைப்போடு வழக்கமாக வரும் இரண்டு மணி நேர அரை தூக்கத்துக்கு போனேன். திடீரென்று "அய்யய்யோ" என்று ஒரு பெண்ணின் அழுகுரல் கேட்கவும் அந்த தூக்கமும் போனது.

இன்னொரு கோணத்தில் ஐம்பது பேர்களுக்கு மட்டுமே வைத்தியம் செய்யும் ஒரு இடத்தில் சூழலில், இருநூற்று ஐம்பது பேர்களுக்கு மேல் கூடும்போது, மருத்துவர்களும் செவிலியர்களும்

சுகாதாரப் பணியாளர்களும் என்னதான் செய்ய முடியும் என்றும் தோன்றியது. அந்த உடைகளைப் போட்டுக்கொண்டு இந்த ஏப்ரல் மே மாதத்தில் ஏசி இல்லாத இடத்தில் வேலை செய்யும் போது, அதை கழட்டும் நேரம் குளித்த ஈரத்தோடு துவட்டாமல் வந்து நிற்பது போல் நிற்கிறார்கள். இந்த அளவுக்கு அதிகமான பணிச்சுமைகளால் மிகுந்த மனநெருக்கடிக்கு ஆளாகிவிடுகிறார்கள். எந்த நேரத்திலும் தொற்று அவர்களைத் தாக்கும் அபாயத்தில்தான் விடுப்பு கூட எடுக்க முடியாமல் பணியாற்றுகிறார்கள் என்பதையும் நாம் நினைக்காமல் இருக்க முடியவில்லை.

காலை இன்னொரு கவிதைச் சகோதரி ரத்னா வெங்கட் கவிதை பத்தி பேசச் செய்தார். நான் என் பாடுகளை எல்லாம் சொல்லவும் பதறிப்போய் அவரது உறவினர் - அமைச்சர் உதவியாளர் எழுத்தாளர் பேச்சாளர் மணிகண்டன் மூலம் மாலையே என் டிஸ்சார்ஜ்க்கு ஏற்பாடு செய்தார். நான் நான்கு மணிக்கு புறப்படும் போது, ராஜ்மோகனிடம் வரேன் என்றேன். “இங்க எதுக்கு வரணும் இனி வராதிங்க” என்றார். “உங்க கிட்ட நீங்க எழுதின கதை எல்லாம் கேக்கலாம்னு நினைச்சேன்; அவசரப்பட்டு புறப்பட்டுட்டிங்க” என்றார்.

“நீங்கதான் பாத்திங்கள்ல எப்படி கவனிச்சிகிட்டாங்க என்று.”

“அதெல்லாம் அப்படித்தான் சார்” என்று சொல்லிவிட்டு மதியம் அவர் உறவினர் சாப்பாட்டோடு கொண்டு வந்து கொடுத்திருந்த ஒரு கூலிங்கிளாசை போட்டு, “இது நல்லா இருக்கா” என்று கேட்டார்.

“உங்களுக்கு எது போட்டாலும் நல்லா இருக்கும் ராஜ்மோகன்” என்று சொல்லி புறப்பட்டேன்.

“தைரியமா இருங்க. போயிட்டு வாங்க” என்று வணங்கினார். மருத்துவமனையில் என் பொறுப்பில் நான் போவதாக எழுதி வாங்கிக்கொண்டு என்னை ஒரு வழியாய் அனுப்பி வைத்தார்கள்.

எப்படியோ தப்பித்து வீட்டுக்காவது வந்தோம் என்று பார்த்தால், அதற்குள் மாநகராட்சி ஆட்கள் வீட்டுக்கு வந்து சானிடைஸ் பண்ணுகிறேன் என்று சமையலறை உட்பட எல்லா இடங்களிலும் மருந்து அடித்தார்களாம். எப்படியாவது இந்த கொரோனோவை அழித்துவிட வேண்டும் என்ற வேகம் அவர்களுக்கு. அப்படித்தானே ஆண்டாண்டு காலமாக நாம் மூச்சு திணறத் திணற இன்றும் கொசு மருந்து அடித்துக்கொண்டு இருக்கிறார்கள். அந்த மருந்து அடிக்கும் போதே, அந்த ஸ்பிரேயர் மேலேயே பெரும் பெரும் கொசுக்கள் கேலியாக கைதட்டிச் சிரிப்பதை எத்தனை முறை நாம் கேட்டிருக்கிறோம். வீட்டிலிருந்த என் மனைவி, மகன், மகள் மூவரையும் ஏதோ குற்றவாளி போல் நடத்தி, வீட்டுக்கு வாசலில் வெளியே நிறுத்தி, ஏக களேபரம் செய்து, பக்கத்து அக்கத்தில் எல்லோரும் எங்களைக்கண்டு பயப்படும்படி செய்து, பரிசோதனைக்குசாம்பிள் எடுத்து போயிருக்கிறார்கள். நான் போகும் வரை அவர்கள் முடிவு வராமல் பதட்டத்தில் இருந்தனர். நான் வந்த பிறகு அந்த பிரகிருதிகளுக்கு போன் செய்து கேட்டால், “பாசிட்டிவ்ன்னா உடனே சொல்வோம்; நெகட்டிவ்ன்னா எதும் சொல்லமாட்டோம் சார்” என்று சொன்னார்கள். ”நல்ல சிஸ்ட்டம். தேங்க்ஸ்” என்று வைத்துவிட்டேன்.

வீட்டுக்கு வந்து மூன்று நாள் ஆனது. நான் தனிமையில் இருமிக்கொண்டும் ஜுரத்தோடும் கிடந்தேன். மருத்துவர் செந்தில், “சார், ஆக்ஸிஜன் தேவைப்பட்டால் ஒண்ணும் செய்ய முடியாது நான் இரண்டு லட்சம் தருகிறேன் நீங்கள் எப்படியாவது மேலும் ரெண்டு லட்சம் ஏற்பாடு செய்து பிரைவேட் ஹாஸ்பிட்டல் போங்க. இல்லியா உங்களுக்கு எதுக்கு இவ்ளோ செல்வாக்கு வாழ்றதுக்கு இல்லாம சாகறதுக்கா. எல்லாத்தையும் யூஸ் பண்ணுங்க” என்று கடிந்துகொண்டார்.

பிறகு என் தங்கை தமிழச்சி எம்பிக்கு போன் செய்து விஷயம் சொன்னேன். அது என்னை, “ஏன் இவ்வளவு தாமதம் செய்தீர்கள் அண்ணா” என்று கடிந்துகொண்டது. “கிண்டி கிங்ஸ் இன்ஸ்டியூட்டில் நல்லா பார்க்கிறாங்களாம் அங்க அட்மிஷன் வாங்கி குடும்மா” என்று கேட்டேன். சற்று நேரத்தில் பலர் அங்கு சேர வெயிட்டிங் லிஸ்ட்டில் உள்ளார்களாம் என்று அதன் பி.ஏ. இளஞ்சேரன் தகவல் சொன்னார். சரியென என் நண்பர் நீதியரசர் ஒருவரை தொடர்புகொண்டேன். அவருக்கும் அதே தகவல். இதற்கிடையில் என் நண்பர் அசோக் நகர் பயர் சர்வீஸ் எஸ்.பி. சையது அகமது ஷா மருத்துவமனைக்கே சென்று எனக்காக அட்மிஷனுக்காக போராடிக் கொண்டிருந்தார். தினமணி ராஜ்கண்ணன் யாரோ பி.ஆர்.ஓ மூலமாக சொல்லிக்கொண்டிருந்தார். எப்படியோ மறுநாள் கிங்க்ஸ் இன்ஸ்டியூட்டில் இருந்து போன் வந்தது, தமிழச்சி சொன்னதாக. போய் சேரப்போனால் அங்கும் கடுங்கூட்டம். ஆனால், என்ன. எங்கும் சுத்தமாக, சத்தமில்லாமல் இருந்தது.

காலை எட்டு மணிக்கு போன என்னை அங்கும் அதே சோதனைகளை மறுபடி செய்து, பன்னிரண்டே முக்காலுக்கு தனியறை ஒதுக்கி அனுப்பினார்கள். அன்றைக்குத்தான் அறிமுகமான கிண்டி பயர் ஆபீஸர் தமிழ்பாண்டி எதையும் பொருட்படுத்தாமல் என் பை, தண்ணீர் பிளாஸ்க் எல்லாம் எடுத்துக்கொண்டு கூடவே வந்து எனக்கு உதவிகள் செய்துகொண்டிருந்தார். லிஃப்ட் ஆப்ரேட்டர் காபி குடிக்க ஐம்பது ரூபாய் கேட்டார். கொடுத்தேன். பெரிய ஓட்டலில்தான் காபி குடிப்பார் போலிருக்கிறது.

மூன்றாம் தளத்தில் தனி அறை ஒதுக்கினாலும் கழிப்பிடம் பொதுதான். அதுவும் ஸ்டான்லிக்கு சளைத்ததில்லை என்றுதான் இருந்தது. எத்தனை தடவை சுத்தம் செய்தாலும் போகிறவர்கள் கொஞ்சம் கூட, அதை சுத்தமாக வைத்துக்கொள்ள முயலவில்லை. முகக் கவசத்தை கழிவறையில் போட்டுவிட்டு வந்துகொண்டு இருந்தனர். அது மிதந்து மிதந்து வந்துகொண்டிருந்தது. தனியாக

அங்கே பொது குப்பைத் தொட்டி பெரியதாக இருந்தும் நோயாளிகள் மிச்ச சாப்பாட்டை, பழத்தொலிகளை, பிளாஸ்டிக் கவர்களை அங்கு போட்டுக்கொண்டே இருந்தனர். எதோ கொடையளித்து செல்வது போல் நினைத்து என்ன செய்தாலும் தண்ணீர் ஊற்றாமல் சென்று கொண்டிருந்தனர். கழுவிவிட்டுத்தான் போகிறார்களா என்றே சந்தேகம் வந்தது எனக்கு. சாப்பாட்டு மிச்சங்களாலும் சளியாலும் அடைத்து வாஷ் பேசின்கள் கலர் கலராக நிரம்பி வழிந்துகொண்டிருந்தன. பாடத்திட்டத்தில், நாம் முதலில், கழிப்பறைகளை எப்படி சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும் என்ற பாடத்தைத்தான் பிள்ளைகளைப் படிக்க வைக்க வேண்டும். அப்போதுதான் அடுத்த தலைமுறையாவது உருப்படும் என்று தோன்றிற்று. கழிவறையைச் சுற்றி எங்கும் தண்ணீர் நின்று கொண்டிருந்தது. கதவுகள் ஜன்னல்கள் சரிவர இயங்கவில்லை. அரசியல்வாதிகள் காண்ட்ராக்ட்காரர்கள் கூட்டு கைங்கரியம் துல்லியமாகத் தெரிந்தது. எவ்வளவு நன்றாக கவனித்துக்கொண்டாலும் இந்த விஷயம் முக்கியமில்லையா. விமான நிலைய கழிவறை போல, எப்போதும் ஆட்கள் சுத்தம் செய்துகொண்டிருக்க வேண்டிய விஷயம் இல்லையா. பிறகெப்படி வியாதி கட்டுக்குள் வரும்.

ஆனால், இதற்கு நேர்மாறாக மருத்துவர்கள் ஒரு நாளைக்கு நான்கு முறை வந்து கவனித்துக்கொண்டார்கள். ஒவ்வொரு முறை வரும்போதும் காது குறைபாடு உள்ளவர்களிடம் கேட்பது போல, உங்கள் பேரென்ன என்று சத்தமாகக் கேட்டுக்கொண்டே இருந்தனர். அதற்குள் வேறு யாரும் மாறி இருப்பார்கள் என்ற சந்தேகம் இருக்கும் போல அவர்களுக்கு. அவர் மிகச்சிறந்த கவிஞர். ஆவணப்பட இயக்குநர். இலக்கியவாதி. சிந்தனையாளர். உள்ளே அவரை நன்றாகக் கவனியுங்கள் என்று சொல்லி, அன்றைய ஆதிதிராவிட நலத்துறை மற்றும் பழங்குடி நலத்துறை அமைச்சர் வி.எம்.ராஜலக்ஷ்மி அவர்கள் கிங்ஸ் மருத்துவமனை இயக்குநர் நாராயணசாமிக்குக் கடிதம் எழுதியிருந்தார். நீதியரசர் நண்பரும் உரிய அதிகாரிகள் மூலம் என்னை நன்றாகப் பார்த்துக்கொள்ள சொல்லியிருந்தார். நண்பர் கவிஞர் ஜெயபாஸ்கரன், எம்.பி. அன்புமணியின் பி.ஏ. அவர்கள் மூலம் சொல்லி கவனிக்க சொல்லியிருந்தார். இதனாலெல்லாம்கூட என் பெயரை அவர்கள் அப்படி கேட்டிருக்கலாம்.

மருத்துவமனையில் அருமையான சாப்பாடு. காலையில் ஏழு மணிக்கு இஞ்சி சாறு. ஏழரைக்கு நல்ல சிறப்பான காலை உணவு. அதன் பின் கபசுர குடிநீர். அதன் பிறகு ஒரு மணி கழித்து பால் இரண்டு அவித்த முட்டை. அதன் பின் ஒரு மணி நேரம் பின் ஏதோ ஒரு மிளகு கலந்த சூப். அதன் பின் நல்ல சத்தான இனிப்புடன் கூடிய சுவையான மதிய சாப்பாடு. இரண்டு மணி நேரம் கழித்து ஒரு கஞ்சி. அதன் பின் ஒரு மணி நேரம் கழித்து சுண்டல். எலும்பிச்சை சாறு. அதன் பின் தினம் எதாவது ஒரு நட்ஸ் பாக்கெட் சிறியது. இரவு ஏழு மணிக்கு நல்ல சுவையான உணவு. சாப்பாடு விஷயத்தில் எதோ மாமனார் வீட்டுக்கு வந்த மருமகன் போல் கவனித்துக்கொண்டனர்.

**எ**வ்வளவோ கஷ்டங்களுக்கு மத்தியிலும் நண்பர்கள் சிலரின் உதவியால்தான் இதிலிருந்து மீண்டேன். நண்பர்களால் தான் வாழ்ந்தேன். இன்றும் அவர்களால்தான் வாழ்கிறேன். எனக்கு ஆக்ஸிஜன் தரவில்லை. ட்ரிப் ஏதும் போடவில்லை. மாத்திரைகள் மட்டும் தந்தார்கள். நாலாந்தேதி முதல் இருப்பதால் குறைந்திருக்கும் போல. ஆறாம் நாள் பிளட் டெஸ்ட் எடுத்துவிட்டு, நீங்கள் நன்றாக உள்ளீர்கள் போகலாம் என்று சொல்லிவிட்டார்கள். இங்கு டிஸ்சார்ஜ் எல்லாம் உடனடியாக நடந்தது. திரும்பும் போதும் அதே கூட்டம் ஏகப்பட்ட நோயாளிகள் வாசலில் காத்திருந்தனர்.

அரசாங்க கணக்குகள் எப்போதும் எதிலும் பொய் தானே என்று நினைத்துக்கொண்டேன். நோய் இருப்பது தெரிந்தும் தேர்தலுக்காக பட்டியை திறந்து, மந்தையை ஓட்டி விடுவது போல ஓட்டிவிட்டு, எது நடந்தாலும் எங்களுக்கு தேர்தல்தான் எங்களுக்கு முக்கியம் பரப்புங்கடா. சாவுங்கடா என்று அனுப்பி திரிய விட்டுவிட்டு இப்போது எல்லோரும் நீலிக்கண்ணீர் வடிப்பதும், அதிலும் அரசியல் செய்வதும், ஊழல் செய்வதும் மருந்து விலைகள் ஏற்றப்படுவதும் எதற்கும் கேள்வி கேட்காமல் இருக்கும் பாவப்பட்ட, அதே சமயம் அறிவுகெட்ட ஜென்மங்கள் வாழும் ஒரு தேசத்தில் நடக்கும்தானே.

சுதந்திரம் வாங்கியதிலிருந்து இன்று வரை ஆள்கிறவர்கள் அரசு பணத்தை செலவழித்த அளவுக்கு அடிப்படை வசதிகளை எதையும் முழுமையாகச் செய்து தரவே இல்லை. சிற்சில விதி விலக்குகள் இருக்கலாம். பெரும்பாலும் எல்லாம் கண் துடைப்பு. சாலைகள், கல்விக்கூடங்கள், கழிப்பறைகள், சாக்கடை வசதிகள் எல்லாவற்றையும் சராசரியாய் வெறும் இருபத்தி ஐந்து விழுக்காட்டில் செய்து தந்துவிட்டு பாக்கி அவ்வளவு பொதுப் பணத்தையும் இயற்கை வளங்களையும் பொது சொத்துக்களையும் முழுக்க முழுக்க தங்களது சொந்த சொத்தாய் ஆக்கவே இது நாள் வரை கர்ம சிரத்தையாய் செயல்பட்டு வந்திருக்கிறார்கள். அதன் அவல கதியின் நீட்சிதான் இந்த கொடுங்காலத்தில் எதிரொலிக்கிறது. அமெரிக்கா, கனடா, சிங்கப்பூர், மலேசியா, துபாய் போன்ற நாடுகள் மக்கள் பணத்தை எவ்வளவு முழுமையாக மக்களுக்காக செலவு செய்து அதன் காரியங்களை பின் எப்படி தொடர்ச்சியாக நிர்வாகம் செய்கிறார்கள் என்பதை நினைத்தால் ஏக்கப் பெருமூச்சுதான் மிஞ்சுகிறது.

ஆளுகிறவர்கள், மலின அரசியல் பண்ணுபவர்கள் எல்லாருமே குறைந்த பட்சம் அடிப்படை படிப்பாவது படித்தவர்களாகவேதான் உள்ளனர். 'படிச்சவன் சூதும் பாவமும் பண்ணினால் போவான், போவான், ஐயோவென்று போவான்' என்கிறான் பாரதி. ம்கூம். ஒருவரும் அப்படி போனதாக தெரியவில்லை. எல்லோரும் குண்டுக் கல் மாதிரி நன்றாகத்தான் இருக்கிறார்கள்.

**கட்டுரையாளர்: எழுத்தாளர்**

நூல் விமர்சனம்

**ந.முருகேசபாண்டியன்**
murugesapandian2011@gmail.com

# காஃப்காவின் கரப்பான் பூச்சி:
# நம் காலத்தின் கவிதைகள்

**நம்பிக்கைகள் எல்லாம் வற்றிப்போய் நிலவும் யதார்த்தத்தை ஏற்றுக்கொள்வதுதான் தேச பக்தியின் அடையாளம் என்று சங்கிகள் முன்வைக்கிற அரசியல் சூழலில் கடற்கரயின் கவிதைகள் சமகாலத்தின் எதிர்ப்புக் குரலாக விரிந்துள்ளன.**

கவிதை, மொழியின் வழியாகச் சித்திரிக்கிற விநோத உலகம் எப்பொழுதும் வசீகரமானது. சொற்களின் ஒருங்கிணைப்பில் வாழ்க்கையைப் பதிவாக்கிட முயலும்போது மந்திரம் போலச் செறிந்திடும் கவிதை வரிகள், வாசிப்பின் வழியாக உருவாக்கிடும் காட்சிகள் அற்புதமானவை. கவிதையை நேசிக்கத் தெரிந்த மனம், அழகியலின் வெளிப்பாடாகப் புற உலகை உள்வாங்கிடும் இயல்புடையது. தமிழைப் பொறுத்தவரையில் கவிதை எப்பொழுதும் சீரிளமைத் திறத்துடன் இரண்டாயிரமாண்டுகளாகச் செயலூக்கம் மிக்கதாக இருக்கிறது. நிலமான்ய அமைப்புச் சிதலமடைகிற சமூகப் பொருளாதாரச் சூழலில் கவிதை வடிவம் செல்வாக்கிழந்து போகும் என்ற கணிப்பினைமீறி, ஆண்டுதோறும் நூற்றுக்கணக்கான இளம் கவிஞர்கள் தங்களுடைய முதல் கவிதைத் தொகுப்பினை உற்சாகத்துடன் வெளியிடுகின்றனர். இன்று கவிதை ஆக்கத்தில் பல்வேறு போக்குகள் முன்னிலைப்படுத்தப்படுகின்றன. எனினும் ஐம்பதுகளில் 'எழுத்து' சிறுபத்திரிகையில் பிரசுரமான இருண்மைக்குள் பயணித்த கவிதையின் பின்புலத்தில் பொதிந்திருக்கிற வைதிக சநாதன அரசியலைக் கண்டறியாமல், இன்றளவும் அந்த மாதிரிக் கவிதைகளை மட்டும் 'இது தாண்டா நவீன கவிதை 'என்று வரையறுக்கிற போக்கு நிலவுகிறது. இது, ஒருவகையில் தமிழ்க் கவிதை மரபுக்கு எதிரானது. யோசிக்கும்வேளையில் சங்க காலத்தில் தொடங்கிய கவிதையாக்கம், எப்பொழுதும் எளிமையாகவே இருந்திருக்கிறது. பழந்தமிழ் இலக்கியச் சொற்களின் பொருள்கள் புரியாமல் இருக்கலாம் என்பதைத்தவிர தமிழ்க் கவிதை காலந்தோறும் வாசகர்களுக்கு நெருக்கமாகவே இருக்கிறது. இந்தப் பின்புலத்தில் கவிஞர் கடற்கரய் எழுதியுள்ள கவிதைகள் அடங்கியுள்ள 'காஃப்காவின் கரப்பான் பூச்சி' தொகுப்பினை அணுகிட வேண்டும். கவிதைதோறும் மாறுபட்ட கவிதைசொல்லியாகப் புறவுலகை விசாரித்திடும் 'காஃப்காவின் கரப்பான் பூச்சி' நூல் அண்மையில் தமிழில் வெளியாகியுள்ள முக்கியமான கவிதைத் தொகுப்பு என்று சொல்வதில் எனக்குத் தயக்கம் எதுவுமில்லை. பின்நவீனத்துவம் மங்கலான மொழியமைப்புக் காரணமாகக் கவிதையை ஒதுக்கியிருந்தாலும், கடற்கரய் எழுதியுள்ள கவிதைகள் வாசிப்பில் மகிழ்ச்சியை ஏற்படுத்துகின்றன.

நவீனத் தமிழ்க் கவிதையாக்கத்தில் மொழிபெயர்ப்புக் கவிதைத் தொகுதிகளான முருகையன், எம்,ஏ.நுஃமான் மொழிபெயர்த்த பாலஸ்தீனியக் கவிதைகள் (1981), இந்திரன் மொழிபெயர்ப்பில் வெளியான அறைக்குள் வந்த ஆப்பிரிக்க வானம் (1982), மொலீனா தேன்மொழி, யமுனா ராஜேந்திரன் மொழிபெயர்ப்பில் பிரசுரமான சேகுவேரா கவிதைகள் (1986) குறிப்பிடத்தக்கன. மரபான கவிதைப் போக்குக்கு மாற்றாகப் புதிய மொழியில் வீரியமான சொற்களுடன் கவிதைகள் எழுதுவதற்குப் பின்புலமாக மொழிபெயர்ப்புக் கவிதைகள் விளங்கின. அரசியல் என்பது தீண்டத்தகாதது போல உன்னதமான விஷயங்கள் குறித்துக் கலாபூர்வமான மொழியில், மனதின் விகாசங்களைப் பதிவாக்குவதுதான் கவித்துவமானது என்று 'எழுத்து' சிறுபத்திரிகை காலகட்டத்தில் உருவாக்கப்பட்ட போக்கைச் சிதிலமாவதற்கு, அரசியல் கவிதைகளின் மொழிபெயர்ப்புகள் முயன்றன. ஈழத்தில் நடைபெற்ற இன ஒடுக்குமுறைக்கு எதிராக எழுதப்பட்ட கவிதைகளின் உருவாக்கத்தில் மொழிபெயர்ப்புக் கவிதைகள் செல்வாக்குச் செலுத்தின. அந்த வரிசையில் கவிஞர் கடற்கரய் எழுதியுள்ள 'காஃப்காவின் கரப்பான் பூச்சி' கவிதைத் தொகுப்பு, அரசியல், சமூகப் பிரச்சினைகளுக்கு முன்னுரிமை




தந்து எழுதப்பட்டுள்ளது.

2001 ஆம் ஆண்டில் பிரெஞ்சுக் கவிஞர் ழாக் பிரேவர் எழுதிய கவிதைகள் அடங்கிய 'சொற்கள்' தொகுப்பை வாசித்தவுடன் எனக்குள் ஏற்பட்ட கொண்டாட்டமும் பரவசமும் சொற்களில் அடங்காது. அந்தக் கவிதைகள் உருவாக்கிய ஒருவகையான பித்து மனநிலையில் நானும் சில கவிதைகளை எழுதினேன். சிறந்த கவிதை வாசகனின் மனதில் முடிவற்ற அனுபவங்களை ஏற்படுத்திடும் இயல்புடையது. ழாக் ப்ரேவரின் கவிதைகள், வாசித்து முடித்தவுடன் ஒருபோதும் முடிவடையாமல் ஒருவிதமான தவிப்பு மனநிலையை ஏற்படுத்துகின்றன. ழாக் பிரேவரின் கவிதைகள் போலத் தமிழில் அரசியல் கவிதைகள் பிரபலமாகாத சூழலில் கடற்கரய் சமகாலம் குறித்து விவரித்துள்ள கவிதைகள் கவனத்திற்குரியன. காலந்தோறும் மனித மனம் கட்டமைத்துள்ள உலகையும் புனைவுகளையும் எளிய விவரணைகள் மூலம் கேள்விக்குள்ளாக்குகிற கவிதை மொழியில் கடற்கரய் தன்னுடைய கவிதைகளைப் படைத்துள்ளார். அவை, தமிழ்ச் சூழலில் அதிர்வுகளை ஏற்படுத்துகின்றன; நம் காலத்தின் கவிதையாகியுள்ளன. கடற்கரய், கவிதைசொல்லலில் புதிய வகைப்பட்ட போக்கினைக் 'காஃப்காவின் கரப்பான் பூச்சி' தொகுப்பில் முன்னிறுத்துகிறார். எதிர்காலத்தில் கடற்கரய்யின் கவிதையாக்க முறையைப் பின்பற்றிக் கணிசமான கவிதைத் தொகுப்புகள் வெளியாகிட வாய்ப்புண்டு.

கவிதைத் தொகுப்பின் தலைப்பு, ஓரிரவில் கரப்பான் பூச்சியாக உருமாறிய காஃப்கா சித்திரிக்கும் மனிதன் போல நவீன வாழ்க்கையில் பலரும் எதிர்கொள்கிற அவலத்தை நுட்பமாகப் பதிவாக்கியுள்ளது. நாம் வாழ்ந்துகொண்டிருக்கிற இன்றைய காலகட்டம் அவநம்பிக்கைகள் நிறைந்தது. இந்துத்துவா என்ற பேனரில் கார்ப்பரேட்டுகள் ஆட்சியதிகாரத்தில் வீற்றிருந்து எல்லாவற்றையும் சிதலமாக்குகிற அரசியலின் வெக்கை எங்கும் பரவியுள்ளது. நள்ளிரவில் ரூபாய் நோட்டுகளைத் திடீரென மதிப்பிழக்கச் செய்தது, ஜிஎஸ்.டி அறிமுகம், புதிய வேளாண்மைச் சட்டங்கள், நாளும் உயர்ந்திடும் எரிபொருள் விலை என்ற சூழலில் கொரனோ வைரஸ் எல்லாவற்றையும் உலுக்கி விட்டது. இருந்த கொஞ்ச நம்பிக்கையும் துடைத்தெறிந்துவிட்டு, ஆயிரக்கணக்கான மைல்கள் கொளுத்துகிற வெய்யிலில் நடந்துபோன விளிம்புநிலையினரின் அவலம் காற்றில் மிதக்கிறது. நம்பிக்கைகள் எல்லாம் வற்றிப்போய் நிலவும் யதார்த்தத்தை ஏற்றுக்கொள்வதுதான் தேச பக்தியின் அடையாளம் என்று சங்கிகள் முன்வைக்கிற அரசியல் சூழலில் கடற்கரயின் கவிதைகள் சமகாலத்தின் எதிர்ப்புக் குரலாக விரிந்துள்ளன. தமிழ் போன்ற பாரம்பரியமான மொழியைக் கையாளுகிற கவிஞரான கடற்கரய் சமகால வாழ்க்கைக்கு நெருக்கமான உணர்வுடன் பரிசோதனையை மேற்கொண்டுள்ளார். மாற்றங்கள் பல்கிப் பெருகிடும்போது, யதார்த்த வாழ்க்கை எளிமையானதாக இல்லை. முனெப்போதையும்விட சிக்கலாகிக் கொண்டிருக்கும் சூழலில், கவிஞன் முந்தைய தலைமுறையினர் அறியாத விஷயம் குறித்து யோசிக்கிற நிலையில், கவிதையானது, அறிவு சார்ந்த உணர்வனுபவமாக மாறுகிறது. புதியனவற்றைப் புதிய மொழியில் பேச வேண்டியது கவிஞனுக்கு அவசியம் என்று ரஷியக் கவிஞர் மாயகோவ்ஸ்கி குறிப்பிட்டிருப்பது கடற்கரய்க்கு முழுக்கப் பொருந்துகிறது. அறிவு அதிகாரத்தின் குரலாகவும், இருப்பு வன்முறை சார்ந்தும் கட்டமைக்கப்படும்போது, கவிஞன் அவற்றிலிருந்து விலகி நின்று புனைகின்ற கவிதை மொழியின் வீச்சு முக்கியமானது. அறிவியல் என்ற ஒற்றைச் சொல்லின்

*பின்னர் பொதிந்திருக்கிற கார்ப்பரேட்டுகளின் நலன்கள்,ஒவ்வொருமனிதனையும்தகவமைக்கின்றன. ஏற்கனவே மரபணு மாற்றப்பட்ட கத்திரிக்காய் தொடங்கி, ஒவ்வொரு இயற்கைப் பொருட்களையும் வணிகக் கொள்ளைக்காக மாற்றுகிற ஆராய்ச்சியில் உயிரியல் யுத்தம் நிகழ்கிறது. இப்பொழுது கொரோனா வைரஸ். ஆய்வகத்தில் கொரோனா வைரஸ் நுண்ணுயிரை உருவாக்கிட வேண்டிய தேவை என்ன? மனிதர்கள் கொத்துக்கொத்தாகக் கொள்ளை நோயில் மடிகின்ற சூழலில் இனிமேல் செய்வதற்கு என்ன இருக்கிறது? ஒட்டுமொத்தத் தமிழ்ச்சமூகமும்நம்பிக்கைஇழந்து,வீட்டிற்குள்ளேயே முடங்கிபோய், பெரிதும் நிலைகுலைந்திருந்த சூழலில் கடற்கரய் எழுதியுள்ள 'இன்னும் முடியவில்லை இந்த ஆட்டம்' கவிதை வரிகள், ஒருவிதமான சுயஎள்ளல்தன்மையுடன் விரிந்துள்ளன.*

**இந்த நூற்றாண்டுதான்**
**எத்தனை புதிய கதைகளைப் பெற்றுள்ளது நண்பா?**
**முதலில், கரங்களைக் கழுவினோம்; போதவில்லை**
**பின் கால்களைக் கழுவினோம்; முடியவில்லை**
**அடுத்து காய்கறிகளைக் கழுவினோம்**
**எதுவும் உதவவில்லை.**
**மூக்கை மூடினோம்**
**முகத்தை மூடினோம்**
**வீட்டை மூடினோம்;**
**இன்னும் முடியவில்லை**
**இந்த ஆட்டம்,**
**விடாமல் சவக் குழிகளை மூடி வருகிறோம்.**

*இதுவரை நம்பிக்கை அளித்த கடவுள்கள், மதங்கள், தத்துவங்கள், மருந்துகள்… எல்லாம் கொரோனா வைரஸ் முன்னர் அர்த்தம் இழக்கிற அபத்தமான சூழலில் தொடர்ந்திடும் ஆட்டம் வேதனையானது. எல்லாவற்றிலும் இருந்து கைவிடப்பட்ட இருத்தலில் வாழ்தல் என்பது ஒருவகையில் சபிக்கப்பட்டது. ஆயிரமாண்டுகள் கடந்த பின்னர் கார்ப்பரேட்டுகளின் வேட்டைகள் தொடர்ந்திடும் சூழலில் மனித இனம், பூமியில் ஒருக்கால் உயிர்த்திருந்தால் கொரோனா வைரஸ் குறித்துக் கடற்கரய் எழுதியுள்ள கவிதை வரிகள் வரலாற்று ஆவணமாகி விடும். அமெரிக்காவைவிட இந்தியாவில் குறைவு; மகாராஷ்டிராவைவிட தமிழ்நாட்டில் குறைவு; சென்னையைவிட மதுரையில் குறைவு; மதுரை நகரைவிட சமயநல்லூர் கிராமத்தில் குறைவு; மேற்குத் தெருவைவிட புதுத் தெருவில் குறைவு … என்று கொரோனா பற்றிய ஒப்பீட்டுப் புள்ளிவிவரக் கணக்கில் மகிழ்ச்சியடைகிற மனிதர்கள் பெருகியுள்ளது தற்செயலானது அல்ல. கொரோனா பெருந்தொற்றில் இருந்து தன்னுடைய குடும்பம் அல்லது தான் மட்டும் எப்படியாவது தப்பி உயிர் வாழ்ந்திட துடித்திடும் மனநிலைக்கு விதிவிலக்குகள் குறைவு. எதுவும் நடப்பதற்கான சாத்தியப்பாட்டில் இன்றைக்கு எத்தனை சவக் குழிகள் மூடப்பட்டன என்று காட்சி ஊடகம் சித்திரிக்கிற தகவல் வெறுமனே எண்களாகிப் போனது வரலாற்றின் மாபெரும் சோகம். இந்தச் சூழலில் பூமியில் மனித இருப்பினுக்கும் கரப்பான் பூச்சியின் வாழ்தலுக்கும் பெரிய வேறுபாடு இல்லை எனக் கடற்கரய் சொல்கிறாரா? யோசிக்க வேண்டியுள்ளது.*

*ஒட்டுமொத்த நகரத்தைப் பெட்டிக்குள் அடைத்துவிட்டு, 24 மணி நேர பிரேக்கிங் செய்திகளைத் தொலைக்காட்சிப் பெட்டியின் முன்னர் பார்த்துப் பீதிக்குள்ளான மக்கள், ஒருநிலையில் பரிசோதனை எலிகளாக மாற்றப்பட்டனர். வீட்டின் ஜன்னலைத் திறந்துவைத்தால் கொரோனா வைரஸ் உள்ளே புகுந்து மரணத்தை எதிர்கொள்ள நேரிடும் என்ற அச்சம் நிலவியது. திடீரெனத் தெருவின் இருபுறமும் தகரத்தினால் அடைக்கப்பட்டன; அப்புறம் வீட்டின் வாசல் தகரத்தால் அடைக்கப்பட்டது. தெரு, வீட்டைச் சுற்றிலும் வெண்மையான குளோரின் பவுடரின் நாற்றம். உயிருடன் சமாதியாக்கப்பட்ட சூழலில் வீட்டிற்குள்ளேயே இரு வாரங்கள் முடங்கி இருந்தவர்களில் உயிர் பிழைத்தவர்களின் ஆயுள் கெட்டி. சில ஆண்டுகளாக ஒரே அடுக்ககம் அல்லது ஒரே தெருவில் வாழ்ந்தவர்கள்கூட கொரோனா வைரஸ் பாதிப்பிற்குள்ளானவரைப் பார்த்த பார்வை சொல்லில் அடங்காது. எதிர்வீட்டினர் கொரோனா தொற்றுக்குள்ளானபோது சகமனிதர்களின் அணுகுமுறை எதிர்மறையானது. இத்தகைய சூழலை முன்வைத்துக் கடற்கரய் எளிய மொழியில் நடுத்தர வர்க்கத்தினரின் பொதுபுத்தியைக் கவிதை வரிகளாக்கியுள்ளார்.*

**சாலைகள் மூடப்பட்டன;**
**தெருக்கள் அடைக்கப்பட்டன;**
**வீதிகள் மறிக்கப்பட்டன;**
**சகலமும் மாறியது அங்கே!**
**நோயாளி வீட்டுக் கதைவை மூடிய**
**ஊழியர் ஒருவர்**
**வெளிப்புறமாக நின்று**
**பெருந்துளை இட்டார்.**
**தகரத்தைக் கொண்டு**
**அக்கதவின் மீது**
**ஆணியை அடித்தார்.**
**அப்போதுதான்**
**பக்கத்து வீட்டுக்காரர் ஒருவர்**
**பாதுகாப்பாய் உணர்ந்தார்.**
**வீட்டின் உள்ளே**
**இருப்பவர்களின் வாழ்வைவிட**
**வெளியே வசிப்பவர்களின்**
**பாதுகாப்பு முக்கியம் என்றானது.**
**அண்டை வீட்டார் அல்ல;**
**ஊராருக்கும் இதே மனநிலைதான்.**
**வீட்டின் உள்ளே இருந்தவர்கள்**
**பேச்சற்று நிற்கையில்**
**மற்றொரு ஊழியர்**
**தன் கையிலிருந்த**
**ஆணி ஒன்றை**
**சுவரில் இறக்கினார்.**
**அது**
**அக்குடும்பத் தலைவரின்**



நெற்றியில்போய் நேரே இறங்கியது.
இன்னொரு ஆணியை
இறக்கியபோது
இயலாமையின் வடிவமாய் இருந்த
அவ்வீட்டு பெரியவர் ஒருவர்
அதை இதயத்தில் தாங்கினார்.
குடுபத்தின்
மொத்த வாழ்வும் முடக்கப்பட்டது
முழு அமைதியை உணர முடிந்தது.
முதலில் முகத்தை
மூடக் கூறியவர்கள்; பின்
நோயாளிகளின் வீட்டை
சவப்பெட்டியாக்கினார்கள்.
ஆக்சிஜன் அளவை
உயர்த்தச் சொல்லிவிட்டு
வீட்டை சன்னல்களை
ஒவ்வொன்றாய் அடைத்தார்கள்.
அதன்பின்னர்
அர்த்த ராத்தியில்
விளக்கை ஏற்றிவிட்டு
ஜல்லிக் கரண்டியால்
சாப்பாட்டு தட்டில் ஒலி எழுப்பி
“Go கொரோனா Go” என்ற பாடலைப் பாடி
சகலரும் சந்தோஷமாக
உறங்கப் போனவர்கள்!

வெறுமனே தகவல்களின் தொகுப்பாகப் பதிவாக்கப்பட்டுள்ள இந்தக் கவிதை வரிகள், கவிதையின் மையத்தில் இருந்து வாசகனை வெளியேற்றுகின்றன. கவிதையின் ஒற்றைத்தன்மைக்குள் மூழ்கி, உறைந்திடாமல் பிரதியில் இருந்து அந்நியப்பட்ட நிலையில்தான் எதிர்வினையாற்ற முடியும். கவிதையின் இறுதி வரிகள் “Go கொரோனா Go” என்ற பாடலைப் பாடி/ சகலரும் சந்தோஷமாக/உறங்கப் போனவர்கள்! என்று கறுப்பு நகைச்சுவையுடன் முடிகிறது. என்னவொரு துயரம்? கடற்கரய்யின் கவிதை வரிகள் முடியும்வேளையில் வாசகனின் மனம், கவிதைக்குள் பயணித்துக் கண்டறிந்திட்ட புதிய உலகை அசை போடத் தொடங்குகிறது. ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் ஓர் உலகம் இருக்கிறது. ஏக்கம், கனவு, இழப்பு, ஆசை, விழைவு எனப் பல்வேறு உணர்வுநிலைகளில் பிறருடன் கொள்கிற சமூக உறவு, சொற்கள்மூலம் கட்டமைக்கிற செறிவு போன்றன கவிதை மொழியின் மூலமாகச் சாத்தியப்படுகின்றன. மனித சமூகத்தின மாபெரும் அவலம் நிகழ்கிறவேளையில் அதிகார வர்க்கம் எப்படியெல்லாம் மனிதர்களைப் பகடைக்காய்களாக உருட்டுகிறது என்ற புரிதலுடன்தான் கடற்கரய் சந்தோஷமாக உறங்கப் போனார்கள் என்று எழுதியுள்ளார். வேறு என்ன?

முதலில் சாயங்கால வேளையில் தட்டுகளைத் தட்டி ஒலியெழுப்புதல், பின்னர் மின் விளக்குகளை அணைத்துவிட்டு, மெழுகுவர்த்தி அல்லது டார்ச் விளக்கை ஒன்பது நிமிடங்களுக்கு ஒளிரச் செய்யுங்கள் என்று நாட்டின் பிரதமர் சொன்னது எளிதில் கடந்து போகிற விஷயமல்ல. அதிகாரத்தை முன்வைத்து எதைச் சொன்னாலும் நம்பிச் செய்கிற மந்தைகளாக மக்களை மாற்றுகிற அதிகார அரசியல், கொரோனாவை முன்வைத்து நடைபெற்றுள்ளது. பிரதமர் என்பவர் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர். இந்தியக் குடிமகன். அவ்வளவுதான். ஆனால் மோடியைச் சர்வ வல்லமை பொருந்தியவராக ஊடகங்கள் சித்திரிக்கின்றன. மோடி கொரோனா குறித்து அமெரிக்க அதிபருடனும் இத்தாலிய அதிபருடனும் தொலைபேசியில் பேசினார் என்று ஒளிபரப்பாகும் செய்தியினால் இந்தியர்களுக்கு என்ன பயன்? விளையாட்டு வீரர்களுடன் மோடி பேசியதும்கூட அம்மன் சல்லிக்குப் பொறாத விசயம். இன்றிரவு மின்சார விளக்கை அணைக்காவிட்டால், அது அரசாங்கத்தை எதிர்த்த செயல்பாடு என்ற கருத்து, எங்கும் நுட்பமாகப் பரப்பப்படுகிறது. கொரானா மூலம் ஒருவிதமான அச்சத்தில் மக்களை ஆழ்த்திவிட்டால், அப்புறம் சர்வாதிகாரம்தான். ஊரடங்கினால் நாடெங்கும் எளிய மக்கள் பசியுடன் வாழ்கிற துயர வாழ்க்கையைப் போக்கிட துளியளவுகூட முயலாத மோடி, விளக்கேற்றி ஏன் இப்படி கோமாளித்தனம் செய்கிறார் என்று சிலர் நினைக்கலாம். இதெல்லாம் அடிப்படைப் பிரச்சினைகளில் இருந்து மக்களை திசை திருப்புகிற ஆர்.எஸ்.எஸ். அஜெண்டாதான். தெருவில் திரிகிற பசு மாட்டிற்குத் தினமும் கீரை வாங்கித் தின்னக் கொடுத்தால், எல்லாப் பிரச்சினைகளும் தீரும் என்று சொல்லி, நம்ப வைக்கிற சநாதனவாதிகளின் நீட்சிதான் மோடியின் விளக்கேற்றும் வைபவம். வயோதிகத்தினால் இயற்கையாக மரணமடைந்தவர் மோட்சமடைவதற்காக முப்பது நாட்கள் கழித்துக் குறிப்பிட்ட கோவிலில் விளக்கேற்ற வேண்டுமென்றும் அது மோட்ச தீபம் என்றும் அண்மைக்காலமாகச் சநாதனவாதிகள் சொல்கின்றனர். நாட்டின் பொருளாதாரம் கடுமையாக வீழ்ச்சியடைந்திருக்கிற சூழலில் கார்ப்பரேட்டுகளின் எஜெண்டாகவும், சநாதனவாதிகளின் நலன்களைப் பாதுகாக்கிறவராகவும் விளங்குகிற மோடி, கிராமத்தினர் சொல்வதுபோல காரியக் கிறுக்கன். எதைச் சொன்னாலும் நம்புகிறவர்களாக இந்திய மக்களை உருவாக்குவதன் பின்னர் பாசிஸம் பொதிந்திருக்கிறது. பெரும்பான்மையான ஜெர்மனியர்களின் சம்மதத்துடன்தான் ஹிட்லரின் பாசிஸம் அதிகாரத்தைக் கைப்பற்றியது என்பது வரலாறு. எதிர்காலத்தில் இந்தியாவில் பாசிஸம் அரங்கேற இருப்பதன் ஒத்திகைதான் கொரோனாவை முன்வைத்து நடத்தப்பட்ட நாடக நிகழ்வுகள். அதேவேளையில் வீட்டின் வாசலை தகரத்தால் அடைத்து முடக்கப்பட்டவர்களின் மனச்சோர்வும், துக்கமும் சாதாரணமானவை அல்ல. அவை, இந்த நூற்றாண்டின் மாபெரும் சோகம். கடற்கரய் எழுதியுள்ள ’வைரலான புகைப்படம்’ என்ற கவிதை, யதார்த்ததில் 2021 ஆம் ஆண்டில் வைரலான தமிழ்க் கவிதையாக எங்கும் பரவிட வேண்டும். அந்தக் கவிதை வாசிப்பின் எனக்குள் ஏற்படுத்திய அரசியல் பேச்சுகள் போல ஒவ்வொரு வாசகருக்கும் மாறுபட்ட பேச்சுக்களை உருவாக்கிடும் வல்லமையுடையது.

சங்க காலக் கவிதைகளிலே அரசியல்

இடம்பெற்றுள்ள மரபை அறிந்திடாமல், நவீன கவிதையில் அரசியல் கூடாது என்ற பிதற்றுடலுடன் கவிதையைப் பளிங்கு போலக் கருதுகிற மனநிலை ஏற்புடையது அல்ல. தொல்காப்பியம், திருக்குறள் உள்ளிட்ட அற இலக்கிய நூல்களில் சொல்லப்பட்டுள்ள அரசியலுக்கு அளவேது? சரி, போகட்டும். கடற்கரய்யின் துல்லியமான அரசியல் அவதானிப்பு, கவிதையாக்கத்தில் வெளிப்பட்டுள்ளது. பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் கண்ணாடிக் கிணறு கவிதைத் தொகுப்பு மூலம் இலக்கிய உலகில் அடியெடுத்து வைத்த கடற்கரய், இன்று முற்றிலும் மாறுபட்ட அரசியல் தளத்தில் கவிதைகளை எழுதியுள்ளார். 'பேசு' என்று கடற்கரய் எழுதியுள்ள கவிதை நுண்ணரசியலைப் பேசுகிறது.

காற்றைப் போல் பேசு!
தரைமட்டமாக்கும் நில அதிர்வைப் போல் பேசு!
விடாதே பேசு;
உன் வார்த்தைகளை கொட்டு!
உன் வெறுப்பை வெளியேற்று;
அவர்கள் விரும்ப மாட்டார்கள்.
இது உன் குரல்;
உன் மொழி;
உன் ஆற்றாமை; ஆகவே பேசு
மௌனம் அல்ல உன் மொழி
அமைதி அல்ல உன் வழி
இது ரணங்களின் பாதை
ரத்தத்தை ருசி;
வேசியை ஸ்நேகி;
பிச்சைக்காரர்களுடன் காதல் கொள்
சாக்கடையில் இருந்து புறப்படு
பேசு;
வெடிப்புற பேசு.
அவர்கள்
யாரும் உன்னைப் பேச மாட்டார்கள்!

மனிதர்கள் கண்டறிந்த மொழியின் வழியாகத் தொடங்கிய சமூக இயக்கம், ஒரு காலகட்டத்தில் சொத்துடமைப் பின்புலத்தில் மதங்களுடன் கூட்டுச் சேர்ந்துகொண்டு புலன்களை ஒடுக்குவதாக மாறியது. பேச்சு பேசுவதற்கு விதிக்கப்படும் தடைகள் நாளும் பெருகிடும் சூழலில் பேசு என்று கவிதையின் மூலம் கடற்கரய் அழுத்தமாகக் எதிர்க்குரல் கொடுத்திருக்கிறார். குறிப்பாக வைதிக சநாதனவாதிகளின் வருணாசிரமக் குரல் ஓங்கி ஒலித்திடும்வேளையில் அதற்கு எதிராகப் பேச வேண்டியதுள்ளது. மத அடிப்படைவாதத்துடன் கூட்டுச் சேர்ந்துகொண்டு இயங்குகிற கார்ப்பரேட்டுகளின் அதிகாரக் குரலுக்கு எதிராக எல்லோரும் பேச வேண்டிய தருணம் இது. இது உன் குரல்/ உன் மொழி என்ற கவித்துவ ஆவேசம் கவிதையில் ததும்புகிறது.

கிராமத்தில் எந்தவொரு விஷயத்தையும் தெளிவாகப் பேசுகிறவரை அகராதி என்று குறிப்பிடுவது வழக்கம். அன்றாடம் புழங்குகிற சொற்களுக்கு யாரும் அகராதியைப் புரட்டி பார்ப்பது இல்லை. பெரும்பான்மை மக்கள் கல்வியறிவு இல்லாமல் இருந்த காலகட்டத்தில் அகராதி, நிகண்டு குறித்து அக்கறைகொண்டது உயர் சாதியினர் என்று தங்களைக் கூறியவர்கள்தான். அப்புறம் இந்தியாவைக் காலனியாக்கிட வந்த ஐரோப்பியர்களுக்கு நிறைய அகராதிகள் தேவைப்பட்டன. அதிகாரத்திற்கும் அகராதிக்கும் நெருங்கிய தொடர்பு இருக்கிறது. சொற்கள் எல்லோருக்கும் பொதுவானவை. சொற்களின் பின்னால் அர்த்தம் தேடியலைகிற சூழலும் கனமான அகராதிகளும் கடற்கரய்க்கு விநோதமாகத் தோன்றுகின்றன. அகராதி என்ற கவிதை மூலம் கடற்கரய் சித்திரிக்கிற உலகு ஒருவகையில் மர்மம் தோய்ந்துள்ளது.

அகராதி என்பது
அவனது வாழ்வில் அறவே இல்லை. அது
அரிய பொருள் போல் அவனை அரட்டுகிறது.
நடுங்கும் கைவிரல்களை அழுத்திய அவன்,
அகராதியை லேசாகப் புரட்டுகிறான்.
அகர வரிசையில் உள்ள
அத்தனை சொற்களும் பீதியைத் தருகின்றன.
… … …
கடைசி வரை
அவன் தேடிய ஒரு சொல்
ஒரே ஒரு சொல்
எந்த அகராதியிலும் இல்லை.
அகராதிக்குள் அகப்படாத ஒரு சொல்லை
அவன் உள்ளம் உருட்டிக் கொண்டே இருக்கிறது.

இன்றையக் கல்விச் சூழலில் அகராதி தவிர்க்கவியலாத கருவி நூல். எனினும் சராசரி மனிதன் ஒருபோதும் தன்னுடைய வாழ்க்கையில் புரட்டி இருக்காத அகராதி குறித்த கடற்கரய்யின் கவிதையில் பகடி தோய்ந்துள்ளது. எல்லாம் தெரியும் என்று தலை வீங்கித் திரிகிற மனிதர்களுக்குக் குறியீடு அகராதிகளா? இன்னொருவகையில் அகராதிகளுடன் வாழ்வது தவிர்க்க இயலாததது என்பது கவிஞருக்குத் தெரியும்.

காலங்காலமாக நிகழ்ந்துகொண்டிருக்கிற சம்பவம் என்று எல்லோரும் கடந்து போகிற இடத்தில் பெண்ணின் இருப்பு இன்றளவும் இருக்கிறது. பெண்ணுடல் மீதான பிரேமையை முன்னிறுத்தித் தேவதை பிம்பத்துடன் புனையப்படும் புனைவுகளுக்கு அப்பால் பெரும்பான்மையான பெண்கள் எதிர்கொள்கிற வதைகளும் வலிகளும் தொடர்கின்றன. ஏன் இப்படியெல்லாம் நடக்கின்றன என்ற கேள்வியை யோசிப்பதற்குக்கூட யாருக்கும் நேரம் இல்லை. கடற்கரய் எழுதியுள்ள 'கண்ணீர்' கவிதையில் கவிதைசொல்லியின் பார்வையும் பெண்ணின் கண்ணீரும் ஒத்திசைகின்றன. புறவயமான மனநிலையில் கண்ணீர்விட்டுக் கதறியழுதிட இடமற்ற சூழலில் வாழ்ந்திட நிர்பந்திக்கப்பட்ட பெண்களின் கண்ணீர் ததும்பிடும் அழுகைக்குப் பின்னர் வரலாற்றின் சோகம் தேங்கியிருக்கிறது. காலந்தோறும் துயரத்துடன் கதறியழுகிற பெண்களின் அவலம் குறித்த எளிய விவரணை போலக் கவிதை வரிகள் இருந்தாலும் வள்ளலார், பாரதி, பாரதிதாசன் சென்ற கவித்துவ ஆவேசத்துடன் கடற்கரய் தொடர்ந்து பயணிக்கிறார்



என்று சொல்ல முடியும். அதற்கான ஆகிருதி கவிஞர் கடற்கரய் கவிதைகளில் பொதிந்துள்ளது.

பேருந்தில் கண்களைக் கசக்கியபடி
ஒரு பெண் பயணிப்பதைப் பார்த்திருக்கலாம் பலரும்,
என்னைப் போலவே?
உங்களைப் போலவே ஒரு பெண்ணின்
கண்ணீரை நான் நெருக்கத்தில் காண்கிறேன்.
அவள் கண்ணீர் யாருக்கானது என்பது தெரியாது.
கூடுதலாக 'அவள்' என்பதால்
கண்ணீரின் கனம் கூடுகிறது.
விம்மி விம்மி புடைக்கும் அவள் முகத்தைப்
பலரும் பார்க்கின்றனர், பலரும் பார்க்காதபடி.
நான் அவளை நேர்கொண்டுக் காண்கிறேன்.
அவள் கண்ணீரை சலனமற்று பார்க்கிறேன்.
அவள் முக வாட்டத்தை தயங்காமல் பார்க்கிறேன்.
அவள் முதன்முறையாக தன் கண்ணீருக்காக
பரிதவிக்கும் ஜீவனைக் காண்கிறாள்.
அவளது கண்ணீர் எதை தேடுகிறதோ
அது அவள் வாசலை நிறைக்கட்டும்.
அதை மறைப்பதற்குதான் அதிக சிரமப்படுகிறாள்.
… … …
அவளுக்கு ஒரு இடம் தேவை,
அவள் துயரத்தை முற்றிலுமாக வெளியேற்ற
மேலும் அந்தரங்கமாக உட்கார்ந்து
கொஞ்ச நேரம் வாய்விட்டுக் கதற.
அந்த இடம் எங்கே இருக்கிறது?
… … …
நிறைப் பெண்களைக் காண்கிறேன்.
பேருந்துகளில்,
திரையரங்குகளில்,
நடு வீதிகளில்,
மருத்துவமனை வராந்தாக்களில்,
ஆதரவற்றோர் இல்லங்களில்,
அவர்கள்தான் அழுகிறார்கள். ஏனெனில்
கண்ணீர் அவர்களிடம்தான்
கடல்நீரைவிட அதிகம் இருக்கிறது.

தெருவில் கடந்து போகிறபோது சாதாரணமாக எதிர்கொள்ள நேரிடுகிற கண்ணீருடன் விசும்புகிற பெண் பற்றிய காட்சி அன்றாடம் நிகழ்கிறதுதான். காலந்தோறும் பெண்கள் கண்ணீருடன் ஆற்றாது அழுகின்ற அழுகைக்குப் பின்னர் பொதிந்திருக்கிற வலியை நுட்பமாகக் கடற்கரய் சித்திரித்துள்ளார். பெண்-அழுகை-கண்ணீர் என்ற சமன்பாட்டில் துயரத்தைக் கவிதையாக்குவதில் கடற்கரய்யின் மொழி ஈரத்துடன் கசிகிறது.

கவிதைக்குள் இருக்கிற நான், கவிஞரின் நான், கவிதை வாசிப்பில் உருவாகிடும் நான் போன்ற பல நான்களின் குவிமையமாக வெளிப்படும் கவிதையில் கடற்கரய் சித்திரிக்கிற நான், ஒருவகையில் பகடியானது. எல்லோரையும் பாடாய்ப்படுத்திடும் 'நான்' அவ்வப்போது அற்ப ஜந்து அல்லது கோடிக்கால் பூதம் போலக் காட்சியளிக்கிறது. பாரதியின் வசன கவிதையை இன்றைக்கு வாசித்தாலும் சமகாலத்தன்மையுடன் ஈரமாக இருக்கும். அந்த வழியில் கடற்கரய் சூழலையும் மனித இருப்பையும் பொருத்திக் காண்கிற ஆற்றலான மனதின் தேர்வு, ஞானத்தின் தேடலாகக் கவிதையின் ஊற்றாக நானைக் கண்டறிந்துள்ளார்.

வானில் பறக்கும் புள்ளெல்லாம் நான்.
வந்து அமரும் காக்கைகூட நான்.
நீரில் மிதக்கும் புழுப்பூச்சி எல்லாம் நான்.
வாத மரத்தின் இலை எல்லாம் நான்.
வான்கோழியின் இறகெல்லாம் நான்.
ஜோதி கதிரின் ஒளிப்பிழம்பு நான்.
மோதி வழியும் பிறைமதியும் நான்.
செங்குரங்கு நான்!
ஓடைகளில் அமர்ந்திருக்கும்
ஒல்லிக் குச்சி ஓணான் நான்!
மனித ஸ்பரிசத்தை விரும்பாத
மரவட்டை நான்!
பசலை இலைகளின் நடுவே
உழுது புரளும் புழுப் பூச்சி நான்!
இந்தப் பிரபஞ்சத்தின் உயிர் மூச்சு நான்!

ஓணான், வான்கோழியின் இறகு எல்லாம் நான் என்ற புரிதலுடன் இருக்கிற கவிஞரின் நான், ஒருநிலையில் ஒளிப்பிழம்பு, பிறைமதி, பிரபஞ்சத்தின் உயிர்மூச்சு என்று சமநிலை அடைகிறது. இயற்கையுடன் தன்னைப் பொருத்திக் காண்கிற கவிஞரின் மெய்யியல் தேடல் அற்புதமான கவிதை வரிகளாகியுள்ளன.

முதல் கவிதைத் தொகுதியான 'கண்ணாடி கிணறு' வெளியாகி, பதினொரு ஆண்டுகளுக்குப் பின்னர் கொரோனா காலத்தில் ஏற்கனவே இருந்த ஊடகப் பணியும் இல்லாத சூழலில் 30, அக்டோபர் 2020 அன்று தற்செயலாகக் கடற்கரய் மீண்டும் தொடங்கிய கவிதை ஓட்டம் 02, மார்ச் 2021 அன்று நிறைவடைந்துள்ளது. மொத்தம் 52 கவிதைகள். எண்ணிக்கையில் குறைவு என்றாலும் லார்வா பருவத்தில் இருந்து கூட்டைக் கிழித்துக்கொண்டு சிறகடித்த வண்ணத்துப் பூச்சியின் கிளர்ச்சிக்குக் குறைவில்லாத கவிதைகளைக் கடற்கரய் எழுதியுள்ளார்.

சமகால மனிதனைக் கவிதை மொழியின் வழியே திடுக்கிட வைத்து, உள்ளுணர்வைத் தூண்டுகிற எதிர்ப்புணர்வைக் கவிதையில் கட்டமைத்துள்ள கவிஞர் கடற்கரய்யின் அரசியல் சாரம், இன்றைக்குத் தேவையாக உள்ளது. காலங்காலமாக இதுவரை சொற்கள் கட்டமைத்துள்ளவற்றைப் புரட்டுதல், கலைத்தல் மூலம் கட்டுடைத்தல், மரபு வழிப்பட்ட வாசிப்பில் அதிர்ச்சியும் பதற்றமும் ஏற்படுத்தி மீள் உருவாக்குதல் என்று கவிதையாக்கத்தில் கடற்கரய் நேர்த்தியுடன் படைத்துள்ளார். நம் காலத்தின் கவிதைகள் அடங்கிய 'காஃப்காவின் கரப்பான் பூச்சி', அவசியம் வாசிக்கப்பட வேண்டிய தொகுப்பாகும்.

**காஃப்காவின் கரப்பான் பூச்சி (கவிதைத் தொகுதி). கடற்கரய். சென்னை: தமிழ் அலை பதிப்பகம். பக்கம்:120; விலை: ரூ.120/-. தொடர்புக்கு: 9486838801.**

ரூபன் சிவராஜா
svrooban@gmail.com

கொரோனா தடுப்பூசி அரசியல்:

# செல்வந்த நாடுகளின் பதுக்கலும் வறிய நாடுகளின் பரிதாபநிலையும்

**உலகின் செல்வந்த நாடுகள் மட்டும் தடுப்பூசிகளைப் போட்டு விடுவதால் தொற்றுப் பரம்பல் கட்டுப்பாட்டுக்குள் வந்துவிடாது. உலக நாடுகள் அனைத்தும் வழமைக்குத் திரும்புவது என்பதே தொற்றுப்பரம்பலைக் கட்டுக்குள் கொண்டுவருவதென்பதன் உள்ளார்ந்த பொருள். அதுவே தொற்றுப்பரம்பலைக் கட்டுப்படுத்துவதில் வினைத்தாக்கம் மிக்க செயற்பாடு. அப்படி நிகழத் தவறினால் நாடுகடந்த பயணங்கள் மீண்டும் மீண்டும் புதியபுதிய தொற்றுஅலைகளைத் தோற்றுவித்துக்கொண்டே இருக்கும். இந்தப் பெருந்தொற்றுக்கூட இன்னமும் உலகின் அதிகார சக்திகளுக்கு எதனையும் கற்றுக்கொடுக்கவில்லை என்பதையே 'தடுப்பூசி அரசியல்' அப்பட்டமாக வெளிப்படுத்துகின்றது.**

கொரோனா பெருந்தொற்றுப்பரம்பலைக் கட்டுப்படுத்துவதற்கான தனிநபர்-சமூக முடக்கங்கள் தொடர்கின்ற அதேவேளை, பல்வேறு நாடுகள் தடுப்பூசிகளை மக்களுக்குச் செலுத்தத் தொடங்கிவிட்டன. கடந்த 2020 டிசம்பரிலிருந்து தடுப்பூசி செலுத்துகின்ற செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன. உலகளாவிய மானிடப் பேரவலத்தை ஏற்படுத்திய இந்தத் தொற்றுக்கு எதிரான தடுப்பூசியிலும் அரசியல் செல்வாக்குச் செலுத்துகின்றது என்பது இதிலுள்ள கசப்பான யதார்த்தம். மனிதாபிமான மற்றும் மருத்துவ அடிப்படைகளுடன் நீதியான முறையில் மேற்கொள்ளப்படவேண்டிய - நாடுகளுக்கிடையிலான தடுப்பூசி பங்கீட்டில் - பொருளாதார பலம்மிக்க நாடுகள் பெரும் செல்வாக்குச் செலுத்துகின்றன.

## முந்திக்கொண்ட செல்வந்த நாடுகள்

அதாவது அமெரிக்கா, கனடா, பிரத்தானியா, அவுஸ்திரேலியா, ஜப்பான் மற்றும் பல ஐரோப்பிய நாடுகள் தமது ஒட்டுமொத்த மக்களுக்கும் 'பல தடவைகள்' செலுத்துவதற்குத் தேவையான தடுப்பூசிகளை கொள்வனவு செய்துள்ளன. உலகெங்கிலும் உற்பத்தி செய்யப்பட்டுள்ள, மற்றும் உற்பத்தியில் உள்ள மொத்தத் தடுப்பூசிகளில் அரைவாசிக்கும் மேல் ஏலவே கொள்வனவு செய்துள்ளதோடு மேலதிக கொள்வனவு ஒப்பந்தங்களையும் இந்நாடுகள் செய்துள்ளன. இந்தச் செல்வந்த நாடுகள் உலகின் மொத்த மக்கட்தொகையின் 15 வீதம் மட்டுமே. இன்னும் விரிவாகச் சொல்வதானால் உதாரணமாகச் கனடாவை எடுத்துக்கொண்டால், நாட்டின் முழு மக்களுக்கும் 6 தடவைகள் வரை போடுவதற்குப் போதுமான தடுப்பூசிகளைக் கொள்வனவு செய்துள்ளது. அமெரிக்கா மற்றும் பிரித்தானியா நான்கு தடவைகளும், பெரும்பாலான ஐரோப்பிய நாடுகள் 2 தடவைகளுக்குரிய கொள்வனவுகளையும் செய்துள்ளன. கொள்வனவு என்பது ஏலவே கொள்வனவு செய்யப்பட்டதும் மேலதிக கொள்வனவுக்கான ஒப்பந்தங்களையும் குறிக்கின்றது.

2021 நடுப்பகுதிக்குள் ஒரு நபருக்கு இரண்டு டோசஸ் (Vaccine doses) போடப்பட்டு நாட்டினை இயல்புநிலைக்குக் கொண்டுவருதல் என்ற இலக்கோடு அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகள் தடுப்பூசித் திட்டத்தினை கையாளுகின்றன. ஆனால் வறிய மற்றும் நடுத்தர வருமானமுள்ள நாடுகள் இயல்புநிலைக்குத் திரும்புவதற்கு 2024 வரை காத்திருக்க வேண்டிவரும் எனக் கணிப்பிடப்படுகிறது. அதன் பொருள் அந்நாடுகளுக்கு தேவையான தடுப்பூசிகள் முழுமையாகப் போய்ச்சேர்வதற்கு இன்னும் 2 ஆண்டுகள் வரை எடுக்கும். குறைந்தது இன்னும் இரண்டு ஆண்டுகளுக்கு அம்மக்கள் தொற்றுக்களுடன் வாழவேண்டும் என்பதாகும். நவம்பர் 2020 நிலவரப்படி, Pfizer-BioNTech மற்றும் Modernas ஆகிய தடுப்பூசிகள் 2021ம் ஆண்டின் மொத்த உற்பத்தியில் 80 வீதமானவை செல்வந்த நாடுகளுக்கு விற்கப்பட்டுவிட்டன என்பதை செல்வந்த நாடுகளின் துரித கொள்வனவிற்கு உதாரணமாகச் சொல்லலாம்.

## மனித மேலாண்மையின் விளைவும் உலகமயமாக்கலும்

உலகளாவிய இந்த பெருந்தொற்று நெருக்கடிக்கான முக்கிய காரணிகளில் ஒன்று உலகமயமாக்கல்.




இயற்கைக்கு எதிரான மனித மேலாண்மை. தொழில்நுட்பம், பெரும் உற்பத்திகள், பெருநகர அபிவிருத்திகள், போக்குவரத்துகள், வணிகம் என்ற உலகமயமாக்கலின் இன்னபிற கூறுகளை அடுக்கலாம். செல்வந்த நாடுகள் தமது பொருளாதார, படைத்துறை மூலம் தமக்குச் சாதகமான அரசியல் பலத்தையும் அதிகாரத்தையும் கட்டியெழுப்பி வைத்துள்ளன. இந்த அதிகார மற்றும் செல்வாக்குச் செலுத்தல் போக்கின் விளைவுகள் பல. சமகாலத்தில் வெவ்வேறு பிராந்தியங்களில் இடம்பெற்றுவரும் போர்கள் இந்த அதிகாரப் போக்கினது விளைவு.

தடுப்பூசி விடயத்திலேனும் சமத்துவ உணர்வுடன் ஓரளவேனும் பாகுபாடற்ற நீதியான பங்கீடு நடைபெறுமென்ற எதிர்பார்ப்பு சிலமட்டங்களில் இருந்தது. மனிதாபிமான அடிப்படையிலான வேணவா இது என்பது ஒருபுறமிருக்க, உலகளாவிய பொருளாதார ஸ்திரத்தன்மைக்கும் நீதியான தடுப்பூசிப் பங்கீடு அவசியமானதும்கூட என்பது அத்தகு எதிர்பார்ப்பிற்குரிய அடிப்படை. உலகமயமாக்கல் என்பது சாதாரண கண்களுக்குப் புலப்படாத பல்வேறு அடுக்குகளிலான வலைப்பின்னல்களைக் கொண்டுள்ள அமைப்பு முறைமையும் இயங்கு நிலையுமாகும்.

உலகின் பெரும்பாலான நாடுகள் ஏதோவொரு வகையில் ஒன்றுடன் ஒன்று தொடர்புகளைக் கொண்டுள்ளன. ஒன்றில் ஒன்று தங்கியுள்ளன. பொருட்களின் ஏற்றுமதி-இறக்குமதி, நாடுகடந்த பயணங்கள், உற்பத்தி-நுகர்வு என நாடுகளுக்கிடையிலான பொருளாதார மற்றும் மனித உறவுகளும் தொடர்பாடல்களும் பல அடுக்குகளிலான வலைப்பின்னல்களைக் கொண்டுள்ளன. இந்நிலையில் உலகின் செல்வந்த நாடுகள் மட்டும் தடுப்பூசிகளைப் போட்டு விடுவதால் தொற்றுப் பரம்பல் கட்டுப்பாட்டுக்குள் வந்துவிடாது. உலக நாடுகள் அனைத்தும் வழமைக்குத் திரும்புவது என்பதே தொற்றுப்பரம்பலைக் கட்டுக்குள் கொண்டுவருவதென்பதன் உள்ளார்ந்த பொருள். அதுவே தொற்றுப்பரம்பலைக் கட்டுப்படுத்துவதில் வினைத்தாக்கம் மிக்க செயற்பாடு. அப்படி நிகழத் தவறினால் நாடுகடந்த பயணங்கள் மீண்டும் மீண்டும் புதியபுதிய தொற்றுஅலைகளைத் தோற்றுவித்துக்கொண்டே இருக்கும். இந்தப் பெருந்தொற்றுக்கூட இன்னமும் உலகின் அதிகார சக்திகளுக்கு எதனையும் கற்றுக்கொடுக்கவில்லை என்பதையே 'தடுப்பூசி அரசியல்' அப்பட்டமாக வெளிப்படுத்துகின்றது.

## தடுப்பூசி: வறிய நாடுகளுக்கு எட்டாக்கனி?

இந்தப் பாகுபாடான பங்கீடு அதிர்ச்சியளிக்கிறது என்று கூறிய உலக சுகாதார அமைப்பின் பொதுச்செயலர் *Teros Adhanom Ghebreyesus*, இந்தப்போக்கு பெருந்தொற்றினை அநாவசியமாக நீடிப்பதற்கு வழிகோலும் எனவும் எச்சரித்துள்ளார். 'ஒரு பெருந்தீயை அணைப்பதற்கான முயற்சியில் தீப்பிழம்புகளின் சில பகுதிகளின் மேல் மட்டும் தண்ணீர் தெளிப்பதற்கு நிகரானது' என இன்றைய தடுப்பூசிப் பங்கீட்டில் கைக்கொள்ளப்படும் அணுகுமுறையை அவர் சித்தரித்து, உலகளாவிய நீதியான பங்கீட்டினை வலியுறுத்தியுள்ளார்.

இந்த நீதியற்ற அணுகுமுறையைச் சரிசெய்வதற்கும் வறிய மற்றும் நடுத்தர வருமானமுடைய நாடுகளுக்கு தடுப்பூசி பகிரப்படுவதையும் அந்த நாடுகளின் மக்களுக்கு அவை சென்றடைவதைத் துரிதப்படுத்தவும் உறுதிப்படுத்தவும் *Covax – (COVID-19 Vaccines Global Access)* என்றொரு கூட்டமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. உலக சுகாதார அமைப்பு (*WHO*), மற்றும் தடுப்பூசி - நோய்த்தடுப்பு மருத்துவத்திற்கான உலகக் கூட்டமைப்பு (*Global alliance for vaccines and immunization, Gavi*) ஆகியன இந்த அமைப்பினை 2020இல் உருவாக்கியுள்ளன. *Gavi* அமைப்பின் நோக்கம் பரந்த அளவிலும் விரைவாகவும் தேவை அதிகமுள்ள மூன்றாம் உலக நாடுகளுக்கு தடுப்பூசிகள் சென்றடைவதற்கான ஒருங்கிணைப்புகளை மேற்கொள்வதாகும். இந்த அமைப்பு பல்வேறு தடுப்பூசி தயாரிப்பு நிறுவனங்களுடன் தொடர்புகளைக் கொண்டுள்ளது.

## உலகநாடுகளின் கொரோனா தடுப்பூசிவகைகள்

கொரோனாவுக்கு எதிரான உலக நாடுகளின் தடுப்பூசிகள் என்று பார்க்கும் போது *V451* எனும் பெயரிலான தடுப்பூசி அவுஸ்ரேலியத் தயாரிப்பாக சந்தைக்கு வந்துள்ளது. இது அவுஸ்ரேலிய *Queensland* ஆய்வுப் பல்கலைக்கழகமும் (*University of Queensland*) *CSL* மருந்து நிறுவனமும் இணைந்து தயாரிக்கின்ற தடுப்பூசி. பிரித்தானிய - சுவீடன் பல்தேசிய மருந்தக மற்றும் உயிரியல் தொழில்நுட்ப நிறுவனமான *AstraZeneca* அதே பெயரில் கொரோனா தடுப்பூசியினைத் தயாரித்துள்ளது. இந்தியாவின் *Serum Institute* உலகின் முதலாவது பெரிய தடுப்பூ தயாரிப்பு நிறுவனம். இது மேற்சொன்ன பிரித்தானிய-சுவீடன் நிறுவனத்துடன் இணைந்து கொரோனா எதிர்ப்புத் தடுப்பூசித் தயாரிப்பில் ஈடுபட்டுள்ளது. *Moderna, Pfzer, Novavax* மற்றும் *Inovia* ஆகியன அமெரிக்க பல்தேசிய நிறுவனத் தயாரிப்புகள். *Curevacs* தடுப்பூசி ஜேர்மன் தயாரிப்பு. *Sinopharm* சீனத் தயாரிப்பாகும்.

## Covax கூட்டமைப்பு: நீதியான பங்கீடு அவசியம்

மேற்சொன்ன Covaxகூட்டமைப்பு 2021 இறுதிக்குள் 1,3 பில்லியன் தடுப்பூசிகளை வறிய-நடுத்தர வருமான நாடுகளுக்குச் சேர்ப்பிப்பதை இலக்காகக் கொண்டுள்ளது. ஆனால் அதற்குரிய நிதிவளம் மற்றும் ஒப்பந்தங்களை உறுதிப்படுத்துவதில் அவ்வமைப்பு சவால்களை எதிர்கொண்டுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன. உலக சுகாதார அமைப்பு Microsoft நிறுவனர் Bill Gatesஇன் நிதி ஆதரவுடைய இரண்டு இலாபநோக்கற்ற நிறுவனங்களுடன் இணைந்து முதற்கட்டமாக 92 வறிய நாடுகளுக்கான ஒரு பில்லியன் தடுப்பூசிகளை வழங்குவதற்கான பணிகளை முன்னெடுத்துள்ளது. இன்னும் ஒரு பில்லியன் தடுப்பூசிகளை சில நடுத்தர வருமான நாடுகளுக்குப் பெற்றுக் கொடுக்கும் முயற்சியிலும் ஈடுபட்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

Gavi இன் பொறுப்புக்கு உட்பட்ட பணி கொள்வனவு ஒப்பந்தங்களை முன்னெடுப்பது. நாடுகளுக்குரிய பங்கீடுகளை ஒருங்கிணைப்பது. அவற்றைத் தாண்டி, நாடுகளுக்கு அனுப்புவது உட்பட்ட விநியோகச் செயற்பாட்டினை அந்த அமைப்பு கையெடுக்கவில்லை. அதன் குறுகியகால இலக்கு என்பது விலைகுறைந்த மற்றும் அதீத குளிரூட்டியில் வைத்து ஏற்றுமதி செய்யவும் பராமரிக்கவும் தேவையில்லாத தடுப்பூசிவகைகளை கொள்வனவு செய்வதாகும். அதேவேளை அந்த முனைப்புக்கூட சவால்கள் நிறைந்தது. பரிசோதனைகளில் சிக்கல், பக்கவிளைவுகள் பற்றி வெளிவரும் தகவல்கள், பாவனைக்கு ஒப்புதல் அளிக்கப்படுவதில் கேள்விக்குறி போன்ற பல சவால்கள் உள்ளன.

## நியாயமற்ற பங்கீடு தொடருமானால்...

தடுப்பூசிப் பகிர்வில் நியாயமற்ற போக்குத் தொடருமானால் மூன்றாம் உலக நாடுகள், தொற்றுத்தடுப்பு நடவடிக்கைகளை நீண்டகாலத்திற்குக் கடைப்பிடிக்க வேண்டிவரும். இது அந்தந்த நாடுகளின் உள்நாட்டுப் பொருளாதாரத்தை மட்டுமல்ல உலகளாவிய பொருளாதாரத்திலும் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியன. மூன்றாம் உலக நாடுகளுக்கான தடுப்பூசித் திட்டம் தாமதமாகுமெனில், வைரஸ் இன்னும் பலவடிவங்களில் உருமாறிப் பரவுவதற்கான ஆபத்து அதிகரிக்கும். உருமாறிய வைரஸ்கள் ஏலவே கொரோனாத் தொற்று ஏற்பட்டுக் குணமடைந்தவர்களுக்கு மீண்டும் தொற்றவும்கூடும். அதேவேளை தடுப்பூசி விளைவுத்தாக்கம் குறைந்துபோகவும், தடுப்பூசி எடுத்துக்கொண்டவர்களுக்குத் தொற்றவும் வாய்ப்புண்டு.

வறிய-மற்றும் நடுத்தர வருமானமுடைய நாடுகளில் தொற்று நீடிக்குமெனில் அது கட்டுக்குள் கொண்டு வந்த நாடுகளில் மீண்டும் தொற்றுப்பரம்பலை ஏற்படுத்துகின்ற ஆபத்துகளுக்கும் இட்டுச்செல்லலாம். எனவே இதிலுள்ள செய்தி என்னவெனில் செல்வந்த நாடுகள் வறிய நாடுகளுக்குரிய தடுப்பூசிகளை வழங்குவதென்பது செல்வந்த நாடுகளின் பொருளாதார நலனுக்கும் சாதகமானது.

உலக ரீதியில் 178 நாடுகள் COVAXஉடன் இணைந்துள்ளன. அமெரிக்காவும் ரஸ்யாவும் இணையவில்லை. கனடா, பிரான்ஸ் மற்றும் நோர்வே போன்ற நாடுகள் மேலதிக தடுப்பூசிகளை வறிய நாடுகளுக்குப் பகிர்வதற்கு முன்வந்துள்ளன. தடுப்பூசியைப் பொறுத்தவரை சீனா மூன்றாவது பெரிய உற்பத்தித்திறன் கொண்ட நாடு. தனது தயாரிப்பான Sinopharm இணை வளர்முக நாடுகளுக்கு விநியோகிப்பதில் அக்கறை கொண்டுள்ளதாகத் தெரிவித்துள்ளது.

இந்நாடுகள் குறைந்தபட்சம் இவ்வாறு அறிவித்துள்ளன. இந்நாடுகளை முன்னுதாரணமாகக் கொண்டு ஏனைய செல்வந்த நாடுகளும் தொடருமானால் மூன்றாம் உலக நாடுகள், 2024 வரை காத்திருக்கவேண்டியதைத் தவிர்க்கலாம் என்ற கருத்து நிலவுகின்றது.

இந்தியா உலகின் மிகப்பெரிய தடுப்பூசித் தயாரிப்பு நாடு. ஆனால் கடந்த மார்ச், ஏப்ரலிலிருந்து அங்கு தொற்றுப்பரம்பல் மிகத்தீவிரமடைந்து வந்துள்ளது. இந்நிலையில் தமது உள்நாட்டு நெருக்கடியைக் கையாள்வதற்கு இந்தியா தடுப்பூசி ஏற்றுமதியை இடைநிறுத்தியுள்ளது. இதனால் Covax மேலும் சவால்களை எதிர்கொள்கின்றது. தாமதமாதலும் பற்றாக்குறையும் மேலும் அதிகரித்துள்ளது.

## வறிய நாடுகளின் பொருளாதார, சமூகச் சிதைவு

வறிய நாடுகளின் சமூக முடக்கம் நீடிப்பதென்பது அவற்றின் பொருளாதாரத்தை மட்டுமல்லாது கல்வி மற்றும் சமூக ரீதியான பெரும் பாதிப்புகளுக்கு இட்டுச்செல்லும். உதாரணமாக உகண்டாவில் 1.3 மில்லியன் சிறுவர்கள் கடந்த ஒருவடருடமாகப் பாடசாலைக்குச் செல்லவில்லை. இச்சூழல் சிறுவயதுத் திருமணங்கள், பதின்மவயதுப் பெண்கள் கர்ப்பம் தரிக்கும் நிலை, வீடுகளில் வன்முறை அதிகரிப்பு எனப் பல்வேறு சமூக ரீதியான சிதைவுகளுக்கு இட்டுச்செல்கின்றன. பாகிஸ்தான், மலாவி மற்றும் பல நாடுகளிலும் இதனையொத்த சமூக ரீதியிலான சிதைவுகள் பற்றிய தகவல்கள் ஊடகங்களில் வெளிவந்துள்ளன. நேபால் நாட்டில் இளம்பெண்கள் மத்தியில் தற்கொலை 40 வீதத்தினால் அதிகரித்துள்ளது என்றும் கூறப்படுகின்றது.

2020 பின் கோடை காலத்திலிருந்து தடுப்பூசி கொள்வனவு தொடர்பான செய்திகள் வெளிவரத்தொடங்கியதிலிருந்தே செல்வந்த-வறிய நாடுகளுக்கிடையிலான பாரிய இடைவெளி அவதானிக்கப்பட்டது. அப்போதிலிருந்து இன்றுவரை அந்த இடைவெளி அதிகரித்தே வந்துள்ளது. கணிசமான பெருந்தொகைத் தடுப்பூசிகள் தொடர்ந்தும், குறிப்பாக 2021 இறுதிவரை செல்வந்த நாடுகளுக்கே செல்லும் என்கிறார்; 'உலக சுகாதார புத்தாக்க மையம் - Global Health Innovation

*Center'* எனும் அமெரிக்காவின் *Duke* பல்கலைக் கழக ஆய்வு மையத்தைச் சேர்ந்த *Andrea Taylor*

## இடைவெளிகளும் பற்றாக்குறைகளும்

கடந்த டிசம்பர் மாதத்திலிருந்து உலகின் பெரும்பான்மையான பிராந்தியங்களுக்கு தடுப்பூசிகள் கிட்டியுள்ளன. ஆனால் பங்கீட்டு அளவு (கிடைக்கப்பெற்ற எண்ணிக்கை), வளம், மருத்துவ வசதி, தடுப்பூசிகளை உரிய முறையில் பேணுவதற்கான வசதிகள், தொழில்நுட்பம் சார்ந்த பாரிய இடைவெளிகளும் பற்றாக்குறைகளும் நிலவுகின்றன. இந்த வறிய மற்றும் நடுத்தர வருமானமுடைய நாடுகளின் மக்கள் உலகின் மொத்த மக்கட்தொகையில் கிட்டத்தட்ட 75 வீதமானவர்கள். ஆனால் இதுவரை அவர்களுக்கு உறுதிசெய்யப்பட்ட தடுப்பூசியின் அளவு 25 வீதத்திற்கும் குறைந்ததே. செல்வந்த நாடுகள் 2020இன் நடுப்பகுதியிலேயே முந்திக்கொண்டு தடுப்பூசித் தயாரிப்பு நிறுவனங்களுடன் ஒப்பந்தங்களைச் செய்யத்தொடங்கிவிட்டன.

இங்கு மற்றுமொரு விடயம் கவனத்திற்குரியது. தடுப்பூசிக்கான முதலீடுகளை செல்வந்த நாடுகளே செய்தன. அதாவது கொரோனா என்ற இந்தப் புதிய வகை வைரசிற்கான தடுப்பூசிகள் தொடர்பான மருத்துவ ஆய்வுகள், உயிரியல் தொழில்நுட்ப ஆய்வுகள், பரிசோதனைகள், உற்பத்திகளுக்கான முதலீடுகளை செல்வந்த நாடுகளே செய்தன. இந்தத் துரித முதலீடுகள் தான் இன்று வினைத்தாக்கம் மிக்க பல்வேறு தடுப்பூசிவகைகளைக் குறுகிய காலத்திற்குள் கண்டடைய வழிவகுத்துள்ளன என்பதை மறுப்பதற்கில்லை. அதேவேளை பெரும் நிதிமுதலீடு என்பது முன்கூட்டிய கொள்வனவு ஒப்பந்தம், முன்னுரிமையை இந்நாடுகளுக்கு வழங்கியுள்ளன.

## தடுப்பூசிக்கான பெருந்தொகை முதலீடுகள்

தடுப்பூசி தயாரிப்புக்கான மருத்துவ ஆய்வு, பரிசோதனை மற்றும் உற்பத்திக்காக பல பில்லியன் டொலர் நிதியினை அமெரிக்கா முதலீடு செய்துள்ளது. ஐந்து வரையான தடுப்பூசிகள் அமெரிக்க முதலீட்டில் கண்டடையப்பட்டுள்ளன. இந்த நிதி முதலீட்டுக்குப் பிரதிபலனாக நிபந்தனைகளையும் அமெரிக்கா விதித்துள்ளது. அதாவது தான் முதலீடு செய்த தடுப்பூசித் தயாரிப்புகளுக்கான முன்னுரிமை தனக்குத் தரப்படவேண்டும் என்பதாகும். உலக நாடுகளுக்கிடையிலான இதுவரை தடுப்பூசிப் பங்கீட்டின் ஏற்றத்தாழ்வுகள் தொடர்பாக அமெரிக்கா இதுவரை எவ்வித அக்கறையினையும் காட்டவில்லை. *Covax*இற்கு உதவவும் முன்வரவில்லை. முன்னாள் ஜனாதிபதி ரொனால்ட் டிரம்ப் தடுப்பூசி கையாளலிலும் ஒரு கடும்தேசியவாதப் போக்கிற்குத் தூபமிட்டுச் சென்றுள்ளார் எனப்படுகின்றது.

## செல்வந்த நாடுகளின் இலக்கு

அமெரிக்கா உட்பட்ட பல மேற்கு நாடுகள் 2021 கோடைக்கு முன்னர் தமது நாட்டு மக்களுக்கு தடுப்பூசிகளைச் செலுத்தி முடித்து சமூக முடக்கத்திலிருந்து இயல்புக்குத் திரும்புவதை இலக்காகக் கொண்டுள்ளன. ஆனால் அதன் பொருள் அதற்குப் பின்னர் இந்நாடுகள் மேலதிகமாக வைத்திருக்கும் தடுப்பூசிகள் மூன்றாம் உலக நாடுகளுக்குக் சென்றுசேரும் என்பதல்ல. தாம் கொள்வனவு செய்த அல்லது கொள்வனவு ஒப்பந்தம் செய்த தடுப்பூசிகள் வைரசின் அடுத்தடுத்த கட்டங்களுக்காகச் சேமித்து வைப்பதிலேயே செல்வந்த நாடுகள் முனைப்புக் காட்டக்கூடும். அத்தோடு, வைரசின் அடுத்தடுத்த உருமாற்றங்களைக் கருத்திற்கொண்டு புதிய தடுப்பூசிகளை உற்பத்தி செய்வதற்குரிய மருத்துவ ஆய்வுகளுக்கும் தடுப்பூசி உற்பத்திகளில் கவனம் செலுத்தவும் வாய்ப்புகள் உள்ளன.

மருத்துவக் கட்டமைப்புகள் உயர் தரத்தில் உள்ள செல்வந்த நாடுகளே பல்வேறு புறக்காரணிகளினால் தடுப்பூசித் திட்டத்தில் பல்வேறு தாமதங்கள் ஏற்பட்டுள்ளன. இந்நிலையில் மருத்துவக் கட்டமைப்பு பலவீனமாகவும் பற்றாக்குறைகளையும் கொண்டுள்ள நாடுகளில் தடுப்பூசிகள் கிடைத்தாலும் அந்நாடுகளின் உள்ளகச் சூழல்கள் உரிய முறையில் மக்களுக்குச் சென்றடைவதில் சிக்கல்கள் உள்ளன. நோர்வே போன்ற நாடுகளிற்கூட இன்றும் தடுப்பூசி தொடர்பான பிரதேசங்களுக்கான பங்கீடு, முன்னுரிமை அதாவது எந்தப் பிரதேசங்களுக்கு முன்னுரிமை கொடுப்பது போன்ற விவாதங்கள் ஊடகங்களில் இடம்பெற்றுவருகின்றன.

தவிர மேற்குநாடுகள் பலவற்றில் *Astrazeneca* தடுப்பூசியின் பக்கவிளைவுகள் தொடர்பாக எழுந்த அச்சங்கள், அவற்றின் தடுப்பூசித்திட்டத்தில் தாமதத்தை ஏற்படுத்தியிருந்தன. *Astrazeneca* தடுப்பூசி இரத்தக்கசிவு உட்பட்ட சில பக்கவிளைவுகளை ஏற்படுத்தியுள்ளது. சிலர் இறந்துமுள்ளனர். இந்தப் பின்னணியில் ஐரோப்பிய நாடுகள் பல *Astrazeneca* தடுப்பூசியை இடைநிறுத்தியிருந்தன. அதன் பக்கவிளைவுகள் மிகச் சிறிய அளவிலானவை என்று மருத்துவ ஆய்வுகள் உறுதிப்படுத்தியதை அடுத்து பல நாடுகள் மீண்டும் அதனைப் பயன்பாட்டுக்குக் கொண்டுவந்துள்ளன. நோர்வே, டென்மார்க் போன்றன அதனை முற்றுமுழுதாக நிறுத்தியுள்ளன. *Astrazeneca*வின் பக்கவிளைவுகள் தொடர்பாக வெளிவந்த செய்திகளும் முன்னெடுக்கப்பட்ட விவாதங்களும் அதன் மீதான நம்பிக்கையை மக்கள் மத்தியில் பொதுவாக இழக்கச் செய்துள்ளன.

## புதிய சவால்கள் பற்றிய அச்சம்

2021 இறுதியில் அல்லது, குறுகிய காலத்திற்குள் புதிய சவால்கள் உருவாகலாம் என்ற அச்சமும் உலகளவில் நிலவுகின்றது. தடுப்பூசிகளின் எதிர்ப்புசக்தியின் தொழிற்பாட்டுக்காலம் எவ்வளவு என்பது இதுவரை உறுதிப்படுத்தப்படவில்லை. நீண்ட கால எதிர்ப்புசக்தியை ஏற்படுத்துவதற்கு இரண்டுக்கு மேற்பட்ட தடவைகள் தடுப்பூசியை ஒரு நபருக்குச் செலுத்த வேண்டி வருமா என்பதும் அறியப்படவில்லை. வழமையான இன்புளுவன்சா காய்ச்சலுக்கு (*Seasonal influenza*) எதிரான தடுப்பூசி

போல வருடாவருடம் கொரோனா எதிர்ப்புத் தடுப்பூசி செலுத்த வேண்டிய நிலை ஏற்படக்கூடும் என்ற கருத்துகளும் நிலவுகின்றன. மேற்படி சூழல் ஏற்படுமாயின் செல்வந்த நாடுகள் இன்னும் பன்மடங்கு தடுப்பூசிகளைத் தம்வசப்படுத்திக் கொள்வதிலேயே முனைப்புக் காட்டப்போகின்றன. வறிய நாடுகளின் நிலை இன்னும் மோசமான நிலைக்கு இட்டுச் செல்லப்படும்.

உற்பத்திக்குரிய மருத்துவ அறிவியல் மற்றும் உயிரியல் தொழில்நுட்ப வளங்களும் மனித வளங்களும் அமெரிக்கா உட்பட்ட மேற்கிடம் அதிகம் உள்ளன. ஆபிரிக்க, தென் அமெரிக்க, தென் கிழக்கு ஆசிய நாடுகளில் இத்தகைய மருத்துவ அறிவியல் வளங்கள் பெரும்பற்றாக்குறையாக உள்ளன. இந்தப் பிராந்தியங்களுடன் ஒரு உற்பத்தி இணைப்பு மையங்கள் உருவாக்கப்படவேண்டுமென 'உலக சுகாதார புத்தாக்க மையத்தின்' ஆய்வு பரிந்துரை செய்துள்ளது. இந்தப் பரிந்துரை நடைமுறைப்படுத்தப்படுவதற்கு அதிக காலம் எடுக்கும். அது குறுகிய எதிர்காலத்தில் சாத்தியமில்லை. இந்த விடயத்தினை இந்தியாவும் தென் ஆபிரிக்காவும் உலக சுகாதார அமைப்பின் கவனத்திற்குக் கொண்டுவந்துள்ளன என்றும் கூறப்படுகின்றது.

### தடுப்பூசிகளின் நியாயமான பங்கீடு அவசியம்

செல்வந்த நாடுகள் ஒருவகைப் பதுக்கலை மேற்கொள்கின்றன. அந்தப் போக்கினைத் தவிர்த்து வறிய மற்றும் நடுத்தர வருமானமுடைய நாடுகளுடன் தடுப்பூசிகளைப் பகிர்ந்து கொள்ளுமாறு உலக சுகாதார அமைப்பு, சர்வதேச மன்னிப்புச் சபை போன்ற அழுத்தமான கோரிக்கைகளை முன்வைத்துள்ளன. 'எயிட்ஸ் பெருந்தொற்றின் போது, செல்வந்தர்கள் மருத்துவச் சிகிச்சை பெற்றதையும் அதேவேளை வளம் குறைந்த நாடுகளில் மில்லியன் கணக்கான மக்கள் இறக்க நேரிட்டதையும் கண்டிருக்கின்றோம். அதே தவறு மீண்டும் நிகழ்வதை நாம் அனுமதிக்கக்கூடாது' என்று எச்.ஐ.வி மற்றும் எயிட்ஸ் தொடர்பான ஐ. நா திட்டத்தின் (UNAIDS) நிர்வாக இயக்குனர் Winnie Byanyima தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

மருந்து தயாரிப்பு நிறுவனங்களுடன் பெரிய இருதரப்பு ஒப்பந்தங்களை நேரடியாகச் செய்ததைத் தவிர்க்குமாறும், அனைத்து நாடுகளுக்குமான நீதியான பங்கீட்டினை உறுதிப்படுத்துவதற்கான உலகளாவிய செயல்முன்னெடுப்புகளுக்கு ஆதரவு வழங்குமாறு செல்வந்த நாடுகளை சர்வதேச மன்னிப்புச் சபை கோரியுள்ளது. அத்தோடு மருந்துப் பொருட்களைத் தயாரிக்கும் பெருநிறுவனங்கள் தமது காப்புரிமைக்கு அல்லாது மனித உயிர்களுக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டுமெனவும் கோரியுள்ளது.

### காப்புரிமையில் விதிவிலக்குக் கோரல்

புதிய மருந்துப்பொருட்கள் உட்பட்ட தடுப்பூசிகள் தயாரிக்கும் போது தயாரிப்பு நிறுவனங்கள் அதற்குரிய காப்புரிமையைத் (தனியுரிமை) தமதாக்கிக்கொள்கின்றன. அதன் அர்த்தம் குறிப்பிட்ட அந்த நிறுவனம் மட்டுமே, குறிப்பிட்ட காலத்திற்கு குறித்த அந்தப் பொருளை உற்பத்தி செய்கின்ற சட்ட ரீதியான உத்தரவாதத்தைப் பெறுகின்றது என்பதாகும். மட்டுமல்லாமல் அதற்குரிய விலையையும் நிர்ணயிக்கும் உரிமையைப் பெறுகின்றது, செய்முறை தொடர்பான தகவல்களையும் அந்நிறுவனம் இரகசியமாகப் பேணுவது காப்புரிமை சார்ந்த நடைமுறை. கொரோனா தடுப்பூசி உலகளாவிய மக்களுக்குச் சென்றடைவதை உறுதி செய்யும் பொருட்டு, காப்புரிமை தொடர்பான விதிமுறைகளில் விதிவிலக்குகளைத் தடுப்பூசி உற்பத்தி நிறுவனங்கள் செய்ய முன்வரவேண்டும். அதன் மூலம் ஏனைய நாடுகள் தமக்கான தடுப்பூசியைத் தயாரிப்பதற்குரிய தகவல்களைப் பெறுவதற்கு ஆவனசெய்யவேண்டும் என்பதே மன்னிப்புச் சபையின் கோரிக்கைக்கான அடிப்படை.

அத்தகைய காப்புரிமை விதிவிலக்கினை உலக சுகாதார அமைப்பின் ஊடானதொரு தீர்மானத்தின் மூலம் நடைமுறைக்குக் கொண்டுவரமுடியும். ஆனால் செல்வந்த நாடுகள் பல இதுவரை அத்தகைய தீர்மானத்தை எதிர்த்து வந்துள்ளன. தடுப்பூசி ஆய்வு, தயாரிப்பு, பரிசோதனை, பாவனைக்கான ஒப்புதல் பொறிமுறைகள் பெரும் நிதியைக் கோருகின்ற செயல். தகவல்களை நாடுகளுடன் பரிமாறுவது தடுப்பூசித் தயாரிப்பு நிறுவனங்களுக்கு பெரும் நட்டத்தை ஏற்படுத்திவிடும் என்பது எதிர்ப்பிற்கான காரணமாக முன்வைக்கப்படுகின்றது.

### உலகளாவிய தலைமைத்துவமின்மை

கென்யா, மியான்மார், நைஜீரியா, பாகிஸ்தான், உக்ரைன் உள்ளிட்ட 67 நாடுகளில் மொத்தமாக ஒன்றரை மில்லியன் மக்களுக்கு கொரோனாத் தொற்று ஏற்பட்டிருப்பதான தரவுகள் வெளிவந்திருந்தது. ஆனால் தற்போதைய தடுப்பூசி அணுகுமுறை இதேகதியில் தொடருமானால் இந்நாடுகளின் பத்து வீதமான மக்களுக்கு மட்டுமே தடுப்பூசிகள் கிடைக்கும் எனப்படுகிறது. உலக சுகாதார அமைப்பின் கணிப்பீட்டின்படி உலகளாவிய 'கூட்டு எதிர்ப்புசக்தியை (Community immunity)' அடைவதற்கு எழுபது வீதமான உலக மக்களுக்கு தடுப்பூசிகள் போடப்படவேண்டும்.

தடுப்பூசித் திட்டத்தினை நியாயமான முறையில் முன்னெடுப்பதற்குரிய உலகளாவிய தலைமைத்துவம் தற்போதைய சூழலில் இல்லை என்பதே யதார்த்தம். வலியவன் வாழ்வான் என்ற அணுகுமுறையைத்தான் பெரும்பாலான சக்திமிக்க நாடுகள் கடைப்பிடிக்கின்றன. இந்த நிலைமைகளைச் சீர்செய்வதற்கான நம்பிக்கை மிக்க அமைப்புகளாக உலக சுகாதார அமைப்பும், அது உருவாக்கிய Covax ஒருங்கிணைப்புத் திட்டமும் மட்டுமே கண்ணுக்குத் தெரிகின்றன. அத்தோடு சர்வதேச மன்னிப்புச் சபை போன்ற உலகளாவிய அழுத்தக்குழுக்களும் நீதியான தடுப்பூசிப் பங்கீட்டின் அவசியத்தினை வலியுறுத்திவருகின்றன.

கட்டுரையாளர்: எழுத்தாளர், கவிஞர், நார்வே

ஜனநேசன்
rv.jananesan89@gmail.com



# சந்திரகாந்தன் என்ற சகா

கடந்த நாற்பதாண்டுகளுக்கு மேலாக தானும் ஒளிர்ந்து தன்னைச் சுற்றி புதுப்புது விளக்குகளைத் தூண்டியும் சுடரச் செய்துகொண்டிருந்த முற்போக்குச் சுடர் தோழர் சந்திரகாந்தன் என்ற குப்புசாமியை கடந்த மே ஒன்பதாம் தேதியன்று கொரோனா கொடுங்கூற்று அணைத்து விட்டது.

இராமநாதபுரம் மாவட்டம் காவனூர் கிராமத்தில் 1957ல் பிறந்த குப்புசாமி தனது பள்ளிப்பருவத்திலேயே முற்போக்கு சிந்தனைகளாலும் இலக்கியங்களாலும் ஈர்க்கப்பட்டு கல்லூரி நாள்களில் முற்போக்கு களச்செயல்பாட்டாளராக மலர்ந்து எழுதவும் தொடங்கினார். பழந்தமிழ் இலக்கியங்களிலும், நவீன இலக்கியங்களிலும் ஆழ்ந்தவாசிப்பு உள்ளவர். தெளிவான பேச்சாற்றல் உள்ளவர். தன்னை ஈர்த்த ஜெயகாந்தனை நினைவுகூரும் விதமாக சந்திரகாந்தன் என்னும் புனைப்பெயர் சூடிக்கொண்டார். எனினும் எழுத்தில் இவரது குரல் மென்மையாக ஒலித்து மனதைத் தொடும்.

இந்தியன்வங்கி ஊழியரான சந்திரகாந்தன் தாமரை, கல்பனா போன்ற இதழ்களில் எழுதிவந்தார். கலைஇலக்கிய பெருமன்றத்தின் நிர்வாகியான. இவர் எழுத்தில் வாசிப்பில் ஆர்வம் உள்ளவர்களைத் தேடித்தேடி அரவணைத்தார் : ஊக்குவித்தார். இவரால் அடையாளம் காணப்பட்டவர்களை எழுத்தில் வாசிப்பில் பயிற்றுவிக்க “ தொடரும் “ என்னும் சிற்றிதழைத் தொடங்கச் செய்தார். இப்படி உருவாகியவர்களில் இன்று பேராசிரியர்களாக பரிமளிக்கும் முனைவர் சொ.சேதுபதி, முனைவர். மு.பழனியப்பன், ஞா.சிங்கமுத்து , சிவபாரதி போன்றோர் குறிப்பிடத் தக்கவர்கள். தொடரும் இதழ் ஜெயகாந்தனது சிந்தனைகளை, சபை உரையாடல்களை நேர்த்தியாக ஒழுங்கு படுத்தி தொடர்ந்து வெளியிட்டு வந்தது. ஜடாயு என்ற பெயரில் இலக்கிய விசாரங்களை, விவாதங்களை பரிமாறினார். இன்று அவ்விதழ் மாலுமியை இழந்த. கப்பலாகத் தவிக்கிறது.

“புல்லைப்புசியாத புலிகள்”, “சப்தக்குழல்” “ஆளுக்கொரு கனவு”, “குதிரைவீரன் கதை”, “வைகையில் வெள்ளம் வரும்”, “தழல்”, “அண்டரண்டா பட்சி” ஆகிய படைப்புகளையும் “எர்னஸ்டோ சே குவேரா “ எனும் மொழிபெயர்ப்பு நூலையும் தமிழ்கூறும் நல்லுலகிற்குத் தந்தவர். இவரது படைப்புகளை பதிப்பித்த நியு செஞ்சுரி புக் ஹவுஸ் நிறுவனம் சந்திரகாந்தனது படைப்புகளை மறுபதிப்பு செய்து இளம்வாசகர்கள் மத்தியில் மறுவுலா செய்விப்பது சந்திரகாந்தனுக்கு செய்யும் புகழஞ்சலியாகும்.

சந்திரகாந்தன் வங்கிப்பணியிலிருந்து ஓய்வுபெற்ற பின் இடதுசாரி இலக்கிய இயக்கங்களில் தானறிந்ததோழர்களை முகநூலில் இணைத்து அவர்களோடு இலக்கியநயத்தோடு உறவாடி வந்தார். பலரது படைப்புகளுக்கு நினைவுகூரத்தக்க. மதிப்புரைகள் எழுதி வந்தார். கவிஞர் பரிணாமன் பாடல்களைக் குறித்தும் பரிணாமனின் இலக்கிய ஆளுமை குறித்தும் சந்திரகாந்தன் ஆற்றிய காணொலி உரை குறிப்பிடத்தக்கது. எழுத்தாளர் தனுஸ்கோடி ராமசாமிக்குப்பின் படைப்பாளிகளை அரவணைத்து ஊக்கப்படுத்தி தொடர்ந்து அவரவர் தளத்தில் இயங்கச் செய்யும் பணியினை சந்திரகாந்தன் சிறப்பாகச் செய்து வந்தார். பல தரப்பட்ட படைப்பாளிகளிடம் பேசி தாமரைப் பத்திரிகைக்கு எழுதச்சொல்லி தாமரை இதழுக்கு புத்துணர்வு ஏற்படுத்தும் பணிகளில் சமீபகாலமாக ஈடுபட்டு வந்தார்.

சிவகங்கை மாவட்டத்திலுள்ள நூலகங்களில் வாசகர்பேரவைக் கூட்டங்கள் நடக்க உதவிவந்தார். இப்பணியில் ஜனநேசன், கவிஞர் பேனா. மனோகரன், ஜெயச்சந்திரன், நூலகர் மகாலிங்க ஜெயகாந்தன் போன்றோரையும் இணைத்துக் கொண்டார். நூலக வாசகர் பேரவையின் ஆண்டுவிழாக்களில் குன்றக்குடி பொன்னம்பலஅடிகளார் போன்ற ஆளுமைமிகு வாசகதிலகங்களை அழைத்து சிறப்புரையாற்றச் செய்து நூலக வாசகர் களுக்கு பரிசுகளை வழங்கச் செய்வித்தார்.

ஆளுமைமிக்கத் தோழர் சந்திரகாந்தனது மறைவால் வாடும் அவரது துணைவியார், மகன் அரவிந்தன் போன்றோர் நம்நேசத்துக்கும், அரவணைப்புக்கும் உரியர். இனி சந்திரகாந்தன் தனது படைப்புகள் மூலமும் சீரிய நிகழ்வுகளில் உரையாடிய நினைவுகள் மூலமும் வாழ்வார்.

க. பழனித்துரை

# யார் கூறுவதைக் கேட்பது?

**சுதந்திரம் அடைந்த 50 ஆண்டுகளுக்குள்ளேயே நாம் சுதந்திரத்திற்கு அருகதையற்றவர்களாக, பொறுப்பற்றவர்களாக, அறம் இழந்தவர்களாக செயல்பட்டு அனைத்தையும் லாப நோக்கில் அணுகி சந்தை காப்பரேட் முதலாளிகள் லாபம் ஈட்ட செயல்படுபவர்களாக அரசியலை, அரசை, நிர்வாகத்தை, சமூகத்தை மாற்றியமைத்து விட்டோமே.**

கோவிட் 19 முதல் அலை மக்களை அலையவிட்டு அனாதைகளாக சொந்த ஊர் திரும்பிய கதை முடிவதற்குள் இரண்டாவது அலை. அதுவும் இந்த அலை உருமாறி உக்ரம் பெற்று இந்திய மண்ணை சுடுகாடாக்கிக் கொண்டிருக்கிறது. ஊடகங்களைப் பார்த்தால், காட்சிகள் நம்மை மிரள வைத்து பயத்தில் ஆழ்த்திவிடும். பூட்டானில் அனைவருக்கும் தடுப்பூசி போட்டு இயல்பு நிலையில் வாழ்கின்றார்கள். கேரளத்தில் நேரடியாக தினம்தோறும் முதல்வரே ஊடகங்களைச் சந்தித்து என்னென்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது, என்னென்ன நடவடிக்கை எடுத்துள்ளோம், பொதுமக்கள் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்ற வழிகாட்டுதல் தந்து மக்களை பீதி அடைய வைக்காமல் நம்பிக்கையூட்டியுள்ளார். அங்கு களத்தில் சுகாதாரப் பணியாளர்களும், தன்னார்வலர்களும், உள்ளாட்சி அமைப்புக்களும் முழுவீச்சில் இயங்குகின்றன. அங்கு மருத்துவ முறைகள் இணைந்து செயல்பட வழிவகை செய்து ஆங்கில மருத்துவ முறையும் இந்திய மருத்துவ முறைகளும் இணைந்து செயல்படுத்தப்படுகின்றன. பல நாடுகளில் நாட்டு அதிபர்கள் ஊடகங்களைச் சந்தித்து எடுத்த முடிவுகளை அறிவிக்கின்றார்கள். மக்களுக்கு அரசாங்கத்தால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளைப் பட்டியலிட்டு, அவைகளை எப்படி மக்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று விளக்குகின்றார்கள். மக்களுக்கு நம்பிக்கை ஊட்டுகின்றார்கள். ஊடகங்களின் வாயிலாக கள நிலவரங்களை கேட்டறிந்து அதற்குத்தக்க நடவடிக்கைகளை எடுக்கின்றனர். இவைகளையெல்லாம் பார்த்த நமக்கு இந்தியாவில் நடப்பது என்ன என்பதை எண்ணும்போது நமக்கு நெஞ்சம் பதைபதைக்கின்றது.

இரண்டாவது அலை தோற்றம் எனத் தெரிந்த பின்னரும் அரசியல் கூட்டங்களையோ, மதம் சார்ந்த கூட்டங்களையோ கலாச்சாரம் சார்ந்த கூட்டங்களையோ எந்தவித கட்டுப்பாடும், நெறிமுறையும் இன்றி நடத்திட அனுமதியளித்து வாழா இருந்துவிட்டு இன்று மக்களை மருத்துவமனைக்காக அலையவிடுவதும், படுக்கைக்காக அலையவிடுவதும், மருந்துகளுக்காக அலையவிடுவதும், மக்கள் இறப்புக்கு காரணமாக அமைந்துவிட்டன. மருத்துவ வசதிகள் கிடைக்காமலும் நோயின் தீவிரத்தை தாங்க இயலாமலும் இறந்தவர்களின் எண்ணிக்கை கூடுவதைப் பார்க்கும்போது, நம் ஆட்சியாளர்கள் என்ன செய்கின்றார்கள் என்றுதான் கேட்கத் தோன்றும். நிதி ஆயோக் உறுப்பினர்கள் ஒன்று கூறுகின்றார்கள், எய்ம்ஸ் மருத்துவமனை மருத்துவர்கள் ஒன்று கூறுகின்றார்கள், மருத்துவர் சங்கங்கள் ஒன்று தெரிவிக்கின்றது, அரசு ஒன்று தெரிவிக்கின்றது, இவைகளைத் தாண்டி சமூக ஊடகங்கள் டன் கணக்கில் செய்திகளை அள்ளிக் கொட்டி மன அழுத்தத்திற்கு மக்களை ஆளாக்குகின்றார்கள். சாலை ஓரமெல்லாம் பிணம் எடுக்கும் இடமாக மாற்றப்பட்ட நிலையில் அடுத்த ஒரு அறிவிப்பு வந்துள்ளது, மூன்றாவது அலை எப்போது வேண்டுமானாலும் வரலாம். தயாராகுங்கள் என்கிறது அரசு. மக்களிடம் பீதியை கிளப்புவதுதான் இவர்களின் பொறுப்புள்ள பணியா என்று கேட்கத் தோன்றுகிறது.

ஒரு சில நாட்களுக்கு முன்தான் பாரதப் பிரதமா; தன் உரை ஒன்றில் 80 கோடி மக்களுக்கு உணவுப் பாதுகாப்பு அரசு வழங்கி, பட்டினிச்சாவு இல்லாமல் நாங்கள் பார்த்து வருகிறோம் என்று கூறினார். எனவே இந்தச் சூழலில் யார் தயாராக வேண்டும்? அரசுதான் தயாராக வேண்டும். அதற்கு முதலில் முறையான மருத்துவக் கட்டமைப்பை ஏற்படுத்தி, அத்தனை பேருக்கும் இலவசமாக மருத்துவ சிகிச்சை அளித்து மக்களைக் காப்பது ஒரு அரசின் தார்மீகக் கடமை. பொருளாதார வளர்ச்சி, தங்கு தடையற்ற வணிகம், என்ற கோட்பாட்டை முன்னெடுத்து அனைத்தையும் தனியாருக்குத் தந்து விட்டு மருந்துக்கும், படுக்கைக்கும் அரசு தனியாரிடம் வேண்டுகோள் வைத்துக் கொண்டிருக்கிறது. இந்தியாவில் தற்போது நிகழ்ந்து கொண்டுள்ள சம்பவம் அசாதாரணமானது. மக்களின் உயிரைக் காக்க வேண்டிய கடமை அரசாங்கத்திற்கு இருக்கின்றது. தடுப்பூசி போடுவதாக இருந்தாலும், மருத்துவச் சிகிச்சை அளிப்பதாக இருந்தாலும்,

மக்களுக்கு முதலில் நம்பிக்கை வேண்டும் நம் அரசு நம்மைக் காக்கும் என்று. இன்று நிலை அப்படி இல்லை என்பதை ஆடசியாளர்கள் புரிந்து கொண்டார்களா இல்லையா என்பது நமக்குப் புரியவில்லை. எங்கும் ஒரே பதட்டம். இந்தப் பதட்டமே பல உயிர்களைப் பழிவாங்குகின்றது. நம்முடைய சமூக ஊடகங்கள் பொறுப்போடு செயல்படுகிறதா என்பதை சமூக ஊடகங்களில் வரும் செய்திகளைப் பார்த்து படித்தாலே, நாம் எவ்வளவு பொறுப்பற்று செயல்பட கற்றுக் கொண்டுள்ளோம் என்பது விளங்கும்.

பொதுவாக மக்களுக்கு இன்றைக்கு கடப்பாடுடையதாக இருப்பது அரசாங்கம்தான். அது தரும் செய்திதான் நமக்கு வழிகாட்ட வேண்டும். அந்த அரசுக்கு எது வழிகாட்டும் என்றால் அறிவியல் சமூகம். அறிவியல் சமூகம் காட்டுகின்ற வழியைத்தான் அடிப்படையாக வைத்து அரசு வழிகாட்டுகின்றது. பொதுமக்களை பூட்டான் போலவோ, கேரளா போலவோ அல்லது நார்டிக் நாடுகள் போலவோ நாம் தயார் செய்யவில்லை. சாதாரண காய்ச்சல இருப்பவர்கூட எனக்கு மருத்துவமனையில் இடம் வேண்டும் என்று அங்கு சென்று நிற்கிறார். பாதிப்புக்குத் தக்கவாறு சிகிச்சை அளிக்க அரசு முனைகிறது. ஆனால் மக்களை சமூக ஊடகங்கள் அச்சத்தில் ஆட்படுத்தியிருக்கிறது. ஒரு வேளை நம் ஆட்சியாளர்கள் மால்தூசியன் கோட்பாட்டை நன்கு படித்திருப்பார்களோ என்னவோ? மக்கள் தொகை பெருக்கத்தை நம் அறிவியல் கண்டுபிடிப்புக்களாலும், கல்வியாலும் சரி செய்ய முடியவில்லை, எனவே இயற்கை அதன் கைவரிசையைக் காட்டட்டும் என்று மால்தஸ் கூறியது நடக்கின்றது என்று இருக்கின்றார்களோ என்று எண்ணத் தோன்றுகின்றது.

30 கோடி மக்களுக்காக உருவாக்கப்பட்ட அரசு இயந்திரங்கள் இன்று 136 கோடி மக்களுக்கு சேவை செய்ய அந்த இயந்திரத்தை இயக்கும் போது, அது சக்தியற்றதாக மாறுவதை நாம் பார்க்க முடிகிறது. அன்று இந்தியா என்ற நாட்டை உருவாக்க பிரிவினை தந்த பாடத்தை வைத்துக் கொண்டு மைய அரசை வலுப்படுத்த செயல்பட்டனர் நவீன இந்தியாவின் சிற்பிகள். அது காலப்போக்கில் இந்தியர்களை மேய்க்க தேர்தல் ஜனநாயகத்தை முன்னெடுத்து மேய்ப்பு ஜனநாயகமாக மாற்றி வெள்ளையர்கள் சுரண்டலைப் போல் பன்மடங்கு பன்னாட்டுக் கம்பெனிகள் இந்தியாவைச் சுரண்டிட வழிவகை செய்து விட்டனர். எனவே 70% மக்களுக்கு அரசின் அடிப்படைச் சேவைகள் நின்று விட்டால் அவர்கள் வாழ்வு முடிந்துவிடும். இது முறையாக நடக்க வேண்டும் என்றால் மைய அரசும், மாநில அரசுகளும், உள்ளாட்சி அமைப்புக்களும் போர்க்கால அடிப்படையில் ஒருவரோடு ஒருவர் தோள் கொடுத்து சேவையாற்றிட வேண்டும். அதற்கு அரசியல் சேவையை நோக்கியதாக இருக்கவேண்டும். இன்று அரசியல் வணிக மயமாக்கப்பட்டு பெருந்தொகை செலவிட்டு மக்கள் பிரதிநிதிகளாக மக்கள் வாக்கைப் பெற்று வந்தாலும், மக்கள் பிரதிநிதிகளின் பார்வை மக்கள் மேல் இருப்பதை விட தனக்கு இந்த சந்தை அரசியலில் செயல்பட்டு



வெற்றி பெற உதவியது யார் என்று நோக்குகையில் சந்தை அளித்த நிதிதானே. பொதுமக்கள் அரசியலுக்கு நிதி தருவதும் கிடையாது, மாறாக வாக்குக்கும் பணம் கேட்கின்றனரே என்ற சூழலில் நம் மக்கள் பிரதிநிதிகளின் பார்வை சந்தை சார்ந்ததாகத் தானே இருக்க முடியும். இந்தியா உலகத்திற்கு வழிகாட்டும் ஞான பூமியாகத்தானே இருந்தது, யோக பூமியாகத்தானே இருந்தது, ஞானிகளும், சாதுக்களும் சித்தர்களும்தானே வழி காட்டினார்கள். அந்த வழியில்தானே இந்தியாவை சுதந்திரம் அடையச் செய்தார்கள் நம் தியாக சீலர்கள்.

சுதந்திரம் அடைந்த 50 ஆண்டுகளுக்குள்ளேயே நாம் சுதந்திரத்திற்கு அருகதையற்றவர்களாக, பொறுப்பற்றவர்களாக, அறம் இழந்தவர்களாக செயல்பட்டு அனைத்தையும் லாப நோக்கில் அணுகி சந்தை காப்பரேட் முதலாளிகள் லாபம் ஈட்ட செயல்படுபவர்களாக அரசியலை, அரசை, நிர்வாகத்தை, சமூகத்தை மாற்றியமைத்து விட்டோமே.

இன்று இந்த கிருமி மூலம் நமக்கு ஒரு செய்தி வந்த வண்ணம் இருக்கின்றது. நாம் புரிந்து கொண்டோமா என்பதுதான் கேள்வியாக இருக்கின்றது. இனிமேல் இந்தியா வல்லரசாகி உலகை ஆளவேண்டும் என்று பேசாதீர்கள். அது இந்திய மண்ணின் நோக்கமுமல்ல. நல்ல அரசாக செயல்பட முயல வேண்டும். அது மக்கள் அரசாக இருக்க வேண்டும். மக்களின் அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்யுங்கள். அடிப்படையான வாழ்க்கைக் கல்வியைக் கொடுங்கள். பணம் சம்பாதிக்க கற்றுத் தராதீர்கள். சேவை செய்து வருமானம் ஈட்ட கற்றுக் கொடுங்கள். எளிய வாழ்க்கை வாழ கற்றுக் கொடுங்கள். அரசியலை எளிமைப்படுத்துங்கள். சந்தை நிறுவனங்களின் லாபத்திற்கு ஒரு அளவீட்டை நிர்ணயம் செய்யுங்கள். கம்பெனிகளின் உயர் பதவிகளில் இருப்போரின் சம்பளத்தை வரையறை செய்யுங்கள். ஆடம்பரத்தை எல்லா இடங்களிலும் குறையுங்கள். அரசியலை எளிமைப்படுத்துங்கள், விலையில்லா அரசியல் நடத்த பழகுங்கள். அதுதான் இன்றைய தேவையாக இருக்கின்றது.

கட்டுரை

**என்.சரவணன்**

nsaravanan@gmail.com

# இலங்கையில் சாராய உற்பத்தியும் மதுவொழிப்பு இயக்கமும்

**அநகாரிக தர்மபால தனது பிற்காலங்களில் ஆங்கிலேயர்களை விட அதிகமாக வெறுத்தது உள்நாட்டிலுள்ள ஏனைய இனத்தவர்களையே. தமிழர், மலையாளிகள், முஸ்லிம்கள், பறங்கியர் என அவரின் இனவெறுப்புணர்ச்சி என்பது இனவெறுப்போடு மட்டும் நிற்கவில்லை அது மோசமான மதவெறுப்பையும் இணைத்தே இருந்தது. ஆகவே தான் அவர் ‘‘சிங்கள கிறிஸ்தவர்களுக்கு’’ எதிராக அதிகமாக பிரச்சாரம் செய்தார்.**


மதுவொழிப்பு இயக்கம் பிரித்தானியர் ஆட்சி செய்த காலத்தில் தான் தோற்றம் பெற்றது. நூற்றாண்டுகளுக்கு முன்னர் மக்கள் தத்தமது தேவைக்கான மதுவை தாமே தயாரித்துக்கொண்டார்கள்.

“சிங்களவர்கள் குடிக்கு பழக்கப்பட்டவர்கள் அல்லர்” என்று ரொபர்ட் நொக்ஸ் தனது குறிப்புகளில் எழுதிவிட்டுச் சென்றார். ஆனால் 1912 ஆம் ஆண்டு இலங்கையில் கிராமம் கிராமமாக கள்ளுக்கடைகளைத் திறக்கப்படவேண்டும் என அன்றைய அரசாங்க சபையில் ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றினார்கள் என்றால் எந்தளவு தூரம் அந்த இடைக்காலத்துக்குள் இலங்கை மக்கள் குடிபோதைக்குப் பழக்கப்படுத்தப்பட்டிருந்தார்கள் என்பதை நாம் உணர முடியும்.

மகாவம்சத்தின் பிரகாரம் இலங்கையில் விஜயன் - குவேனி திருமணத்தின் போது பரிமாறப்பட்டதாக கூறப்படும் மது கள்ளாக இருந்திருக்க வேண்டும். அதுபோல மகாவம்சத்தின் பிரதான பாத்திரமான துட்டகைமுனு; எல்லாளனுடனான போரின் போது துட்டகைமுனுவின் யானை “கந்துல”வுக்கு மது கொடுக்கப்பட்டதாகவும், அது போல துட்டகைமுனுவின் படை அதிகாரிகளும் மது அருந்தியதாகவும் குறிப்பிடப்படுவதும் கள்ளாக இருக்க வாய்ப்புண்டு. இலங்கைத் தீவில் “கள்” இலகுவாக கிடைக்கும் மதுவகையாக காலாகாலமாக இருந்துவந்திருக்கிறது.

இலங்கையில் கள், சாராய உற்பத்தி ஒரு வியாபாரமாக வளர்ந்திருக்கவில்லை. போர்த்துக்கேயர் இலங்கையைக் கைப்பற்றிய வேளை, இலங்கையில் தமக்கு வருமானம் தரத்தக்க துறைகளை தேடித்தேடி மேற்கொண்டார்கள். அப்படித்தான் மதுத் தயாரிப்பும் அவர்களின் கவனத்தை ஈர்த்தது. 16, 17 ஆம் நூற்றாண்டுகளில் தென்னை உற்பத்தியும் பெருகத் தொடங்கிய காலம். தென்னம் பொருட்களின் உப உற்பத்தியில் ஒன்றாக கள்ளுற்பத்தியும் ஆரம்பிக்கப்பட்டது. அதுமட்டுமன்றி போர்த்துக்கேயரின் பிரதான வருமானங்களில் ஒன்றாகவும் அது பின்னர் ஆனது. போர்த்துக்கேயரை விட அதற்குப் பின் இலங்கையைக் கைப்பற்றிய ஒல்லாந்தர் கள் உற்பத்தித்துறையை மிகவும் நேர்த்தியாக மேற்கொள்ள ஆரம்பித்தார்கள். பிரித்தானியரின் ஆட்சியில் கள் உற்பத்தி என்பதை அரச ஆட்சியின் கீழ் முக்கிய ஒரு வருமானத்துறையாக ஆக்கிக்கொண்டார்கள். மேலும் அத்துறையை விரிவுபடுத்தினார்கள்.

1817 இல் இலங்கையின் விவசாய, வரத்தக வியாபாரத் துறையின் மீதான ஆங்கிலேயர்களின் கரிசனை பற்றிய ஒரு விரிவான பெரிய நூலை பெர்டோலசி (Anthony Bertolacci) எழுதினார். இலங்கையின் காலனித்துவ பொருளாதாரம் பற்றி ஆராய்பவர்கள் தவிர்க்காத நூல் இது என்று கூறலாம். பிரித்தானியாவுக்கான இலங்கையின் சிவில் வருமானத்துறை அதிகாரியாக நியமிக்கப்பட்டவர் பெர்டோலசி. அவர் தனது நூலில் அப்போதைய இலங்கையின் பிரதான வருமானமாக பட்டியலிடும்போது சாராயம், கள் என்பனவற்றிலிருந்துதான் பட்டியலைத் தொடங்குகிறார். மேலும் இலங்கையில் தென்னை மரங்களின் உற்பத்தி, அவற்றின் நுணுக்கங்கள், அவற்றின் பயன்பாடுகள், எங்கெல்லாம் பரவி



இருக்கிறது, அவற்றில் இருந்து சாராய ஏற்றுமதி செய்யப்பட்ட விபரங்கள் போன்ற தகவல்கள் பலவற்றையும் வெளியிட்டுள்ளார்.[1]

யாழ்ப்பாணத்தில் நலவரும் பள்ளரும் உயர்சாதி இந்துக்களின் அடிமைகளாக இருந்தார்கள் என்றும் அவர்களே கள்ளு சீவும் தொழிலில் ஈடுபடுத்தப்பட்டதாகவும் தனது நூலில் அவர் குறிப்பிட்டுள்ளதையும் இங்கே கொசுறாக சொல்லிவிட்டுக் கடக்கிறேன்.

### கள், சாராயத்தின் பெருக்கம்

1834 இல் ஆங்கிலேயர்கள் மதுவரி சட்டத்தை முதற்தடவையாக அறிமுகப்படுத்துமளவுக்கு மதுவுற்பத்தி வியாபித்திருந்தது. 1844 ஆம் ஆண்டு 10ஆம் இலக்கச் சட்டத்தின் மூலம் மேலும் இத்துறை பலமூட்டப்பட்டது. இந்தச் சட்டத்தின் மூலம் கள்ளுத் தவறணைகளை தனியார் ஆரம்பிப்பதற்கு அனுமதியளிக்கப்பட்டது. இதன் காரணமாக நாடு முழுவதும் கள்ளுற்பத்தியும், கள்ளுத் தவறணைகளும் பெருகின. தொகையாகவும், சில்லறையாகவும் விற்பனைசெய்யப்பட்டன. அது அரச கட்டுப்பாட்டின் கீழ் பெருவருமானம் ஈட்டும் துறையாக ஆனது.[2] 19ஆம் நூற்றாண்டின் இறுதியில் நாட்டின் அரச வருமானத்தில் 10% - 15% வீதத்தை இந்த மதுவரியின் மூலம் தான் ஈட்டப்பட்டது.

அந்தந்த பிரதேசங்களில் இத்துறையில் ஈடுபடும் உற்பத்தியாளர்களுக்கும், வியாபாரிகளுக்கும் அனுமதி வழங்குவதற்கென்று முகவர்கள் நியமிக்கப்பட்டார்கள். இந்த அனுமதிகளை அவர்கள் ஏலத்தில் விட்டார்கள். இதன் மூலம் இலங்கையில் ஒரு புதிய பணக்காரப் பிரிவினர் உருவானார்கள். அது போலவே மதுவிற்பனை நிலையங்களும் பெருகின. அந்தக் கள்ளைப் பருகும் நுகர்வோரும் பாரிய அளவில் பெருகினர். மதுபோதைக்கு அடிமையாகும் கூட்டம் நாடளாவிய ரீதியில் பெருகியதை ஆங்கிலேய அரசு கண்டுகொள்ளவில்லை. அந்த வியாபாரத்தில் ருசிகண்டு லாபமீட்டிவந்த சுதேசிகளும் இதனை ஒரு பொருட்டாக எடுத்துக்கொள்ளவில்லை. 1810-1812 ஆம் ஆண்டுகளில் மாத்திரம் 939,112 கலன்கள் சாராயம் இலங்கையில் இருந்து ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கிறது. அவ்வாண்டு இதன் மூலம் 6260 பவுண்டுகள் திறைசேரிக்கு வருமானமாக கிடைத்திருக்கிறது.

### மதுவொழிப்பு இயக்கம்

இப்படிப்பட்ட சூழலில் தான் 1911இல் “மதுவொழிப்பு, மாட்டிறைச்சி உண்ணாதீர்” என்கிற பிரச்சாரத்தை நாடு பூராவும் கொண்டு சென்றார் அநகாரிக தர்மபால. இந்த இயக்கத்தை முன்னின்று தீவிரமாக வழிநடத்திய தர்மபாலாவுக்கு ஆதரவாக பல சிங்களத் தலைவர்கள் ஒன்றிணைந்தனர். இந்த ஒன்றிணைவு காலப்போக்கில் இலங்கை தேசிய காங்கிரஸ் உருவாவதற்கான காரணிகளில் ஒன்றாக ஆனது. அநகாரிக தர்மபாலாவின் “சிங்கள

1 Bertolacci, A, View of the Agricultural, Commercial and Financial Interests of Ceylon. London. Black, Parbury and Allen, (1817)

2 ආර්.එච්.ආර්.ගුණවර්ධන, අනගාරික ධර්මපාල තුමා සහ අමද්‍යප ව්‍යාපාරය. කැලණිය විශ්ව විද්‍යාලය, කැලණිය, 152nd Birth Anniversary of Srimath Anagarika Dharmapala National Summit - 2016

*பௌத்தயா" பத்திரிகை இந்த பிரசாரத்தின் முக்கிய ஆயுதமாகப் பயன்படுத்தப்பட்டது.*

*"ஐரோப்பிய பரதேசிகள், முஸ்லிம்கள் (ஹம்ப), பொம்பாய்கார பரதேசிகள் போலவே ஐரோப்பிய போதைகளும் சிங்களவர்களுக்கு எதிரானவை" என்று "சிங்கள பௌத்தயா"வில் முழங்கினார். இந்தப் பழக்கத்தால் சிங்களவர்கள் பல துர்நடத்தைகளுக்கு ஆளாகியிருப்பதாகவும், பௌத்த விழுமியங்களில் இருந்து விலகி, குடும்பங்களில் பெற்றோரும், பிள்ளைகளும், கணவர்மாரும், மனைவியரும் அவரவர் பொறுப்புகளையும், கடமைகளையும் நிறைவேற்றத் தவறிவருவதாகவும், இதனை தடுத்து நிறுத்த வழிதெரியாது தாம் நிலைகுலைந்து போயிருப்பதாகவும் அவர் எழுதுகிறார்.*

**"சிங்களவர்கள்; இயல்பில் வன்முறையற்றவர்களாக இருந்தபோதும் இந்த மதுப்பழக்கத்தின் காரணமாக கொலைகாரர்களாக ஆகியிருக்கிறார்கள்"**

*என்றும் அன்றைய "சரசவி சந்தரெச" பத்திரிகை எழுதியது.[3]*

**"ஹம்ப மறக்கல (முஸ்லிம்களுக்கு எதிரான வெறுப்புணர்ச்சிப் பதம்) காரன்கள் மது அருந்தாமல் இருக்க முடியுமென்றால் சிங்களவனால் ஏன் முடியாது?"**

*என்றார் அநகாரிக தர்மபால.*



**"ஆண்டொன்றுக்கு சிங்களவர்கள் மாசி கருவாடுக்காக முப்பது லட்சம் செலவளிக்கிறார்கள். கள்ளு, சாராயத்துக்காக ஒரு கோடியே நாற்பது லட்சம் ரூபாய் செலவு செய்கிறார்கள். சிங்களவர்கள் மாசி கருவாட்டுக்கும், மதுவுக்கும் செலவளிப்பதை இனத்தின் வளர்ச்சிக்கு முதலிட்டால் பன்னிரெண்டே மாதங்களில் நமது தேசம் ஒரு சொர்க்கபுரிக்கு நிகராக ஆகிவிடும். மதுவுக்காக செலவிடுவதை சேமிக்க உறுதி பூணுவோம்!"**

*(சிங்கள பௌத்தயா, 1912)*

*தர்மபாலாவின் "மதுவை ஒழி! மாட்டிறைச்சியை உண்ணாதீர்" என்கிற பிரச்சாரம் தூய பௌத்தத்தை வலியுறுத்திய அதேவேளை அந்தப் பிரச்சாரம் இறுதியில் ஆங்கிலேயர்களுக்கு மட்டுமன்றி ஏனைய சமூகங்களுக்கு எதிரான வெறுப்புணர்ச்சியாய் திருப்பப்பட்டது.*

*அநகாரிக தர்மபால தனது பிற்காலங்களில் ஆங்கிலேயர்களை விட அதிகமாக வெறுத்தது உள்நாட்டிலுள்ள ஏனைய இனத்தவர்களையே. தமிழர், மலையாளிகள், முஸ்லிம்கள், பறங்கியர் என அவரின் இனவெறுப்புணர்ச்சி என்பது இனவெறுப்போடு மட்டும் நிற்கவில்லை அது மோசமான மதவெறுப்பையும் இணைத்தே இருந்தது. ஆகவே தான் அவர் "சிங்கள கிறிஸ்தவர்களுக்கு" எதிராக அதிகமாக பிரச்சாரம் செய்தார்.*

**"கள் குடிப்பவன் இழிந்தவன்... மாட்டிறைச்சி உண்பவன் இழிசாதியன்"**

*என்பது அவரது சுலோகங்களில் ஒன்று.*

**"...ஆரிய தர்மத்தை பின்பற்றும் ஆரிய இனத்துக்கு உரித்தான சிங்கள பௌத்த சகோதரர்களே! பௌத்த சொற்களை அன்புடன் பயன்படுத்தி... மதுபானத்தை அருந்தாதிருக்க போதியுங்கள்"**

**சிங்களவர்களுக்கு விஷ மதுபானத்தை அருந்தச் செய்து சிங்களவர்களை அழித்துவருகிற வெள்ளையர்களை நமது பரம்பரைப் பகைவர்களாகவே நான் கொள்கிறேன்"[4]**


*அநகாரிக தர்மபாலாவின் இந்தப் பிரச்சாரத்தால் கவர்ந்திழுக்கப்பட்ட மது வியாபார பிரமுகர்கள் ஏராளமான பணத்தை பௌத்த மறுமலர்ச்சி நடவடிக்கைக்கு நிதியாக வழங்கினார்கள். காலியில் பெரிய பௌத்த பாடசாலையை ஆரம்பிப்பதற்கு பெருமளவு நிதியைக் கொடுத்தவர் சாராய வியாபாரத்தில் பேர்போன தனவந்தரான டி,டீ.அமரசூரிய. இப்படி பலரைக் குறிப்பிடலாம்.*

*மதுவொழிப்பு இயக்கத்தின் பிரச்சாரங்களின் போது ஆங்கிலேய அரசை விமர்சிகின்ற கண்டிக்கின்ற போக்கானது பின்னர் மெதுவாக ஆங்கிலேயர்களின் மீதான வெறுப்புணர்ச்சியாகவும், சுதேசிய - விதேசிய*

---

3 ඩී.දිලානි නිරෝෂිනී ද සිල්වා, "අමද්‍යප ව්‍යාපාරයේ ගමන් මග සහ අනගාරික ධර්මපාල තුමා" 152nd Birth Anniversary of Srimath Anagarika Dharmapala National Summit - 2016

4 රට දැය සසුන නැගූ අභීත සිංහනාද - අනගාරික ධර්මපාල ශ්‍රීමතාණෝ - මහමෙව්නාව භාවනා අසපුව



சிக்கலாகவும், ஈற்றில் ஆங்கிலேயர்களை விரட்டுவதற்கான பிரச்சாரமாகவும் ஆங்காங்கே தலை தூக்கியது. ஆங்கிலேய அரசுக்கு எதிரான பிரச்சாரக் களமாக மதுவொழிப்பு இயக்கத்தின் களம் ஆனது.

## கிறிஸ்தவ மிஷனரிகளின் பங்கு

1912 ஆம் ஆண்டு 8 ஆம் இலக்கச் சட்டத்திருத்தத்தின் மூலம் மேலும் இத்துறை நெகிழ்ச்சியாக்கப்பட்டது. மதுவரித் திணைக்களமும் ஆரம்பிக்கப்பட்டது. கள்ளச்சாராயம் காய்ச்சியவர்கள் இதன் மூலம் சட்டபூர்வமாகவே அனுமதிபெற்று மதுவிற்பனை நிலையங்களாக அவற்றை மாற்றிக்கொள்ள எளிமையான வழியேற்பட்டது. 1900த்தில் இருந்ததை விட நூறு மடங்கு அதிகமாக மதுவிற்பனை நிலையங்கள் உருவாகின.இந்தச் சட்டத்தின் மூலம் 1072 புதிய சாராய விற்பனை நிலையங்களை ஆரம்பிப்பதற்கான அனுமதியை அரசாங்க சபை வழங்கியது.[5]

19ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியிலேயே இதற்கு எதிரான குரல்கள் வெளிவரத் தொடங்கிவிட்டன. இதனால் பல சமூகக் குற்றங்கள் பெருகிவருவதை பல அதிகாரிகள் சுட்டிக்காட்டினர். 1872இல் கவர்னர் வில்லியம் கிரகரி அரசாங்க சபையில் உரையாற்றும்போது மரணதண்டனைக்காக தன்னிடம் பரிந்துரைக்கப்பட்ட பலர் மதுபோதையின் விளைவாக குற்றம் இளைத்தவர்கள் என்றார்.

இந்த இடத்தில் இன்னொன்றையும் குறிப்பிட வேண்டும். மதுவொழிப்பு இயக்கம் என்றால் அது சிங்கள பௌத்த இயக்கமாக நமக்கு கருத்தேறி இருக்கிறது. ஆனால் மதுவொழிப்பு குரல்கள் முதலில் வெளிவந்தது கிறிஸ்தவ மிஷனரி இயக்கங்களின் மத்தியில் இருந்து தான் என்பதையும் இங்கே குறிப்பிட்டாகவேண்டும்.


அரசின் அணுகுமுறையில் மாற்றம் வேண்டும் என்று அவர்கள் கோரினார்கள். அப்படி மதுவொழிப்பு பிரச்சாரங்களில் முக்கிய பங்காற்றிய கிறிஸ்தவ பாதிரியார்களில் லிஸ்போவா பின்டோ, ஜோன் மர்டோக் போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள். மதுபான நிலையங்களைக் குறைத்து, ஞாயிறு தினங்களில் அவற்றை மூட வேண்டுமென்று அவர்கள் முதலில் கோரினார்கள். மேலும் ஒரு மதுபான நிலையம் திறப்பதாயின், அல்லது இருப்பதாயின் முதலில் அந்த பிரதேச மக்களின் விருப்பைப் பெறவேண்டும் என்றும் கோரினார்கள். ஆனால் இந்த இயக்கம் மதப் பிரிவுகளோடு மட்டுமே இந்த முயற்சிகள் மட்டுப்படுத்தப்பட்டிருந்ததால் நாடளாவிய ரீதியில் இயங்கவில்லை. எனவே காலப்போக்கில் இந்த முயற்சிகளோடு பௌத்த இயக்கங்களும் இணைந்து கொண்டதன் பின்னர் தான் மதுவொழிப்பு இயக்கம் நாடளாவிய ரீதியில் பெருகியது.

## "ரேந்தகாரயோ"

போர்த்துக்கேயர் இலங்கையில் முதன்முதலாக கைப்பற்றி; அதன் பின்னர் ஆங்கிலேயர் 1815இல் இலங்கையை முழுவதுமாக கைப்பற்றும்வரையிலான மூன்று நூற்றாண்டுகள் இலங்கையின் கரையோரப் பகுதிகள் மட்டுமே போர்த்துகேய, ஒல்லாந்த

5 සාලිය හෙට්ටිආරච්චිඩී, බෞද්ධ ආගමික ප්‍රබෝධය, අමද්‍යප ව්‍යාපාරය සහ ශ්‍රීමත් අනගාරික ධර්මපාලතුමා. 152nd Birth Anniversary of Srimath Anagarika Dharmapala National Summit - 2016





காலனித்துவத்தின் கீழ் இருந்தது. வரிகளை அறவிட்டு தமது வருமானத்தை ஈட்டினார்கள் அவர்கள். தமது கட்டுப்பாட்டுப் பிரதேசங்கள் முழுவதும் அந்த வரிகளை அறவிடுவதற்கான ஆளணி அவர்களிடம் இருக்கவில்லை. எனவே அந்தப் பணிகளை உள்ளூர் பிரமுகர்களைக் கொண்டே மேற்கொண்டனர். அப்படி அறவிடும் வரிவசூலிப்பு ஊழியர்களை சிங்களத்தில் "ரேந்தகாரயோ" (Renters) என்பார்கள். இந்த சொல் போர்த்துக்கேயர் காலத்திலிருந்தே புழக்கத்தில் இருந்திருக்கவேண்டும். ஏனென்றால் போர்த்துகேயர் மொழியில் தான் "ரேந்த" (Renda) என்கிற சொல் இருக்கிறது. அது "வரி"யைக் குறிக்கிறது. இந்த "ரேந்த" என்கிற சொல் ஆங்கிலேயர் காலத்திலும் அப்படியே தான் தொடர்ந்தது. சிங்களத்திலும் வரியை "ரேந்த" என்றே எங்கெங்கும் குறிப்பிட்டு வருகிறார்கள். ஆங்கிலேயர் காலத்தில் பலவகை வரிகள் நடைமுறையில் இருந்தன. பல இடங்களில் "பாதைவரி" கூட இருந்தது. காலப்போக்கில் இப்படி வரிகள் அறவிடுபவர்கள் பெரும் செல்வாக்கும், பணபலம் மிக்கவர்களுமாக பின்னர் ஆனார்கள்.

சிங்கள உயர்சாதி வெள்ளாளர்களாகிய "கொவிகம" அல்லாத சாதியினர் பெரும்பாலும் இலங்கையின் ஆரம்பகால காலனித்துவ பிரதேசங்களாகிய கரையோரப் பிரதேசங்களிலேயே அதிகமாக இருந்தனர். அவர்களில் பலர் தான் இந்த புதிய செல்வாக்கு படைத்த பிரிவினராக ஆனார்கள். அவர்கள் தமது பணத்தைக் கொண்டு மது வியாபாரத்தில் முதலிட்டார்கள். அதுபோல தோட்டங்களிலும், பெருமளவு நிலங்களிலும் முதலிட்டார்கள். கீழே வெள்ளை வேட்டியும், மேலே ஆங்கிலேயர்களின் கோர்ட்டுகளையும் அணிந்து திரிந்தார்கள். தமது பிள்ளைகளை பிரித்தானியாவுக்கு பட்டப்படிப்புக்காக அனுப்பி விட்டார்கள். மருத்துவம், நீதித்துறை, தத்துவம், அரசியல், பொருளாதாரம் போன்ற உயர்பட்டப்படிப்பை கற்று திரும்பும்போது அவர்கள் தாம் கற்ற காலங்களில், கற்ற சூழலில் அங்குள்ள ஜனநாயகத்தையும் தாராளவாதத்தையும் கற்றுத் திரும்பினார்கள். ஏன் பலர் மாக்சியத்தையும் கற்றுத் திரும்பினார்கள். இவர்கள் தான் 19ஆம் நூற்றாண்டின் இறுதியிலும் 20ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் இலங்கை அரசியலின்திசைவழியைமாற்றஅணிதிரண்டார்கள்.[6] ஆங்கிலேய ஆட்சியாளர்களிடம் இலங்கை மக்களை பிரதிநிதித்துவப்படுத்தினார்கள். இவர்களுக்கு மதுவொழிப்பு இயக்கம் ஒரு முக்கிய காலமாக ஆனது.

1915ஆண்டளவில் நாடளாவிய ரீதியில் 220 கிளைகளை ஸ்தாபித்திருந்தது மதுவொழிப்பு இயக்கம். 24033 உறுப்பினர்களைக் கொண்ட ஒரு வலைப்பின்னலை உருவாக்கியிருந்தது.

## தேசப்பற்றுக்கு வித்தாக மதுவொழிப்பு இயக்கம்

இந்த இயக்கத்தோடு சம்பந்தப்பட்ட தலைவர்களே 1915 கலவரத்தின் போது அதிகமாக கைது செய்யப்பட்டார்கள். சேனநாயக்க சகோதரர்கள், டீ.பி.ஜயதிலக்க, வலிசிங்க ஹரிச்சந்திர,[7] ஆதர் வீ டயஸ், பியதாச சிறிசேன, மார்கஸ் பெர்னாண்டோ, ஜோன் கொத்தலாவல, ஜேம்ஸ் பீரிஸ், ஹென்றி அமரசூரிய போன்ற பலரை அடுக்கிக்கொண்டு போகலாம். கலவரத்தின் பின் சிங்கள பௌத்தயா

6 Kumari Jayawardena, Nobodies to Somebodies: The Rise of the Colonial Bourgeoisie in Sri Lanka, Zed Books, 2002

7 வலிசிங்க ஹரிஸ்சந்திர (09.07.1879 - 13.09.1913) பௌத்த மறுமலர்ச்சிப் பணியில் ஈடுபட்ட முக்கிய தலைவர்களில் ஒருவர். அநகாரிக்க தர்மபாலவின் பிரதான சீடர். அநகாரிக தர்மபாலவைப் போலவே பிரம்மச்சரியத்தை கடைபிடித்தவர். மதுவொழிப்பு இயக்கத்தின் முக்கிய தலைவரான அவர் பௌத்த மதம், சிங்கள மொழி, சிங்கள பண்பாடு, உடை என்பவற்றை மக்கள்மயப்படுத்த வேண்டுமென அயராது உழைத்தவர். தொல்பொருள் ஆய்வுப் பணிகளிலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டதுடன் சில Great Story of King Dutugemunu, The Significance of Jaya Sri Maha Bodhi, Life of King Devanampiyatissa போன்ற நூல்களை எழுதியவர்.

பத்திரிகை தடை செய்யப்பட்டு அதன் செயலகத்தில் இருந்த அத்தனையையும் அள்ளிக்கொண்டு போனது ஆங்கிலேய அரசு. அநகாரிக தர்மபாலாவை சிறை வைப்பதற்கு இந்த காலத்தில் சிங்கள பௌத்தயா பத்திரிகையில் வெளிவந்தவற்றின் உள்ளடக்கங்களைத்தான் ஆதாரங்களாகக் காட்டினார்கள்.

மதுவொழிப்பு மற்றும் மாடுகளை அறுப்பதற்கு எதிரான பிரச்சாரம் முதன் முதலில் பெருமளவு மேற்கொள்ளப்பட்டது இந்த காலத்தில் தான். தனது இந்திய பயணங்களின் போது இந்து சமயத்தவர்களால் கடைபிடிக்கப்பட்டு வந்த மாட்டிறைச்சி உண்ணாமை என்பவற்றால் அவர் மேலும் கவர்ந்திருக்க வேண்டும். பௌத்தம் போற்றும் தம்மபதம் கூறும் ஐம்பெரும் குற்றங்களில் உயிர்களைக் கொல்லாமை முக்கிய அங்கம். ஆனால் அது மாடுகளுக்கு மட்டும் வரையறுக்கப்படவில்லை. சகல உயிர்களுமே அதில் அடக்கம்.

கள்ளுத் தவறணைகளை திறப்பதற்கான முயற்சிகளை ஆதரித்து இருந்தவர் ஆங்கிலேயர்களின் பரம விசுவாசியான கரைநாட்டு சிங்களவர்களை பிரதிநிதித்துவப்படுத்திய சார் சாலமன் கிரிஸ்டாப்பல் ஒபயசேகர (Solomon Christoffel Obeyesekere). அவர் பிற்காலத்தில் இலங்கையின் பிரதமராக ஆன பண்டாரநாயக்கவின் தந்தை.

இதற்கு நேரெதிராக ஆங்கிலேயர்களுடன் இந்த விடயத்தில் முரண்பட்டுக் கொண்டு கள்ளுத் தவறணைகளை எதிர்த்து நின்றவர் சேர் பொன்னம்பலம் இராமநாதன் என்று சிங்கள நூல்கள் பல பாராட்டுவதையும் காண முடிகிறது.

பொன்னம்பலம் இராமநாதன் 1879ஆம் ஆண்டு இலங்கையின் சட்டசபைக்கு உத்தியோகப் பற்றற்ற உறுப்பினராக ஆளுனரால் நியமிக்கப்பட்டார். ஆனால் 1911 ஆம் ஆண்டில் நடைபெற்ற இலங்கையின் சட்டசபைக்கான முதலாவது தேர்தலில் முழு இலங்கையரையும் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரே உறுப்பினராக இராமநாதன் தெரிவு செய்யப்பட்டார். கேணல் ஒல்கொட்டுடன் சேர்ந்து பரம விஞ்ஞான சங்கத்துடன் சேர்ந்து பல மாநாடுகளில் பங்குபற்றியவர். பௌத்த-இந்து உறவை பலப்படுத்தும் நோக்குடன் பௌத்த-இந்து பாடசாலைகளை அமைப்பதற்காக ஒல்கொட்டோடு சேர்ந்து பொன்னம்பலம் இராமநாதன் பணியாற்றியிருக்கிறார். இப்பேர்பட்ட உறவுகளும் பொன்.இராமநாதன் 1915 கலவரத்தின் போது சிங்கள பௌத்த தரப்பை பாதுகாக்க காரணிகளாக தொழிற்பட்டிருக்கிறது.

மதுவொழிப்பு இயக்கத்தின் "மாட்டிறைச்சித் தடை" குறித்த பிரச்சாரங்கள் காலப்போக்கில் முஸ்லிம்களுக்கு எதிரான ஒன்றாக உருமாற்றமடைந்த பின்னணி தனியாக பார்க்க வேண்டிய ஒன்று. 1915 கலவரத்தில் மதுவொழிப்பு இயக்கத்தைச் சேர்ந்த சிங்களத் தலைவர்களை ஆங்கிலேய அரசு வேட்டையாட முடிவு செய்ததன் பின்னணியில் இந்த மதுபான வியாபாரத்துக்கு எதிரான சக்திகளை ஒடுக்குவதும் காரணமாக இருக்க வாய்ப்புண்டு என்றே கணிக்க முடிகிறது.

1915 கலவரத்தின் விளைவுகளைத் தொடர்ந்து மதுவொழிப்பு இயக்கம் சற்று செயலிழந்தது. அனால் ஓரிரு வருடங்களில் மீண்டும் சிங்களத் தலைவர்கள் அதற்கு உயிர்கொடுத்து நிமிர்த்திவிட்டனர். குறிப்பாக டீ.பி.ஜயதிலக்க, உதேனி த சில்வா, சி. டபிள்யு.டபிள்யு.கன்னங்கர, சீ.த.எஸ்.குலரத்ன போன்றோரும், சேனநாயக்க சகோதரர்களும் மதுவொழிப்பு இயக்கத்தின் தீவிர செயற்பாட்டாளர்களாக ஆனார்கள். இத்தனைக்கும் சேனநாயக்க சகோதரர்களின் தந்தை தொன் ஸ்பேட்டர் சேனநாயக்க பிற்காலத்தின் மாணிக்கக்கல் அகழ்வு வியாபாரத்தில் பிரசித்தி பெற்றபோதும் அவர் ஒரு பிரபல சாராய விற்பனைக் குத்தகைக் காரராக (Arrack Renter) இருந்தவர் தான்.

மதுவொழிப்பு இயக்கம் பற்றிய கற்கை உயர்தர அரசியல் விஞ்ஞான பாடத்திட்டத்தின் ஒரு அங்கமாக இருந்து வருகிறது. அநகாரிக தர்மபாலாவை அறிந்தவர்கள் இவ்வியக்கத்தை தவிர்த்துவிட்டு பார்க்க முடியாது. அதுபோல இலங்கையின் சுதந்திரத்துக்கான கோரிக்கைகளையும், அதற்காக "இலங்கை தேசிய காங்கிரஸ்" அமைத்து தம்மை தயார்படுத்திய வரலாறையும் அறிய முயல்பவர்கள் அவற்றுக்கெல்லாம் முன்னோடியான "மதுவொழிப்பு" இயக்கத்தின் வகிபாகத்தை தவறவிட முடியாது.


ஆங்கிலேயர் காலத்தில் கரையோர பிரதேசமொன்றின் வீதியில் இருந்த கள்ளுத்தவறணையொன்றைப் பற்றிய சுவாரசியமான கதையொன்று உண்டு.


ஒருமுறை ஆங்கிலேய ஆளுநர் தனது உத்தியோகபூர்வ பனியின் காரணமாக தனது மோட்டார் வாகனத்தில் கொழும்பு காலி வீதியின் வழியாக தென்பகுதியை நோக்கி ஒரு பயணத்தை மேற்கொண்டிருந்தார். போகும் வழியில் ஆளுநர் வீதியோர கள்ளுத் தவறணை ஒன்றில் கள் அருந்தும் ஆசை ஏற்பட்டது. வாகனத்தை அதற்கருகே நிறுத்திவிட்டு தனது வேலையாளை அனுப்பி தனக்கு கள் வாங்கிவரச் செய்து சந்தோசமாக அருந்தினார். அதுவரைகாலம் அவர் அருந்திய விஸ்கி, பிராந்தி, ஜின், பியர் போன்ற மேற்கத்தேய மதுபானங்களுக்கு பழகியிருந்த அவர் வித்தியாசமான சுவையுடன் கூடிய மதுவகையாக அதை உணர்ந்தார். பின்னர் அவர் தனது பயணத்தைத் தொடர்ந்து சென்றுவிட்டார். அடுத்த நாள் அவர் மீண்டும் அதே பாதையில் தனது வாகனத்தை செலுத்தி வந்து கொண்டிருந்த போது முதல் நாள் கள்ளருந்திய அந்த தவறணையில் பெரிதாக ஆங்கில எழுத்தில் ஒரு விளம்பரத்தைப் பார்த்து உறைந்துபோனார்.

அதில் இப்படி இருந்தது

"கௌரவ ஆளுநருக்கு கள் விநியோகிப்பவர்கள்..."
("Suppliers of Toddy to his Excellency the Governor")

**கட்டுரையாளர்: எழுத்தாளர், நார்வே.**



**ஊர்சுற்றிக் காக்கையார்**

**குஞ்சரம்**

தொகுப்பு :
**க. முகுந்தன்**
kmukunthan@gmail.com

## குஞ்சரம்: 1

# எனது பெயர் இஸ்ரேல்

**எனது பெயர் இஸ்ரேல்**

*நாடற்றவர்களுக்காக நான் பிறந்தேன். அங்கு ஏற்கனவே வாழ்ந்தவர்களின் வதிவிட உரிமைகள் நான் வந்தபின் பறிக்கப்பட்டன. எனது மக்கள் 400 பாலஸ்த்தீனிய கிராமங்களை அழித்து தரைமட்டமாக்கினர். அவர்களின் வரலாற்றை மண்ணோடு மண்ணாக்கினர். இந்தச்செய்கை மூலம் அவர்களுக்கு நான் படிப்பித்த பாடம் என்னவெனில் ஒன்றில் செத்து மடியுங்கள் இல்லை வெளியேறுங்கள் என்பதாகும்.*

**எனது பெயர் இஸ்ரேல்.**

*எனது குடிமக்கள் சிலர் படுகொலைகளைச் செய்கிறார்கள். பின்னர் அவர்களே பிரதம மந்திரிகள் ஆகிறார்கள். 1948 இல் மனேச்சம் பிகின் உத்தரவின் பேரில் டெயர் பாசின் வாழ்மக்கள் படுகொலை செய்யப்பட்டனர். இந்தப் படுகொலையில் 100 பெண்களும் குழந்தைகளும் கொல்லப்பட்டனர். 1953 இல் ஏரியல் ஷாறன் உத்தரவின் பேரில் குப்பிய வாழ் மக்கள் படுகொலை செய்யப்பட்டனர். 1982 ல் சப்ரா மற்றும் ஷற்றிலா அகதி முகாம்களில் வாழ்ந்த 2000 மக்கள் படுகொலை செய்யப்பட்டனர்.*

**எனது பெயர் இஸ்ரேல்**

*1948 இல் 78 வீதமான பாலஸ்தீனிய மண்ணிலிருந்து நான் பிறந்தேன். அப்போது பாலஸ்த்தீனியர்களை நான் வெளியேற்றினேன். ஐரோப்பா மற்றும் உலகெங்கும் பரந்து வாழ்ந்த யூதர்களை இங்கு கொண்டு வந்து குடியேற்றினேன். இங்கு பல்லாயிரம் வருடமாக வாழ்ந்த பாலஸ்த்தீனியர்களை நான் இங்கு மீள் குடியேற அனுமதிக்கவில்லை. ஆனால் உலகில் எந்த மூலையில் இருந்து யூதர்கள் இங்கு வந்து குடியேறினாலும் அவர்களுக்கு சிவப்பு கம்பள வரவேற்புடன் உடனடியாக குடியுரிமை வழங்கினேன்.*

**எனது பெயர் இஸ்ரேல்.**

*1967 இல் மிகுதியாக இருந்த பூர்வீக பாலஸ்தீனிய நிலங்களை அபகரித்ததோடு வெஸ்ட் பாங் , கிழக்கு ஜெருசலேம் காசா நிலங்களில் வாழ்ந்த மக்களின் அன்றாட வாழ்வை இராணுவ அடக்குமுறைக்குள் கொண்டு வந்து அவர்களின் இருப்புக்கு அச்சுறுத்தலாக இருந்து வருகிறேன். இதன் மூலம் பாலஸ்த்தீனியர்களுக்கு நான் கற்பிக்கிற பாடம் என்னவெனில் அவர்கள் இந்த நிலத்தில் வேண்டாத விருந்தாளிகள், இறுதியாக அவர்களுக்கு இருக்கும் ஒரே தேர்வு ஜோர்டன் மற்றும் லெபனானில் உள்ள அகதி முகாம்களில் வாழும் பல மில்லியன் பாலஸ்த்தீனிய அகதிகளோடு சேர்ந்து கொள்வது தான்.*

**எனது பெயர் இஸ்ரேல்.**

*அமெரிக்காவின் பிரதான ஊடகங்கள் என் செயல்களை ஆதரித்து பிரச்சாரம் செய்கின்றன. இதற்காக நான் பல மில்லியன் பணத்தை ஒதுக்கியிருக்கிறேன். நீங்களே பாருங்களேன், அகில உலக மீடியாக்களை! நான் செலவிடும் பணம் எத்தனை கச்சிதமாகப் பயன்படுத்தப்படுகிறது.*

**எனது பெயர் இஸ்ரேல்.**

*பாலஸ்த்தீனியர்களே! உங்களுக்கென்ன வேண்டும்? சமாதானம்? நான் உங்களுடன் பேச்சு வார்த்தைக்குவருகிறேன்,நீங்கள் முனிசிப்பாலிடிகளை நிர்வகிக்கலாம் ஆனால் நாட்டின் எல்லைகள், நீர் வளம், வான்வெளி எல்லைகள் மற்றும் முக்கியமானவைகள் எல்லாம் என் கட்டுப்பாட்டிற்குள்ளேதான் இருக்கும், சமாதானப்*

*பேச்சுவார்த்தைகள் நடத்திக்கொண்டிருக்கும் போதே நான் உங்கள் மலைகளை அபகரிப்பேன், அங்கு ஆயுதமேந்திய தீவிரவாதிகளை குடியேற்றுவேன். இந்தக்குடியேற்றங்கள் பிரதான போக்குவரத்துப் பாதைகளோடு பிணைக்கப்பட்டிருக்கும், இந்தப்பாதைகளை நீங்கள் பயன்படுத்த முடியாது .நீங்கள் உங்களுக்காக வரையறுக்கப்பட்ட எல்லைகளுக்குள் இருப்பது மட்டுமல்லாமல் நீங்கள் வாழும் எல்லாத் திசைகளும் கண்காணிப்பரண்களால் சூழப்பட்டிருக்கும். கண்காணிக்கப்பட்டுக் கொண்டேயிருப்பீர்கள்.*

**எனது பெயர் இஸ்ரேல்.**

*உலகத்தில் நான்காவது சக்தி வாய்ந்த ராணுவமும் அணுவாயுதங்களும் என் வசம் உள்ளன. என்ன துணிச்சலில் உங்கள் சிறுவர்கள் எனது ராணுவத்தின் அடக்குமுறையை எதிர்கொள்ள வெறும் கற்களை பாவிக்கிறார்கள்? என்னுடைய ராணுவம் அவர்கள் தலையை துண்டாடுவதற்கு சற்றும் தயங்காது என்று உங்களுக்குப் புரியாதா? 17 மாதங்களில் உங்களில் 900 பேரைக் கொன்றிருக்கிறேன். 17 000 பேர்களை காயப்படுத்தி இருக்கிறேன்,இதில் பெரும்பாலானோர் பொதுமக்கள், இதைத் தொடர எனக்கு எந்த தடைகளும் இல்லை, உலகம் இதை தட்டிக் கேட்காது.*

**எனது பெயர் இஸ்ரேல்**

*உங்களுக்கு என்ன வேண்டும் ? சுதந்திரமா? என்னிடம் கனரக ஆயுதங்களும் துப்பாக்கிகளுமே உள்ளன. நான் உங்களின் நகரங்களை எனது கண்காணிப்பின் கீழ் வைத்திருக்கிறேன், உங்களுடைய மரங்களை வேரோடு பெயர்த்திருக்கிறேன், உங்கள் வீடுகளை தரைமட்டமாக்கி இருக்கிறேன், இன்னமும் நீங்கள் என்னிடம் விடுதலையைக் கோரி நிற்கிறீர்கள்? புரிந்து கொள்ளவே மாட்டீர்களா? உங்களுக்கு எந்தக் காலத்திலும் சமாதானமோ விடுதலையோ கிடையவே கிடையாது !*

***ஏனெனில், எனது பெயர் இஸ்ரேல்!***

மொழியாக்கம் :
கௌரி பரா Gowry Para (இங்கிலாந்து)
மூலம் :
Dr Norman Finkelstein (American political scientist)
மே 2021

---

## குஞ்சரம்: 2

# இறுதிச் சடங்கு



*2021 ஆரம்பத்தில் இந்தியாவுக்கு சுற்றுலாவாக வந்திருந்த வேளையில் கொரோனா முடக்கமும் அதனோடான இழுபறியுமாக நாட்கள் மாதங்களாகி கடந்து செல்கின்றன. 80களின் ஆரம்பத்தில் நான் இருந்த சென்னை வேறு இப்போது நான் காணும் சென்னை வேறு. மாற்றம் ஒன்றே மாறாதது எனும் இயங்கியல் கூற்றை இன்றைய தமிழ்நாடு தனித்துவமாக வெளிப்படுத்துகிறது. அதுவும் பெண்களது முன்னெடுப்பும் செயலூக்கமும் மிகப் பெறுமானமுள்ளதாகக் காண முடிகிறது.*

*இந்த முறை தமிழ்நாட்டு வருகை நிறைய இறப்பு நிகழ்வுகளில் பங்கேற்க வைத்திருக்கிறது. இதில் 80களின் தொடக்க காலத்திலிருந்து எம்மோடு தொடர்பிலிருந்த ஈழ நட்புகள் தோழர் தா பாண்டியன், மதிப்பு மிக்க ஆனைமுத்து ஐயா அவர்களது இறுதிநிகழ்வுகளில் பங்கேற்கும் வாய்ப்பு ஒரு நினைவேந்தலாக அமைந்தது.*

*2021 மே 18 அன்று நான் சென்னையில் எனது உறவினரது மரண நிகழ்வொன்றில் பங்கேற்க வேண்டியதாயிற்று. இங்கே அகதியாக வாழும் அவருடைய கணவனாரின் இறுதிச்சடங்கில் வெளிநாடுகளில் வாழும் அவரது பிள்ளைகள் பங்கேற்க முடியாத நிலை. கொரோனா முடக்கநிலையில் யாரையும் அழைக்க முடியாத தவிப்பிலிருந்த உறவினருக்குத் துணையாக நானும் பங்கேற்றேன். இவர்தான் அவரது கணவனாரின் இறுதிச் சடங்கை நிறைவேற்றினார்.*

*அந்த இறுதி ஊர்திப் பயணத்தில் பெண்களாக நாங்கள் உறைந்தவராய் இருந்தோம். சென்னை சாலை வெறிச்சோடிக் கிடந்தது. 2009 மே இந்நாளில் கொத்துக் கொத்தாக நாதியற்று இறந்தொழிந்து இறுதி நிகழ்வும் செய்யாது அழிக்கப்பட்டோரை மனத்திரை நிழலாட வைத்தது. மனம் இறுகியவளாக சென்னை வீதியில் வண்டியிலிருந்து உதிர்த்த பூக்களை சிந்திக் கொண்டே சென்றேன்.*

*புத்தம் புதிய இந்த இறுதி ஊர்திப் பயணம் ஏதோவொரு வகையில் நிம்மதியளித்தது.*

**சென்னை,** **அங்கை**
2021 மே 18

நூல் அறிமுகம்

**சு.இராமசுப்பிரமணியன்**
srsthovalai@gmail.com

## அரவிந் அப்பாதுரையின் திரு-பூர்விக-சதிர்

# வேர்களைத் தேடி அலையும் இளைஞர்களின் கதை

அரவிந் அப்பாதுரை மொழிபெயர்ப்புத் துறையில் பணியாற்றுபவர். தமிழ்மொழி மீதுள்ள பற்றுகாரணமாக, அம்சன்குமார் இயக்கத்தில் வெளிவந்த 'மனுசங்கடா' என்னும் திரைப்படத்தை வெளியிடுவதற்குத் தனக்குச் சொந்தமான அரங்கை இலவசமாகவே கொடுத்து உதவியிருக்கிறார் என்பதாகப் பாரீசில் வசிக்கும் நண்பர் முகிலன் தெரிவிக்கிறார். மாத்திரமல்ல, பல்வேறு தமிழ் நிகழ்வுகளுக்கும் அதுபோலவே இலவசமாகத் தனது அரங்கைக் கொடுத்து உதவி வருகிறார் என்று அவரைப்பற்றி, முகிலன் மேலும் கூறுகிறார். சிறந்த படைப்பாளி என்பதற்கும் அப்பாற்பட்டு அவரதுத் தமிழ்மொழிமீதானப்பற்றும், இன உணர்வும், உதவிசெய்யும் குணமும், மனிதநேயமும் பாராட்டுக்குரியவை.

சமீபத்தில், 'ஞாயிறு படைப்பாளிவட்டம்' முன்னெடுத்த அரவிந் அப்பாதுரை எழுதிய 'திரு-நீல-சதிர்' என்னும் நாவல் பற்றிய கருத்துரையாடல், சூம் இணையத்தின் வழியாக நிகழ்ந்தது (Zoom meeting) ..வசுபன் என்னும் புலம்பெயர் தமிழர் ஒருங்கிணைத்தார். முபீன் சாதிகா, விஜி நல்லையா, சுதீர் செந்தில், ஆதவன், பால்கணேசன் ஆகியோர் நூல்மதிப்புரை வழங்கினர். நானும் பார்வையாளனாகக் கலந்துகொண்டேன். இறுதியாகப் பேசிய அரவிந் அப்பாதுரை, 2011-இல் வெளியான நாவல், "பத்து ஆண்டுகள் கழித்து இப்போதாவது கவனம் பெற்றதே என்பதில் எனக்கு மகிழ்ச்சியே" என்றார். ஆனாலும், ஒரு படைப்பாளியாக, அது எந்த அளவிற்கு அவருக்கு மனவலியைத் தந்திருக்கும் என்பதும் புரிந்தது.

ஆறு நாவல்களும், பல 'சலம்பகங்களும்' எழுதியிருந்தாலும், மொழி, இனம், சமூகம், வரலாறு, சாதியமைப்பு, மதம், பொருளாதார ஏற்றதாழ்வு போன்ற பலவற்றையும், மிகவும் எளிதான மொழி நடையில் வாசகனுக்குக் கடத்திவிடும் திறமை இருந்தும், அரவிந் அப்பாதுரை என்னும் காத்திரமான படைப்பாளி, தமிழ் வாசகப்பரப்பில் இன்னமும் அறியப்படாமலேயே இருப்பது மிகுந்த வேதனையை அளிக்கிறது

என்றாலும், வாசகர்களை குறைசொல்லாதப் பெருந்தன்மை அரவிந் அப்பாதுரையிடம் இருப்பது, அவரை நிமிர்ந்துபார்க்கவைக்கிறது. காரணம், ஒரு கவிதை, கதை அல்லது கட்டுரைத்தொகுப்பு வந்தாலே, தங்களைப்பற்றிப் பெருமைப்படுத்திக்கொள்வதையும், புகழ்தேடி அலைவதையும், வாசகர்களைக் குறைசொல்வதையும் நாம் பார்த்துக்கொண்டிருக்கிறோம் அல்லவா?

அரவிந் அப்பாதுரையின் நான்கு நாவல்களையும், ஒரு சலம்பகத்தையும், காக்கை வழியாக எனக்கு வாசிக்க அனுப்பிக்கொடுத்தத் தோழர் விவேகானந்தனுக்கும், பரிந்துரை செய்த நண்பர் (ஃப்ரான்ஸ்) முகிலனுக்கும், காக்கைக்கும் நன்றி. அரவிந் அப்பாதுரையின், தரமானப் படைப்புகளை, 'காக்கை' வழியாக அறிமுகப்படுத்துவதில் நானும்கூட பெருமைகொள்கிறேன்.

*சு. இராமசுப்பிரமணியன்*

புலம்பெயர்தல் இருவகையானது. ஒன்று, பொருள் ஈட்டும் நோக்கத்துடன், அல்லது வேலைதேடி அவர்களாகவே சொந்த மண்ணைவிட்டு அந்நிய மண்ணுக்குப் புலம்பெயர்தல்.

மற்றொன்று, நீண்டகாலப்பஞ்சம், சாதி அடிப்படையிலான தீண்டாமைக்கொடுமை, உள்நாட்டுப்போர் போன்ற காரணிகளால் சொந்த மண்ணைவிட்டு, கட்டாயமாகப் பெயர்த்தெடுக்கப்பட்டு அந்நிய மண்ணுக்குப் புலம்பெயர்தல். இப்படிப்பட்டப் புலம்பெயர்தல் வலி மிகுந்தது. அந்த வலி, பல தலைமுறைகளுக்கும் தொடர்ந்துகொண்டிருக்கும்.

ஈழத்தில் நடந்துகொண்டிருந்த உள்நாட்டுப்போர் காரணமாக, தமிழ் மக்கள் அங்கிருந்து புலம்பெயர்ந்து, ஐரோப்பிய நாடுகளுக்கும், ஆஸ்திரேலியா, கனடா போன்ற நாடுகளுக்கும் அகதிகளாகச் சென்றனர். அப்படிச் சென்றவர்களிலும், வசதிபடைத்தவர்கள், விமானங்களில் வசதியாகவேப் பிறநாடுகளுக்குப் பயணித்தனர். ஆனால், வசதியற்ற ஏழைகள் பிள்ளைக்குட்டிகளோடு கட்டுமரங்களிலும், தோணிகளிலும், படகுகளிலும் புலம்பெயர்ந்த கடல்வழி, வலியைத்தருவது.

லியோ டால்ஸ்டாய், தனது அன்னாகரினா நாவலில், ‘அனைத்து மகிழ்ச்சியான குடும்பங்களும் ஒரே மாதிரி மகிழ்ச்சியாக இருக்கின்றன. ஆனால், மகிழ்ச்சியற்ற ஒவ்வொரு குடும்பமும் படும் துன்பம் தனித்தனியானது” (All happy families are alike; each unhappy family is unhappy in its own way) என்பார். அப்படித்தான், வசதிபடைத்தவர்களின் புலம்பெயர்தல் ஒன்றுபோலவே இருக்கும். இதற்கு மாறாக, கட்டாயப் புலப்பெயர்வுக்கு உள்ளாகும் ஏழைக்குடும்பங்களில், டால்ஸ்டாய் சொல்வதுபோல, ஒவ்வொரு குடும்பத்தின் புலம்பெயர்தல் வலியும், புலம்பெயர்ந்த நாடுகளில் வாழ்தல் வலியும் ஒவ்வொரு விதத்தில் இருக்கும்... அத்துன்பங்களிலிருந்து நீங்கி, ஓரளவிற்கு நல்ல வாழ்க்கை வாழ்வதற்குப் பல தலைமுறைகள் கழிந்துவிடுகின்றன.

புலம்பெயர்தல் தொடர்பான அ.முத்துலிங்கத்தின் கதை ஒன்று உள்ளது. ஈழத்தைச்சேர்ந்த ஒரு இளைஞன், கையில் காசு இல்லாததால், கட்டுமரத்திலும், கப்பலின் அடித்தளத்திலும், திருட்டுத்தனமாகவும், நடந்தும், பல






நாட்கள் பட்டினிக்கிடந்தும் பல்வேறு வழிகளில், பல்வேறு நாடுகள் வழியாகப் பயணித்து, ஜெர்மனியை அடைகிறான். அங்கு வேலைதேடிச்செல்லும் இடத்தில், ஒரு அதிகாரி, அவனது தனிச்சிறப்பைச் சொல்லப்பணிப்பார். அந்த கேள்விக்குப் பதில் சொல்வதுபோல் அமைந்ததுதான் அந்தக்கதை. அதனை முழுவதுமாகக் கேட்ட அதிகாரி, ‘இதில் உனக்கென்ன சிறப்பு இருக்கிறது?” என்று கேட்பார். அதற்கு, அந்த இளைஞன், “ இத்தனைக்குப் பிறகும், இன்று இங்கு உங்கள் முன்னால் நான் உயிரோடு இருக்கிறேனே” என்று பதிலளிப்பான். நடுக்கடலில், மூழ்கிய குடும்பங்களைப்பற்றியும் , புலம்பெயர்தலின் வலியையும் உணரும்போதுதான் அந்த இளைஞனது கூற்றின்பின் உள்ள எதார்த்தத்தையும், வலியையும் புரிந்துகொள்ளமுடியும்.

தமிழகத்திலிருந்து, ஆங்கிலேயர் காலத்தில், ஏமாற்றப்பட்டு ஆப்பிரிக்காவுக்கும், பசிபிக் பெருங்கடல் தீவுகளுக்கும் கடத்தப்பட்ட ஒடுக்கப்பட்ட சமூகத்தின் பரம்பரையைச் சேர்ந்தவன் கருப்பன். மொரீஷியஸ் தீவில் பிறந்து ஃப்ரான்ஸ் நாட்டில் வாழ்பவன். பாரீஸ் நகரில் ரொசேட்டா என்னும் 50 வயதுப்பெண்மணி, ‘எழுத்துப்பட்டறை’ நடத்துகிறார் அந்தப் பயிற்சி வகுப்பிற்கு செல்லும் கருப்பன், நத்தால் மற்றும் இசபெல்லா என்னும் இளம்பெண்களைச் சந்திக்கிறான்.

ஒருநாள் பயிற்சி வகுப்பில், ‘ ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் இருந்து இன்றுவரையிலான உங்கள் குடும்ப வரலாற்றை எழுதுங்கள்’ என்று ரொசேட்டா கட்டளையிடுகிறார். தங்களது முன்னோர்கள் எங்கு இருந்திருப்பார்கள், எப்படி புலம்பெயர்ந்திருப்பார்கள் என்பது பற்றி கற்பனை செய்து கருப்பன், நத்தாலி, இசபெல்லா ஆகிய மூவரும் எழுதுகின்றனர். அதன்பிறகுதான், நத்தாலியும், இசபெல்லாவும் தன்னைபோலவே புலம்பெயர்ந்த இந்திய வம்சாவழியினர் என்பது கருப்பனுக்குத் தெரியவருகிறது.

பாண்டிச்சேரியிலிருந்து, ஃப்ரான்ஸ் நாட்டிற்குப் புலம்பெயர்ந்து வாழும் செல்வகுமார், ஒருநாள் நன்றாகக் குடித்துவிட்டு அதே பயிற்சிப்பட்டறைக்கு வருகிறான். அன்று ரொசேட்டா, அவரவர் மனநிலை எவ்வாறு இருக்கிறது என்று எழுதத்தூண்டுகிறார். செல்வகுமார் எப்படி செல்வகுமார் ஓடிபஸ் ஆனான் என்பதுபற்றிய வரலாற்றை இப்படிப் பதிவுசெய்கிறான்.

“எல்லாவற்றையும் துறந்துவிட்டு வா, ஃபிரெஞ்சு குடியரசின் அரசாங்க உத்தியோகம் பார்க்கலாம்” என்று பாண்டிச்சேரி

மக்களுக்கு ஃபிரஞ்சு நிர்வாகம் அழைப்பு விடுத்தது. சாதி, மதம் ,குலம், மொழி என்று அனைத்து அடையாளங்களையும் துறந்துவிடுவதாகப் பத்திரத்தில் கையெழுத்திடவேண்டும். அப்படிக் கையொப்பம் இடச்சென்றபோது, அங்கிருந்த ஒரு பாதிரியாரின் ஆலோசனையின்பேரில், செல்வகுமாரின் முன்னோர் தங்களது பெயரையும் துறந்திருக்கின்றனர். அதன்பிறகு, அந்தக்குடும்பம் 'ஓடிபஸ் குடும்பம்' என்று பதிவு செய்யப்பட்டிருக்கிறது. அப்படித்தான், செல்வகுமார் என்னும் இளைஞன் செல்வகுமார் ஓடிபஸ் ஆனதாக, அன்று எழுதியிருக்கிறான். இதனைப் பகடியாக எடுத்துக்கொள்ள முடியாது. மாறாக, அது நாம் அறிந்திராத ஒரு வரலாற்று நிகழ்வு.




செல்வகுமார், சொந்த ஊரான பாண்டிச்சேரிக்குச் செல்லும் செய்தியை அறிந்த கருப்பன், நத்தாலி, இசபெல்லா ஆகிய மூவரும், அவனுடன் தாங்களும் இணைந்துகொள்வதாகக் கூறுகின்றனர். அதன்படியே, அவர்கள் சென்னை வந்து, மகாபலிபுரம்வழியாக பாண்டிச்சேரி சென்று, செல்வகுமார் வீட்டில் தங்கி, சுற்றியுள்ள கிராமங்களையும், அங்குள்ள கலாச்சாரங்களையும் தெரிந்துகொண்டு, அவற்றிலிருந்து தங்களது வேர்களை (பூர்வீகத்தை) அறிந்துகொள்ளும் முயற்சியாக அமைதிருப்பதுதான், அரவிந் அப்பாதுரையின் 'திரு-பூர்வீக-சதிர்' என்னும் நாவல்.

கருப்பன் என்னும் பாத்திரத்தின்வழியாகவே கதை நகர்த்தப்படுகிறது. கருப்பனின் முன்னோர் யார், அவர்கள் எங்கு வாழ்ந்தார்கள், ஏன் புலம்பெயர்ந்தார்கள் என்பதுபற்றியதாக நாவலின் ஆரம்ப அத்தியாயங்கள் இருக்கின்றன. "என் மூதாதையர்கள் பறையர்கள். பறையர்கள் என்றால் ஒடுக்கப்பட்டவர்கள், தாழ்த்தப்பட்டவர்கள், அடிமைப்படுத்தப்பட்டவர்கள். ஆங்கிலேயரின் வருகைக்கு முன்பு, இந்தியாவில் குறிப்பாகத் தமிழகத்தில் விமோச்சனமே இல்லாமல் வாழ்ந்தவர்கள்" என்று கருப்பன் சொல்வதிலிருந்தே, புலம்பெயர்ந்தவர்களில் பெரும்பகுதியினர் தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவர்கள் என்பதை நாம் புரிந்துகொள்ளமுடிகிறது.

பறையர்களுக்குக் கல்வியும், வேலைவாய்ப்பும் வழங்கிய ஆங்கிலேயர்களே, அவர்களது புலம்பெயர்தலுக்கும் காரணமாக இருந்திருக்கின்றனர். மொரீஷியஸ் தீவில் பிறந்து , ஃப்ரான்ஸ் நாட்டில் வாழும் கருப்பன் . அவனது முன்னோர், பாண்டிச்சேரியிலிருந்து, கப்பலில் ஆட்டுமந்தைகளைப்போல, எவ்வித அடிப்படை வசதியும் இல்லாத சூழலில் வெளிநாடுகளுக்கு அழைத்துச்செல்லப்பட்ட வேதனையைப் பகிர்ந்துகொள்கிறான்.

ஆங்கிலேயர்களுக்கு, கங்காணி வேலைபார்த்தவர்களால், படிப்பறிவில்லாத பறையர்கள் ஏமாற்றப்பட்டு ரெயுனியன், மொரீஷியஸ், மத்தினிக், குவாதனூப், ஃபிஜி தீவுகளுக்கு அனுப்பபட்டனர். அப்படிச்சென்ற அழகான, கட்டுமஸ்தான உடலமைப்புக்கொண்ட பறையர் இன இளைஞர்கள், கரும்புத் தோட்டங்களிலும், சாலைகள் போடுவதுபோன்ற பணிகளிலும் மாடாக உழைத்திருக்கின்றனர். ஆண்கள் மட்டுமே அழைத்துச் செல்லப்பட்டிருக்கின்றனர். அவர்கள் கையெழுத்திட்ட ஒப்பந்தத்தில், அவர்கள் மீண்டும் தாயகம் திரும்பமுடியாது என்னும் நிபந்தனை இருந்ததைக் கங்காணி, அவர்களிடம் சொல்லாமல் மறைத்து சதிசெய்தது படிப்பறிவு இல்லாத அந்த அப்பாவிகளுக்குப் பின்னால்தான் தெரியவந்தது.

அப்படி கப்பலேறிச் சென்றவர்கள், மீண்டும் ஊர் திரும்பாத காரணத்தால் அவர்களுக்கு என்ன கதி நேர்ந்திருக்கும் என்பதைக்கூட அறியாதவர்களாக, அவர்கள் வீட்டுப்பெண்கள் இருந்திருக்கின்றனர். ஒருவேளை, கப்பல் நடுக்கடலில் கவிழ்ந்து அனைவரும் மரணம் அடைந்திருக்கலாம் என்னும் சந்தேகமும் அவர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது.

அதன் விளைவாக, பாண்டிச்சேரியைச் சுற்றியுள்ள கிராமங்களில், சேரிகளில் வசிக்கும் பெண்கள் ஒவ்வொரு திருக்கார்த்திகை நாளிலும், அம்மன்கோயில் முன்பாகக் கூடி ஒப்பாரி வைத்து அழுதிருக்கின்றனர். இறந்த ஒருவருக்காக அழுவது 'தனி ஒப்பாரி'. இறந்துபோனதாகக் கருதப்படும் பலரையும் நினைத்து அவர்களுக்காகப் பல பெண்கள் ஒன்றுகூடி அழுவது கூட்டு ஒப்பாரி. சீமைக்குப்போனவர்கள் திரும்பிவராத நிலையில், அவர்கள் இறந்துவிட்டதாகக் கருதி, திருக்கார்த்தியல் அன்று சேரிவாழ்ப்பெண்கள் அழும் கூட்டு ஒப்பாரியே, 'சீமை ஒப்பாரி'. என்கிற செய்திகளை நாவலில் இருந்து அறிந்துகொள்ள முடிகிறது. அது, நமக்குப் புதிய செய்தி மட்டுமல்ல, வலிமிகுந்ததும்கூட. ஈழப்போரில் காணாமல்போனவர்களை எண்ணி இன்றும் அழுது புலம்பிக்கொண்டிருக்கும் தாய்மார்களை நம் கண்முன் கொண்டுவந்து நிறுத்துகிறது, 'சீமை ஒப்பாரி'.

சில சீமை ஒப்பாரிப்பாடல்களும் பதிவுசெய்யப்பட்டுள்ளன.

"ஆலங்குப்பம் அரசங்குப்பம்
அல்லிக்குப்பம் நெல்லிக்குப்பம்
கோலோச்சி வாழ்ந்தவரே
கப்பலேறிப் போனீரே
காணாமே போனீரே;
சீமைக்குப் போனீரே
திரும்பிவர மறந்தீரே"
……
"கங்காணி சூழ்ச்சிப் பண்ணான்
காசு பணம் வாங்கிக்கிட்டு

வல்லரக்கன் வெள்ளைக்காரன்
நடுக்கடலில் விட்டானோ”

திரு-பூர்வீக-சதிர் என்னும் இந்த நாவலை அறிமுகம் செய்வதன்வழியே, அதனைப்படைத்த அரவிந் அப்பாதுரைபற்றியும் தமிழ் வசகர்களுக்கு அறிமுகம் செய்யவேண்டிய தேவை உள்ளது.

சென்னையில் பிறந்த அரவிந் அப்பாதுரை ஃப்ரான்ஸில் வசிக்கும் தமிழ் எழுத்தாளர். ஃபிரெஞ்சு மொழியிலும், ஆங்கிலத்திலும் இவரது படைப்புகள் வெளியாகியுள்ளன.

திரு-பூர்விக-சதிர் என்பதோடு, ஓவியத்தை மையமாக வைத்து திரு-சித்திர-சதிர், கடல்வழிப் புலம்பெயர்தலைக் கருவாகக்கொண்டு திரு-நீல-சதிர், நாடகம், கலைகளைக் கருவாகக்கொண்டு திரு-காலங்களின்-சதிர் என்பவற்றோடு மேலும் இரண்டு நாவல்களையும் எழுதியிருக்கிறார்.

மனதில் தோன்றும் கருத்துகளை சிலர் எப்போதும் பேசிக்கொண்டே இருப்பார்கள். அதனை’சலம்பல்’ என்று சொல்வது வழக்கம். அப்படி, ‘சலம்பகம்’ என்னும் தலைப்பில், கவித்துவமாகச் சில நூல்களையும் எழுதி வெளியிட்டிருக்கிறார்.

முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை, ஆசிரியரைப்பெரிதும் மன அளவில் பாதித்திருக்கிறது. அதன் காரணமாகத் தனது துயருறும் மனதைப் பல இடங்களிலும் வெளிப்படுத்துகிறார். சலம்பகத்தில்கூட, ‘சலம்பவும்’ செய்கிறார். “நம் நினைவுகளில் முள்ளிவாய்க்கால் மட்டும்தான் சுழலும், சுழன்றுகொண்டே இருக்கும்” (78; சலம்பகம்-4)

ஈழ்த்தில் போரை நிறுத்துவதற்கு எந்த ஒரு நாடும் முன்வரவில்லை என்னும் ஆதங்கமும் அவருக்கு இருந்திருக்கிறது. “முள்ளிவாய்க்கால் படுகொலை நடப்பதற்கு ஒரு மாதத்திற்கு முன்பிருந்தே, பாரீஸ் நகரத்தில், போரை நிறுத்த வலியுறுத்தி அன்றாடம் பேரணிகள் நடந்தன. ஈஃபில் டவருக்குப் பின்புறம் உள்ள அமைதித்திடலில் இரவுபகலாக பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் கூட்டமாக அமர்ந்திருந்தனர்.

பாரீஸ் நகரில் ஓர் அரசியல் நோக்குடன் 50 பேர் பேரணியாகப் போனாலே கட்டுரைகள் வெளியிடும் பத்திரிகைகள், பல்லாயிரக்கணக்கிலான தமிழ்மக்கள் தினமும் பேரணி போனதைப்பற்றி இரண்டுவாரங்கள் வரையிலும் ஒரு வரிகூட எழுதாமல் இருந்ததற்கான காரண காரியங்கள் விளங்காவிட்டாலும், பத்திரிகைகள் எல்லா உண்மைகளையும் எழுதிவிடுவதில்லை என்பது மட்டும் புரிகிறது”. என்கிற குற்றச்சாட்டு அனைத்து நாடுகளுக்குமே பொருந்தக்கூடியதாக இருக்கிறது.

விடுதலைப் புலிகள்மீது ஒருவிதமான ஈர்ப்பு இருந்திருக்கலாம் என்று எண்ணத்தோன்றுகிறது. விடுதலைப்புலிகளை நினைத்துப் பெருமைப்படுவதற்கான காரணங்கள் நிறைய உள்ளன என்று சொல்லும் அரவிந் அப்பாதுரை, சிலவற்றைப் பட்டியலிடவும் செய்கிறார். அதே வேளையில், அரசியல் தத்துவம் இல்லாதிருந்ததையும்,




உண்மையான நண்பர்கள் இல்லாதிருந்ததையும், புலிகளின் முக்கியக் குறைகளாகச் சுட்டிக்காட்டவும் தவறவில்லை. “தமிழகத்தின் அரசியல் தலைவர்கள் யாருமே புலிகளுக்கு நண்பர்களாக இருந்ததில்லை, குறிப்பாக புலிகளின் புகழ்பாடும் அரசியல் தலைவர்கள் என்று சொல்கிறார்” (18; சலம்பகம்-4) அரவிந் அப்பாதுறையின் தமிழ்மொழிப்பற்று, இனப்பற்று, சமூக அக்கறை ஆகியவற்றை வெளிப்படுத்தும் கருத்துகளும், நாவல் முழுவதும் பரவலாகக் காணக்கிடைக்கிறது

“ஆசிரியரின் வெளிப்பாட்டுமுறை எளிமையானது. வாசிப்புச் சிரமம் தராமலே நுணுக்கங்களை நோக்கி வாசகர்களை அழைத்துச்செல்லும் இவரது எழுத்துமுறை சுவாரசியம் தரக்கூடியதாகவும் விளங்குகிறது.” என்னும் பிரபஞ்சனின் கூற்று மிகையல்ல, உண்மை என்பது இவரது படைப்புகளை வாசிக்கும்போது நமக்கும் புரிகிறது. .

ஒரு நாவலை, அதன் பாத்திரங்களே தீர்மானிக்கின்றன என்று பல படைப்பாளிகள் கூறுவதுண்டு. ஆனால், அரவிந் அப்பாதுரையின் நாவல்களை நான் வாசித்த அளவில், அவரே திட்டமிட்டு, தெளிவாகக் கதையை நகர்த்திச் செல்கிறார். நாவலுக்கு தேவையானவை தவிர தேவையற்ற பாத்திரங்களுக்கு நாவலில் இடம் இல்லை. இட்டு நிரப்பும் வேலையும் இல்லை. எப்படி ஆரம்பிப்பது, எவற்றையெல்லாம் சொல்வது, எங்கே எப்படி முடிப்பது என்பனவற்றை முன்கூட்டியே திட்டமிட்டு செயல்படுத்துகிறார் என்பதால், கதை சொல்லலில் எவ்விதக் குழப்பமும் ஏற்படுவதில்லை என்பதே எனது அவதானிப்பு. அதன் காரணமாக, தேவையற்ற நிகழ்வுகள், உரையாடல்களைத் தவிர்க்கமுடிகிறது. சுருக்கமாகச் சொன்னால், நாவல் படைப்பாளியின் கட்டுப்பாட்டில்தான் நகர்கிறது.

**நூல் விபரம்:**

முதல் பதிப்பு : நவம்பர் 2011

பாலம் பதிப்பகம், (பி) லிட்,
அபிராமி அப்பார்ட்மென்ட்ஸ்,
3-வது பிரதான சாலை, தண்டீஸ்வரர் நகர்,
வேளச்சேரி, சென்னை- 600 042

பக்கம்: 204 விலை: ரூ. 150

கட்டுரை

இரா.மோகன்ராஜன்
mohanrajan.r@gmail.com

# முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்...

புதிதாக முதல்வர் பதவியேற்றுக் கொண்டிருக்கும் ஸ்டாலின் அவர்களுக்கு வாழ்த்துகள். மிகுந்த நெருக்கடியானக் காலக்கட்டத்தில் அவர் இந்த பொறுப்புக்கு வந்திருக்கிறார். கடந்த காலங்களில் மேயராக, உள்துறை அமைச்சராகத் துணை முதல்வராகப் பணியாற்றிய அனுபவம் அவருக்கு இருக்கிறது. மேலும் இளம் வயதியிலிருந்தே தனது தந்தையின் ஆளுமையின் கீழ் வளர்ந்து அரசியல் பயிற்சிப் பெற்றவர் என்பது கூடுதல் தகுதியைத் தருகிறது. இது யாதொருவருக்கும் கிட்டாத ஒன்று. முன்னாள் முதல்வர், அவரது மகன் என்ற தகுதியைவிட இது இன்னும் ஆழமானப் பொருள் தரக்கூடியது. அந்த அனுபவமும், அறிவும், ஆழமும், பயிற்சியும் அவருக்கு இந்த இடத்தைப் பெற்றுத் தந்திருக்கிறது என்றே கூறலாம்.

இந்திராகாந்தி கொண்டுவந்த நெருக்கடிகால நிலை கருணாநிதியின் மகன் என்பதாலேயே அவரைச் சிறையில் தள்ளியது என்றால், சிறைத் தண்டனை, வலி, வாதைகளை எதிர் கொண்டு தாண்டி வெளியே வருவதற்கு, மீண்டு வருவதற்கு சிறந்த தொண்டராக அவர் இருந்தது ஆகப்பெரிய காரணம். சிட்டிபாபு போன்ற சிலர் காவல்துறையின் அடக்குமுறைக்கு ஆளாகி சிறையிலேயே மரணமடைந்தனர். ஸ்டாலின், மரணத்துக்கு நெருக்கமாகச் சென்று திரும்பினார். அடக்குமுறைகளைக் கலங்காமல் எதிர் கொண்டார். தனது ஆளுமைக்கு அவர் இவற்றையெல்லாம் உரமாக்கிக் கொண்டு வளர்ந்துள்ளார்.

ஜெயலலிதாக முதல்வராக இருந்தக் காலங்களில் எதிர்கட்சித் தலைவராக இருந்தார். எதிர்கட்சியாக இருப்பது என்பது எதிரிக் கட்சியாக இருப்பதென்ற காலம் அது. அதை துணிவுடனும், பொறுமையுடனும் எதிர் கொண்டார். திமுகவினரை ஜெயலலிதா அரசியலுக்கு அப்பாலும் பழி வாங்கிய காலம். முதல்வராக அவர் இருந்தாலும் ஸ்டாலினிடம் அவர் சட்டசபை காலம் முழுவதும் தோற்றுக்கொண்டுதான் இருந்தார்.

கருணாநிதி முதன்முறையாக பதவியேற்ற காலத்தில் இருந்த எழுச்சி, அலை என்பன எதுவுமில்லாத காலமாக ஸ்டாலினுக்கு இந்த தேர்தல் இருந்துவிட்டது. ஆனால் என்றைக்குமில்லாத நெருக்கடி மிகுந்த காலத்தில் அவர் தெரிவு செய்யப்பட்டிருப்பது தமிழகம் இதுவரை சந்தித்திராத ஒன்று. தகுதி பார்த்தே மக்கள் பதவியை அவரிடம் ஒப்படைத்திருப்பதாகச் சொல்லலாம்.

சட்டசபை உறுப்பினர்களாகப் புதிதாகப் பதவியேற்றுக் கொண்டவர்களில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ‘முத்துவேல்கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்’ என்றும் உளமாற உறுதியேற்கிறேன் என்றும் பதவியேற்றுக் கொண்டார். அவரது கட்சியினரும் அவ்வாறே ஏற்றனர். ஆனால் அதிமுகவினர் கடவுளறிய என்ற சொல்லைப் பயன்படுத்தினர். கடவுள் என்ற சொல்லைப் பயன்படுத்தினர். அதிமுக எதிர் திமுக என்பது கடவுள் எதிர் உளமார என்று மாறிக் கொண்டுள்ளது. அரசியல் என்றால் எல்லாமே அரசியல்தாம். இன்றைக்கு கடவுள் என்ற சொல் ஆன்மிகம் என்பதிலிருந்து அரசியலுக்கு நகர்ந்து வெகுகாலமாகிற்று. கடவுளையும், ஆன்மிகத்தையும் அரசியலாக்கியவர்களின் ஆட்சி நடுவணரசில் கோலோச்சுகிறது. எனவே பெரியார் வழி வந்த திராவிடக் கட்சியிலொன்று கடவுளறிய என்று சொல்வதிலுள்ள கால முரண் நகைமுரண் மட்டுமல்ல சிந்திப்பிற்குமுரியது.

பெரியாரியத்தின் நீர்த்துப் போன வடிவம் என்று அதிமுகவை திருமா சொல்வது அதனால்தான். அதேசமயம் ஸ்டாலின் விளிப்பில் உளமாற என்பது மனச்சான்றைக் குறிக்கிறது. மனச்சான்று என்பது மனிதன் சுயநினைவுடன் செய்யும் செயலுக்கு முழுமையாகப் பொறுப்பேற்பதாகும். கடவுளிடம் தமது தவறுகளை, செயற்பாடுகளைத் தூக்கிப் போட்டுவிட்டுப் போவதற்கும் தாமே தமது செயற்பாடுகளுக்கு பொறுப்பேற்பதற்குமான இடைவெளியைப் புரிந்து கொள்ள முடியும்.



அதிமுகவினர் தமது செயலுக்கு ஆண்டவனையும், ஸ்டாலின் தமது செயலுக்கு தம்மையுமே பொறுப்பாக்கிக் கொள்பவர்களாக இருக்கிறார்கள்.

கூட்டணிக் கட்சியான காங்கிரசுக்கு பதவியேற்பில் தேசியம் சார்ந்த ஆன்மிக் கடவுள் இருக்கலாம். அவர்கள் குறிப்பிட்டது அதிமுக குறிப்பிட்ட அதே கடவுளா, அதே பொருளிலானதா என்பதை அவர்கள்தாம் விளக்க வேண்டும். முத்துவேல்கருணாநிதி என்று ஸ்டாலின் குறிப்பிட்டது அவர்களது முன்னோர் என்பதனால் மட்டுமே அல்ல. அதற்கென்ற சமூக நீதி வரலாறு தமிழகத்திற்கு உண்டு. அந்தப் பெயரிலும் உண்டு. எனவேதான் அவர் அந்த வரலாற்றைச் சுட்டிக் காட்டும் வகையில் தமது பதவியேற்பில் அப்படிச் சொன்னார். அதற்கானப் பொருள் ஆழமானது. ஆனால் அவரது கட்சியைச் சேர்ந்த டி.ஆர்.பி.ராஜா பதவியேற்பின் போது குறிப்பிட்டதற்கான சமூக நீதி வரலாறு குறித்து அவர்தான் சொல்லியாக வேண்டும். திமுகவும்தான்.

மக்கள் இன்றைக்கு ஸ்டாலினுக்குச் சூடியிருப்பது என்னவோ மலர் மகுடம்தான். ஆனால் அது முள்மகுடமாகவே இன்றைய நிலையில் இருக்கிறது. உலகெங்கும் கொரோனாப் பெருந்தொற்றில் சிக்கித் தவித்துக் கொண்டிருக்கிறது. வட இந்தியா தகன மேடையாக எரிந்து கொண்டிருக்கத் தமிழகத்திலும் கொரோனா இண்டாவது அலைத் தொடங்கியுள்ளது. தினசரி தொற்று விகிதமும், பலி எண்ணிக்கையும் கூடிக்கொண்டு செல்கிறது. இதை எதிர் கொள்ள வேண்டியப் பெருஞ்சுமை புதிய முதல்வருக்கு இருக்கிறது. இருக்கும்.

.பெருந்தொற்றின் இரண்டாவது அலை வேகமாகப் பரவியதற்கு காரணமே தேர்தல்கமிசன் தான் என்று நீதிமன்றம் குற்றம் சாட்டுகிறது. தேர்தல் பரப்புரையின் போது சமூக இடைவெளியைச் சரியாகப் பின்பற்றாமல் மக்கள் திரண்டிருந்ததைக் கமிசன் கட்டுப்படுத்தத் தவறியதற்காகக் ‘கொலையாளிகள்’ என்று சொல்லாம் என்கிறது தேர்தல் கமிசனை அது.

இரண்டாவது அலையில் கொத்துக் கொத்தாக மனிதர்கள் செத்து வீழந்து கொண்டிருக்க, இப்போது மூன்றாவது அலை குறித்து நடுவணரசின் மருத்துவத்துடன் தொடர்புடைய அலுவலகங்கள் எச்சரிக்கின்றன. பசுப் புனிதம் பற்றிப் பேசிக் கொண்டே தும்பை விட்டுவிட்டார்கள் ஆளும் பாஜகவினர். கும்பமேளாவை நடத்தி பெருந்தொற்றுக்கு விழா எடுத்துவிட்டு நீராடியது போதும் கரையேறுங்கள் என்கிறார் மோடி. ஆயிரக்கணக்கானச் சாதுக்கள் ஆடைக்குத்தான் முக்கியத்துவம் அளிக்கவில்லை, தனிநபர் இடைவெளிக்கும், முகக்கவசத்திற்குமாவது அதைச் செய்திருக்கலாம். பொறுப்பற்ற சாமியார்களும், பொறுப்பற்ற நடுவணரசும் பெருமதக் கலாசராம் என்கிற பெயரில் கொள்ளை நோயை கங்கை வெள்ளத்தைப் போல திறந்துவிட்டுள்ளனர்.

ஆனால் தமிழகத்தில் பெருமதக் கலாசாரம் ஒரு பெருந்தொற்றைப் போல தீவிரமாகப் பீடிக்கவில்லை. அதற்கு ஆகப்பெரிய காரணம் பெரியார். சொம்பு நீரே கங்கை நீரென்று நீராடிக் கொள்ளும் மனநிலை இங்குண்டு. கள்ளழகர் அதனால்தான் அவ்வளவு பெரிய வைகையையும் விட்டுவிட்டு ஓடையில் இறங்குவது போல செயற்கையான சிறு குட்டையில் இறங்கினார்.

அடுத்தது பெரியார். எது ஆன்மிகம் என்ற அவரது வரையரை மக்களை பெருந்தொற்றிலிருந்து காப்பாற்றியிருக்கிறது. கலாசராம் சார்ந்த ஒன்று கூடலை அது முக்கியத்துவமிழக்கச் செய்திருக்கிறது. திராவிட மண் பெருந்தொற்றை எதிர்கொள்வது இப்படித்தான். அடுத்தது அமெரிக்க மருத்துவர்களே பாராட்டும் மருத்துவ உள்கட்டமைப்பு. வெள்ளையர் ஆட்சிக் காலத்திலிருந்து அந்த கட்டமைப்பு ஒழுங்கு முறையாகப் பேணப்பட்டுவருவதாகும். வட இந்தியாவில் பெரியாரும் இல்லை. மருத்துவக் கட்டமைப்புமில்லை.

பெருந்தொற்றுடன் சேர்த்து இப்போது பெரும்பிளவரசியலை, பெரும் வெறுப்பரசியலை, பெருமத அரசியலை தென்பகுதியிலும் பரப்பிக்

கொண்டுள்ளனர். ஏககாலத்தில் பிளவு அரசியல் வேகமாக இத் தேர்தல்காலத்தில் பரவியதையும் சேர்த்துக் கொள்ளலாம். பெருந்தொற்றையும், பெரும் பிளவரசியலையும் எதிர்கொள்ள ஸ்டாலினால் முடியும் என்று மக்கள் நம்பிக்கையின் வெளிப்பாட்டை அவர் நிறைவேற்றித் தரவேண்டியவராக இருக்கிறார்.

வடமாநிலங்களில் சிறுபான்மையினர், பழங்குடியினர், மீனவர்கள், உழவர்கள் போன்றோருக்கு எதிராக பிளவு அரசியல் செய்து பெருமதவாதம் பேசி, வன்முறை செய்து ஆட்சி அமைத்துக் கொண்டிருக்கும் பாசக கடந்த 5 ஆண்டுகளில் ஆட்சியை தக்க வைத்துக் கொள்ளவும் அதே நடைமுறையைக் கையாண்டு கொண்டிருந்ததில் பெருந்தொற்று குறித்தப் பெரும் அலட்சியத்துடன் இருந்ததே இன்றைக்கு பிரதமர் மோடி முன்பு ஆட்சி செய்த தனது சொந்த மாநிலமான குசராத் தொடங்கி பீகார், உத்திரபிரதேசம், தில்லி என மக்கள் ஆயிரக்கணக்கில் பெருந்தொற்றில் வீழ்ந்து கொண்டிருப்பதாகும். ஆட்சி நலனுக்கு முன்னுரிமை தந்து மக்கள் நலனைப் பின்னுக்குத் தள்ளியதன் அசிங்கமான, துயரமான அரசியல் வெளிப்பாடே இந்த பெருந்தொற்றுப் படுகொலைகளாகும்.

பெருந்தொற்று உடனடியான சவால் என்றால், பாஜக எனும் பிளவு அரசியல், வெறுப்பரசியல், மதவாத அரசியல் என்ற நீண்ட காலத் தொற்றை சமாளிக்க வேண்டியவராக ஸ்டாலின் இருக்கிறார். பெருந்தொற்றுப் பரவிக் கொண்டிருந்த காலத்திலேயே சம அளவில் நீண்டகாலத் தொற்றின் அறிகுறிகளும் தோன்றத் தொடங்கிவிட்டன.

இம்முறை நடந்த தேர்தலில் அய்ந்து முனைப் போட்டி என்று சொல்லப்பட்டாலும் சமூகநீதியா, மனுநீதியா என்பதாகத்தான் இருந்தது. இந்த இருமுனைப் போட்டியில் இன்றைக்கு சமூக நீதி வென்றிருக்கிறது. பொதுச் சமூகம் வென்றிருக்கிறது. பெரியார், அண்ணா, கருணாநிதி, ஸ்டாலின் வென்றிருக்கிறார்கள்.

ஆனால் முதன் முறையாக பிளவு அரசியலும் சட்டசபைக்குள் நுழைகிறது என்பதை அதைப் புதியவரான ஸ்டாலின் எதிர் கொள்ள வேண்டியிருக்கும் என்பதையும் அறியத்தான் வேண்டியிருக்கிறது. பாஜக ஆட்சியில் இல்லாத மாநிலங்களில் என்ன நடக்கிறது என்பதை ஏக காலத்தில் பார்த்துக் கொண்டிருக்கிறோம். புதுவையில் என்.ஆர்.காங்கிரசு ஆட்சியமைக்கும் வலுவில்லை என்றாலும், தாங்கள்தாம் முதல்வரை முடிவு செய்வோம் என்று பாஜக சொல்லிவருகிறது. தமிழ்நாட்டிலும் பிரதான எதிர்கட்சியாக அதிமுக இருந்தாலும், தாங்கள்தாம் தமிழகத்தின் எதிர்கட்சியிரையும் முடிவு செய்வோம் என்று ஆணவத்துடன் அவர்கள் பேசிக்கொண்டிருக்கிறார்கள். அதிமுகவின் ஆட்சியையும் அவர்கள் தாம் முடிவு செய்தார்கள் இப்போது அதிமுக எதிர்வரிசையில் இருந்தாலும் அதன் போக்கையும், திசையையும் அவர்கள்தாம் முடிவு செய்வதாக இருக்கும்.

தில்லியில் முறையான உயிர் வளி உருளைகள் வழங்கப்படாமல் மாநில அரசை பதட்டத்திலும், முடக்கத்திலும் வைத்துக் கொண்டு வேடிக்கை பார்க்கிறது மோடி அரசு. மக்கள் வீதியில் உருளைகளைப் பெறுவதற்கு வரிசையில் நிற்பதும், மருத்துவமனைகளில் இடமின்றி கிடைக்குமிடங்களில் உயிர்வளியுடன் படுத்து சிகிச்சை பெறுவதையும் பார்க்க சகிக்கவில்லை. தில்லியின் பூங்காகக்கள் தொடங்கி சாலையோரங்கள், திடல்கள் என எல்லாமும் தகன மேடைகளாக்கப்பட்டு உடலங்கள் எரியூட்டப்படுவதும், அதற்காக பல மணிநேரங்கள் உறவினர்கள் காத்திருப்பதும் வரலாறு காணாத துயரங்களாகும். நீதி மன்றம் தலையிட்டு தில்லிக்கு உடனடியாக உயிர்வளி வழங்க வேண்டும் என்று மோடி அரசை எச்சரித்துக் கொண்டுள்ளது உச்சநீதி மன்றம்.

பெருந்தொற்றிலும் அரசியல்செய்யும் பாஜக அரசு, தமது அரசியல் பழிவாங்கலுக்கும் பெருந்தொற்றை ஓர் ஆயுதமாகப் பயன்படுத்துவதைத்தான் தில்லி எரிவது காட்டுகிறது. தமிழகத்திலும் அவ்வப்போது மருத்துவமனைகளில் இடமில்லை. உயிர்வளி தட்டுப்பாடு, ரெம்டெசிவர் மருத்து தட்டுப்பாடு என்று வரும் செய்திகள் தில்லியுடன் இணைத்துப்பார்த்து யோசித்துக் கொள்ள வேண்டியிருக்கிறது.

திமுக பெரும்பான்மைப் பலத்துடன் ஆட்சியைப் பிடிக்கப்போகிறது என்று கருத்துக் கணிப்புக்கள் வெளியாகிக் கொண்டிருந்த காலத்தில், வேண்டுமென்றே உயிர்வளி தட்டுப்பாட்டைக் காரணம் காட்டி செயற்கையான ஒரு நெருக்கடியை உருவாக்கி ஸ்டெர்லைட் ஆலையைத் திறக்கவைத்து அதற்கு திமுகவின் இசைவைப் பெற்றுக் கொண்டதானது ஓர் அரசியல் உத்தி என்றுதான் கருத வேண்டியிருக்கிறது. எதிர்காலத்தில் ஸ்டெர்லைட் ஆலை ஸ்டாலினுக்கு செக் வைக்கும் ஓர் சதுரங்கக் காயாக மாறக்கூடும்.

கடந்த 7 ஆம் திகதி எளிமையாக நடந்த பதவியேற்பு விழாவினை அடுத்து தலைமைச் செயலகத்தில் அவர் உடனடியாக கைச்சாதிட்ட 5 அவசர உடனடித்திட்டங்கள் முக்கியமானவையாகும். பெருந்தொற்று கால பொருளாதாரச் சுமையைக் குறைக்கும் விதத்தில், பொதுமக்களுக்கான பேரிடர் உதவித் தொகை இரண்டாயிரம் வழங்குவதற்காக தனது முதல் கைச்சாத்தினை இட்டார் முதல்வர் ஸ்டாலின். மக்களுக்கு 2 தவணைகளாக அவை பொதுவிநியோகத் துறை வழியாக வழங்கப்பட இருக்கிறது.

ஆவின் பால் விலை குறைப்பு,

கோரிக்கை மனுக்கள் மீது 100 நாட்களில் தீர்வு

நகரப் பேருந்துகளில் மகளிருக்கு கட்டணமில்லாப் பயணம்,

'உங்கள் தொகுதியில் முதலமைச்சர்' என்ற முறை தீர் மன்றங்களுக்கு தனித்துறை.

தனியார் மருத்துவமனைகளில் பெருந்தொற்றுக்குச் சிகிச்சைப் பெறுவோரைக் காப்பீடுத் திட்டத்தின் கீழ் கொண்டுவருவது.



**“பொய்யுரையேோ, புகழுரையே நான் கேட்கவிரும்பவில்லை. அதிகாரிகள் உள்ளதை உள்ளபடி முன்வைத்து தமது பிரச்சனைகளை சந்திக்க வேண்டும். மக்களின் வாழ்வாதாரம், வாழ்க்கையை பாதுகாக்க வேண்டிய பொறுப்பு உள்ளது” என்ற ஸ்டாலினின் வேண்டுகோள் கவனிக்கத்தக்கது.**

திமுக அரசுத் தமது வாக்குறுதிகளில் அவசரகால, அல்லது அத்தியவாசியத் திட்டங்களுக்கு முன்னுரிமை கொடுப்பதன் வழி இவை கொண்டு வரப்பட்டிருப்பதாகக் கருதலாம்.

அண்ணா அமைச்சரவையில் பொதுப்பணித்துறையில் இருந்த கருணாநிதிதான் அரசுப் பேருந்துகளை நாட்டுடமையாக்கினார். எனவே பொதுத்துறை நிறுவனங்களை தனியார் மயமாக்கும் நடுவணரசின் பேரழிவுக் கொள்(கை) ளைகளுக்கு மாற்றாக தனியார் மயமாதலைத் தடுப்பதன் வழி, அரசுடைமை ஆக்குவதன் வழி பொதுமக்களின் பொதுத்துறைகளின் அரசாக சிறந்த நிர்வாகங்களின் அரசாக மாற்றி அமைக்க முடியும். மதவாத, தனியார் மய நடுவணரசை இப்படித்தான் புதிய முதல்வர் எதிர் கொள்ள வேண்டியிருக்கும். வேண்டும்.

இறையன்பு இ,ஆ.ப., உதயச்சந்திரன் இ.ஆ.ப. போன்ற அரசுத் துறை அதிகாரிகளை ஸ்டாலின் முக்கியமான பொறுப்பிற்குள் கொண்டு வந்திருப்பதைப் பார்க்கும் போது தனது தந்தையைப் போன்று சிறந்த நிர்வாகத்தினைத் தரவேண்டும் என்ற அவரது எண்ணவோட்டத்தை அறியக்கூடியதாக இருக்கிறது. இவ்வதிகாரிகள் ஆட்சித்துறை சார்ந்தவர்கள் என்பதைக் கடந்து படைப்பாளுமையும், நிர்வாகத்திறனும் கொண்டவர்கள் என்பதுடன் அரிதானப் பொதுமக்கள் செல்வாக்கினைப் பெற்றவர்களாகவுமிருக்கிறார்கள். இறையன்பு அவர்கள், தமது எந்த ஒரு நூலையும் அரசு தொடர்பான அலுவலகங்களில் கட்டயாப்படுத்தி வாங்கச் செய்யவோ, வழங்குவதோ தாம் பதவியில் இருக்கும் வரை கூடாது என ஜால்ரா தட்டும் அதிகாரிகளுக்கும், அலுவலர்களுக்கும் வேண்டுகோள் விடுத்துக் கொண்டுள்ளார். அரசு அலுவலகங்களின் காக்காய்ப் பிடிக்கும் போக்கை இதைவிட நாசுக்காகச் சொல்லிவிட முடியாது. அதன் பின்னிருக்கும் அரசியல் எத்தனை அவலமானது என்பதையே இறையன்புவின் வேண்டுகோள் சொல்கிறது. மேலும் கடந்த காலங்களில் இம்மாதிரியான அதிகாரிகளின் நிர்வாகத்திறன் எந்த அளவு பயன்படுத்திக் கொள்ளப்பட்டது, அல்லது மறுக்கப்பட்டது என்பதையும் நினைத்துப் பார்த்துக் கொள்ளத்தான் வேண்டியிருக்கிறது. சிறந்த அதிகாரிகள் தடுக்கப்படுவது சிறந்த தமிழகத்தின் முன்னேற்றத்தைத் தடுப்பதாகும். சிறந்த முன்னேற்றத்தைத் தடுப்பவர்கள் சிறந்த ஆட்சியைத் தர இயலாது என்பதே மெய்மையாகும்.

“பொய்யுரையேோ, புகழுரையே நான் கேட்கவிரும்பவில்லை. அதிகாரிகள் உள்ளதை உள்ளபடி முன்வைத்து தமது பிரச்சனைகளை சந்திக்க வேண்டும். மக்களின் வாழ்வாதாரம், வாழ்க்கையை பாதுகாக்க வேண்டிய பொறுப்பு உள்ளது” என்று ஸ்டாலினின் வேண்டுகோள் கவனிக்கத்தக்கது. ‘இடிப்பாரே இல்லா மன்னனுக்கு கெடுப்பார் இல்லாமலேயே நாடு கெடும்’ என்ற வள்ளுவனின் அறவுரையின் நவீன வடிவமாகவே ஸ்டாலினின் எச்சரிக்கை அமைந்து கொண்டுள்ளது. புகழுரை மட்டுமே தம்மையும், நாட்டையும் வளர்த்துவிடும் என்று கருதும் மோடி மஸ்தான்களிடையே ஸ்டாலினின் இந்த கவனமான அணுகுமுறை சிறந்த ஆட்சிக்கு உதவுவதாக இருக்கும்.

கேரளாவில், பெருந்தொற்றை மிகத் திறமையாக எதிர்கொண்டதாலேயே பினராயி விஜயனை அம்மக்கள் அங்கு மீண்டும் தெரிவு செய்து கொண்டுள்ளார்கள். ஒரு முறை மட்டுமே ஆட்சிக்கு வாய்ப்பளிக்கும் மக்கள் விஜயனை மீண்டும் தெரிவு செய்திருப்பது அவரது நிர்வாகத் திறனுக்கு சான்றாகும். அதுபோல மேற்கு வங்கத்தில் தனிப்பெரும்பான்மைப் பெற்று ஆட்சியமைத்ததற்கு மம்தாபானர்ஜி மதவாதத்தினை வெற்றிகரமாக முறியடித்ததற்குக் கிடைத்த வாய்ப்பாகும். தற்போது மாட்டிறைச்சி வைத்திருப்போர் மீது தாக்குதல் நடத்தப்பட்டால் ஆயுள் தண்டனை என்று அறிவித்திருப்பது பிளவு அரசியல் செய்வோருக்கு அங்கு சம்மட்டி அடியாக விழுந்திருக்கிறது.

ஸ்டாலின், மம்தா, விஜயன் போன்றோரது வெற்றியானது பெருந்தொற்றினுள் மறைத்து மதவாத, வெறுப்பரசியலை வளர்ப்பவர்களுக்கு எதிராக மக்கள் அளித்த தெளிவானப் பதிலாகும்.

பிரதமர் மோடியின் சொந்தத் தொகுதியான வாரணாசியில் பலகோடி மதிப்பிலான படேல் சிலைப் பார்த்துக் கொண்டிருக்க அதைச் சுற்றி புதிய புதிய இடுகாடுகள் முளைத்துக் கொண்டிருக்கிறது. காய்ச்சலுக்கான மாத்திரைகளுக்குத் தட்டுப்பாடு நிலவுகிறது. படேலுக்கு கொடுக்கும் முக்கியத்துவத்தை மாத்திரைகளுக்கு கொடுக்கத் தவறுகிறது பாஜக அரசு.

நமக்கும் வானளாவிய திருவள்ளுவர் சிலை இருக்கிறது. வெறும் சிலையாக அது இல்லை.

தெற்கின் அறம் சார் வாழ்வியலையும் அதற்கூடாக இயங்கும் அறத்தின்பாற்பட்ட அரசியலையும் விளக்கி நிற்கிறது. 'மக்கள் அழும் கண்ணீர் படையாக மாறும்' என்று சொல்லி நிற்கிறது. அச்சுறுத்தி நிற்கிறது. நமக்கு காய்ச்சல் மாத்திரைகளும் தேவை. வள்ளுவரும் தேவை.

வடமுகத்து முனையில் முனை முகத்துப் பெரியார் சிலையொன்றும் தற்போது தேவையென்றே தோன்றுகிறது. இஃது அரசியற் செயற்பாடல்ல அறச் செயற்பாடே. மிடிமையும், மூடநம்பிக்கைகளையும் களைவதற்கு வானுயர் பெரியார் சிலை தேவைபடத்தான் செய்கிறது. படேல் சிலைக்கும் பெரியார் சிலைக்குமிடையேயான மவுனமான இடைவெளியின் புரிதலோடு இவற்றை ஏற்கலாம். பெரியார் சிலை, தொற்றை தடுக்கிறதோ இல்லையோ.. பிளவரசியலை அது நிரந்தரமாகத் தடுக்கக்கூடும்.

தமிழகம், கேரளம், வங்கம் போன்றவற்றின் வெற்றி என்பன பிளவு அரசியலுக்கும், பெருந்தொற்றின் பேரிடரை எதிர்கொள்வதற்குமான மக்கள் ஆணையென்றே கருத இடமுண்டு. மத அரசியலும், வெறுப்பரசியலும், பிளவரசியலுமே பெருந்தொற்றில் வட இந்தியா எரிவதற்கு காரணம் என்பதை அவர்கள் தெளிவாக உணர்ந்திருக்கிறார்கள்.

தமிழகத்தைப் பொருத்த வரை நவீன அறிவியல் மற்றும் அறவழி செயற்பாடே இப்போதையத் தேவையாகும். எனவே அவ்வாறான அணுகுமுறையை ஸ்டாலின் மேற்கொள்ள வேண்டியவராக இருக்கிறார். இனி மக்களுக்கு சரியானவற்றைச் செய்பவரே ஆட்சிக்கு வர முடியும் என்ற நெருக்கடியை மக்கள் ஏற்படுத்தியிருக்கிறார்கள். கடந்த கால ஆட்சிகளின் குளறுபடிகள், நிர்வாக அலட்சியம் என்பன திமுக வுக்கு வாய்ப்பைத் தந்திருக்கிறது.. அதற்கேற்றாற் போல 'நல்ல ஆட்சியைத் தருவதே எனது இலக்கு' என்று முதல்வர் சொல்லியிருப்பதைப் பார்க்க வேண்டும்.

அதற்கான நகர்வுகளும், அறிகுறிகளும் தெரியத் தொடங்கியிருக்கின்றன. 10 நாள் ஊரடங்கைக் கவனமாகக் கையாளத் தொடங்கியிருக்கிறார்கள். கொரோனா தொற்றை எதிர் கொள்ள இன்னும் தீவிரமான நடவடிக்கைகள் விரைந்து எடுக்கப்படும் அவசர அவசியம் இருக்கிறது. தற்காலிக செவிலியர்களுக்கு நிரந்தரப் பணியாணை வழங்கப்பட்டிருப்பது நல்ல எடுத்துக்காட்டாகும். அத்தியாவசியப் பொருட்களில் மதுக்கடையும் ஒன்றுபோல கடந்த காலங்களில் திறக்கப்பட்டிருந்தது போலல்லாமல் இந்த ஊரடங்கு காலத்தில் மூடப்பட்டிருப்பது வரவேற்கக் கூடிய ஒன்றாகும் குறைந்த பட்சம் அரசு தரும் உதவிப் பணம் அங்கு சென்று சேராமல் தடுப்பதற்கு உதவக்கூடும்.

அதிமுக ஆட்சியின் மீதான கடந்த கால வெறுப்பில் அம்மா உணவக ஊழியர்களை அச்சுறுத்திப் பெயர்ப் பலகைகளை உடைத்தெறிந்த திமுகவின் ஆவேசத் தொண்டர்கள் மீது உடனடியாக நடவடிக்கை எடுத்து அவர்களை அடிப்படை உறுப்பினரிலிருந்து நீக்கியிருப்பது போன்ற துரிதமான செயற்பாடுகள் தேவைபடவே செய்கின்றன. தவறு செய்தால் அதற்கான பலன் சொந்தக் கட்சியைச் சேர்ந்தவரென்றாலும் அதற்கானத் தண்டனையை அவர்கள் பெற்றாக வேண்டும். அல்லது அப்படியான அச்சம் இருக்க வேண்டும். இந்த நடவடிக்கை கடந்த காலத்தில் பிரியாணி கிடைக்கவில்லை என்று உணவகம் ஒன்றின் ஊழியர்களைத் திமுகவினர் தாக்கியதற்கான அவப்பெயரை இது நீக்கக்கூடும். சரி செய்யக்கூடும். சென்ற ஆட்சியின் அம்மா உணவகம் தொடர்வதற்கும், அதை ஊரடங்குக் காலங்களில் திறக்க அனுமதித்திருப்பதற்கும் நல்லதொரு முடிவு மட்டுமல்ல மக்கள் நலன் சார்ந்த சேவைத் துறைகளை அப்படியே தொடர்வதற்கான நல் வாய்ப்பாக அமையும். அமையக்கூடும்.

திமுக என்பது தனிப்பெரும்பான்மை பெற்ற கட்சியாக இருக்கலாம். ஆனால் கூட்டணியினரின், கூட்டணியின் கொள்கைகளையும் உள்வாங்கிக் கொண்ட அரசாக ஸ்டாலின் அரசு செயற்பட வேண்டும். அதற்கும் சேர்த்துதான் மக்கள் வாக்களித்திருக்கிறார்கள். கூட்டணிக் கட்சிகளின் மக்கள்சார் கொள்கைகளையும் அவர் நிறைவேற்றித்தர வேண்டும்.

அமைச்சகங்கள் செயற்படத் தொடங்கியிருக்கின்றன. அமைச்சர்கள் ஊடகங்களைச் சந்திக்கத் தொடங்கியிருக்கின்றனர். விரைந்த அறிவிப்புகளில் ஒன்றாகத் தமிழகத்தில் நடுவணரசின் கல்விக் கொள்(ளை)யை நுழைய விடமாட்டோம் என்று உயர்க் கல்வித்துறை அமைச்சர் கறாராக அறித்திருக்கிறார். இது சென்ற ஆட்சியில் பார்க்க இயலாத ஒன்றாகும். ஊர்ந்து செல்வதற்கும், நிமிர்ந்து நிற்பதற்குமான இடைவெளியை இந்த அறிவிப்பு உணர்த்துவதாக இருக்கிறது.

காவல்துறை என்றாலே அதிமுக காவல்துறையா, திமுக காவல்துறையா என்றே ஆட்சியைப் பொறுத்து காவல்துறை குறித்த மதிப்பீடு இருக்கும். அதற்கேற்றாற் போலக் கடந்த கடந்த காலங்களில் காவல்துறையைத் தவறாகக் கையாண்டதை இம்முறைத் திருத்திக் கொள்ளும் வகையில் காவல்துறை செயற்பாடுகளில் கட்சியினர் தமது செல்வாக்கை பயன்படுத்தக் கூடாது என்று முதல்வர் அறிவுறித்தியிருப்பது காவல்துறையின் மதிப்பையும், ஆளும் அரசின் மதிப்பையும் பொதுமக்கள் நடுவில் சம அளவில் உயர்த்துவதற்கு வழியமைக்கச் செய்கிறது.

நியாய விலைக் கடையின் வழியாக வழங்கப்படும் உதவித் தொகை, மற்றும் உதவிப் பொருட்களில் முதல்வர் படம் இல்லாமல் வழங்கப்படுவது மாற்றாக அல்லாமல் மாற்றமாக இருக்க வேண்டும். கொள்கையை முன்நிறுத்தி, செயற்பாடுகளை முன்நிறுத்தி மீண்டும் மக்களிடம் நம்பிக்கையுடன் செல்வதற்கு நல்லாட்சியே உதவும். அப்போது பிரசாந்த் கிஷோர் போன்றோர் தேவைப்படமாட்டார்கள். தேவைப்படப் போவதுமில்லை. "முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்!" என்ற அந்த கம்பீரக் குரலுக்கு மேலும் வலு சேர்ப்பதாகவும் அது அமையும்.

**கட்டுரையாளர்: எழுத்தாளர்**

**அன்பாதவன்**
anbaadhavanjp@gmail.com

# கடல் காகம் குறித்த சிறுகுறிப்பொன்று.



அலைகளின் மீது நடைபயிலும்
கடற்காகங்களின் நளினம்
ருசி மிகுந்தது.

உப்பு நீர் வளத்தில்
பெருநம்பிக்கை கொண்ட
கடற்காகங்களின் சுயசார்பினை
வியந்து துள்ளும் மகரங்கள்

உங்கள் பயணப் படகின்..
ஏதோ ஒரு பலகையில்..
சிலநேரம் உங்கள் இருக்கைக்கருகில்
பறந்து வந்து அமர்வினும்
ஒரு புகைப்படமெடுக்க அனுமதிக்காதவை

உறைந்த படம் ஓய்வாய்க் காட்டுமாம்.

பறத்தல் விதி..மிதத்தல் இருப்புக்கான வழித்தடமென்பதில்
ஆழமாய் நம்பிக்கை கொண்டவை கடற்காகங்கள்

ஆடும் அலைகளிலேயே
ஆசை சொல்லி முத்தமிட்டு சரசிக்கும் ஈரப் பறவைகள்
கூடு கட்டுவதெங்கே..

பகடிப்பறவையொன்று வினவுகிறது..:
"அசைவப் பட்சிகள் கூட்டங்கூடுவது சரிதான்..
சைவப்பிள்ளைப் புறாக்கூட்டதுக்கு
என்ன வேலை சமுத்திரக் கரையில்...?"

கரையிலிருக்கும் மகாநகரில் வாழும்
கலை பயில்விக்கும் குருவை
வணங்குவோமா மாநகரரே..

"விளையாட்டு போதும்
வேண்டுகோள் வைப்போம்
மெத்தபடித்த அறிவியல் ஆதவர்களே..
அணுக்கழிவு கொட்ட கடலென்ன குப்பை மேடா..
எல்லா உயிர்களையும் கொன்றபின்
யாருக்கு வேணும் அணு மின்சாரம்?"

நியாயம் புரிந்த நீலநீர்த் திடல்
அவசரமாய் அனுப்பியதோர்
ஆழிப்பேரலையை..

கட்டுரை

அ. கா. பெருமாள்

# என் ஊரில் பச்சைகுத்தவந்த கொந்தளக்காரி

என் ஊர் கேரளத்துடன் இருந்த சமயம், ஊரில் மின்சாரம் வரவில்லை. பேருந்து ஒரு நாளைக்கு இரண்டு நேரம். திரைப்படம் பார்க்க 5 கி. மீ. நடக்க வேண்டும். ஊர்க்கோவில் திருவிழா முக்கியமான நிகழ்வு. ஆனால் நாட்டார் கலைகள் நிகழ்த்தவும் யாசகத்திற்காகவும் நிறையப்பேர் வருவார்கள். அப்படி வந்தவர்கள் பெரும்பாலும் ஒருநாள் நிகழ்ச்சி நடத்தியவர்கள்.

தோல்பாவைக் கூத்து பத்து பதினைந்து நாள் நிகழ்ச்சி. ஒன்றோ ரெண்டோ நாட்கள் இடைவெளியுடன் நடக்கும். ஒருநாள் வீட்டு நடையில் நான் இருக்கும்போது இராமனின் படத்துடன் ஒரு சிறுவன் போனான். கூடவே ஒரு மண்பானை கொட்டை கழுத்தில் போட்டுக்கொண்டு பானையின் வாய்ப்பகுதியில் கட்டப்பட்டிருந்த தோலின் மேல் கையால் அடித்துக்கொண்டே ஒருவர் வந்தார். அப்பா சொன்னார் ஊரில் தோல்பாவைக்கூத்துக்காரங்க வந்திருக்காங்க; நீ ஒருநாள் போ என்றார். அப்போதே அது சிறுவர் கலையாகிவிட்டது.

பாவைக்கூத்துக் கலைஞர்களுடன் கொந்தளக்காரர்களும் வந்திருக்கிறார்கள் என்பது அப்போது தெரியாது. தோல்பாவைக் கூத்தை நடத்தும் கலைஞரின் உட்பிரிவுகளில் ஒருவர் கொந்தளக்காரர். இவர்களுக்கு தோல்பாவைக் கூத்து நடத்த உரிமை கிடையாது.

கொந்தளக்காரர் சம்முள் மேளம் அடிப்பர்; இதற்குத் தக்க ஆட்டமும் உண்டு. கொந்தளம் ஒரு இசைக்கருவியின் பெயர். இதற்கு இரண்டு மண்பானைக் கொட்டு எனத் தமிழில் சொல்லலாம். மண்பானைகளின் வாய்ப்பகுதி தோலால் மூடப்பட்டிருக்கும். இதை இரண்டு கைகளாலும் குச்சியால் அடித்து ஒலி எழுப்புவர்.

இந்தக் கோட்பாட்டுக்கு ஏற்றவாறு 10-12 வயதுள்ள ஒன்றோ ரெண்டோ சிறுமிகள் ஆடுவார்கள். பெரும்பாலும் நாற்சந்தியிலோ மக்கள் கூடும் இடத்திலோ நடக்கும். ஆட்டம் முடிந்ததும் ஆடிய சிறுமி கையேந்திக்கொண்டு பொதுமக்களிடம் செல்லுவாள்; கூடவே இரட்டைக் கொட்டு அடித்துவரும் அவரது மனைவியும் செல்லுவார்கள்.

தோல்பாவைக் கூத்து நிகழ்ச்சியில் சிலசமயம் கொந்தளக்காரர்கள் பின்னணியாக இரட்டைக்கொட்டு அடிப்பதும் உண்டு. இதற்குத் தனியாகக் கூலி கொடுப்பதில்லை. கூத்துக்கலைஞர்களுக்குக் கிடைக்கும் அரிசி காய்கறிகளில் பங்கு கொடுப்பார்கள். 50களுக்குப் பிறகு இந்தமாதிரி காரியங்கள் நடக்கவில்லை என்று சுப்பையா ராவ் சொல்லுவார்.

என் ஊருக்குத் தோல்பாவைக்கூத்துக் கலைஞர்களுடன் வந்த கொந்தளக்காரர்கள் சம்முள் மேளம் நிகழ்த்தவில்லை. ஆனால் கூத்து நிகழ்வில் இரட்டைக் கொட்டு அடித்தார்கள். கணிகரின் 12 உட்பிரிவினரில் மண்டிகர் மட்டுமே தோல்பாவைக்கூத்து நடத்தலாம் என்பது மரபுவழி வந்த கட்டுப்பாடு. 12 உட்பிரிவினரும் மணவுறவு கொள்ளலாம். அதனால் மண்டிகருடன் கொந்தளக்காரர்கள் வந்தார்கள்.

என்னுடைய நினைவில் கொந்தளக்காரர்கள் ஊரில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் பச்சை குத்திய நிகழ்ச்சி நிழலாடுகிறது. நான் தோல்பாவைக் கூத்து பற்றி விரிவான களஆய்வு மேற்கொண்டபோது பரமசிவராமின் அண்ணன் சுப்பையாராவிடம் (1980-2003) நெருக்கம் ஏற்பட்டது. அப்போது அவர் எழுபதைத் தாண்டிவிட்டார். நினைவு துல்லியமாக இருந்தது.

நான் சுப்பையராவிடம் கொந்தளர்கள் பச்சைகுத்திய நிகழ்ச்சியைச் சொன்னேன். அவர் “கணிகர் சாதியில் யாரும் பச்சை குத்த மாட்டார்கள், சோதிடம் சொல்லுவார்கள். ஆனால், கொந்தளக் குடும்பத்துப் பெண்களில் சிலர் குத்துவார்கள். அது பரம்பரையாய் வந்ததல்ல. பச்சை குத்தும் உட்பிரிவுக் குறவர்களுடன் அவர்களுக்கு ஏற்பட்ட தொடர்பால் அது வந்திருக்கலாம்; உப்பிலியக் குறவர் பேசிய



மொழியில் எங்கள் மராட்டிய கலப்பு உண்டு. அதனால் ஒரு நெருக்கம்" என்றார்.

பரமசிவராவ் ஒருமுறை என்னிடம் அண்ணனுக்கு உப்பிலியக் குறத்தி ஒருத்தியிடம் தொடர்பு உண்டு. நாங்கள் பாதிதான் நாடோடி; அவர் முழு நாடோடி என்று சொன்னது ஞாபகம் வந்தது. நான் சுப்பையாராவிடம் ஓய்வாய் அவர் இருந்தபோது பல விஷயங்கள் பேசியிருக்கிறேன். பத்து அணாவிற்கு அலிஷ்டம் (ஒருவகை மது) உள்ளே போய்விட்டால் அவரிடம் களைகட்ட ஆரம்பிக்கும்.

அவர் அடிக்கடி சொல்லுவார் அரிஷ்டம் குடித்தால் பல நன்மைகள். ஞாபகசக்தி மழுங்காது; புத்தி கூர்மையாகும்; உற்சாகம் பிறக்கும். இப்படியே சொல்லிக்கொண்டு போவார். எனக்கு அது மிகையாகத் தோன்றவில்லை. அவர் அரிஷ்டம் குடித்திருந்தபோதெல்லாம் பழைய விஷயங்களை தோண்டி எடுத்துப் பேசியதைப் பதிவு செய்திருக்கிறேன்.

கொந்தளக்காரர்கள் சம்முள் மேளம் நடத்தப்போன போதும், மண்டிகருடன் தோல்பாவைக்கூத்து நிகழ்ச்சியில் இரட்டைக்கொட்டு அடிக்கப்போனபோதும் உப்பிலியக் குறவர்கள் சிலரும் கூடவே போயிருக்கிறார்கள். இப்படியாகப் போனபோது கொந்தளக்காரர்கள் பச்சைகுத்தும் கலையை அறிந்திருக்கிறார்கள்.

கொந்தளக்காரர்கள், சம்முள் மேளம் நிகழ்த்தப்போகும் போதும் தோல்பாவைக் கூத்து நிகழ்ச்சிக்கு விளம்பரம் செய்ய இரட்டைக் கொட்டு அடித்துக்கொண்டே போகும்போதும் யார் வீட்டில் பச்சை குத்த வேண்டும் என்பதை நோட்டம் பார்த்து விடுவார்கள். உத்தேசமாக எத்தனை பேருக்கு என்பது தீர்மானபிறகு மூலப்பொருட்களைச் சேகரிக்க ஆரம்பிப்பார்கள்.

பச்சை குத்துவதற்குப் பயன்படுத்தப்பட்டப் பொருட்கள் ஊருக்கு ஊர் வேறுபடும். அந்த ஊரில் கிடைக்கும் மூலிகைச் செடியைப்பொறுத்தது அது. செய்முறை ஒன்றுதான். இதை விரிவாகச் சொன்னார் சுப்பையாராவ். பச்சை குத்துவதற்குப் பொதுவாக ஐந்துவகை மூலிகையில் ஏதோ ஒன்று பயன்படுத்தப்பட்டது.

தோறு மஞ்சளைப் பொடியாக்கி அகத்திக்கீரையுடன் சேர்த்து தண்ணீர்விட்டு மைபோல் அரைத்து அக்குழம்பை வெள்ளைத் துணியில் தேய்த்து செயலில் காயவைத்து திரிபோல் சுருட்டி எடுப்பர். பின் ஆமணக்கு எண்ணெயில் நனைத்து எரியவிடுவர். எரியும் தீபத்தின்மேல் மண்பானையின் மூடியைக் கவிழ்த்து வைத்து கரியை அதன் உட்பகுதியில் படியவிடுவர். கரி ஆடு ஆறியதும் பனை ஓலையால் அதை வழித்துச் சேகரித்து தாய்ப்பாலையோ தண்ணீரையோ கலந்து அடர்த்தியாக குழம்பாகத் தயாரித்துக் கொள்ளுவர். இந்த மையில் 3 முதல் 5 ஊசிகளை தோய்த்து பச்சை குத்துவர்.

பச்சைகுத்த விரும்பியவர் வேண்டிய விரும்பிய படத்தை உறுப்பில் வரைபடமாக வரைவர். இதற்கு நீண்ட கரிக்கட்டையைப் பயன்படுத்துவர். பச்சை குத்தி முடிந்ததும் குத்தப்பட்ட இடத்தில் ஆமணக்கு எண்ணெய் அல்லது எண்ணெய் கலந்த மஞ்சள் பொடியைத் தடவுவர்.

இது பொதுவான முறை. அகத்திக் கீரைக்குப் பதில் அறுகம்புல், கரிசலாங்கண்ணிக்கீரை, கலியந்தாழை எட்டு, அவுரி இலை, சித்திரப் பாலாடையின் இலை போன்றவற்றையும் பயன்படுத்தினர். இவை எல்லாவற்றிலும் மஞ்சள் சேர்ப்பதில் கவனமாக இருப்பார்கள். இந்த சேருமானத்தில் விகிதாச்சார அளவு உண்டு.

தாய்ப்பால் சேர்ப்பது, மஞ்சள் தடவுவது, பச்சை குத்திய பகுதியின் பாதுகாப்புக்கு இப்படியாகப் பல விஷயங்களைச் சொன்ன சுப்பையாராவ் உப்பிலி குறவர்களிடமிருந்து கொந்தளக்காரர்கள் பச்சை குத்தும் தொழிலைப் பலித்தாலும் தொடர்ந்து அதைச் செய்யவில்லை என்று சொல்லி முடித்தார்.

# மடல் திறப்பு

**மே** 2021 காக்கைச் சிறகினிலே இதழின் ‘கடைசிப் பக்கம்’ பகுதியில் தோழர் திருமாவின் அறிக்கைப் பற்றி தோழர் இரா.எட்வின் வருத்தமாகப் பதிவிட்டிருந்த செய்தி என் கவனத்தை ஈர்த்தது. ‘ஆயிரம்தான் உலக அரசியலை நாம் பேசினாலும், உலகத்துக்காகக் கவலைப்பட்டாலும், நமக்கு ஒன்று என்றால் நாம்தான் போராட வேண்டும்’ என்று தோழர் திருமா அவர்கள், சேகனூர் அர்ஜுனன் மற்றும் செப்பேடு சூர்யாவின் கொலைகளின்போது தோழமைக் கட்சிகள் எதிர்ப்புக் குரல் எழுப்பாதிருந்த வருத்தத்தில், அவ்வாறு அறிக்கை வெளியிட்டிருந்ததாகவும், ஆனால் மார்க்சிஸ்ட் கட்சி மறுநாளே கண்டன ஆர்ப்பாட்டத்தில் இறங்கிவிட்டதாகவும் அதில் செய்தி.

கொலை நடந்தது 7.4.2021 அன்று. திருமா மேற்கண்டவாறு வருத்தப்பட்டு, மாவட்டத் தலைநகரங்களில் கண்டனப் போராட்டம் நடத்த அறிக்கைவிட்டது 8.4.2021அன்று. தோழர் எட்வின் சொல்கிற மாதிரி மார்க்சிஸ்ட் கட்சி கண்டனப் போராட்டங்களை நடத்தியது 9.4.2021 அன்று. (கடைசிப் பக்கத்தின் செய்தியில் தெரிவித்திருந்தபடிதான் சொல்கிறேன் ).

இடதுசாரித் தோழமைகளிடம் தலித்துகள் எதிர்ப்பார்ப்பது , தலித்துகளுக்குப் பிரச்சனை என்றவுடன் ஆதிக்கச் சாதியினருக்கு எதிரான அவர்களின் முதல் எதிர்வினையைத்தான். திருமா போராட்டம் அறிவிப்பதற்கு முன்னரே மார்க்சிஸ்ட் கட்சி களத்தில் இறங்கியிருக்க வேண்டும் என்பதே தலித்துகளின் விருப்பம். அந்த வருத்தத்தில்தான் திருமாவும் அப்படி பேசியிருக்கலாம். தலித்துகள் சிந்தியக் கண்ணீரைத் துடைப்பதற்கான அனுதாபக் கரங்கள் தலித்துகளுக்குத் தேவையில்லை...அதுவும் முதலாளித்துவ அணுகுமுறை தான். தலித்துகளின் ரத்தம் சிந்தும் போராட்டக் களங்களில் அவர்களுக்குத் துணை நிற்கும் தோழமைத் தோள்களே இப்போது தேவை என்பது என் கருத்து. தோள்கள் துணைவருமா?

**-அபிமானி, பணகுடி.**

**மே**-2021- காக்கைச் சிறகினிலே இதழ் கிடைக்கப்பெற்றேன். நன்றி. ‘அறம் வேண்டும்’ தலையங்கம் வாசித்தேன். மக்கள் நலப் பிரச்னைகளைப் பற்றி கிஞ்சித்தும் கவலையேதும் கொள்ளாமல், தங்களது மதவாத அரசியலை மட்டுமே முதன்மையாகக் கொண்டு அரசியல் செய்வோரின் முகத்திரையை “கொரோனா” கிழித்து விட்டது. மனித உயிர்கள் மலிவாகப் போன அவலம் இனிமேலும் நடக்கக் கூடாது. தலையங்கத்தில் சுட்டப்பட்ட படி ஆட்சியாளர்கள் சற்று அறத்துடன் நடந்து கொள்ள வேண்டும்.

சமூக நீதிப் போராளி வே. ஆனைமுத்து ஐயா குறித்து எழுதப்பெற்ற நினைவேந்தல் கட்டுரைகள், அவரது மகத்தான அரும் பணிகளை எடுத்துரைக்கின்றன. வெறுமனே சொற்பொழிவாளராக மட்டுமின்றி, வீரியமிக்க செயல்பாட்டாளராகவும் விளங்கினார் என்பதைப் புரிந்து கொள்ள முடிந்தது. குறிப்பாக தந்தை பெரியாரோடு இணைந்து அவர் பணியாற்றியதும், 1950களில் அரசியல் சட்ட எரிப்பு போராட்டத்தில் கலந்து கொண்டு, 18 மாதங்கள் சிறைவாசம் பெற்றவர் வே.ஆனைமுத்து எனும் செய்தி, அவரது களப் போராட்ட வாழ்க்கையையும், ஈகத்தையும் எடுத்துரைத்தின்றன. முன்னாள் தலைமை அமைச்சர் வி.பி. சிங், மண்டல் கமிஷன் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த ஏதுவான வகையில், வே. ஆனைமுத்து அவர்கள் அரும்பணி ஆற்றியிருப்பது இன்றைய தலைமுறையினர் அறிய வேண்டிய செய்தி. பல்வேறு கட்டுரைகளையும், தகவல்களையும் தாங்கி வருகின்ற “காக்கைச் சிறகினிலே” இதழ்ப் பொறுப்பாளர்கள் அனைவருக்கும் நன்றி.

**- ரவி குமாரசாமி, ஈரோடு - 2**

**மே** இதழ் பல வகைகளில் மனத்தைக் கவர்ந்தது. பொதுவாக மாதாமாதம் அஞ்சலில் வரும் அனைத்து இதழ்களையும் முழுவதுமாகப் படித்து முடிக்க இயலாது என்பது என் அனுபவம்! ஆனால் இம்மாத காக்கைச் சிறகினிலே இதழ் விதிவிலக்கு . ஒரு புத்தக மதிப்புரையைப் படித்த பின்னர் அந்த நூலைப் படிக்கவேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டால் மதிப்புரையாளர் ஈடுபாட்டோடு அந்த மதிப்புரையை எழுதியிருக்கிறார் என்பது பொருள். நாகரத்தினம் கிருஷ்ணாவின் “சைகோன் - புதுச்சேரி” நாவலுக்கு

முனைவர் பஞ்சாங்கம் எழுதியிருப்பது வெறும் மதிப்புரையல்ல; சிறந்த ஆய்வுக்கட்டுரை! இப்போது எனக்கு அந்த நாவலைப் படிக்க வேண்டும் என்ற ஆர்வம் ஏற்பட்டுள்ளது. பிரபஞ்சனின் "வானம் வசப்படும்", "மானுடம் வெல்லும்" நாவல்கள்தாம் வரலாற்று நாவல் என்றால் இப்படித்தான் இருக்கும் என்ற புரிதலைத் தந்தவை; புதுச்சேரி பற்றிய ஆர்வத்தினை ஏற்படுத்தியவை. பஞ்சாங்கம் அவர்களுக்குப் பாராட்டுக்கள் . ஓமந்தூராரைப் பற்றி இன்றைய தலைமுறைக்குத் தெரியாது . ஓமந்தூராரின் சாதனைகளைப் பட்டியலிடும் நூல் பற்றிய மதிப்புரை மிகவும் அருமை.

வே.ஆனைமுத்து அவர்களுக்கான அஞ்சலிக் கட்டுரைகள் அனைத்துமே அவருக்கு முறையான அஞ்சலிகளைத் தெரிவிப்பவை.திரு சந்திரசேகரனின் கட்டுரை அனுபவத்துடன் இணைந்தது. சிறப்பு! ஒவ்வொரு மனிதனிடமும் ஏதோ ஒரு தனித்தன்மை! வேணு மாதவனின் திரு நவநீதன் பற்றிய கட்டுரை பலரும் அறிந்திராத ஒரு மனிதரின் உயர்வான பண்புகளைக் குறிப்பிடுகிறது; மற்றவர்களுக்கு உதவுவதை அனிச்சைச் செயல் போலச் செய்யும் மனிதர்களை இன்று காண முடியுமா ? அல்போன்சா அவர்களைப் பற்றிய அஞ்சலிக் கட்டுரையும் மனத்தில் பதியும் கட்டுரை! தொடர்ச்சியாகப் பல ஆண்டுகள் ஒரு ஆசிரியரிடம் கலைகளைப் பயில்கிறபோது அதில் ஒரு குருகுலப் பாங்கு ஏற்பட்டுவிடுகிறது . வரையறுக்கப்பட்ட பாடமணி, பாடத்திட்டம் என்ற முறையில் கற்றுமுடித்து வெளியே வரும் கல்விப்புலம் சார்ந்த , பல்கலைக்கழக , மாணவர்களிடம் இத்தகைய குருபக்தியைக் காண முடியாது. ஆசிரியர்களிடமும் மாணவரை மகனாகக் கருதும் உள்ளத்தைக் காண முடியாது.நேர்மையும் உண்மையும் இல்லாத வியாபார முறையிலான ஆசிரிய-மாணவர் உறவு அச்சமூட்டும் கொடுங்கனவாக இன்று மாறிவிட்டது; சில நேரங்களில் பரஸ்பரம் பொறாமை உணர்வுகள் கூட ஏற்பட்டு விடுவதுண்டு. இச்சூழலில் திரு அல்போன்சா வித்தியாசமான ஆசிரியர்தான். மொழிபெயர்ப்பாளர் திரு பாலசுப்ரமணியன் குறித்த அஞ்சலிக் கட்டுரையும் கழிவிரக்கத்தைத் தூண்டுகிறது. அவரை நான் ஓரிரு முறை சந்தித்திருந்த போதும் அவரது சாதனைகளை முறையாக எனக்கு அறிமுகப்படுத்தவில்லை நம் நண்பர்கள். இந்த இடத்தில் ஒரு செய்தியைச் சொல்லவேண்டும் . பெரும் சாதனைகள் புரிந்த ஆளுமைகள் காலமாகிறபோது அவர்களைப் பற்றிய அஞ்சலிக் கட்டுரைகள் தேவைதான் என்றாலும் இன்னொரு முயற்சியையும் செய்து பார்க்கலாம் . கவனிக்கப்பட வேண்டியவர்கள் பற்றி அவர்கள் இருக்கும்போதே சில பதிவுகளை உருவாக்கலாம். அது அவர்களுக்கு மேலும் செயல்பட உத்வேகத்தைத் தரும்.

திரு இராமசுப்பிரமணியனின் பெரும்பாணாற்றுப்படை கட்டுரை செவ்வியல் இலக்கியங்களைப் பயன்பாட்டு நோக்கில் காண்கிறது ; மிக ஆழமான கட்டுரை. திரு ஜனநாதன் இயக்கிய திரைப்படங்கள் பலவற்றை அவை யாரால் இயக்கப்பட்டன என்பதைக் கவனிக்காமலே பார்த்து ரசித்திருக்கிறேன். இப்போது அந்தச் சிறந்த படங்கள் ஜனநாதனால் இயக்கப்பட்டவை என்பதை அறிகிற போது மகிழ்ச்சி இரட்டிப்பாகிறது.

பெண்கள் எப்போதும் இரண்டாம் நிலைக் குடிமக்களாகத்தான் கருதப்பட்டனர் என்பதைத் திடுக்கிடும்நிகழ்ச்சிஒன்றின்மூலம்வெளிப்படையாகக் கூறும் திரு வித்யா சுப்ரமணியனின் கட்டுரை தந்த அதிர்வு இன்னும் பல நாட்களுக்கு மனத்தில் இருக்கும்."காக்கைச் சிறகினிலே" மே இதழ் பல்வேறு உணர்வுகளைத் தூண்டிச் சிந்திக்க வைக்கும் இதழ்!!

**– முனைவர் ம.திருமலை**
**முன்னாள் துணைவேந்தர் தமிழ்ப் பல்கலைக்கழகம்.**

அன்புள்ள ஆசிரியர்குழுத் தோழர்களுக்கு வணக்கம். காக்கை மே இதழும் நீத்தார் நினைவேந்தலில் விரிந்திருக்கிறது. நீத்தார் நினைவேந்தல் தமிழரின் மார்பு சார்ந்தது.மூத்தோரின் நினைவுப் படிமமாகக் கருதப்படும் காக்கைக்கு மரபார்ந்த கடமை ஆகிறது. எனினும் இதைச் சடங்காக எடுத்தியம்பி நகர்ந்து விடுவதில்லை. மாறாக நீத்தாரின் நல்லம்சங்களை விட்டுச்சென்ற பணிகளை அடுத்த தலைமுறைக்கு கடத்தும் பணியைச் செய்கிறது.

பெரியார்விட்டுச்சென்ற சாதியொழிப்பு, சமூகநீதிப் போராட்டத்தை மார்க்ஸிய. இயங்கியலோடு முன்னெடுத்துச்சென்ற தோழர் வே.ஆனைமுத்து வுக்கு பொருத்தமான நினைவஞ்சலி அவரது பயணத்தை மேற்கொண்டு தொடரும் விதமாக பகிரப்பட்டுள்ளது. தமிழின் தொல்இலக்கியங்களை பிற இந்திய மொழிகளுக்கு பெயர்த்த பேராசிரியர் ஹெச்.பாலசுப்பிரமணியன் அவர்களுக்கும் திரைக்கலையில் புத்தொளிப் பாய்ச்சிய. ஜனநாதனுக்கும், ஓவிய ஆசிரியர் அல்போன்ஸோ அவர்களுக்கும் தக்கவகையில் புகழஞ்சலி பகிரப்பட்டுள்ளது. இவர்களது இலட்சியபயணங்களை முன்னெடுத்துச் செல்வோம்.

இந்தக் கடிதம் நிறுத்தி தொடரும் போது தந்தையாய், நல்லாசிரியனாய், நல்லதோர் தோழனாய் வழிநடத்திய நாட்டுப்புறவியல் பல்கலைக்கழகமாய் நடமாடிய தோழர் கி.ராஜநாராயணன் படமாகி விட்டார். பாடமுமாகி விட்டார்.அவருடன் உறவாடி, உரையாடி, வாசித்து உள்வாங்கியவற்றை தமிழ்கூறும் நல்லுலகிற்கு கொண்டு செல்லும் கடமையும் சேர்ந்து கொண்டது.

சிலப்பதிகாரத்திற்கு முந்தியே சங்கப்பாடல்களில் இசை குறித்தும், இசைக் கருவிகளைக் குறித்த. தெளிந்தறிவு இருந்ததை கூத்தராற்றுப்படை எனும் பொருநராற்றுப்படை மூலம் வெளியுலகிற்கு பகிர்ந்திருக்கிறார் பேரா. இராமசுப்பிரமணியன். தமிழகத்தின் முதல் முல்வர் ஓமாந்தூர் இராமசாமியின் பணிகளையும் வாழ்வினையும், நாகரெத்தினம் கிருஷ்ணாவின் படைப்பாளுமை குறித்தும் நல்லகட்டுரைகள் வந்துள்ளன. சந்திப்போம்.

**– ஜனநேசன், ஹைதராபாத்**

சு.இராமசுப்பிரமணியன்
srsthovalai@gmail.com



# கல்வட்டம் (Stonehenge)
## கற்கால மனிதர்களின் தற்காலப்பிரமாண்டம்

பூமியின் சுழற்சி அச்சு சரிந்திருப்பதால், பூமி சூரியனைச் சுற்றிவரும்போது, சூரியன் வடக்கும், தெற்குமாகப் பயணிப்பதுபோல நமக்குத் தோன்றுகிறது. அப்படி, வடக்கில் பயணிக்கும் சூரியன், நின்று தெற்குநோக்கித் திரும்பும் நாளும், , தெற்கில் பயணிக்கும் சூரியன் நின்று வடக்குநோக்கித் திரும்பும் நாளும், 'சூரியத் திருப்பு நாள்'(*solstice* ) எனப்படும்.

வடதுருவம், சூரியனுக்கு மிக அருகில்வரும் அந்த நாள் (ஜூன்20/21), பூமியின் வடபாதியில், 'கோடை சூரியத்திருப்புநாள்'(*summer solstice*). அதுபோலவே, தென்துருவம் சூரியனுக்கு மிக அருகில் வரும் நாள்(டிசம்பர் 21/22), தென் பாதியில் 'கோடை சூரியத் திருப்புநாள். (2021-ஆம் ஆண்டிற்கான சூரியத்திருப்பு நாள் ஜூன் 21, குளிர் சூரியத்திருப்பு நாள் டிசம்பர் 21.)

வடதுருவம், சூரியனுக்கு மிக அருகில் வரும் நாளில், தென்துருவம் சூரியனை விட்டு பெரும அளவில் விலகியிருக்கும். எனவே வடதுருவத்தில் கோடை சூரியத் திருப்புநாள் என்றால், தென்துருவத்தில், குளிர் சூரியத்திருப்புநாளாக (*winter solstice*) இருக்கும். மறுதலையாக, தென்துருவத்தில் கோடை சூரியத்திருப்புநாள் என்றால், வடதுருவத்தில் குளிர் சூரியத்திருப்புநாளாக இருக்கும். கோடை சூரியத் திருப்புநாளில், மிகநீண்ட பகற்பொழுதும், குளிர் சூரியத்திருப்புநாளில் மிகநீண்ட இரவுப்பொழுதுமாக இருக்கும்.

இந்த இரண்டு சூரியத் திருப்புநாட்களுடன் தொடர்புகொண்டது, தென் இங்கிலாந்தின் சாலிஸ்பரி நகருக்கு வடக்கில், பரந்துவிரிந்த சமவெளியில் (*Salisbury Plain*) அமைந்திருக்கும் கல்வட்டம். (*Stonehenge*) உலகிலேயே வரலாற்றுக்கு முந்தைய மக்களால் நிறுவப்பட்ட சிறப்பான ஒரேஒரு நினைவுச் சின்னமாகத் (*Unique prehistoric monument*) திகழ்கிறது. அது, வரலாற்றுக்கு முந்தைய காலத்தைப்பற்றி அறிவதற்கான எண்ணிறந்த சான்றுகளைத் தன்னகத்தே கொண்டிருக்கும் தரவுச்சுரங்கமும் ஆகும்.

ஒவ்வொரு கோடை சூரியத்திருப்புநாள் (*Summer solstice*) அன்றும் விடிவதற்கு முன்பாகவே, இங்கிலாந்து நாட்டின் சாலிஸ்பரி கல்வட்டத்தின் முன்பாக, உலகெங்கும் இருந்து பல்லாயிரக் கணக்கிலான மக்கள் வந்து கூடுகின்றனர். அனைவரின் கண்களும் வடகிழக்குத்திசையை நோக்கியே இருக்கின்றன. அன்று உதித்தெழும் சூரியனிலிருந்து வரும் கதிர்கள், கல்வட்டத்தின் கற்களுக்கு இடையில் மிகச்சரியாகப் புகுந்து , மேலெழுந்து செல்வதைப் பார்க்கவே அத்தனைக் கூட்டமாக மக்கள் திரள்கின்றனர். மாத்திரமல்ல, அப்படி அங்கு வரும் மக்கள், கோடை சூரியத்திருப்புநாளை, ஒரு விழாவாகவே கொண்டாடுகின்றனர்.

பொதுஆண்டுக்கு 5000 ஆண்டுகளுக்கு முன்பான புதியகற்காலத் தொல்குடி மக்களால், கற்களை

மட்டுமே கருவிகளாகக்கொண்டு, பல டன் எடைகொண்ட கற்களை நேர்நிறுத்தி, கல்வட்டம் உருவாக்கப்பட்டதோடு, 'சூரியத் திருப்புநாள்' பற்றிய விண்ணியல் அறிவு அவர்களுக்கு எப்படி வந்திருக்கும் என்னும் விடை தெரியாத கேள்வியும், கல்வட்டத்திற்கு வரும் மக்களை மட்டுமல்லாது அறிவியல் ஆய்வாளர்களையும் வியக்கவைக்கிறது.

### பலகட்ட உருவாக்கம்: (Multi-phase Construction)

புதுக்கற்காலத்தின் (Neolithic age) முடிவிலும், வெண்கலக்காலத்தின் (bronze age)தொடக்கத்திலுமாக, பொது ஆண்டுக்கு முன்பாக, 3000 முதல் 1500 ஆண்டுகள் வரையிலான காலகட்டத்தில் (3000 BCE – 1500 BCE), ஆறு கட்டமாக, சாலிஸ்பரி கல்வட்டம் நிறுவப்பட்டிருப்பதாக நவீன ஆய்வு முடிவுகள் தெரிவிக்கின்றன. அதாவது, கல்வட்டம் கிட்டத்தட்ட 1500 ஆண்டுகளில், பிரிட்டனைச்சேர்ந்த பல்வேறு காலகட்டத்தில் வாழ்ந்த தொல்குடி மக்களால் உருவாக்கப்பட்டுள்ளது.



பொது ஆண்டுக்கு 3000 ஆண்டுகள் முன்பான முதல்கட்ட கல்வட்ட உருவாக்கத்தில், 330 அடி (100 மீட்டர்) விட்டம்கொண்ட வட்டவடிவப் பள்ளங்களை (Circular ditches) மான்கொம்புகளைக் கொண்டு தோண்டியிருக்கின்றனர். பள்ளம், 20 அடி(6 மீ) அகலமும், 4.5 முதல் 7 அடி (1.4 மீ முதல் 2 மீ.) ஆழமும் கொண்டவை. அப்படித் தோண்டும்போது வெளியேற்றப்பட்ட மண்ணைக்கொண்டு, பள்ளத்திற்கு உட்புறமாக, வட்டவடிவில் உயர்ந்த கரைகளை உருவாக்கியிருக்கின்றனர்.

5000 ஆண்டுகளுக்கு முன்புவாழ்ந்த தொல்குடி மக்களுக்கு, வட்டம் பற்றிய வடிவியல் கணித அறிவு இருந்திருப்பது நம்மைப் பெரிதும் வியக்கவைக்கிறது. பள்ளங்களில் ஏராளமான மான்கொம்புகளும், விலங்குகளின் எலும்புகளும் அடுக்கப்பட்டிருந்தன என்றும், அவை அங்கு அடுக்கப்படும்போதே, சில நூற்றாண்டுகள் பழமையானவை என்றும் ஆய்வாளர்கள் கூறுகின்றனர் .

அவ்வட்டத்திற்குள், 56 ஆழமான குழிகள் காணப்படுகின்றன. 1666-இல் ஜான் ஆப்ரே (John Aubrey) என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டதால், அக்குழிகள், 'ஆப்ரே குழிகள்' (Aubrey pits) என்று அழைக்கப்படுகின்றன ஆப்ரே குழிகள், மரத்தூண்களை நடுவதற்கானவையாக இருந்திருக்கலாம் என்று கருதப்படுகிறது.

வட்டத்தின் வடகிழக்கில் ஒரு பெரிய நுழைவு வாயிலும், தெற்கில் ஒரு சிறிய நுழைவு வாயிலும் அமைக்கப்பட்டிருந்தன. வடகிழக்கு நுழைவுவாயிலில் இரண்டு இணைகற்களை நிறுத்தியிருக்கின்றனர். அவற்றில் ஒன்று 'பலிபீடமாகப்' பயன்பட்டிருக்கிறது. அது இப்போதும் காணப்படுகிறது. இந்த முதல்கட்ட கல்வட்டம் 500 ஆண்டுகள் வரையிலும் பயன்பாட்டில் இருந்துவந்திருக்கிறது

ஆப்ரே குழிகளிலும்,வட்டவடிவப் பள்ளங்களிலும் மனித உடல்கள் புதைக்கப்பட்டதற்கான சான்றுகள் கிடைத்துள்ளன. அப்பகுதி, பொது ஆண்டிற்கு முன்பாக 3000 முதல் 2300 வரையிலான காலகட்டத்தில், மனித உடல்களைப் புதைக்கும் இடுகாடாகப் பயன்பட்டிருக்கிறது.

கல்வட்டப்பகுதியில், வேட்டையாடுதல் முதன்மையானப் பங்குவகித்திருக்கிறது. ஆய்வாளர்கள், 350 விலங்குகளின் எலும்புகளையும், 12,500 கற்-கருவிகளையும் (flint tools) கண்டெடுத்துள்ளனர் இவை, பொது ஆண்டுக்கு முன்பு 7500 முதல் 4700 வரையிலான காலகட்டத்தைச் சேர்ந்தவை. அதுவே, அப்பகுதியைப் புனிதமானதாக அம்மக்கள் கருதுவதற்கும் காரணமாக இருந்திருக்கக்கூடும்.

இரண்டாம் கட்டத்தில், , வடகிழக்கு நுழைவு வாயிலுக்கு வெளிப்புறம், பெரியபெரிய மணற்கற்கள் (Sarsen stones), மணற்கல் சுத்தியல் (sarsen hammer)கொண்டு சீராக்கப்பட்டிருக்கின்றன (smoothened). பிறகு, உட்புறம் நகர்த்தப்பட்டு, குதிரைலாட வடிவில் அவற்றை நிறுத்தியிருக்கின்றனர்.

கல்வட்டத்தின் நடுவில், உயரமான ஐந்து 'முக்கற்கள்' (tri-lithons) நிறுவப்பட்டுள்ளன. முக்கற்கள் என்பது, பூமியில் இரண்டு கற்களை நேர்நிறுத்தி, அவற்றின்மீது மூன்றாவது கல்லைப் படுக்கவைப்பது. அது நம் ஊர்களில் காணப்படும் சுமைதாங்கிக் கல் அமைப்பு போன்றது.

மையத்தில் அமைந்திருக்கும் முக்கல் 32 அடி (10 மீ ) உயரம் கொண்டது. அதுதான், இருப்பதிலேயே மிக உயரமானது. உயரம் குறைந்த இரண்டு முக்கற்கள், இடதுபுறம் ஒன்றும், வலதுபுறம் ஒன்றுமாக சமச்சீராக நிறுவப்பட்டுள்ளன. மேலும் இரண்டு உயரம் குறைந்த முக்கற்கள், மைய முக்கல்லுக்குப் பின்புறமாக நிறுவப்பட்டுள்ளன. சமச்சீர் (symmetry) பற்றிய அறிவும் அவர்களுக்கு இருந்திருக்கிறது.

முக்கல் அமைப்பைச்சுற்றி, 30 கற்பாளங்களை



நேர்நிறுத்தி, அவற்றின்மீது வளைந்த கற்பாளங்களைப் படுக்கவைத்து (lintal) , ஒரு கல்வட்டம் உருவாக்கப்பட்டிருக்கிறது.

உள்வட்டத்தில் இரண்டுவிதமான பெருங்கற்கள் (megaliths) பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. பெரும் மணற்கற்கள் (sarsen megaliths), இரண்டு பொது-மைய வட்டங்களாக நிறுத்தப்பட்டுள்ளன. உள்வட்டத்தில் குதிரை-லாட வடிவிலும், வெளிவட்டத்தில் வட்டவடிவிலும் மணற்கற்கள் நிறுத்தப்பட்டுள்ளன. இவ்விரண்டு வட்டங்களுக்கு இடையில், அளவில் சிறிய நீலக்கற்கள் (blue-stones)'இரட்டை-வில்' (double arc) வடிவில் அமைக்கப்பட்டுள்ளன

200 அல்லது 300 ஆண்டுகளுக்குப் பிறகு, நீலக்கற்கள் ஒரு வட்டமாக அமையும் விதத்தில் மறுசீரமைப்பு செய்யப்பட்டிருக்கிறது. அதற்கும் உள்ளாக, முட்டைவடிவில் (Oval) அமைக்கப்பட்டு, பிறகு குதிரை-லாட வடிவிற்கு (horse-shoe) மாற்றப்பட்டுள்ளது.

மணற்கல்வட்டம் (Sarsen stone Circle) 300 அடி சுற்றளவு கொண்டது. நிற்கும் கற்கள்மீது படுக்கவைக்கப்பட்டிருக்கும் கற்களின் எடை, ஒவ்வொன்றும் ஏழு டன் ஆகும். நிற்கும் கற்கள்மீது படுக்கை நிலையில் இருக்கும் கற்கள்(lintal stones) நகராமல் இருக்க, 'புறா-வால்' (dove-tail joints) இணைப்புமுறை பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

படுக்கை நிலையில் இருக்கும் வளைந்த மணற்கற்கள் ஒன்றுடன் மற்றது, 'குழி-நாக்கு' (tongue and groove) முறையில் இணைக்கப்பட்டுள்ளன. தொல்குடி மக்கள், கற்களை நாட்டி, அவற்றின்மீது வெறுமனே கற்களைத் தூக்கி வைக்கவில்லை. இன்று மரச்சட்டங்களை இணைப்பதற்கு நாம் பயன்படுத்தும் தொழில்நுட்பத்தை, அன்றே கல்சுத்தியலை மட்டுமே கொண்டு உருவாக்கியிருப்பது, நம்மைவிடவும் அவர்கள் மேலான தொழில்நுட்ப வல்லுநர்கள் என்று பிரமிக்க வைக்கிறது. கற்களில் அனைத்து இணைப்புகளும் (joints) கல் சுத்தியல்கொண்டே உருவாக்கப்பட்டுள்ளன.

கல்வட்டத்திற்கு வெளியே, கற்களை மறுவடிவம் செய்வதற்காக இரண்டு பொதுமைய வட்டங்களாகத் தோண்டப்பட்டு முற்றுப்பெறாத குழிகள் Y-குழிகள் மற்றும் Z-குழிகள் என்று அழைக்கப்படுகின்றன

## கல்வட்டத்தின் கற்கள்: (Megaliths of Stonehenge)

இன்று, கல்வட்டத்தில் 83 மணற்கற்களும், 43 நீலக்கற்களும் மிஞ்சியுள்ளன (முன்பு 80 நீலக்கற்கள் இருந்ததாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர்).. மேலும் பல கற்கள் இருந்திருக்கக்கூடும். உள்வட்டத்தில் நிற்கும் மணற்கற்களில், கல்லின் பெரும எடை 50 டன். நீலக்கற்கள் ஒவ்வொன்றும் 4 டன் வரையிலும் எடைகொண்டவை.

எடைமிகுந்த மணற்கற்கள் , சாலிஸ்பரி சமவெளிக்கு வடக்கில் 25 மைல் (40 கி.மீ) தொலைவில் அமைந்த மால்பொரோ டவ்ன்ஸ் (Marlborough Downs) கல் குவாரியிலிருந்து, சக்கரமில்லா வண்டிகள் மீது ஏற்றப்பட்டு, உறுதியான வடங்களால் கட்டி இழுத்து வரப்பட்டிருக்கலாம் என்று நம்பப்படுகிறது.

எவ்வித தொழில்நுட்பமும் கருவிகளும் இல்லாத கற்காலத்தில், மண்ணில் பள்ளம் தோண்டுவதற்கே மான் கொம்புகளைப் பயன்படுத்திய தொல்குடி மக்கள் 40 முதல் 50 டன் வரையிலும் எடைகொண்ட பெருங்கற்களை, பாறையிலிருந்து எப்படி உடைத்து எடுத்தார்கள் என்பதும் மிகப்பெரிய கேள்விக்குறி ஆகும்.

எடைகுறைந்த நீலக்கற்கள், 155 மைல் (250 கி.மீ) தொலைவில், வேல்ஸ் மாகாணத்தில் அமைந்த ப்ரெசெலி மலைப்பகுதியிலிருந்து ( Preseli Hills in



*Wales)* கொண்டுவரப்பட்டதற்கான சான்றுகள் கிடைத்துள்ளன..இன்றுபோல்,தொழில்நுட்பங்களும், கருவிகளும், வாகனங்களும் இல்லாத, சக்கரங்கள்(-*Wheels)* கண்டுபிடிக்கப்படாத அந்தக்காலத்தில் 4 டன் எடைகொண்ட அந்த நீலக்கற்களை, 155 மைல் (250 கி.மீ) தொலைவில் உள்ள சாலிஸ்பரி சமவெளிக்கு எப்படிக் கொண்டுவந்து சேர்த்தார்கள் என்பது குறித்து பல்வேறு கோட்பாடுகளும் முன்வைக்கப்படுகின்றன.

மிகப்பெரிய மரங்களின் அடிப்பகுதிகளை உருளைகளாகக்கொண்டு, நீலக்கற்களை ஆவோன் ஆற்றிற்கு உருட்டிவந்திருக்கிறார்கள். பெரியபெரிய மரங்களாலான மரத்தெப்பங்கள் *(Rafts)* மீது கற்கள் ஏற்றப்பட்டிருக்கின்றன. ஆவோன் ஆறு *(Avon River)* நீலக்கற்களை சாலிஸ்பரி கொண்டுவந்து சேர்த்திருக்கிறது. அங்கிருந்து மீண்டும் அடிமர உருளைகளைப் பயன்படுத்தி, கல்வட்டப்பகுதிக்குக் கொண்டுவந்து சேர்த்ததாகச் சொல்லப்படும் கொள்கை ஓரளவிற்கு ஏற்புடையதாக இருக்கிறது.

என்றாலும், புதுக்கற்கால மனிதர்கள், நீலக்கற்களை இழுத்து, தள்ளி, உருட்டி கொண்டுவந்துசேர்த்தார்கள் என்று சொல்லப்படும் கொள்கைகளைவிடவும், , பனிக்கட்டிக் காலகட்டத்தில், பனிப்பாளங்கள் *(Glaciers during Ice-age)* அவற்றை இயற்கையாகவே வேல்சிலிருந்து, சாலிஸ்பெரி சமவெளிக்குக் கொண்டுவந்து சேர்த்திருக்கலாம் என்னும் கொள்கையைப் பலரும் ஏற்கின்றனர்.

**கல்வட்டத்தின் பயன்பாடும், சிறப்பும்:**

சூரியத் திருப்புநாள் *(solstice)*, சமப்பொழுதுநாள் *(equinox)*, சூரிய, சந்திர மறைப்புகள்*(eclipses)* போன்றவற்றை சுட்டும் விதமாகவே கல்வட்டம் அமைக்கப்பட்டுள்ளது; எனவே, அது, விண்வெளி நாட்காட்டியாகப்*(Astronomical Calendar)* பயன்பட்டிருக்கலாம் என்று, 1960 களில் விண்வெளி அறிஞர் ஜெரால்ட் ஹாக்கின்ஸ் *(Gerald Hawkins)* ஒரு கொள்கையை முன்வைத்தார். அதற்கு நல்ல வரவேற்பும் கிடைத்தது

கல்வட்டத்தின் நீண்டநெடிய வரலாற்றில், இறந்தவர்களைப் புதைக்கும் இடுகாடாக *(cemetery)*, சடங்குகள் நடந்த இடமாக *(ceremonial site)* , ஆன்மிகப் புனிதப்பயணத்திற்கான இடமாக *(religious pilgrimage destination)*, தலைமை வகித்தவர்களின் கடைசி புகலிடமாக *(last resort for Royals)*, முன்னோர்களின் ஆன்மாக்களுடன் தொடர்புகொள்ளும் இடமாக *(spiritual connect)*, விண்ணியல் நாட்காட்டியாக *(Astronomical Calandar)* இப்படி பலவிதமாகக்கல்வட்டம்பயன்பட்டிருக்கிறது.

என்றாலும், கல்வட்டம் ஒரு நோய்தீர்க்கும் இடமாக *(healing avenue)* அமைந்திருக்கிறது என்னும் கோட்பாடு முதன்மையானதாக இருக்கிறது. இன்றும்கூட, அதே நம்பிக்கையுடன் மக்கள் அங்கு செல்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

கல்வட்டத்தில், நோய்வாய்ப்பட்டும், காயங்களுடனும் இறந்தவர்களின் உடல்கள் கிடைத்திருக்கின்றன. அவற்றைப்பார்க்கும்போது, கல்வட்டம், நோய்தீர்க்கும் இடமாக *(healing site)* இருந்திருக்கலாம் என்னும் கோட்பாடு உறுதிப்படுவதாக பிரிட்டனைச்சேர்ந்த அகழாய்வாளர்கள் டிமோதி டாவில் *( Timothy Darvill)* மற்றும் ஜியோஃப் வெயின்ரைட் *(Geoff Wainwright)*ஆகியோர் கூறுகின்றனர்

250 கி.மீ. தொலைவில் உள்ள வேல்சிலிருந்து நீலக்கற்களைக் *(blue-stones from Wales)* கொண்டுவந்து சேர்த்ததற்குப் பின்னால், நோய்தீர்க்கும் *(healing)* காரணம் மறைந்திருப்பதாகவும் அவர்கள் கருதுகின்றனர். .

## கல்வட்டத்தின் அடியில் ஆய்வு: (Mapping the ground underneath Stonehenge)

கல்வட்டம் அமைந்திருக்கும் பகுதியிலும், அதனைச் சுற்றியுள்ளப் பகுதிகளிலும், நிலத்தைத் தோண்டாமல், தரையைத் துளைத்துச் செல்லும் ரேடார், மற்றும் ஜீ.பி.எஸ் துணையுடன் செயல்படும் காந்தமானிகளையும் (GPS guided Magnetometers) கொண்டு, இரண்டு மைல் (3.2 கி.மீ) ஆழத்திற்கு ஆய்வுகள் செய்யப்பட்டன. 17 நினைவுச் சின்னங்கள் (Monuments), பெரும்பள்ளங்கள் (Ditches), ஆழமான குழிகள் (Pits), என்று தரைக்கு அடியில் புதைந்திருக்கும் நூற்றுக்கணக்கானவற்றை அது ஆவணப்படுத்தியது.

அவற்றுள் முதன்மையானது டுரிங்டன் சுவர்கள் (Durrington Walls). ஏறத்தாழ, ஒரு மைல் (1.6கி.மீ) நீளத்திற்கு வட்டவடிவ இணைகரைகள்(Parallel Banks) இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. சாலிஸ்பரி கல்வட்டத்திற்கு வடக்கில் அமைந்திருக்கும் டுரிங்டன் சுவர்கள் உள்ளடக்கும் நிலப்பரப்பு, பொது ஆண்டிற்கு முன்பு 2000 முதல் 1600 ஆண்டுகள் வரையில் வாழ்ந்த புதுக்கற்கால மக்களின் விருந்துகூடலுக்கான இடமாகப் பயன்பட்டிருக்கிறது. அங்கு கிடைத்திருக்கும், மண்பாண்டங்களும், விலங்குகளின் எலும்புகளும் அதனை உறுதிசெய்கின்றன. கல்வட்டமும், டுரிங்டன் கூடமும், ஒரே வளாகத்தின் இரு கூறுகளாக இருந்திருக்கவேண்டும் என்கின்றனர் ஆய்வாளர்கள்.

ஆய்வாளர்களைப் பெரிதும் வியப்படைய வைத்த மற்றொரு கண்டுபிடிப்பு, கல்வட்டத்திற்கு வெளியில் நிலத்தில் புதைந்திருந்த இரண்டு மைல் (3.2கி.மீ) நீளமும், 300 அடி இடைவெளியும் கொண்ட இணைப்பள்ளங்கள்(Cursus) அது, கல்வட்டம் காலத்திற்குப் பலநூறு ஆண்டுகளுக்கு முன்பே எழுப்பப்பட்ட நேர்கோட்டு நினைவுச்சின்னமாக (linear monument) இருந்திருக்கவேண்டும் என்கின்றனர் ஆய்வாளர்கள்.

கல்வட்டத்தைச் சுற்றியுள்ளப் பள்ளங்களில் இடைவெளிகள் இருப்பதும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக, வடக்கில் காணப்படும் இடைவெளி மக்கள் கல்வட்டத்திற்குள் நுழைந்து, வெளியேறும் வாயிலாக இருந்திருக்கிறது. கல்வட்டம், சூரியன் நகரும் கிழக்கு-மேற்குத்திசைக்கு இணையாக அமைந்துள்ளது. ஆனால் மக்கள் , கல்வட்டத்திற்குள் வடக்கு-தெற்காக வந்துபோயிருக்கிறார்கள். இவை எல்லாவற்றையும் ஒருங்கிணைத்துப் பார்க்கும்போது, இப்போது நிலத்திற்கு அடியில் புதைந்திருப்பவை, முற்காலத்தில் தரைக்கு மேலாக இருந்த ஒரு மாபெரும் மக்கள் கூடும் வளாகமாக இருந்திருக்கவேண்டும் என்னும் முடிவுக்கு வரலாம்.

கல்வட்டம் நடு-கோடை சூரியத்திருப்புநாளின் சூரிய எழுச்சி (Sunrise of Midsummer solstice) மற்றும் குளிர் சூரியத்திருப்புநாளின் சூரிய வீழ்ச்சியுடன் (Sunset of Winter solstice) ஒருங்கிணையும் விதத்தில் அமைக்கப்பட்டுள்ளது. கோடை சூரியத்திருப்புநாளின் விடியலின்போது, கல்வட்டத்தின் மையத்தில் உள்ள பலிபீடக்கல் (altar stone-stone 80)), கொலைக்கல் (slaughter stone-stone, 95) நோய்தீர்க்கும் கல் (heal stone- stone96) ஆகிய மூன்றும், உதித்தெழும் சூரியனின் கதிர்களுடன் ஒரே நேர்கோட்டில் ஒருங்கிணைவதைப் பார்ப்பவர்களுக்கு ஒருவித பரவசம் ஏற்படும்.

இந்தவிதமாகக் கல்வட்டம் அமைந்திருப்பது தற்செயல் நிகழ்வாக இருக்க முடியாது. அன்றைய தொல்குடிமக்கள், வானியல் நிகழ்வுகளை அவதானித்து, அதன் அடிப்படையிலேயே கல்வட்டத்தை உருவாக்கியிருக்கவேண்டும் என்னும் முடிவுக்கு வரலாம். சாலிஸ்பெரி கல்வட்டம், வரலாற்றுக்கு முந்தைய தொல்குடி மக்களின் தொழில்நுட்ப அறிவு, விண்ணியல் அறிவு மற்றும், திறமைக்குச் சான்றாக விளங்குகிறது.

கரோனா பெருந்தொற்று காரணமாக, 2021 ஆம் ஆண்டிற்கான சூரியத்திருப்புநாள் கொண்டாட்டங்கள், கல்வட்டத்தில் தடைசெய்யப்பட்டுள்ளன. ஆனாலும், காட்சி ஊடகங்களில் சூரிய எழுச்சியும், வீழ்ச்சியும் ஒளிபரப்பப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள். 1986-இல், 'பன்னாட்டு கல்வி அறிவியல் கலாச்சார கழகம்' (UNESCO அமைப்பு, 17 மைல் (27.2 கி.மீ) தொலைவில் உள்ள ஆபரி (Avebury) கல்வட்டத்தையும் சேர்த்து, 'உலகத் தொல்வரலாற்றுப் பரப்பு ' ( World Heritage Site) என்று அறிவித்தது. 1986-ஆம் ஆண்டு முதல், ஒவ்வொரு ஆண்டும், ஒரு மில்லியன் பார்வையாளர்கள், சாலிஸ்பரி கல்வட்டத்தைக் காண்பதற்காக வருகின்றனர்.

கலவட்டப் பகுதிக்குள் உள்ள நிலத்தைத் தனிநபர்கள் சேதப்படுத்துவதும் நிகழ்ந்திருக்கிறது.1620-இல் ஜார்ஜ் வில்லர்ஸ் (George Villers, First Duke of Buckingham) என்பவரால், புதையல் தேடும் நோக்கத்துடன், கல்வட்டத்தின் நடுவில் ஆழமாகத் தோண்டப்பட்டிருக்கிறது.

1877-இல் மண்புழு ஆய்விற்காக, பரிணாமக்கொள்கையை வெளியிட்ட சார்ல்ஸ் டார்வின் (Charles Darwin) கல்வட்டம் பகுதிக்குச் சென்றிருக்கிறார். அதன்பொருட்டு, இரண்டு ஆழமான குழிகளை கல்வட்டப் பகுதியில் தோண்டியும் இருக்கிறார். அங்கு டார்வின் செய்த ஆய்வு முடிவுகள், 1881-இல் வெளிவந்த அவரது 'The Formation of Vegitable Mould Through the Action of Worm' என்னும் நூலில் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

ஆனால், இன்று தொல்-நினைவுச்சின்னம் (Ancient Monument) மற்றும் அகழாய்வுப்பரப்பு (Archeological site) சட்டங்களின் அடிப்படையில், சாலிஸ்பரி கல்வட்டம் பாதுகாக்கப்பட்ட இடமாகும். அங்கு செல்லும் சுற்றுலாப்பயணிகள், அதற்கான விதிமுறைகளுக்குக் கட்டுப்பட்டே நடக்கவேண்டும். எவர் ஒருவருக்கும், அங்குள்ள கற்களைத் தொடுவதற்கோ, அவற்றின்மீது சாய்ந்து நிற்பதற்கோ, அல்லது கற்களின்மீது ஏறி நிற்பதற்கோ, அங்குள்ள தரையைத் தோண்டுவதற்கோ அனுமதி இல்லை. மீறினால், கடுமையாகத் தண்டிக்கப்படுவார்கள்.

**கட்டுரையாளர்: இயற்பியல் பேராசிரியர் (பணிநிறைவு)**

இரா. எட்வின்

65 / 66

# காக்கைச் சிறகினிலே

**கொ**ரோனா இரண்டாவது அலையை கட்டுப்படுத்த முடியாமல் போனதற்கும் இத்துனை பேரழிவிற்கும் மோடியே பெருங்காரணம் என்று ஆர்.எஸ்.எஸ் அமைப்பின் தலைவர் மோகன் பகவத் கூறி இருக்கிறார். அவர் சொல்லித்தான் இது தெரிய வேண்டும் என்ற நிலை இல்லை. இது ஒரு "க்ளோபல் சீக்ரட்"

கமல் ராணி வருண், சேத்தன் சவுகான், விஜய் காஸ்யப் ஆகிய உத்திரப்பிரதேச அமைச்சர்கள் மூன்று பேரும், தால் பகதூர் கோரி, சேகர் சிங் கல்வார், ரமேஷ் திவாகர், சுரேஷ் குமார், ஸ்ரீவஸ்தா ஆகிய ஐந்து உத்திரப் பிரதேச சட்டமன்ற உறுப்பினர்களும் இதுவரைக்கும் கொரோனாவிற்கு பலியாகி உள்ளனர். உத்திரப் பிரதேசத்தில் பிணங்களை எரிப்பதற்கு மரக்கட்டைகள் இல்லை என்ற நிலை இருக்கிறது.

கங்கையில் பிணங்கள் மிதக்கின்றன. இரண்டு சக்கர வாகனங்களில் பிணங்களைக் கொண்டு செல்லும் அவலம் இன்னும் அங்கு நீடிக்கிறது.

தங்களது தந்தையின் சாம்பலை வாங்குவதற்காக வந்த இளைஞர்களின் கைகளைப் பிடித்துக்கொண்டு காலை வருமாறு கூறுகிறார்கள் மயான ஊழியர்கள். காலை 6 மணியில் இருந்து அவர்கள் இடைவெளி இன்றி உடல்களை எரித்துக்கொண்டே இருப்பதை வந்தவர்களும் அறிவார்கள். கடைசி பேருந்திற்கு இன்னும் இருபதே நிமிடங்கள் மட்டுமே இருப்பதாகக் கூறிய அந்த மயான ஊழியர்கள் காலை 5.30 க்கு எல்லாம் மயானம் வந்துவிட வேண்டும் என்பதும் அவர்களுக்குத் தெரியும். மயான ஊழியர்களின் முதுகைத் தட்டிக் கொடுத்தவாறே வந்தவர்கள் திரும்புகின்றனர்.

உயிர் வளி இல்லை, போதிய படுக்கைகள் இல்லை, ஆம்புலன்ஸ் இல்லை போன்ற கள எதார்த்தங்கள் எல்லோரும் அறிந்த தகவல்கள்தான் இந்த ஆண்டு ஜனவரி மாதம் மோடியை "க்ளோபல் லீடர்" என்று கொண்டாடிய அமெரிக்காவின் MORNING CONSULTS" மே மாதத்தில் நிலைமை தலை கீழாக மாறிப் போயுள்ளதாகக் கூறுகிறது.

ஜனவரியில் 13 நாடுகளில் நடத்திய ஆய்வில் மோடிக்கு 80 சத விகித மக்களின் ஆதரவு இருந்ததாகவும் தற்போது அது 63 சதவிகிதமாக சரிந்து நிற்பதாகவும் அது கூறுகிறது.

சென்ற ஆண்டு 63 சதவிகிதம் ஆதரவோடு இருந்த மோடி தற்போது 37 சதம் ஆதரவோடு செல்வாக்கு சரிந்து நிற்பதாக "சிலேட்டர்" கூறுகிறது. தொற்றை மோசமாக கையாண்ட பிரதமர் யார் என்ற கேள்விக்கு 90 சதவிகித வாக்குகள் மோடிக்கு கிடைத்ததாக "தி கான்வர்சேஷன்" கூறுகிறது. இவை எல்லாம் மக்களின் எண்ணவோட்டத்தின் பிரதிபலிப்பு. ஆனால் மோடியும் எதிர்க்கட்சிகளும் தெரிந்து கொள்ள ஆளுக்கு ஒன்று உண்டு.

மோகன் பகவத் கூறுவதில் இருந்து ஆர்.எஸ்.எஸ். மோடியின் மீது முழுப் பழியையும் போட்டுவிட்டு தாங்கள் தப்பித்துக் கொள்வதற்கான முயற்சியில் இருப்பதையும், மோடியை கழற்றிவிட்டு யோகியை கொண்டுவர முனைவதையும் புரிந்துகொள்ள முடிகிறது.

மோடியின் செல்வாக்கு வெகுவாக சரிந்துள்ளதைக் கூறிய "சிலேட்டர்", தொற்றைக் கையாளத் தெரியாமல் மோடியின் செல்வாக்கு சரிந்து கிடக்கும் இந்தச் சூழலை எதிர்க் கட்சிகள் பயன்படுத்திக் கொள்ளவில்லை. எனவே இன்னமும் மோடியே பிரபலமானவராக இருக்கிறார் என்றும் கூறுகிறது.

◆ ◆ ◆

**ஊ**ரடங்கு காரணமாக விழுப்புரம் மாவட்டம் ஒட்டனந்தல் கிராமத்தில் உள்ள அம்மன் கோவிலில் "கூல் ஊத்தும் திருவிழா"வினை கிராம மக்கள் நிறுத்தி விட்டனர். ஆனால் அந்த ஊர் தலித் மக்கள் தங்கள் பகுதியில் இதற்கான ஏற்பாடுகளை செய்து விட்டனர். இதுகுறித்து அந்தக் கிராமத்து ஆதிக்க சாதியைச் சார்ந்த ஒருவர் காவல் நிலையத்தில் புகார்

கொடுத்துள்ளார்.

காவலர்கள் வந்து ஊரடங்கில் திருவிழா நடத்தக் கூடாது என்று கூறியதும் தலித்துகளும் நிகழ்ச்சியைக் கைவிட்டு விட்டனர். ஆனால் இவர்கள் ஏற்பாடு செய்திருந்த மெல்லிசைக் குழுவினர் இந்த விவரம் தெரியாமல் ஊருக்கு வந்துவிடவே வேறு வழி தெரியாமல் தங்களது வாகனத்தில் இருந்தபடியே பாடல்களைப் பாடியுள்ளனர். இதுவும் புகாராகப் போகவே காவலர்கள் தலையிட்டு இசைக்குழுவைத் திருப்பி அனுப்பியிருக்கிறார்கள்.

ஒரு புள்ளியில் இது குறித்து இருசாராருக்கும் வாக்குவாதம் முற்றவே பிரச்சினை பஞ்சாயத்திற்குப் போயிருக்கிறது. தலித்துகளை தங்கள் காலில் விழுந்து மன்னிப்பு கேட்குமாறு பஞ்சாயத்து தீர்ப்பளிக்க, தலித் பெரியவர்கள் ஆதிக்கவாதிகள் காலில் விழுந்திருக்கிறார்கள்.

வலைதளங்களில் இந்த நிகழ்ச்சி வைரலாகவே மாவட்ட ஆட்சித் தலைவரும் அதிகாரிகளும் அங்கு விரைந்திருக்கிறார்கள். காலில் விழச் சொன்ன பிரிவினரில் 8 பேர் மீதும் விழுந்தவர்கள் பிரிவில் 50 பேர் மீதும் வழக்குப் பதியப்பட்டு இருக்கிறது.

தீண்டாமை ஒழிப்பு முன்னணியின் மாநிலத் தலைவர்செல்லக்கண்ணு அவர்களும் பொதுச் செயலாளர் சாமுவேல்ராஜ் அவர்களும் பாதிக்கப்பட்டுள்ள தலித் மக்கள்மீது போடப்பட்டுள்ள பொய் வழக்கினைத் திரும்பப் பெற வேண்டும் என்று கோரியுள்ளனர். தாக்கியவர்கள் மீது 8 வழக்குகளும் தாக்கப்பட்டவர்கள் மீது 50 வழக்குகளும் காவல்துறையால் பதியப்படுமானால் சாதி வன்கொடுமைகள் ஒழியவே ஒழியாது.

முதல்வர் இதற்கெதிராக ஏன் குரல் கொடுக்கவில்லை என்பதும் புதிராகவே இருக்கிறது.

◆ ◆ ◆

**26.11.2020** இல் நிவர் புயல் தமிழகத்தைத் தாக்குகிறது. தற்காலிக நிவாரணப் பணிகளுக்காக 614.83 கோடியும், நிரந்தர நிவாரணப் பணிகளை நிறைவேற்ற 3108.55 கோடியும் ஆக மொத்தமாக 3750.38 கோடி ரூபாயை மாநில அரசு ஒன்றிய அரசிடம் கேட்கிறது.

08.12.2020 அன்று ஒன்றிய அரசின் குழு தமிழகத்தை பார்வை இடுகிறது. 13.02.21 அன்று ஒன்றிய அரசு 613.14 கோடியை வழங்குகிறது.

17.05.2021 அன்று டவ் தே புயல் குஜராத்தைத் தாக்குகிறது. 19.05.2021 அன்று குஜராத்திற்கு ஒன்றிய அரசு 1000 கோடி ரூபாயை நிவாரணத் தொகையாக வழங்குகிறது. அதாவது புயல் தாக்கி 24 மணிநேரம் முடிவதற்குள் நிவாரணத் தொகையை ஒன்றிய அரசு வழங்கி இருக்கிறது. இப்படித்தான் ஒரு ஒன்றிய அரசு செயல்பட வேண்டும்

26.11.2020 அன்று புயல் எங்களைத் தாக்குகிறது. 13.02.2021 அன்று சொல்ப அளவிலான நிவாரணம் வருகிறது எங்களுக்கு குஜராத்திற்கு உடனேவா என்றெல்லாம் கேட்க மாட்டோம். எங்களுக்கு புயல் பாதிப்பின் வலி தெரியும். பாதிப்புக்கு உள்ளான தமிழக மக்களும் குஜராத் மக்களும் ஒன்றுதான்.

சகலத்தையும் இழந்து தவிக்கும் குஜராத் மக்களுக்கு இந்தத் தொகை பத்தாது. மாநில அரசு கேட்பதை ஒன்றிய அரசு தர வேண்டும். எல்லா மாநிலங்களையும் ஒன்றிய அரசு ஒன்றாகவே பார்க்க வேண்டும்.

◆ ◆ ◆

**தி**ல்லி சிறைகளில் அதிக பட்சமாக 10026 கைதிகளைத்தான் வைத்திருக்க முடியும். ஆனால் தற்போது 19679 கைதிகள் தில்லி சிறைகளில் வைக்கப்பட்டுளனர் என்று தில்லி சிறைத்துறைத் தலைவர் உச்சநீதிமன்றம் அமைத்திட்ட உயர்மட்டக் குழுவிடம் கூறியுள்ளார்.

நீதியரசர் விபின் சங்வி தலைமையான அந்த உயர் மட்டக்குழு இப்படியே போனால் இன்னும் சில வாரங்களில் கைதிகள் மூச்சுவிடுவதற்கு சிரமப்பட வேண்டிய நிலை வரும். மனிதகுலம் எதிர்கொள்ள இருக்கும் மோசமான அனுபவமாக இது இருக்கும் என்று கூறி இருக்கிறது.




சிறைகளில் உள்ள கைதிகளின் எண்ணிக்கை சிறைத்துறை ஊழியர்களையும் இந்தப் பெருந்தொற்றுக்கு ஆட்படுத்தும் என்றும் அந்தக் குழு கவலை தெரிவித்துள்ளது. எந்திர கதியில் கைது செய்யாதீர். பிணையில் பரோலில் செல்வதற்கு அனுமதி அளியுங்கள்.

முதல் தொற்றின்போது பரோல் மற்றும் பிணையில் சென்றவர்களை மீண்டும் அவற்றின்படியே அனுப்புவது போன்ற வழிமுறைகளை உச்சநீதிமன்றம் தெரிவித்திருக்கிறது. இவற்றை சிறைத்துறை உடனடியாக நிறைவேற்ற வேண்டும்.

இவற்றையும் மேற்கோள்காட்டி முதல்வர் விடுத்துள்ள கோரிக்கையை ஏற்று எழுவரையும் விடுதலை செய்வதற்கு குடியரசுத்தலைவர் ஒப்புதல் தர வேண்டும்.

கிருஷ்ணப்ரியா




புலியூர் முருகேசனின் ‘பாக்களத்தம்மா’ நாவல் ஒரு பார்வை..

# தந்தை வழிச் சமூகத்தின் மையச் சரடாக நிற்கும் நிலமும் நிலம்சார்ந்த குடும்பவன்முறைகளும்…

குடும்பம் என்ற நெடுங்கால அமைப்பை, குடும்ப வாழ்வில் இருக்கும் சிக்கல்களை, சமூகம் குடும்பங்களின் மீது பழக்கவழக்கங்கள் என்ற பெயரால் ஏற்படுத்திக் கொண்டிருக்கும் விளைவுகளை, அந்த சிக்கல்கள் மனிதர்கள் மீது, உறவுகள் மீது ஏற்படுத்துகிற அழுத்தங்களை எந்த அளவுக்கு வெளிப்படுத்த முடியுமோ அந்தளவுக்கு ஒரு நாவல் வெளிப்படுத்துகிறது என்பது அந்த நாவல் மீது ஈர்ப்பை ஏற்படுத்துகிறது. அவ்வாறான ஒரு நாவலாக புலியூர் முருகேசனின் பாக்களத்தம்மா நாவல் அதன் பக்கங்களை திருப்ப வைத்தது.

சமாதியின் மீது மெழுகப்பட்டிருக்கும் மண்ணிலிருந்து துவங்குகிற கதை அதே சமாதியின் மீது ஏற்றப்பட்டிருக்கும் அகல் விளக்குகள் மினுங்குவதிலும், பாக்களத்தம்மா உருவாரத்தின் கையிலுள்ள பருத்தி நூற்கயிறு அசைவதில் முடிகிறது. மனிதர்கள் வாழ்வுக்கும் சாவுக்கும் இடையிலான குறுகிய கால கட்டத்தை, வாழ்விலிருந்து விலகி வாழ்வின் சம்பிரதாயங்களாக கால காலமாக இந்த சமூகம் சொல்லிக் கொடுத்திருக்கும் எண்ணற்ற கதைகளை செயல்படுத்த விரயம் செய்து, வாழாமலே போய் விடுவதை தன் இயல்பான வார்த்தைகளால் கதை ஆக்கியிருக்கிறார். நாவலை வாசிக்கும்போது இந்த நாவல், அதன் கதாபாத்திரங்கள் நம் குடும்பத்திலோ அல்லது நாம் கேள்விப்பட்ட யாருடைய குடும்பத்திலோ, நடந்த நிகழ்வுகளின் தொகுப்பு போல, ஒரு கூட்டுக் குடும்பத்தின் அடுக்குகளில் அடிக்கடி கேள்விப் படுகின்ற சண்டை சச்சரவுகளை போல இருப்பது கதையின் பலமாகவே உள்ளது.

ஆணாதிக்க சிந்தனை மேலோங்கி இருக்கும் இந்தச் சமூகத்தில், பெண்களுக்குள் விதைக்கப்பட்டிருக்கும் அந்த சிந்தனையின் வெளிப்பாடு, உடன்பிறந்தோரிடம் பொருளாகவும் பணமாகவும் எவ்வளவு முடியுமோ அவ்வளவு கறந்துவிட துடிக்கும் இயல்பை, பழக்கவழக்கங்கள் என்ற பெயரால் சமூகம் எப்படி கெட்டிப்பட்டு போயிருக்கிறது என்பதை நாவலில் விவரித்துப் போகிறார். இப்படியும் நடக்குமா என எண்ணும் படி சில இடங்களில் சில காட்சிகள் தோன்றினாலும் கூட, எப்படியும் கூடத் தான் நடக்கிறது பலரது வாழ்விலும் என்ற எண்ணம் அந்த பகுதிகளை நம்மை கடக்க வைக்கிறது.

நாவலின் கதாநாயகன் நாகையா சிறு குழந்தையாக இருக்கும்போது அவனது பாட்டி பாக்களத்தம்மா அந்த குழந்தை தன் கைப்பிடியில் இருந்து நழுவி விடாமல் இருக்க, பருத்தியை விதைத்து பஞ்செடுத்து, அவளே ராட்டையில் நூல் நூற்று, அந்த நூல் கயிறால் அந்த சிறுவனை தன்னோடு இணைத்துக் கொள்கிற ஒரு காட்சியை விவரிக்கிறார். தனக்கென்று சொந்தமாக ஒரு இடம் இருக்கும்போது, அந்த இடத்தில் தனக்கு பிடித்த ஒவ்வொன்றையும் நம்மால் பயிரிட்டுக் கொள்ள முடிகிற அந்த சுதந்திரத்தை அந்தக் காட்சியில் நம்மால் உணர முடிகிறது. விவசாயிகள் போராட்டம் கண் முன் வந்து போகிறது. வேளாண் சட்டங்கள் வருவதற்கு முன்பே

கூட இந்த கதை எழுதப்பட்டிருக்கலாம். ஆனால் இந்த காட்சியை படிக்கும்போதும், அதைப்பற்றி யோசிக்கும் போதும் இப்படி தோன்றுவதை தவிர்க்க முடியவில்லை. அதை வெறும் நிலமாகவோ, பருத்தியாகவோ பார்க்காமல் கற்பனையை இன்னும் கூட வளர்த்திக் கொள்ள முடிவது என்பது அந்த இடத்தின் சுவாரசியம். அதேபோல பருத்தியை நூலாக்குவதற்காக, அவர்கள் குடும்பத்திற்கு வந்த ஒரு காங்கிரஸ்காரர் கொடுத்துப் போன ராட்டையை எடுத்து வைத்து நூல் நூற்கும் காட்சியும் வருகிறது. பஞ்சே இல்லாத ராட்டை முன் அமர்ந்து நூல் நூற்கின்ற பிரதம அமைச்சரை கொண்ட தேசம் கண்முன் நிழலாடுகிறது. தபால் தந்தி அலுவலகத்தில் பணிபுரியும் நாகையாவைப் பற்றிய விவரிப்புகளோடு, தந்தி அலுவலகம் குறித்த விவரணைகள் சொல்லப்பட்டிருக்கிறது. தந்தி என்ற வார்த்தையே வழக்கொழிந்து போய் விட்ட இந்நாளில் தந்தி அலுவலக “கட் ...கட...” ஒலிகள், அந்த ஒலிகளின் வழி பரவும் மரணத்தின் வாசனை ஆகியவற்றை வாசிக்கும்போது இழந்து விட்டவைகளின் சுமை கூடுகிறது.

கதை நாயகன் நாகையா போதைக்கு அடிமையாகி, உடன்பிறப்புகளாலும், உடன்பிறப்புகளின் மனதில் சமூகம் ஏற்றி வைத்திருக்கிற பழக்கவழக்கங்களாலும், அது தந்த மன உளைச்சலாலும் உருக்குலைந்து, உள்ளம் குலைந்து தடுமாறுகின்ற நாட்களில் உடன் பணிபுரிகின்ற ஒரு நல்ல மனிதரால் நாற்காலியுடன் நூலால் கட்டப்பட்டு இருக்கின்ற ஒரு காட்சியும் வருகிறது. வாழ்ந்து கெட்டவன் விழுந்துவிடாமல் கரம் கொடுக்கின்ற இதுபோன்ற மனிதர்களை அந்த ஒரு காட்சியிலேயே வெளிப்படுத்தி விடுகிறார் கதாசிரியர்.

புராணக்கதைகளில் எமதர்மராஜா பாசக்கயிறு கொண்டு உயிரை எடுக்க வருவதாக சொல்லப்படுவதுண்டு. கயிறு வீசி உயிரை பறித்து எமன் செல்வதாக கூறக் கேட்டிருக்கிறோம். கயிறு என்ற அந்த சொல்லாடல் மனிதவாழ்வின் உறவுகளையும் மனங்களையும் இணைக்கின்ற ஒரு முக்கியமான, பூடகமான சொல்லாடல் என்ற உணர்வை இந்த கயிற்றில் இணைத்தல் உருவாக்குகிறது. போலவே, ஒவ்வொரு பெண்ணும் குழந்தையிலிருந்து பிள்ளைகளை, முக்கியமாக ஆண் பிள்ளைகளை தங்கள் கைகளிலேயே கட்டி வைத்துக்கொள்ளவேண்டும் என்று நினைக்கிற அந்த மனோபாவத்தை, அப்படியான ஒரு எண்ணம் ஏற்படும் விதமான ஆணாதிக்க சிந்தனையை கதையில் அந்த இடங்களில் உணரமுடிகிறது. தாயாக இருக்கும் போது, பிறகு தாரமாக ஆனபிறகும், தன் மகனை, தன் கணவனை தன் கைப்பிடியில் வைத்துக்கொள்ள எப்போதும் முனைப்பாக இருக்கிறார்கள் பெரும்பாலான பெண்கள்.. அந்த முனைப்பில் பல தியாகங்களையும், சறுக்கல்களையும் எதிர்கொள்கிற பெண்களை காட்சிப்படுத்துகிறது நாவல். நாவலில் வருகிற நாயகனின் பாட்டி, தாய், சகோதரிகள்,மனைவி என்று எல்லா பெண்களும் ஏதோ ஒரு விதத்தில் பரிதாபத்துக்குரியவர்களே. சகோதரனை விரட்டி, துன்புறுத்தி, மன உளைச்சலை ஏற்படுத்தி,பணத்தை வசூல் செய்கிற, சொத்தை எழுதி வாங்குகிற பெண்களை அவர் காட்சிப்படுத்தி இருந்தாலும், அந்தப் பெண்கள் ஐயோ பாவம் என்று எண்ணும்படியாக படைக்கப்பட்டிருக்கிறார்கள். கல்வியறிவோ சுயசிந்தனையோ ஏதுமற்ற, கணவனும் ஆணாதிக்க சமூகமும் சொல்லிக்கொடுத்து இருக்கின்ற விஷயங்களையே செயல்படுத்துகின்ற பெண்களாக அவர்களை பார்க்கும்போது பரிதாபம்தான் வருகிறது. அக்கா இறந்ததும் அக்காவின் கணவருக்கு கட்டி வைக்கப்பட்டு, தான் குழந்தை பெற்றுக் கொள்ளாமல் தன் சகோதரி மகளை தன் மகளைப் போல் வளர்த்த பாக்களத்தம்மா , உயிலில் தங்களுக்கு நியாயம் கிடைக்கவில்லை என்று, வளர்த்து எல்லாம் செய்தவளை உதறித் தள்ளும் காமாட்சி, சொத்து, நகைகளுக்காக சகோதரனைப் பிழிந்தெடுக்கும் மருதம்பா, தங்கம்மா , கணவன் செய்வதற்கு மறு பேச்சு பேசாமல் தலையாட்டும் ராணி, நீருக்கடியில் முத்தம் கொடுக்கும் மச்சக்கண்ணி( அது ஏன் அவர் நர்ஸாக இருக்க வேண்டும்? என்பது கோபமூட்டுகிற கேள்வி) என்று எல்லோரும் ஏதோ ஒரு விதத்தில் பரிதாபத்துக்குரியவர்களே.

அக்கா இறந்தவுடன் அக்கா மகளை தன் குழந்தை போல் வளர்த்த பாக்களத்தம்மாவுக்கு வேறு குழந்தைகள் இல்லை. இந்த தியாக உருவமே கதையின் நாயகி. கணவன் செய்வதற்கு மறு பேச்சு பேசாமல் உடன் வருகிற மனைவி ராணியும் ஒரு சில வரிகளில் நல்லவளாக்கப்பட்டு விடுகிறாள். தன் தேவைக்கு மேலும் சொத்தை, பணத்தை பெற்றுவிட துடிக்கிற ஆண்களின் மனைவிகளான மருதாம்பாவும், தங்கம்மாவும் உடன்பிறந்த சகோதரன் மீது பிரியமற்ற கொடியவர்களாக இருக்கிறார்கள். கொள்ளி வைக்க ஆண்பிள்ளை வேண்டும் என்ற எண்ணம் பாக்களத்தம்மாவின் சொத்துக்களை கொழுந்தன் மக்களுக்கு எழுதி வைக்க வித்திடுகிறது. அந்த சொத்தே, குடும்பம் என்ற பெருமரம் இற்று வீழ காரணமாக ஆகிறது.ஆணாதிக்க எண்ணங்கள் தான் உண்மையான எதிரி. ஆனால் கதைப்போக்கு முழுவதும் சிறிதும் பாசமின்றி பணத்துக்காக சகோதரனை உறிஞ்சி உயிர் வளர்க்கும் சகோதரிகள் பற்றியதாக உள்ளது. சொத்துக்காக ஆச்சியை உதறித் தள்ளும் காமாட்சி தான், மருமகன்களால் அல்லல் படும் போது மகள்களை நினைத்து வெதும்புகிறாள். இறுகிப் போன இந்த சமூக கட்டமைப்பின் இறுக்கமாக இருக்கும் ஆண்களல்ல , அவர்களால் உருவாக்கப்பட்ட பெண்களே குற்றவாளிகள் என்பது போல கதை நகர்கிறது. ஒரு வேளை இந்த நாவல் நாகையாவைச் சுற்றி சொல்லப்படாமல், மருதாம்பா பார்வையில் எழுதப்பட்டிருந்தால் சமூகத்தின் வேறு பரிமாணங்கள் வெளிப்பட்டிருக்கக் கூடும்.

அதே போல் நாயகனின் சிறு வயது முதல் தொடர்ந்து வரும் அந்த நூல், ஆசிரியரின் நூல் அரசியலை நினைவூட்டுகிறது. சமூகத்தின் சாதிய கட்டுமானத்தை இறுக்கி கட்டி வைத்திருக்கிற நூலை வெட்டிவிட துடிக்கும் அவரது பேனாமுனை, அரசியல் கலவாத எதையும் எழுத முடியாத அவரது பேனாமுனை இப்படி எதையோ எழுதி விடுகிறதோ என்ற எண்ணம் ஏற்படுகிறது. அதனால் என்ன,

அரசியல் கலவாத ஒரு நாவல் இருக்கமுடியுமா என்ன? பிறப்பு முதல் இறப்பு வரை அனைத்துமே அரசியல் ஆகிவிட்ட, அரசியலாக உள்ள இந்த சூழலில் ஒரு குடும்ப நாவல் மட்டும் அரசியலுக்கு அப்பாற்பட்டு எப்படி இருந்து விட முடியும்? குடும்பத்தின் கதையாக தோன்றுகின்ற இந்நாவல், உண்மையில் ஒரு குடும்பத்தின் கதையல்ல. தாய்வழிச் சமூகத்திலிருந்து தந்தை வழிச் சமூகமாக மாறிவிட்ட ஒரு சமூகத்தின், பரம்பரை சொத்து, நிலவுடமை, சாதி சமூக பொருளாதார அழுத்தங்கள், பொருளாதார படிநிலையின் தாக்கங்கள் ஆகியவை ஏற்படுத்துகின்ற அனைத்து மேடு பள்ளங்களையும் தழுவி ஓடுகின்ற ஒரு அருவியைப் போல் இந்த நாவல் இருக்கிறது என்று சொல்லலாம்.

நாவல் பேசப்படுகின்ற காலம், இடம், அங்கு பேசப்படுகிற வட்டார மொழி ஆகியவற்றோடு இணைந்து உருவாகியிருக்கிற நாவலில், அந்தக் காலத்தில் நிகழ்த்தப்பட்ட நாடக காட்சிகள், நாடகத்தில் இடம் பெறும் பாடல்கள், நாடக நடிகர்களுக்கு சமூகத்தில் இருந்த மதிப்பு என்று பல செய்திகள் பதிவாகியுள்ளன. அன்றைய நாடகங்களில் முக்கிய பங்கு வகித்த பபூன் எனப்படும் கோமாளிகள் குறித்து அதிகம் பேசப்படவில்லை என்றாலும் காப்பியைக்கூட காமெடியாகக் குடிக்கும் கோமாளி வந்து போகிறார். சமையல் குறிப்புகள், கிராமங்களில் வீட்டில் பிரசவம் நடந்த காட்சி, மருத்துவச்சி என்ற கதாபாத்திரத்தின் முக்கியத்துவம் என்று பல அன்றைய விவரங்கள் கதையினூடாக வந்து விழுகிறது. சில இடங்களில் வாசிக்க சோர்வு தோன்றுகிறது. நாவல் முழுவதும் போதையின், மணம் வீசுகிறது. நாடே அதில் தானே தத்தளிக்கிறது.!

சில பக்கங்களின் சோர்வையும் தாண்டி நாவலின் போக்கு முழுமையாக நாவலை வாசித்து விட வேண்டும் என்ற ஈர்ப்பை தருகிறது. நம் சமூகத்தில், நாமும் கூட தொடர்புற்று இருக்கிற கதை என்கிற எண்ணம்தான் அதற்கு காரணம்.

வெடிப்புற அரசியல் பேசாத, ஆனாலும் அதை தவிர்க்க முயலாத குடும்ப நாவல் பாக்களத்தம்மா.

**இரங்கல்**

### கே துளசிஐயா வாண்டையார்

# உழைக்கும் மக்களின் பிள்ளைகளுக்கு உயர்கல்வி தந்தவர்



பூண்டி கே. துளசிஐயா வாண்டையார் அவர்கள் 17.05.2021 அதிகாலை காலமானார்.

பொதுவாழ்வுக்கு இலக்கணம் வகுத்தவர்.... பல்லாயிரம் ஏழை எளியோருக்கு... முதல் தலைமுறை மாணவர்களுக்கு... தங்குதடையற்ற உயர்கல்வியளித்தவர்.

தன் இல்லத்தின் ஒரு பகுதியையே வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழும் உழைக்கும் மக்களின் பிள்ளைகளுக்கான விடுதியாக்கியவர்... அவர்களுக்கு உணவும் உறைவிடமும் வழங்கி உயர்கல்வியும் அளித்து அத்தனை பேரும் வாழ்க்கையில் உயர அடித்தளமிட்டவர்.

பணம் கொடுத்தவருக்கு இடம், நல்ல மதிப்பெண்கள் பெற்றவருக்கு இடம் என்றெல்லாம் எந்தவித பாகுபாடுமில்லாமல் படிக்க விரும்புகிற அனைவருக்கும் நன்கொடை ஏதுமின்றி படிக்க வாய்ப்பளித்ததோடு தரமான கல்வியுமளித்த பெருந்தகையாளர் ஐயா வாண்டையார்.

ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட புத்தகங்களை உள்ளடக்கிய உயிரோட்டமான நூலகத்தை உருவாக்கி மாணவர்கள் அனைவரின் பொது அறிவு மேம்பாட்டுக்கு உளப்பூர்வமான பாதையமைத்த அறிவுச்செம்மல் ஐயா அவர்கள்.

2018 ஆம் ஆண்டு ஈரோடு புத்தகத் திருவிழாவின் நிறைவுநாள் (14.08.2018) நிகழ்வில் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்று புத்தகத் திருவிழாவிற்குப் புத்துணர்ச்சியளித்தார்கள்... அப்போது அவருக்கு வயது 90.

தமிழகத்தின் ஒரு முன்மாதிரி கல்வி நிறுவனமாக பூண்டி அ.வீரையா வாண்டையார் நினைவு ஸ்ரீ புஷ்பம் கல்லூரியை உயர்த்திய.. நிலை நிறுத்திய வார்த்தெடுத்த.... பூண்டி ஐயா வாண்டையாரின் மறைவு... அரசியலில் நேர்மையும் தூய்மையும் எளிமையும் பூண்டிருந்த ஐயா வாண்டையார் அவர்களின் மறைவு தமிழ்கூறும் நல்லுலகத்திற்கு பேரிழப்பாகும்.

**- த.ஸ்டாலின் குணசேகரன்,**
**மக்கள் சிந்தனைப் பேரவையின் தலைவர்**

மு. ரமேசு

# வரலாற்றுநோக்கில் மணிமேகலைக் காப்பியம்

மணிமேகலைக் காப்பியம் பன்மைத்துவமான மொழி மற்றும் புவிப்பண்பாட்டு உயிர் அரசியல் கலாச்சாரமண்டலங்களின் இணைப்புகளைக் கொண்டுள்ளது. அவற்றை எதிரெதிராக நிறுத்தப்பட்டுள்ள இருமை தத்துவசாரங்களின் பின்புலத்திலிருந்து எவ்வாறு வாசிப்பது என்பதற்கான அடிப்படைகளின் தொடர்ச்சிதான். என்றாலும் நேரடியாக கதைக்குள் சென்று உரையாடலை தொடங்குவதற்குமுன் காப்பிய உருவாக்கத்தின் பின்புலம் குறித்து சற்று விளக்கம் வேண்டப்படுகிறது எனக் கருதுகிறேம். அந்தவகையில் தமிழ் இலக்கியவரலாற்றில் மணிமேகலைக் காப்பியத்தை இடப்படுத்துதல் Located, தமிழ் மையமரபிலிருந்து ஆசியாவின் தென்மேற்கு தொடங்கி இலங்கை துணையோடு தென்கிழக்காசியா வரையிலான புவிப்பண்பாட்டு அரசியலை விளக்குதல் ஆகியவற்றைச் செய்ய முயற்சிக்கிறது இக்கட்டுரை.

மணிமேகலைக் காப்பியத்திற்கு தமிழ் இலக்கிய வரலாற்றில் முன்மரபுகளும் உண்டு. பின்மரபுகளும் உண்டு. சங்க இலக்கியத்தை முன்மரபாகவும் அற இலக்கியத்துடன் கூடிய பிற காப்பியங்களை பின்மரபாகவும் கொண்டுள்ளது. இக்காப்பியம் கதையென்கிற நிலையில் சிலப்பதிகாரத்தின் தொடர்ச்சியாக இருந்தாலும் கருத்து அதாவது அறம்சார்ந்த எடுத்துரைப்புகள் என்கிறநிலையில் புறநானூறு மற்றும் திருக்குறள் என்று சொல்லப்படுகிற திரிக்குறளுக்கும் இடையில் அமைகிறது. உண்டிகொடுத்தோர் உயிர்கொடுத்தோரே, இந்திரர் அமிழ்தம் போன்ற எடுத்துரைப்புகள் இக்காப்பியம் புறநானூற்றோடு கொண்டுள்ள நெருக்கத்தையும் கற்புடையவள் சொன்னால் மழைப்பெய்யும், நூல்நய புலவர், நூலறி புலவர் என இக்காப்பியத்தில் வரும் தொடர்கள் திருவள்ளுவரை குறிப்பதாக விளக்கப்படுவதிலிருந்தும் திரிக்குறளோடு கொண்டுள்ள நெருக்கத்தையும் அறியமுடியும்.

திரிக்குறள் உள்ளிட்ட அறநூல்கள் நேரடியாகவும் சுருக்கமாகவும் குடிமக்களும் அரசனும் பின்பற்றவேண்டிய அறங்களை எடுத்துரைக்கின்றன என்றால் இதை ஒரு கதைவடிவில் அற முன்வைப்புகளை செய்வது மணிமேகலைக் காப்பியமாகும். மதுரைக்காஞ்சி, பட்டினப்பாலை, சிலப்பதிகாரம் ஆகியவை கதைவடிவில் அரசனுக்கு அறங்களை எடுத்துரைக்கின்றன. இந்தவகையில் மணிமேகலைக் காப்பியமும் இம்மரபை தொடருகிறது. சிலப்பதிகாரம் சமணசமயக் காப்பியம் என்றாலும் புத்த தத்துவத்தையும் புத்தசமயம் சார்ந்த நடைமுறைகளையும் தேவையான இடத்தில் மிகத்தெளிவாக விளக்குகிறது. புறநானூறுக்கும் மணிமேகலைக் காப்பியத்திற்குமான நெருக்கத்தை இன்னொரு நெறிமுறையைக் கொண்டும் அறியலாம். அது என்னவென்றால் மணிமேகலை சமயக் கணக்கர் தம் திறங்கேட்ட காதையில் வெவ்வேறு பத்து சமயவாதிகளோடு உரையாடுகிறாள். புறநானூறும் வெவ்வேறு சமயத் தத்துவங்களை பாடல்கள்தோறும் கொண்டுள்ளது. முரஞ்சியூர் முடிநாகனார் பாடலில் பூதவாதக் கருத்துகள் இருக்கிறது என்றால் பரணர் பாடலில் வைசேடிக கருத்தும், நறிவேறுவுதலையார் பாடலில் ஆசீவக கருத்தும் காரிக்கிழார் பாடலில் சமணக் கருத்தும், கபிலர் பாடலில் பூர்வ மீமாம்சைக் கருத்தும் குடப்புலவியனார் மற்றும் அவ்வையார் பாடலில் புத்தக் கருத்தும் இருப்பதை சான்றாகச் சொல்லமுடியும். இவ்வாறு நானூறு பாடல்களையும் தத்துவப் பார்வையில் வகைமைப்படுத்தி விளக்கமுடியும். இவற்றிலிருந்து பார்த்தால் ஒவ்வொரு புலவரும் தத்துவ பின்புலத்திலிருந்து கொண்டு தத்தம் செய்யுள்களை ஆக்கியளித்துள்ளனர் என்பதை அறியமுடிகிறது.

நகரப் பண்பாடுகளை எடுத்துரைக்கும் நிலையில் பட்டினப்பாலைக்கும், பெரும்பாணாற்றுப் படைக்கும் இடைப்பட்டதாக இக்காப்பியம்



விளங்குகிறது. பட்டினப்பாலை பூம்புகாரின் வளர்ச்சியை பதியேழு அறியா பழங்குடிகளுடன் மொழிபெயர் மாக்களும் கலந்துவாழும் உன்னதத்தின் உச்சத்தையும், நீர்ப்பாயல் துறைமுகப்பட்டினத்துடன் தொண்டைமான் இளந்திறையனின் காஞ்சி நகரத்தின் வளர்ச்சியையும் எடுத்துரைக்கின்றன, என்றால் மணிமேகலைக் காப்பியம் பூம்புகாரின் அழிவுடன் கூடிய சங்ககால சோழ அரசின் விழுகையையும் காஞ்சியுடன் கூடிய தொண்டையர் அரசின் எழுகையையும் எடுத்துரைக்கிறது.

பெரும்பாணாற்றுப்படையும், பட்டினப்பாலையும் கடியலூர் உருத்திரங்கண்ணனார் என்கிற ஒரே புலவரால் யாக்கப்பட்டுள்ளது. இவர் கரிகால் சோழனான பெருந்திருமாவளவனின் சமகாலத்தவரல்லர். பெரும்பாணாற்றுப்படைக்குப் பிறகு பட்டினப்பாலையை யாத்திருக்கவேண்டும். நெடுங்கிள்ளி, இளங்கிள்ளி காலத்தில் பூம்புகார் கடலுள் மூழ்குகிறது. அதன்பின் காஞ்சிபுரம் இளங்கிள்ளி காலத்திலேயே புதிய நகரமாக உருவாக்கப்படுகிறது. இளங்கிள்ளிக்குப் பிறகே தொண்டைமானிளந்திறையன் ஆட்சிக்கு வந்தான். இவர் சோழ அரசன் நெடுங்கிள்ளியின் வாரிசு என்பதால் தொண்டைமான் கேட்டுக்கொண்டதற்கு ஏற்ப கடியலூர் உருத்திரங்கண்ணனார் பட்டினப்பாலையை எழுதியிருக்கவேண்டும். மணிமேகலைக் காப்பியத்திலும் கரிகால் பெருவளத்தான் மூதாதையராக நினைவு கூரப்படுகிறான். ஒருவகையில் காலமுறைப்படி பார்த்தால் பெரும்பாணாற்றுப்படை, பட்டினப்பாலை இவற்றிற்கெல்லாம் முந்தியது மணிமேகலைக் காப்பியமாகும். இன்னும் சொல்லப்போனால் சிலப்பதிகாரத்திற்கும், மதுரைக்காஞ்சிக்கும் முந்தியது மணிமேகலைக் காப்பியமாகும். இனி இவைகுறித்து விளக்குவது தகும்.

### தமிழில் தோன்றியமுதல் காப்பியம் மணிமேகலை

தமிழில் தோன்றிய முதல் காப்பியம் மணிமேகலை என்றால் ஏற்றுக்கொள்வதில் பலருக்கு தயக்கம் இருக்கலாம், வெளிப்படையான வரலாறுகளோ முழுமையான தரவுகளோ இல்லாமை ஒருபுறம் என்றாலும் கிடைக்கபெற்றுள்ள இலக்கியங்களிலும் கல்வெட்டுகள் நாணயங்கள் உள்ளிட்ட தொல்லியல் சின்னங்களிலும் கிடைக்கின்ற நுண்தகவல்களை இணைத்து இக்கருத்திற்கு ஏதுவான வரலாற்று முறைமைகளை உருவாக்கும் முயற்சி போதுமான அளவிற்கு தமிழில் நடைபெறவில்லை.

இதுவரை அவைதீக மரபைச் சார்ந்த தமிழ் காப்பியங்களின்மீது நிகழ்த்தப்பட்ட ஆய்வுகள் பெரும்பாலும் இந்து தமிழிய அரசியல் கண்ணோட்டத்தின்படி செய்யப்பட்டுள்ளன. தமிழ் முதன்மை ஆய்வினரும்கூட சங்கஇலக்கியம்

**கதையில் அல்லது கவிதையில் தத்துவம் மற்றும் கொள்கையின் சாயலைச் சொல்லுவது என்கிற இலக்கிய மரபின் பெரும்போக்கை மாற்றி தத்துவத்தையும் கொள்கையையும் முதன்மைப்படுத்தி அதற்காக கதைச்சொல்லும் மரபை மணிமேகலைக் காப்பியத்தின் வழிதான் காணுகிறோம். தத்துவத்தை கதைச்சாயலில் சொல்லும் போக்கை நீலகேசியில் காணுகிறோம்.**

அறஇலக்கியம் இலக்கணங்கள், தமிழ் முதல்பத்துக் காப்பியங்களில் படிந்துள்ள அவைதீக முதன்மைப் பண்புகளை அனைத்திந்திய புத்த-சமணக் கருத்தாகக் கருதுவதில்லை. இவ்வாறான தவிர்க்கமுடியாத தருணங்களையும் எளிதாகக் கடந்துவிடுகின்றனர். இன்னும் விளக்கமாகச் சொல்லவேண்டும் என்றால் சமணத்தின் மீதான கருத்தியலைவிட புத்தத்தின்மீதான கருத்தியலை வெறுப்போடு அணுகுவது, அதையும் சமணக் கருத்தாக இனங்காட்டுவது அல்லது கண்டுகொள்ளாமல் சாதாரணமாக கடந்து போவதுவும் நிகழ்ந்தவண்ணம் உள்ளது. பண்டிதர். கா. அயோத்திதாசரை தமிழ்புத்த சமயத்தை சார்ந்தவர் என விட்டுவிட்டாலும் கிருஷ்ணசாமி அயங்கார், பி. டி. சீனிவாச அயங்கார், மயிலை. சீனி. வேங்கடசாமி அ. மு. பரமசிவானந்தம் சோ. ந. கந்தசாமி, வே. ச. திருமாவளவன், ந. முத்துமோகன் உள்ளிட்ட சிலர் புத்தம் தொடர்பான ஆய்வுகளைச் செய்துள்ளனர்.

இவர்களுடைய ஆய்வு கருத்தியல் சார்ந்ததாக பெரும்பாலும் அமைந்துள்ளன. தமிழ் இலக்கிய வரலாற்றில் மணிமேகலைக் காப்பியத்தின் முதுமையை அறிவதற்கு வடிவம் குறித்த ஆய்வுகளும் முக்கியத்துவம் பெறக்கூடியது. யாப்பு என்பதையும் படிமவளர்ச்சி கொள்கையின் அடிப்படையில் அணுகவேண்டிய தேவையும் உள்ளது. மணிமேகலைக் காப்பியம் கருத்துநிலையிலும் வடிவநிலையிலும் சங்கமரபோடு நெருங்கிய உறவுடையது. இக்கருத்தை பெரும்பாலானோர் ஏற்றுக்கொண்டுள்ளனர். எனினும் மணிமேகலைக் காப்பியத்தின் காலத்தை சிலர் கி. பி. 5. இலிருந்து 11. ஆம் நூற்றாண்டுவரை எடுத்துச்செல்லுகின்றனர். இவ்வாறு முடிவு சொல்வோர் யாப்பு அமைப்பு குறித்து கவனம் செலுத்தவில்லை.

கருத்து வளர்ச்சி, தத்துவப்போக்கு, வடிவம்-பாடுபொருள் சார்ந்த கட்டமைப்பு பிற இலக்கிய உத்திகள் உள்ளிட்டவை சார்ந்த அனைத்திந்திய மட்டத்திலான இலக்கியத் தரவுகளை திரட்டி அகச்சான்றுகள் குறித்த விவாதங்களை முன்வைப்பது, வணிகம், உற்பத்தி, அரசு, சமயம், பண்பாடு போன்றவற்றில் குறைந்தது ஆசிய அளவில் புத்தர்கள் ஏற்படுத்திய தாக்கம் கல்வெட்டுகள், நாணயங்கள், முத்திரைகள், கடல்வழி, தரைவழி பயணக்குறிப்புகள், கட்டிடங்கள், நினைவிடங்கள் மற்றும் நினைவுச் சின்னங்கள் போன்றவற்றை புறச்சான்றுகளாகத் திரட்டி விவாதங்களை நிகழ்த்துவதன் மூலமும் தமிழில் வந்த முதல் காப்பியம் மணிமேகலை என்கிற கருதுகோளை நிலைப்படுத்தமுடியும். இதுவரை மணிமேகலைக்கு எதிரான அல்லது இக்காப்பியத்தை பிற்காலத்தது எனக் கருத்துரைத்துள்ளோர் தமிழ் இலக்கியத்தையும் அதன் செழுமையான மரபையும் பின்னுக்குத் தள்ளுவது சமஸ்கிருத்ததை ஆர்வத்தோடு முன்னுக்கு கொண்டுவருவது என்கிற நிலையிலும் பக்திமொழி தமிழ், வேதமொழி தமிழ் அல்லது தமிழிலும் வேதம் உண்டு, அகத்தியன் தமிழ், சிவன் தமிழ் சங்ககாலம் பொற்காலம், களப்பிரர் காலம் இருண்டகாலம், பல்லவர் காலம் நற்காலம், சோழப்பேரரசு காலம் பிற்காலம் இதுபோன்ற ஒற்றைமயப் பார்வையில் வரலாறுகளை அணுகி எழுதியுள்ளனர். குறைந்தது பல்துறை சான்றுகளும் பன்மை கருத்தியலும்தான் நடுவுநிலையான வரலாற்றை எழுத உதவும்.

புத்தம், நாகர், தமிழ், இலங்கையை உள்ளடக்கிய தென்கிழக்கு நிலம் ஆகிய கண்ணிகளை ஒருங்கிணைத்து மணிமேகலைக் காப்பியத்தின் கதை சிறப்பாகப் பின்னப்பட்டுள்ளது. எனினும் இக்கருத்தோட்டம் மட்டும் மணிமேகலைக் காப்பியத்தைப் புரிந்துகொள்ள போதுமானதாக இல்லை. நாகர், யவணர், சாகர், திறையர் இவ்வினங்களின் வணிகத்தை மையமாகக் கொண்ட அரசியல் பண்பாட்டு தொடர்புகளையும் நாம் கருத்தில் கொள்ளவேண்டுவது மிகமுக்கியமானது. மத்தியத் தரைக்கடல் வழிபட்ட மேற்குலகுடனான வணிக வீழ்ச்சி காரணமாக வடபுலத்து முக்கியத்துவத்தை இழந்து பிறகு கீழைக்கடல் வழியாகக் கிழக்கு நாடுகளுடனான வணிக உறவை வலுப்படுத்தும் நோக்கில் புத்தநெறியாளரின் தொடர்செயல்பாட்டால் காஞ்சிபுரம் தத்துவ தலைநகரமாக மாற்றப்பட்டதை இக்காப்பியம் மிகசுவாரசியமாகக் கூறுகிறது. விந்தியமலைக்கு வடக்கில் உள்ள இந்தியத் துணைக்கண்டப் பகுதிகளில் புத்த-சமணம் உள்ளடங்கிய அவைதீக தத்துவங்கள் தங்களுடைய அரசியல் அதிகாரம் வீழ்த்தப்பட்டதன் பின்புலத்தில் இத்தத்துவங்களுக்கான கிழக்கு நோக்கிய அல்லது தென்கிழக்கு நோக்கிய பயணம் இன்றியமையாததானது. இப்பயனத்தில் சமண சமயம் ஒடிசா, ஆந்திரா, கருநாடகம், தமிழகத்தின் பாண்டிய நாடுவரை அரசாங்க சமயமாக அங்கிகாரம் பெற்றது.

இதனோடு ஒப்பிடுகையில் புத்தம் இப்பயணத்தில் தென்கடல் முனைவரை சற்றுக் குறைந்த நிலையில் அரசாங்க அங்கிகாரத்தைப் பெற்றது. எனினும் புத்தம் தனது செல்வாக்கை கடல் தாண்டியும் வளர்த்திருந்தது. சமணத்தின் செல்வாக்கு

அரசநிலைப்பட்டதாக இருந்தாலும் ராஜஸ்தானம் முதல் மைசூர் வரையிலான நிலப்பரப்பையே அதுபெற்றிருந்தது. இன்னும் குறிப்பாகச் சொன்னால் ஆசீவகத்தை உள்வாங்கியதன் விளைவாக இத்தகைய செல்வாக்கைப் பெற்றது. தமிழகத்தைப் பொருத்தவரை இவை அவைதீக மரபு என்கிற நிலையில் சகோதரக் கோட்பாடுகளாக ஆதரிக்கப்பட்டது. பழந்தமிழ் இலக்கிய இலக்கணங்களை நுணுகி வாசிக்கும்போது இக்கருத்தை உறுதிபடுத்தமுடியும்.

பன்மைத்துவமான பண்பாடுகளையும் சிந்தனைகளையும் அங்கீகரித்தல் ஒருங்கிணைத்தல், அவற்றின் தனித்தன்மைகளை பொதுமைப்படுத்துதல் இவ்வாறான போக்குகளைக் கொண்டதாகப் பழந்தமிழ் இலக்கியமரபு கொண்டிருக்கிறது. இத்தடங்களைச் சங்க இலக்கியம் தொடங்கி எதிர்கொள்ளமுடிகிறது. படைப்புக்கொள்கையை மறுக்கும் இயற்கை நிலையைப் போற்றும் மானுடப் பொதுமைமீது கொண்ட அன்பின் அலாதியைச் சங்க இலக்கியத்தில் கவித்துவத்தின் இலயமாகத் தோன்றும் அறம் என்னும் தம்மம் அல்லது திணை மணிமேகலைக் காப்பியத்தில் அறமே தத்துவமாக, கதையாக, கவித்துவமாக, நடத்தையாக, பண்பாடாக, அரசியலாக, நிலம், உடல் என்கிற பருப்பொருள் மீது படியவிட்டு தனது எல்லையை விரிவாக்குகிறது. கதையில் அல்லது கவிதையில் தத்துவம் மற்றும் கொள்கையின் சாயலைச் சொல்லுவது என்கிற இலக்கிய மரபின் பெரும்போக்கை மாற்றி தத்துவத்தையும் கொள்கையையும் முதன்மைப்படுத்தி அதற்காக கதைச்சொல்லும் மரபை மணிமேகலைக் காப்பியத்தின் வழிதான் காணுகிறோம். தத்துவத்தை கதைச்சாயலில் சொல்லும் போக்கை நீலகேசியில் காணுகிறோம்.

ஒருங்கிணைந்த பன்மைத்துவமான பண்பாட்டுத் தத்துவமரபை மணிமேகலைக் காப்பியம் கொண்டுள்ளமைக்கு பலகாரணங்கள் உண்டு. நில சூழமைவிற்கேற்ப புத்தநெறி வடிவமைக்கப்பட்டது என்பதை முதன்மையாகக் கவனிக்கவேண்டும். பல்வேறு நிலங்கள் பல மொழிக்குழுக்கள் இவைசார்ந்த பண்பியல் கூறுகள் புத்தநெறிக்கு ஒரு பன்மைத்துவத்தை வழங்கியது. இத்தகைய வடிவத்தின் சாட்சியாக மணிமேகலைக் காப்பியம் விளங்குகிறது. இந்தியத் துணைக்கண்டத்தில் உள்ள சிந்தனைமரபு பன்மையானது என்றாலும் அவற்றை வைதீகம்-அவைதீகம் என்று பொது அறிதலுக்காக வகைப்படுத்தப்பட்டுள்ளது. இதனை தத்துவக் கண்ணோட்டத்தோடு பார்த்தால் படைப்புவாதம்=இயற்கைவாதம் எனப் புரிந்துக்கொள்ளவும் முடியும். உற்பத்தியில் ஈடுபட்டோர்-உற்பத்தியில் ஈடுபடாதோர் என்று சமூகக் கண்ணோட்டத்தில்பார்த்தால் நிலைக்குடி தத்துவம்-அலைக்குடி தத்துவம் என்று வகைப்படுத்தமுடியும்.

மேலும் மேய்ச்சல் தத்துவம்-வேளாண் தத்துவம் எனவும் பகுத்து புரிந்துகொள்ளமுடியும். வேதங்களில்தான் முதன்முதலில் தத்துவ உரையாடல்கள் காணப்படுகின்றன என்றும் வேதத்தைமறுத்து அவைதீக தத்துவம் உருவாயின என்றும் வலது கண்ணோட்டம் உடைய அடிப்படைவாதிகள் நம்பி பேசியும், எழுதியும் வருகின்றனர். பூக்களை உற்பத்தி செய்பவரை பார்த்து பூவைப்பற்றி இவருக்கு ஒன்றும் தெரியாது என்பது போன்றதுதான் இவ்வகைப்பட்டோருடைய கருத்து. பார்ப்பன மதநூலான வேதங்களில் தத்துவ உரையாடல் இருக்கிறது என்றால் ஏன் இந்துகுஷ்மலை வரையிலோ அல்லது அதற்கு அப்பாலோ பார்ப்பன மதம் பரவவில்லை. குறைந்தது பஞ்சாப் மாகாணத்திலோ இமயமலைச் சாரலிலோ உள்ள நிலப்பரப்பில் கூட நிலைபெறவில்லை, இதற்கான அறிவியல் நிலைப்பட்ட காரணங்களை வலதுசாரிகள் என்றாவது முன்வைத்ததுண்டா? தத்துவ உருவாக்கம் என்பது அந்தரத்தில் கால்பாவும் வாமன வித்தையல்ல நேரடியான உழைப்பு, உழைப்புசார் உற்பத்தியோடு தொடர்புடையது. உற்பத்தியோ நிலத்தோடு நெருங்கிய தொடர்புடையது. நிலமற்ற பார்ப்பனர்கள் தத்துவங்களை உருவாக்குவதற்கான வாய்ப்பினை எப்போது பெற்றிருக்க முடியும். நிலங்களைக் கைப்பற்றிய பிறகுதான் என்பதில் சந்தேகம் இல்லை. நிலத்தை கைப்பற்றுதல் என்பதை பலவந்தமான காட்டுமிராண்டித்தனங்களை நிலைக்குடிகளின் கட்டுமானங்களின் மீது செலுத்தி ஆட்சியைக் கைப்பற்றியதை குறிக்காது மாறாக நிலைக்குடிகளின் பண்பாட்டுடனான ஒப்பந்தங்களின் மூலமாக நிலஉரிமையை கைமாற்றிக்கொண்டு குறைந்தது உற்பத்தி பண்பாட்டோடு ஊடாடுவதை குறிக்கிறது. தக்காணத்தின் மேற்கு பகுதியிலிருந்து சாதவாகனர் கிழக்காக தங்களுடைய ஆட்சியை விரிவுசெய்து கொண்டிருந்த காலத்தில்தான் பார்ப்பனர்களுக்கு ஊர்கள் தானமாக வழங்கப்பட்டன. பார்ப்பன ஆட்சியாளர்களான சுங்கர்களின் காலத்தில்கூட அவர்களுக்கு நிலங்கள் தானமாக வழங்கப்படவில்லை.

கௌதமிபுத்தர சதகர்னி, வசிஷ்டபுத்தர சதகர்ணி போன்றோர் பிராமணர்களின் பிராமணர் என்று தங்களை தாங்களே சொல்லிக்கொண்டனர். புலுமாயு என்று சொல்லப்படுகிற வசிஷ்ட புத்தரசதகர்ணியின் ஆட்சி காலத்தில்தான் பார்ப்பனர்கள் தங்களுக்கான புராணக் கதைகளை தொகுக்கும் முயற்சியில் ஈடுபட்டனர். சாதவாகன அரசர்கள் பார்ப்பனருக்கு நிலங்களை கொடுத்ததுபோல பௌத்தர்களுக்கும் கொடுத்தனர் என்றால் காரணம் அப்போது புத்தர்கள் பெற்றிருந்த செல்வாக்கு. சாதவாகனரின் இலக்கியமான காதாசப்தசாய் அல்லது காதாசப்தசதியில்தான் இராமாயண மகாபாரதம் மற்றும் சிவன் தொடர்பான புராணக் கதைகளைக் காணுகிறோம்.

இதற்கு முன்பே மகதப் பேரரசர்களான பிம்பிசாரன் [இவர் கவுதம புத்தரின் சமகாலத்தவனும் அவருக்கு ஆதரவு அளித்தவனுமாவான்] அஜாதசத்ரு, உதயணன் கோசல அரசன் பசேந்தி மௌரிய பேரரசர்களான சந்திரகுப்த மௌரியன், பிந்துசாரன், பெருவேந்தன் அசோகன் உள்ளிட்டோரும் பார்ப்பனருக்கு ஊர்களை வரிநீக்கி தானமாக கொடுத்தார்கள் எனினும் அவர்கள் அரசாங்கத்தால் கண்காணிக்கப்பட்டனர்.

சாதவகணர்கள் தங்களை பிராமணர்களாகவே அறிவித்து கொண்டதனால் பிராமணர்களின் மீதான கண்காணிப்பைச் செய்யவில்லை. மௌரியப் பேரரசு வீழ்த்தப்பட்ட பிறகு சுங்கர்களும் அவரை தொடர்ந்து கன்வர்களும் அப்பகுதியை ஆண்டனர் இவர்கள் பார்ப்பனர் என்பது அறியப்படவேண்டிய ஒன்று. இக்காலங்களில் பார்ப்பனர்கள் தங்களுடைய செல்வாக்கை உயர்த்திக் கொண்டனர். பொதுநீக்கப்பட்ட நிலங்களை கொடையாகப்பெற்ற பார்ப்பனர்கள் உற்பத்தியில் ஈடுபடாதபோதும் உற்பத்திக்கான அடிமைகளையும் நிலத்தோடு பெற்ற காரணத்தினால் அவர்கள் சுயசக்தியாக செல்வாக்கடைந்தனர்.

கலியாண் ஆற்றுக்கு கிழக்காகவும் வடவேங்கடத்திற்கு தெற்காகவும் இருந்த தமிழக நிலப்பரப்பிற்குள் அவர்கள் செல்வாக்கு செலுத்தவில்லை. பிற்கால சங்க நூலான கலித்தொகையில் சொறிபிடித்த பார்ப்பனன் ஒருவன் மறைந்து மறைந்து சாப்பாட்டிற்கு அலைவதை வாசிக்கிறோம். இந்த விவரிப்பு கலித்தொகை காலம் வரையிலும் பண்பாட்டுரீதியாக பிராமணர்கள் நிலைப்பெறவில்லை என்பதையே காட்டுகிறது. கி. மு. முதலாம் நூற்றாண்டில் சுங்கர்கள் வசமான பார்ப்பன அரசின் மூலம் கிடைத்த வாய்ப்பை அவர்கள் கலகம் செய்வதற்காக பயன்படுத்திக் கொண்டனர். குறிப்பாக புத்த சின்னங்களையும் புத்த பிக்குகளையும் அழிப்பது என்பதாக செயலாற்றினர்.

புத்தம் குறைந்தது மேற்கே இந்துகுஷ் மலைக்கப்பால் தொடங்கி கிழக்கே இந்தோனிசியாவரை தொடர்பைப் பேணியிருந்தது. இதன் வலிமையை அறிந்ததனாலோ என்னவோ புத்தவிகாரங்கள் சின்னங்கள் எழுப்புவதற்கு சுங்கர்களும் கொடையளித்தனர். எனினும் பார்ப்பனியம் வைதீக மதமாகவோ தத்துவமாகவோ குப்தர்களின் காலம்வரை நிறுவனத் தன்மையை அடையவில்லை. நிலைமை இவ்வாறு இருக்க பிறகு ஏன் அவர்களை பார்த்து நிலைக்குடிகள் அச்சமடைந்தனர் எனக் கேள்விஎழுவது இயல்புதான் வீடு உள்ளிட்ட பொருள்களை வைத்திருப்பவர் திருடர்களைப் பார்த்து அச்சமடைவது போன்றதுதான்.

தமிழகத்தில் பார்ப்பனர்களின் நிலைமை இதன் சமகாலத்தில் இவ்வளவு உயர்வானதாக உருவாகவும் இல்லை, பேணப்படவுமில்லை. குறிப்பாக தன்னிச்சையான முறையில் வேதங்களை ஓதி அவர்களால் பிழைப்பு நடத்தமுடியவில்லை. எழுத்துவடிவம் இல்லாத வேதங்களை மொழியும் பார்ப்பனனே என விளிக்கப்பட்டு இழிவாகப் பழித்துரைப்பதை குறுந்தொகை [53. ] பாடலில் வாசிக்கிறோம்.சங்கஇலக்கியத்தில்இன்னோரிடத்தில் பார்ப்பனன் கூற்றாக வேள்வித் தொழிலை மறந்து 'சங்கு அறுக்கும் தொழிலைச் செய்யும் வேறான்பார்ப்பனனே' [அகம்-24] எனப் பழிக்கப்படுகிறது. கவுனியக் கோத்திரத்தைச் சார்ந்த வின்னந்தாயன் என்கிற வேதவாதி புத்தம் உள்ளிட்ட அவைதீகரோடு வாதம் செய்வதை புறநானூற்றுப் பாடல் [புறம்-166] விளக்குகிறது. வைதீகப் பண்பாட்டிற்கு மாறான பண்பாட்டை தமிழகம் பழங்காலத்திலேயே பேணியது என்பதை அறிய இவைபோன்ற பதிவுகள் முக்கியமானவை.

தமிழகத்தில் அகழாய்வின் மூலம் கிடைத்துள்ள தொல்பொருள்கள் வணிக நடுவமாக தமிழகம் விளங்கியதைக் காட்டுகிறது. பெரும்பாலான புதைப்பொருள்கள் கடலோர நகரத்தவை. நாணயங்கள், முத்திரைகள், எழுத்தாணி உள்ளிட்ட எழுதுபொருள்கள் இவையாவும் வணிகத்தோடு உறவு உடையவை என்பதை சொல்லவேண்டியதில்லை சொல்லாமலே புலப்படும். உற்பத்திச் சமூகம் வணிகச் சமூகமாக மாறுவதற்கு பெரிதும் கல்வியறிவும், எழுத்தறிவும் தேவைப்படுகிறது, இந்திய ஒன்றியத்திலேயே தமிழகத்தில்தான் அதிகமான கல்வெட்டுகள் கிடைத்துள்ளன. கல்வியறிவையும் எழுத்தறிவையும் புகட்டிய புத்த சமண ஆசிரியர்களை குறித்தும் இப்பணிக்காக ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்ட நிலம் பிற கல்வி உபகரணங்கள் குறித்தும் எடுத்துரைக்கின்றன. மேற்கே கிரேக்கத்திலிருந்து கிழக்கே சாவகம் வரையில் உலகலாவிய நிலையில் வணிக உறவை பேணியவர்கள் புத்தர்களாவர். தமிழகத்தில் கிடைத்துள்ள கல்வெட்டுகள் பெரும்பாலும் சமணர் கல்வெட்டுகளாகவே வாசித்தளிக்கப்பட்டுள்ளன. இவ்வாசிப்பும் வணிகத் தொடர்பை அறிவதற்கு உதவுகிறது என்றாலும் புத்தாச்சாரியர்களின் கல்வெட்டுகள் பிரித்தறியப்படவேண்டும். இவ்வாறு அறிவதன்வழி தமிழரின் வணிகநெறி புத்தசமயத்தாரின் வணிக நெறியோடு இணைந்து உலகளாவியத் தன்மையைப் பெற்றது என்கிற மணிமேகலைக் காப்பியத்தின் கருத்தை விளக்கமுடியும்.

மணிமேகலைக் காப்பியம் கடல்வழிபட்ட வணிகப்பாதையை விளக்குகிறதென்றால் இதற்கு முந்தைய சங்க இலக்கியங்கள் தரைவழிபட்ட பெருவழிப்பாதையை எடுத்துரைக்கிறது. இனி இவைகுறித்து விளக்குவது பயன்தரக்கூடும்.

இருபெரும் நெறிகள்

பண்டைய இந்தியாவின் வணிக நெறிகள் கடல் மற்றும் தரைவழிபட்டதாக இருந்தது. இவ்விரண்டினுடனும் தமிழகம் நெருங்கிய தொடர்புகொண்டிருந்தது. புத்த-சமண ஆசிரியர்கள் குன்றுகளிலும் மலைச்சரிவுகளிலும் தங்கி கல்வியளித்தனர். இவ்விருப்பிடங்கள் அல்லது பள்ளிகள் ஏதோ ஒருவகையில் வணிகப் பெருவழிப் பாதையோடு இணைக்கப்பட்டிருந்தன. வணிகர்களும் படைத்தளபதிகளும் பட்டத்தரசிகளும் செல்வத்தோடு விளங்குகின்ற பிற முக்கியஸ்தர்களும் இவ்வாசிரியர்களுக்கு கொடையளித்து காத்தனர். இனி இதுகுறித்து சிறிது விளக்குவது தகும் என்றாலும் வேறு ஒருசமயத்தில் இம்முயற்சியை மேற்கொள்வேன்.

**கட்டுரையாளர்: உதவிப் பேராசிரியர்,**
**அரசினர் ஆடவர் நந்தனம் கலைக்கல்லூரி**

பா.செயப்பிரகாசம்
jpirakasam@gmail.com

# கி.ரா. எனும் செயல் ஆளுமை



"கரிசல் பகுதியின் தலித் வாழ்க்கை பற்றி எழுத நீங்கள் அதிகம் பிரயாசைப் படவில்லையே?" - கேள்வி.

**"எனக்கு அவர்கள் மொழி தெரியாது. ஆகவே அவர்களுடைய வாழ்வை என்னால் விவரிக்க இயலாது. பள்ளர்களில் இரண்டு வகை இருக்கிறார்கள். ஆத்தா பள்ளர் என்று ஒரு இனம்; அஞ்ஞா பள்ளர் என்று ஒரு இனம். இதுவே நமக்குத் தெரியாதில்லையா? இப்ப பசு அம்மான்னு கத்துதுன்னு சொல்றோம்; எருமாடு "ஞ்ஞா" என்றுதான் சொல்லும். இத வச்சு அவங்களுக்குள்ள பிரிவு இருக்கு. அதவொட்டி பழக்க வழக்கங்கள் மாறுது. அவங்க பேச்சு மொழிகள்ல வித்தியாசம் தெரியும். இப்படி அந்த மொழி தெரியாம நா அவங்க வாழ்க்கைய எழுத முடியாது. தலித் வாழ்க்கைய அவங்கதான் எழுதணும்."**

*(சண்டே இந்தியன், நேர்காணல், பக்.36, செப்டம்பர் 30, 2012.)*

*இது கி.ரா. அளித்த பதில்.*

*தெரியாததைத் தெரிந்து கொள்ளல் தான் தேடல். நாம் தேடலில் இருக்கிறோம். தெரியாதன , அறியாதன , அனுபவப்படாதவை பற்றிப் பேசுதல், எழுதுதல் கூடாது என்பது கி.ரா.வின் படைப்பு நேர்மை. தெரியாததைத் தெரிந்து கொள்ளும் மனமிருக்க வேண்டும். அதனால் நேர்காணல் தலைப்பு "வர வரக் கண்டறி மனமே."*

*கி.ரா.விடம் கண்டடைவதற்குரிய மேலான பண்பு தனக்குத் தெரியாததை - தான் அறியாததை, அறியாதது என ஏற்றுக் கொள்ளும் அம்சம் : இதுவரை தன் கட்புலனுக்கு வந்தடையாத ஒன்று - தான் தேடாது அது வந்து சேராது. 'அதான் எனக்குத் தெரியுமே' என பக்கவாட்டில் பார்வை ஓட்டாத ஒற்றைக்கால் கொக்கு அவரல்ல. இந்த நேர்காணலிலும் " அவங்க மொழி எனக்கு தெரியாது; அவங்க கலாச்சாரத்தை முழுமையாக அறிந்தவன் இல்லையே "என்ற ஆதங்கத்தை, சுய நேர்மையை முன்வைக்கிறார்.*

*ஒன்றை வாசிப்பதன் வழி, சிந்திப்பின் அடுத்தகட்டப் படியேற உதவுமாயின் அது பயன் தரும் வாசிப்பு. சிந்திப்புக்கு இடமில்லாமல் சுகத்தில் ஆழ்த்தி நின்றுவிடுகிற வாசிப்புமுண்டு. சிந்திக்கத் தோற்றாத கற்றறிவு சுகமானதாய் அமைந்து விடும். ஆனால் பட்டறிவு என்கிற சுயானுபவம் சிறகு பரப்பி மேலே மேலே உயர்ந்து கொண்டே இருக்கும்.*

பட்டறிவு என்பது ஒரு புள்ளிக் கோலமல்ல; அடுத்தடுத்த புள்ளிக்குத் தாவித் தாவிச் சென்று வனையும் முழுக்கோலம். பட்டறிவின் யோசிப்பு மிகப் பிரமாதமாக அமையும்.

தொடக்க காலம் முதலாய் கி.ரா.விடம் ஒன்றை அவதானித்து வந்துள்ளேன். அவர் ஒரு கற்றறிவுக் களஞ்சியம் அல்ல; அவருடைய அனுபவ அறிவு விசாலமானது; அவைகளைத் தொகுத்துச் சொல்லும் முறை அபாரமானது. முதலில் நாம்தான் தொடங்கவேண்டும். அது ஒரு கேள்வியாக, ஐயமாக, தெளிவுபெறுதலுக்காக இருக்கலாம். ஏதாவது ஒன்றைச் சொல்லிவிட்டால் அதிலிருந்து கிளை கிளையாய்ப் பிரித்து உரையாடி, மேலே மேலே போய்க் கொண்டிருப்பார் கி.ரா. ஏதொன்றையும் செல்வதற்குமுன் இதுக்கு முன்னால் நான் இதைச் சொல்லி இருக்கேனா என உறுதிப்படுத்திக் கொள்வார். அவருடைய சொற் சுவாரசியம், எடுத்துரைப்பு, சொக்குப்பொடி போட்டதுபோல் வெளிப்படும் மயக்கும் மொழி - இவை பொருட்டு ' இல்லையே , நான் கேட்டதில்லையே "என்பேன். எடுத்துரைப்பு ஒவ்வொரு தடவையும் வேற வேற ரூபத்தில் வெளிப்படும். எல்லாம் முன்கூட்டியே தெரிந்திருந்த போதும் கி.ரா.விடம் வெளிப்படும் வேறவேற ரூபங்களைக் காணுதற்காக " கல்லுளி மங்கன்" மாதிரி உட்கார்ந்து கேட்டுக் கொண்டிருப்பேன்.

அவர் ஒரு படைப்பாளி; ஒரு படைப்புக் கலைஞன் படைப்பாக்கத்தில் ஈடுபட்டுக் கொண்டிருக்கையில், அந்த மன ஒருமையைக் குலைக்கும் எதனையும் பொறுக்க மாட்டார்கள். கி.ரா. முற்றிலும் வேறான ஒரு ஆளுமை.எழுதுவதை நிறுத்திவிட்டு, தாள், எழுதுகோலை ஒரு புறமாக ஒதுக்கி வைத்துவிட்டு "வாங்கோ " என்பார்.அதன் பொருள் நீங்க சொல்லுங்க என்பதாக இருக்கும் அவருடைய பிந்திய 20 ஆண்டுகளில்ஒவ்வொருநாளும் அவரைக் காண்பதற்கும் உரையாடுவதற்கும் வரும் கூட்டம் ஐந்திலிருந்து பத்து எண்ணத்திற்குக் குறைந்திருக்காது.

"கிராமங்களில்தான் மொழிகள் உயிர்ப்புடன் வாழ்கின்றன" என்பதை அருத்தம் திருத்தமாக கி.ரா. சாதித்துக் காட்டியுள்ளார். இலக்கியம் என்றால் அப்படித்தான். அவரவர் மொழியில் எழுதப்படவேண்டும்.

வட்டார மொழியும் அதன் வகைதொகையில்லாச் செழுப்பமும் கி.ரா என்னும் பெருமரத்தை கொப்பும்கிளையுமாய் செழிக்கச் செழிக்க வளர்த்தன. தாத்தா சொன்ன கதைகள்,சிறுவர் கதைகள், பாடல்கள், சொலவடைகள், சொல்லாடல், விடுகதை என நாட்டர் வழக்காறுகளினுள்ளிருந்து புதிய இலக்கியவகைகளைக் கண்டெடுத்தார். "கரிசல் வட்டர வழக்குச் சொல்லகராதி" என்ற ஒன்றை 50 –ஆண்டுகளின் முன் அவர் கொண்டுவந்த பின்னரே, புதியபுதிய வழக்குச் சொல்லகராதிகள் உருவாகி வரலாயின. இவையெல்லாமும் இன்ன பிறவும் நாட்டாருக்குள் இருந்தவைதாம்.அவைகளத் தேடிக்கண்டடைய ஒருவர் தேவையாயிருந்தது.அது அவராக இருந்தார். எல்லாமும் சேர்ந்து அவராகி, பள்ளிக்கூடம் கண்டிராதவரை 'வருகைதரு பேராசிரியர்' என்ற அறிஞர்களின் கல்விப்புல நாற்காலியில் உட்காரச் செய்தது. புதுவைத் தமிழ்ப் பல்கலைக் கழகம் அளித்த 'வருகைதரு பேராசிரியர்' இருக்கை, வட்டார எழுத்துக்குக் கிடைத்த கவுரவம்.

கி.ரா கரிசல் எழுத்துக்களுக்கு முன்னோடி என்கிறார்கள். கரிசல் இலக்கியத்தின் தந்தை என்கிறார்கள். எனக்கு அதில் உடன்பாடில்லை. அது ஓரளவு உண்மை, முழு உண்மையல்ல அவர் வட்டார அடையாளத்திலிருந்து, அதன் இன வரைவியலிலிருந்து, பண்பாட்டு அடையாளங்களிலிருந்து தொடங்கினார்.ஆனால் அந்த மொழி யாருக்கானது? அது தமிழுக்கானதாக இருந்ததல்லவா? மக்கள் தமிழாக வெளிப்பட்டதா இல்லையா! நடப்பு உரைநடையின் உயிர்த் தண்டுவடத்தைக் கண்டறிந்த முன்னோடி அவர். வட்டார மொழியும் அதன் படைப்புக்களும் உலகெலாம் அறியப்பட்டு உச்சத்தில் கொண்டாடப்படுகையில் ஏன் இந்தச் சிறு கூட்டுக்குள்ளே அவரை அடைக்கிறீர்கள் எனக் கேட்கிறேன்.

"எழுத்தில் முன்னத்தி ஏர்" என்று அவரை இதுவரை அறிந்திருக்கிறோம். .அப்படியே தாளம் பிசகாமல் செப்பி வந்தோம். 2017 செப்டம்பர் 16 – அவரது 95வது பிறந்தநாள் முழுநாள் நிகழ்வாக. புதுவைப் பல்கலைக் கழக அரங்கத்தில் நாங்கள் முன்னெடுத்தோம். காலை" நிலாமுற்றம்" – கி.ரா. வுடன் வாசகர்கள் உரையாடல். " சிலர் எல்லா வீடுகளுக்கும் போவார்கள்; எல்லா வீடுகளிலும் சாப்பிடுவார்கள்; தங்கள் வீட்டுப் பெண்ணை பிற சாதியினருக்கு மதத்தினருக்கு திருமணம் செய்து தர மறுப்பார்கள். என் பேத்தி ஒரு முஸ்லிமை திருமணம் செய்ய விரும்பினாள். இந்து முஸ்லிம் ஒற்றுமை பற்றி பேசுகிற போது என் வீட்டில் நிஜமாக ஒரு திருமணம் நடக்கவிருக்கிறது. துணிவாக ஏதாவது செய்யவேண்டும். இதை தியாகம் என்று சொல்லமாட்டேன், நம் பிள்ளைகளின் மகிழ்ச்சி தான் முக்கியம்"

மாலையில் இதே அரங்கத்தில் தன் குடும்பத்தில் ஒரு சீர்திருத்தத் திருமணம் நடைபெற உள்ளதாக அறிவித்தார் கி.ரா. நிலாமுற்றம் உரையாடலில் நிறையவே மனம் திறந்தார் கி.ரா.

"சாதி எப்போது ஒழியும் " - இது கேள்வி.

"தைரியமாகச் சொல்வதை, தைரியமாகச் செய்வதை வரவேற்க வேண்டும்; காலமெல்லாம் ஒதுக்கி வைக்கக் கூடாது. தற்போது நிலைமை மாறியுள்ளது. உயர் குலத்தை விட தாழ்த்தப்பட்டோர் மிகத் திறமையுடன் முன்னேறி வருகிறார்கள்; மிகத் திறமையுடன் தாழ் குலத்தோர் இருந்தால், உயர் குலத்தோர் ஏற்கமாட்டார்கள். அதுக்கு மூலத்தை கண்டடைந்தால் அது சாதி எனத் தெரியும். சாதியை எப்படி ஒழிப்பது ? சாதியை உண்டாக்கியவர்கள் அதற்காக வருத்தப்படுவது நடந்தால் தவிர, சாதி ஒழியாது."

உண்மையை தயக்கமில்லாமல் சொல்கிற அனைவரும் பெரியார்தான்.

*சத்தமில்லாமல் செப்டம்பர் 16 மாலை அரங்கத்தில் தன் பேத்தி அம்சாவின் திருமணத்தை நடத்திக் காட்டினார். மணமகள் கி.ராவின் இளையமகன் பிரபாகர் - நாச்சியார் இணையரின் மகள் அம்சா. ஒரு கணினிப் பொறியாளர். ஐஏஎஸ் தேர்வுக்காக தன்னைத் தயார் செய்து கொண்டிருந்தார். தன் வாழ்வில் தகுந்த துணையாக காதலித்து தேர்வு செய்தது முகமது ஆசிப் என்ற இஸ்லாமிய வாலிபரை.*

*பேத்தி அம்சா- வுக்கும் தன் வாழ்வில் காதலித்து தேர்வு செய்த அம்ஸா-முகமது ஆசிப்புக்கும் சாதி மத அடையாளங்கள் அற்ற திருமணத்தை நடத்தி வைத்ததன் மூலம், உச்சம் தொட்டார் கி.ரா.*

*கி.ரா. எனும் படைப்பாளுமையை செயல் ஆளுமையாக நிரூபித்த நிகழ்ச்சி இது.*

*உபத்திரவம் தரும் சாதி, மதங்களை உருவாக்கிக் கொண்டோம். அதிலிருந்து விடுபடுவதற்கான முண்டுதல் பலருக்குப் பிடித்தமில்லை. எதிர்த்துப் போராடி அது அழிக்கப்பட வேண்டுமென்பதில் துளியளவும் ஐயமில்லை. முக்கியமாய் இந்தப் புள்ளியில் தேவைப்படுவது "சனநாயக மனம்" என்பதை புரட்சிகரத் திருமணம் மூலம் கி.ரா. நமக்கு உணர்த்திச் சென்றிருக்கிறார்.*

*கி.ரா.விடம் தன்னறியாமல் ஒட்டிக்கொண்டது பாரதியின் மொழி மட்டுமல்ல; பாரதியின் மனசும்! ரா. கனகலிங்கம் என்ற தாழ்த்தப்பட்ட மகனுக்கு பூணூல் அணிவித்து வேதம் கற்பிக்க முயன்றவன் பாரதி அல்லவா! புதுச்சேரி கனகலிங்கம் பின்னாளில்" பாரதி என் குருநாதர்" என்னும் நூலை எழுதினார்*

*எல்லோரும் பெற்றுக்கொள்ள அன்பும், வழிகாட்டலும், உடல்நலம் பேணவும் உணவு குறித்துமான கருத்துக்களும் சிந்தனைகளும் நிறைந்து நிமிர்ந்து கிடக்கிற கருவூலம் கி.ரா. என்பது வாசகருடனான உரையாடலில் தெரிந்தது.*

*முழுநாள் நிகழ்வாக கிரா 95 ஐ அரங்கேற்றி, கி.ரா.வுக்கு நாங்கள் சிறப்பு செய்தோம் என எண்ணியிருந்தோம். சாதி, மதமற்ற திருமணத்தை தன் குடும்பத்தில் நடத்தியதன் வழி கி.ரா. நிகழ்வுக்கே சிறப்புச் செய்துவிட்டார். 'இந்தப் பாதை செல்லுங்கள்' எனக் கூறி முன் நடந்து அழைத்துச் செல்கிற கி.ரா. செயலிலும் முன்னத்தி ஏர்!*

கட்டுரையாளர்: எழுத்தாளர்

நினைவேந்தல்

# கரிசல் மக்களை எழுத்தில் சஞ்சரிக்கச் செய்தவர் கி.ரா.

**நா.சுலோசனா**

suloraja64@gmail.com



விவசாயிகள் கதைகளானார்கள்
கரிசல் காட்டு சம்சாரிகளாக...

மக்கள் வழக்கை அகராதியாக்கினார் கிடைத்தது
கரிசல் வட்டார வழக்குச்சொல்லகராதி..

நேரு இந்திராவுக்கு எழுதிய கடிதங்கள்
அண்ணா தம்பிகளுக்கு எழுதிய கடிதங்கள்
எழுத்தாளர்களின் எண்ணப் பரிமாற்றங்கள்
இலக்கியமாயின கி.ரா., கடிதங்களில்...

கிராமத்து மக்களின் வாழ்வியலை
இலக்கியமாக்கினார்
நாட்டுப்புறக் கதைக் களஞ்சியம்.

விவசாயிகள் படும்பாடு
கரண்டால் வெளிச்சமானது..
இடம்பெயர்வு இலக்கியத்தில் நவீன
இலக்கிய முன்னோடிகள்
கோபல்லகிராமத்து மக்கள்....

பாசம் எனும் வேசத்தை
வெட்டவெளிச்சமாக்கியது காய்ச்சமரம்..
பறவைகளின் குளியலைப் பாடமெடுத்திருக்கிறார் பிஞ்சுகளில்
அவன் அவள் ஆனாள் கோமதியில்
பெண்ணின் மனதைத் திருமணத்திற்குமுன்
திருமணத்திற்குப் பின் பகுத்திருக்கிறார் கன்னிமையில்
விவசாயிகளின் வாழ்க்கை அடைக்கப்படுகிறது கதவில்
புழுக்கமான பேருந்து பயணம் மனதிற்குக்
குளிர்ச்சியூட்டியது மின்னலில்
எண்ணத்தை வண்ணமாக்கியிருக்கிறார் வேட்டியில்
நெய்கரிசலில் விளையும் அவுரி பொன்னவுரிதான்
அதுபேரில்தான் இருக்கிறது பொன்
விவசாயிகளின் வாழ்க்கையில் மிஞ்சவில்லை மண்....

பெண்ணுக்கு நடக்கும் அநீதியைத் தடுக்க முடியாமல்
வேதனைப் பட்டிருக்கிறார் ஜடாயுவில்..

அங்கணாக்குழி நவீன குளிப்பறை ஆனதைச்
சொல்கிறார் நகைச்சுவை மிளிர அங்கணத்தில்...

மழை சக்கப்போடு போட்டு
கெத்து கெத்து எனத் தண்ணி கொட்டிக்கெடக்குது
முதன் முதலில் கடலைப் பார்த்த வெள்ளந்தி மனிதனைக்
காட்சிப்படுத்தியிருக்கிறார் கிடையில்...

பிள்ளைகளுக்குள் போட்டி - நான்
அம்மா பிள்ளையா அப்பா பிள்ளையா
பாகப்பிரிவினையில் உறவுகளையும்
பாகம் போட்டது உண்மை...

டி.கே.சியிடம் ரசனையைக் கற்றவர்
பாமரர்களிடம் சொலவத்தைப் கேட்டவர்
பொதுவுடைமையால் முற்போக்கைக் கண்டவர்
மக்கள் மொழியில் இலக்கியம் படைத்தவர்
மக்கள் படைப்பாளி
கரிசல் எழுத்துக்கு முதல் ஆழி..

படைப்பாளர்: உதவிப் பேராசிரியர், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

டிராட்ஸ்கி மருது
trotskymarudu@gmail.com

# முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்

அடிக்கடி கைகளை சோப்புப் போட்டுக் கழுவ வேண்டும்; ஆறு அடி இடைவெளியில் ஒருவரை ஒருவர் இருத்திக்கொள்ள வேண்டும்; எப்பொழுதும் வாயையும் மூக்கையும் முகக்கவசம் கொண்டு நன்றாக மூடிக்கொள்ள வேண்டும் என்றெல்லாம் பரப்புரை செய்த அரசு, இப்பொழுது வீட்டுக் கதவுகளையும் மூடி வைத்துவிட்டு வீட்டுக்குள்ளேயே இருப்பதுதான் பாதுகாப்பு என்ற புள்ளியில் வந்து நிற்கிறது. சமையலறை, வரவேற்பறை, குளிப்பறை, உணவருந்தும் அறை, படுக்கையறை என தனித்தனி வசதிகளோடு வாழ்கிற உயர்வருவாய்ப் பிரிவினருக்கு இதெல்லாம் சரி, பத்துக்கு பத்து அளவுள்ள அறையையே தனது குடும்பத்திற்கான மொத்த வாழ்விடமாகக் கொண்ட எளிய மக்களுக்கு...?

இந்த நெருக்கடியான சூழ்நிலையில் சமூக ஊடகங்களே மக்களின் வெளி உலகத் தொடர்புக்கான கருவியாகி விட்டது. மட்டுமல்ல, பல புதிய வெளிகளையும் திறந்துவிட்டிருக்கிறது. உலகில் இதுவரை நாம் பார்த்திராத இடங்களையும் வாழ்நாளில் ஒருமுறையேனும் சென்றுவர முடியாத இடங்களையும்கூட உள்ளங்கையில் கொண்டுவந்து காட்டுகின்றன சமூக ஊடகங்கள். அதோடு கூடவே உலகம் கண்டறியாத அவலம் நிறைந்த காட்சிகளும் துயரங்களும், அத்துமீறல்களும் அட்டூழியங்களும் உடனுக்குடன் காணக்கிடைக்கின்றன. காணக்கிடைக்காத காணொலிகளையும் கண்கொள்ளாக் காட்சிகளையும் கண்டுகளிக்கின்ற அதே கண்களால்தான் சில கொடுமைகளையும் கண்டும் கேட்டும் கடந்துபோக வேண்டியிருக்கிறது.

குறிப்பாக ஆட்சியதிகாரம் தனக்குப் பின்னால் இருக்கிறது என்கிற ஆணவத்தில் அடிப்படைவாத அரசியலை கையிலெடுத்துக் கொண்டு அலைகிற அரை குறைகளின் பேச்சுகளும் விமர்சனங்களும் கண்கொண்டும் பார்க்க முடியவில்லை; காது கொடுத்தும் கேட்க முடியவில்லை. அதிலும் கட்சியிலோ ஆட்சியிலோ எந்தப் பொறுப்பிலும் இல்லாத மக்களால் பல பத்தாண்டுகளாக நிராகரிக்கப்பட்ட ராஜா என்கிற ஒரு சாதாரண நபரின் பேச்சு, கோபப்படாதவர்களையும் குமுறிஎழ வைக்கும் நாலாந்தரப் பேச்சு.

வாயைத் திறந்தாலே பொய்யுரைகளும் அவதூறுகளும்தான் அவரது அன்றாட ஊடக அரசியல். பாஜக ஆட்சியதிகாரததுக்கு வந்த கடந்த ஏழு ஆண்டுகளுக்கும் மேலாக பொதுவெளியில் அவர் நடந்துகொள்ளும் பண்பற்ற செயலை, இனியும் தொடரவிடக் கூடாது. அதற்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டியது சட்டம் ஒழுங்கைக் காக்க வேண்டிய அரசின் பொறுப்பு. அதைவிட, அண்மையில் மாண்புமிகு அமைச்சர் ஒருவரையும் மதிப்பிற்குரிய சட்டமன்ற உறுப்பினர் ஒருவரைப் பற்றியும் பிரபலமான நடிகரின் தந்தை பற்றியும் பத்திரிகையாளர்களிடையே அந்த நபர் வெளியிட்ட கருத்துகள் மிகமிக இழிவானவை. அந்தக் கருத்துகளை காட்சி ஊடகங்கள் ஒலி ஒளி பரப்பியதோடு அந்த நபரின் அவதூறுக்கு ஆளான அமைச்சரிடமே போய் ‘உங்களைப் பற்றிய இந்தக் கருத்துக்கு நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?’ என்று கேட்பது அதைவிட இழிவானது.

இதுபோன்ற நடவடிக்கைகளால் நாட்டில் தேவையற்ற குழப்பத்தையும் பதட்டத்தையும் ஊடகங்களே உருவாக்கிவிடுமோ என்கிற அச்சம் கவலை கொள்ளச் செய்கிறது. ஊடகங்களில் தலைமைப் பொறுப்பில் உள்ளவர்கள் இதில்

மிகுந்த கவனம் கொள்ள வேண்டும்.

சமூகநீதிக்கு வழி சமைத்த நீதிக்கட்சியும அதன் பாதையில் பயணப்பட்டு திராவிட இயக்கச் சித்தாந்தங்களை சனாதனத்துக்கு எதிராக விதைத்துவிட்ட பெரியாரும் அதைச் செழிப்பாக தமிழ் மண்ணில் வளர்த்தெடுத்த அண்ணாவும் கலைஞரும் தான் தமிழ்நாட்டின் இவ்வளவு பெரிய வளர்ச்சிக்கும் காரணம் என்று பிற நாட்டவரும் பொருளாதார வல்லுநர்களும் சொல்வதைக்கூட இங்கிருக்கிற அடிப்படைவாதிகளால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை. ஆட்சியதிகாரம் இல்லாத நிலையிலும் விசுவாசமிக்க அடிமைகளின், ஆதரவோடு அந்தக் கோபத்தையும் ஆத்திரத்தையும்தான் முதுகலை அரசியல்அறிவியல் பாடங்களிலேயே எழுதி இருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் அவர்கள் அண்மையில் செய்தியாளர்களுக்குச் சுட்டிக்காட்டினார்.

கடந்த ஆட்சிக் காலத்தில் பள்ளிக் கல்விக்காக பாடத்திட்டங்களை வகுக்கும் குழுக்களில் இருந்து செயல்படுவதற்கான ஒரு வாய்ப்பு எனக்கு அளிக்கப்பட்டிருந்தது. ‘மறைவாக’ வேலை செய்யும் நபர்களையும் அவர்களின் அழுத்தங்களையும் கல்வித்துறை சார்ந்த நண்பர்கள் அவ்வப்போது சொல்லவும் முடியாமல் மெல்லவும் முடியாமல் தவித்ததை நான் அறிவேன். ஆனாலும், என்னைப் போன்றவர்கள் சில பல இடைச்செருகல்களை அடையாளங்கண்டு உடனுக்குடன் அகற்றுவதில் மிகுந்த கவனத்துடன் செயல்பட்டோம், குறிப்பாக, ஓவியம் சார்ந்த படிப்புகளைப் பயில்கின்ற பாடத்திட்டத்தில் வேதபாடங்கள் குறித்தும் கோயில்களின் தலபுராணங்கள் குறித்தும் இருந்ததைக் கண்டு, ஓவியக்கல்விக்குத் தொடர்பில்லாத எதையும் இதோடு சேர்க்கக்கூடாது என கடுமை காட்டியதோடு அதை அப்பொழுதே நிராகரிக்கவும் செய்தேன். எனவே, கடந்தகால பாடத்திட்டங்கள் முழுவதையும் அரசு மறு ஆய்வுக்கு உட்படுத்தி நடைமுறைப்படுததுவது அவசரத் தேவை என்பதைச் சுட்டிக்காட்ட விழைகிறேன்.

சமூக நீதியைப் பேசுகிற எழுத்து என்றால் அது ‘தீண்டத்தகாதது’ என்பதுபோல அந்த எழுத்தை மட்டுமல்ல அதை எழுதியவர்களையும் ஒதுக்கி வைத்தே பார்க்கிற இலக்கிய மேதாவிலாசங்கள் கொஞ்சப்பேர் இருக்கிறார்கள். இலக்கியத் தூய்மை வாதம் பேசி அதை மறைத்துக்கொண்டும் நிற்கிறார்கள். சமூகநீதியைப் பேசுகிற இலக்கியத்தை பிரச்சார இலக்கியமாகவும் தீட்டு இலக்கியமாகவும் கட்டமைத்ததன் மூலமாக ஒரு தலைமுறை இளைஞர்கள் அதைப் பார்த்து விடாதவாறு திரையிட்டும் மறைத்தார்கள். ஆனாலும் அதையும் கடந்து செல்லும் வல்லமை அந்த இலக்கியத்துக்கு உண்டு என்பதை காலம் நிரூபித்திருக்கின்றது.



**இமையம்**

அச்சு ஊடகங்கள் சொல்வதே ஆவணமாக இருந்த காலகட்டத்தில் ஈழத் தமிழர்களின் வீரியமிக்க விடுதலைப் போராட்டத் தகவல்களும் களநிலவரங்களும் முழுமையாக வெளியில் வந்துவிடாமல் எப்படியெல்லாம் திட்டமிட்டு மறைத்தார்கள் என்பதை நானறிவேன். ஆனால், அடுத்த சில ஆண்டுகளில் உலகத்தில் முகிழ்த்தெழுந்த இணையத்தின் வருகை அவர்களது பொய்யுரைகளையெல்லாம் கிழித்துத் தொங்கவிட்டது.

புதுமைப்பித்தனுக்கு மேலே கொண்டுபோய் மௌனியை நிறுத்துவதற்கு புதிய ஆவணங்களை உருவாக்குவதற்கான செயல்பாடுகளை முன்னெடுத்தவர்களையும் அதற்காக அவர்கள் மாறிமாறி உரையாடிக் களித்ததையும் பக்கத்திலிருந்தே கேட்டுக் கேட்டு வளர்ந்தவன் நான். எனவே, அந்தப் பெரிய மனிதர்களின் தந்திரமும் எனக்குத் தெரியும்; தவிப்பும் எனக்குத் தெரியும்.

‘என்னையும் கடந்து செல்லுங்கள்’ என்றுதான் தந்தை பெரியார் சொல்கிறார். குதிரைக்கு கட்டி வைத்திருக்கிற மறைப்பை நீண்ட காலத்துக்கு பாதுகாக்க முடியாது. குதிரை நிற்கிற வரை அல்லது நடக்கிற வரை அது பயன்படும். பாய்ச்சலைக் காட்டத் தொடங்கிவிட்டால் மறைப்புக்கு வைத்திருக்கிற துணிகள் எல்லாம் கிழிந்து நார்நாராகிவிடும்; திராவிட அரசியலை மேடைகளிலும் உழைக்கும் மக்களின் வாழ்வியலை,எழுத்துகளிலும் வெளிப்படுத்திவரும் சகோதரர் எழுத்தாளர் இமையத்தின் படைப்பின் முன்னால் அடிப்படைவாதம் மண்டியிட்டுக்கிடப்பதாகவே படுகிறது எனக்கு.

**கட்டுரையாளர்: தமிழ்நாட்டின் தனித்துவமான ஓவியர்**

கட்டுரை

**நிகழ் அய்க்கண்**

ayykan1960@gmail.com

# வலதுசாரி அடையாள அரசியலும் வதைபடும் மனிதநேயமும்

தாராளவாததிற்குப்பிறகான காலகட்டத்தில் இந்தியாவிலுள்ள பெரும்பாலான மக்கள் சந்தைமயம் - வலதுசாரி அடையாளஅரசியல் - கல்வியில் திட்டமிட்டு உற்பத்தி செய்யப்படுகிற அறியாமை எனும் பாதிப்புக்களினால், கடுந்துயரங்களைச்சுமந்து வாழ்ந்து வருகின்றனர். இவற்றினுள் சந்தைமயமானது, தொழிலாளர்களுக்கு குறைந்த ஊதியமளித்து மற்றும் வேலைவாய்ப்பின்மைக்கு வழிவகுத்து ஏற்றத்தாழ்விற்கு வித்திடுகிறது. அடுத்து, வலதுசாரி அடையாளஅரசியலானது, இதற்கு முன்புவரை தேசத்தின் முகங்களுள் ஒன்றாக இருந்துவந்த மதச்சார்பின்மையினை சிதைத்திருப்பது மட்டுமின்றி, மத அடிப்படையில் மக்களைப் பிளவுபடுத்தி, சிறுபான்மையினர் மற்றும் இடம்பெயர்வோர்களை ஒடுக்குவதின் மூலம் ஏற்றத்தாழ்வுக்கு காரணமாக இருக்கின்றது. அடுத்ததாக, ஆட்சியாளர்கள் கல்வியை பயிற்றுவித்தலினூடாக மாணவர்களிடையே காரணகாரியங்களை கண்டடைவதற்கும், விமர்சனப்பார்வையை வளர்த்தெடுப்பதற்குப் பதிலாக, கார்ப்பரேட்டுகளுக்கு நலன்பயக்கும் கல்வியினை பயிற்றுவிப்பதனால், அறியாமையை திட்டமிட்டு உருவாக்கி, அவர்களிடத்தேயும் ஏற்றத்தாழ்வு அதிகரிப்பதற்கு உதவிடுகின்றனர். மேற்குறிப்பிட்ட மூன்றுவகையான ஏற்றத்தாழ்வுகளுமே செல்வமும் - அதிகாரமும் ஒரு சிலரிடம் குவிவதற்கும், மக்களைப் பிளவுபடுத்துவதற்கும், பெரும்பாலான ஏழைகளை மேலும் ஏழைகளாக்கி விழிபிதுங்க வைத்திருக்கின்றதே ஒழிய, அம்மக்களினது வளமான வாழ்விற்கோ, அல்லது வளப்பகிர்விற்கோ உத்திரவாதம் ஏதும் அளிக்க முடியாத அவலம்.

தாராளமய காலமானது வளப்பகிர்வின் மூலம் ஏழைமக்களின் வறுமையை ஒழிக்க முற்பட்டது. ஆனால், சந்தைமய காலமோ பொதுவளத்தினை தனியாருக்கு அளித்து அதன்மூலம் வளர்ச்சியை எட்ட முற்படுகிறது. இதனால், பணக்காரர்களுக்கும்-ஏழைகளுக்கும் இடையிலான ஏற்றத்தாழ்வானது அப்போது இருந்ததைவிட தற்போது பன்மடங்கு கூடியிருப்பதிலிருந்து, ஏழைமக்களுக்கு ஏற்பட்டுள்ள கொடும்பாதகச்செயலுக்கு காரணம் யாரென சொல்லித்தெரிய வேண்டியதில்லை.

சந்தைமய காலத்தில், மக்களுக்கிடையேயான அரசியல், பொருளாதாரம் சார்ந்த வேறுபாடுகள் வர்க்கம் சார்ந்ததாக அல்லாமல், கலாச்சாரம் சார்ந்து அணுகுபவையாக மாறியபிறகு, அடையாளம் என்பது முக்கியத்துவம் பெற்றிருக்கிறது. இதனால், பாரம்பரியம், மதம், மொழி, வரலாறு, மதிப்புக்கள், வழக்காறுகள், நிறுவனங்கள் வாயிலாக மக்கள் தங்களது அடையாளங்களை வரையறுத்துக்கொள்ள ஆரம்பித்திருக்கின்றனர். அதுமட்டுமல்லாது, அரசியலின் வழியாக தங்களது நலன்களை மேம்படுத்திக்கொண்டு, அடையாளங்களை வரையறுத்துக் கொள்பவர்களாக ஆகியிருப்பதனையும் கவனிக்கமுடிகிறது.

சுதந்திரத்திற்கு முன்பான ஆட்சிக்காலத்தில், சமூகஅளவில் பின்தங்கிய சமூகத்தினர்-சிறுபான்மையினர்- விளிம்புநிலையினர் தங்களுடைய நலனுக்கென தனித்தனி அமைப்பாகத்திரண்டு, ஆங்கிலேயர்களிடம் உரிமை - பிரதிநிதித்துவம் வேண்டி கோரிக்கைகளை வைத்து சலுகைகளைப்பெற்றனர். சுதந்திரத்திற்குப்பிறகான, ஜனநாயக ஆட்சிக்காலத்திலும், இவ்வமைப்புக்கள் தங்களுடைய கோரிக்கைகளை ஆட்சியாளர்களிடம் முறையிட்டு, உரிமைகள் - சலுகைகளை பெறவும் செய்தனர். அது சட்டத்தின் ஆட்சிக்காலமாக இருந்தது.

ஜனநாயகக்காலத்தில், மதம் - சாதி - இனத்திற்கு அப்பாற்பட்டு 'பொது' எனும் சிந்தனையை ஆட்சியாளர்கள் மக்களிடையே கட்டமைத்து பேணிவந்தனர். இதனுடன் சமூகத்தினை அளவீடு செய்ய வர்க்கம் சார்ந்த பார்வையும் முன்வைத்து

அனுகப்பட்டது. அதுவெல்லாம் தற்போது, சிதறடிக்கப்பட்டு, மதம்- சாதி- இனம் சார்ந்து மக்கள் அடையாளப்படுத்தப்படுபவர்களாக இருக்கின்றனர். இப்படி மாறி நிற்கும்போது, பன்மைத்துவ அணுகுமுறை என்பதும், சமதான சகவாழ்வு என்பதும் கேள்விக்குறியாகி நிற்கிறது.

அடையாளஅரசியலினை சிறுபான்மையினர் கையிலெடுக்கும்போது, அது அரசியல் சட்டத்திற்கு உட்பட்டதாக இருப்பது மட்டுமின்றி, ஜனநாயகத்தன்மையுடையதாகவும் இருக்கிறது. அதனையே பெரும்பான்மையினர் முன்னெடுக்கும்போது அவர்களினது நலனுக்கானதாக மட்டும் மாற்றம் பெற்று, எதேச்சதிகாரமாக மாறிடுகிறது. அதாவது, வலதுசாரி அடையாள அரசியலாக உருவெடுத்து நிற்கிறது.

இக்காலத்தில், சமூகத்தில் ஆதிக்கம் செலுத்திவருகிற பெரும்பான்மையான மக்கள், அரசியலிலும் ஆதிக்கம் செலுத்தும் நோக்கில், தங்களது அடையாளஅரசியலை தீவிரத்துடன் முன்னெடுக்கவும் - கட்டமைக்கவும் - பரவலாக்கவும் செய்கின்றனர். இதன்காரணமாக, சிறுபான்மையினர், விளிம்புநிலையினர் ஜனநாயகக்காலத்தில் பெற்றுவந்த உரிமை மற்றும் சலுகைகள் கொஞ்சம் கொஞ்சமாக பின்னுக்குத்தள்ளப்பட்டிருக்கின்றன.

இந்திய கலப்புப்பொருளாதார கட்டமைப்பானது சிதைக்கப்பட்டு தனியார்மயமாகி வருவதினால், அதன் பயன்கள்யாவும் தற்போது தனியாருக்கு பலனளிப்பதாக மாறிவிட்டது. எந்தஅளவுக்கு வலதுசாரித்தன்மை கொண்ட ஆட்சியாளர்கள் தேசத்தின் பொதுத்துறையை - வளங்களை தனியாருக்கு அனுமதிக்கிறார்களோ, அந்தஅளவுக்கு அவர்களுக்கிடையேயான உறவு என்பது அசைக்க முடியாததாக மாறி இருக்கின்றது. வலதுசாரி ஆட்சியாளர்கள் இதன்மூலம் தங்களுடைய கருத்தியல்களையும் ,அஜண்டாக்களையும் கச்சிதமாக நிறைவேற்றிக்கொள்கின்றனர்.

சுருக்கமாகக்கூறின், பொருளாதாரக் கட்டமைப்பானது இங்கே மேலும்மேலும் தனியுடைமையாகிறது. அதற்கேற்றவாறு வலதுசாரி அடையாளங்களுடன் கூடிய மதம்- சாதிசார்ந்த அரசியலும் சமூகத்தளத்தில் மேலெலும்புகிறது. அதேபோன்று எந்தஅளவுக்கு வலதுசாரி அடையாளஅரசியல் மேலெழுகிறதோ அந்தஅளவுக்கு அவர்களிடையே சமூகநீதிக்கு எதிரான கருத்துக்களும் மேலேழும்புகிறது. இதுதான் இன்றைய யதார்த்தம்.

தனிமனித நுகர்வு என்பதுஎந்த அளவுக்கு சந்தைப்பொருளாதார வளர்ச்சிக்கு அவசியமோ, அதுபோல, சமூகத்தளத்தில், வலதுசாரி மதம்-சாதி அடையாளங்களின் வளர்ச்சிக்கு தனிமனித ஈடுபாட்டுடன் கூடிய நுகர்வு என்பதும் அவசியமாகிறது. இதிலிருந்து, நுகர்வு என்பது, சந்தைமயத்திற்கும்- வலதுசாரி அடையாள அரசியலுக்கும் பொதுவாக இருப்பதைப் பார்க்கமுடியும். இதில் வலதுசாரி அடையாளஅரசியலானது உலகில் வெறெங்கும் இல்லாத அளவுக்கு இங்கு மட்டும் மதமும் சாதியும் ஒன்றையொன்று பிணைந்து செயல்படுவதாக இருப்பதைக் காணமுடியும். அதாவது, மதத்திலிருந்து சாதியை தனியே பிரித்தெடுக்க முடியாது. அதுபோல, சாதியின்றி மதமும் தனித்து இயங்க முடியாது. குறிப்பாகச் சொல்லவேண்டுமெனில், சாதிகளின் தொகுப்புதான் மதம். இதில், மதமானது நால்வர்ணத்தை அடிப்படையாகக்கொண்டுள்ளது. சாதியானது படிநிலையமைப்பு முறையைக் கொண்டுள்ளது. இரண்டுமே, மதத்தின் சடங்கு- சம்பிரதாயங்களைப்பின்பற்றி இயங்குவதாக இருக்கின்றது.

இங்கே, மதம்சார்ந்த அடையாள அரசியலை எடுத்துக்கொண்டால், தனது அடையாளங்களான போலிதேசியவாதம் - மொழி - கலாச்சாரம்- பண்பாட்டினை கட்டமைக்கும் நோக்குடன், பொது உரையாடலையே பெரும்பான்மை X பிறர் என மாற்றிட முயல்கிறது. பிறமதங்களின் மீது அவதூறு பரப்புவது மட்டுமல்லாது அவற்றினை வெகுமக்களிடையே எதிரியாகக்கட்டமைத்து வன்முறை நிகழ்த்துவது மட்டுமின்றி, அவற்றின் மூலமாக பெரும்பான்மையினர்களை ஒருங்கிணைத்துக்கொள்வதாகவும் இருக்கின்றது. மேலும், தனது வலதுசாரி அடையாளங்களை நிலைநிறுத்திக்கொள்வதற்கு புனைவுமிக்க புராண - இதிகாசங்களை ஆதாரங்களாக்கி, அதையே உண்மையெனவும் கட்டமைக்கிறது. இதுமட்டுமல்லாது, ஆட்சியதிகாரத்தின் துணையுடன், வன்முறைமூலம் ஒழுங்கை நிலைநாட்டவும் ; லவ்ஜிகாத் மற்றும் பிறமதம் மாறுவதற்கு எதிராகவும் ; பசுப்பாதுகாப்பிற்காகவும்; சட்டங்கள் இயற்றி தன் நலனை சட்டபூர்வமாக்கிக்கொள்கிறது. அதுமட்டுமின்றி, தனது அதிகாரம் - பணபலத்தின் உதவியுடனும், ஊடகங்கள் - கல்வி - தேர்தல் ஆகியவற்றின் துணையுடனும் தன்னை திரும்பத்திரும்ப மறுசுழற்சி செய்து கொள்ளவும் செய்கின்றது. எப்படியெனில், எங்கே ஊடகங்கள் வலதுசாரி அடையாள அரசியலின் ஊற்றுக்கண்ணாகவும், பிரச்சாரப் பீரங்கியாகவும் விளங்குகிறதோ, எங்கே வலதுசாரிகள் தேர்தலில் வெற்றிபெற்று ஆட்சி அமைக்கிறார்களோ, எங்கே கல்வி அதிகளவில் தனியார் மயமாக்கப்படுகிறதோ அங்கெல்லாம் வலதுசாரிகள் தங்களது அடையாள அரசியல் பிரச்சாரத்தின் மூலம் பெரும்பான்மையினர் ஒன்றுபடுத்தப்பட்டிருக்கின்றனர் என்பதனை சுருக்கமாக புரிந்துகொள்ள முடியும். மத அடையாளங்களை உக்கிரமாக முன்னெடுக்கும்போது பிற உள்முரண்கள் பின்னுக்குத்தள்ளப்படுவது என்பது வலதுசாரிகளுக்கு வசதியாய்ப் போய்விடுகிறது.

தேசம் தழுவிய மதம்சார்ந்த அடையாளஅரசியல் மேலோங்கும் போது, அதனோடு ஒட்டிப்பிறந்த சாதி அடையாளங்களும் கூடவே எழுகின்றன. சாதியுங்கூட, படிநிலையில் தனக்கு மேலான சாதிகளிடம் இணக்கமும், தனக்குக்கீழாக உள்ள சாதிகளிடம் ஆதிக்கம் செலுத்துவதாகவும் இருக்கின்றன. சாதிஅரசியல் பெரும்பாலும் பகுதிசார்ந்து அல்லது மாநிலந்தழுவியதாக

இருக்கின்றது. இவர்கள் தங்களது சாதிஆதிக்க அடையாளங்களை கட்டமைப்பது என்பது பெரும்பாலும் ஆங்கிலேயர்களை எதிர்த்து நின்ற காலத்திற்குப்பிறகுதான்.

இவர்கள் ஒரேநேரத்தில் சமூக நீதியைப் பற்றிப் பேசுபவர்களாகவும் அதே சமயத்தில் தனது சாதி அடையாளத்தை விட்டுக்கொடுக்காமல், படிநிலையில் தனக்கு கீழுள்ள சாதிகளிடையே பாகுபாடு காட்டுபவர்களாக இருக்கின்றதைப்பார்க்க முடியும். உதாரணத்திற்கு கூறவேண்டுமென்றால், பாட்டாளி மக்கள் கட்சியானது ஒருபக்கம் சமூகநீதி - இடஒதுக்கீடு பற்றிப்பேசுகிறது. அதேசமயம் தனது சாதி அடையாளத்தை விட்டுக்கொடுக்காமல் இன்னொருபக்கம் தனது சாதிக்கு கீழானவர்களை ஒடுக்கவும் செய்கிறது. இதேபோன்று, சமூகநீதி-சாதிஒழிப்பு பற்றி பேசிவந்த புதியதமிழகம் கட்சியும் எஸ்.சி எனும் அடையாளத்திலிருந்து தன்னை விடுவித்து பி.சி எனும் அடையாளத்திற்குள் சேர்க்கக்கோருவது என்பது, அவ்வடையாளத்திலிருந்து தன்னை விடுவித்துக்கொள்ளத்தான் என்றாலும், மீண்டும் படிநிலையில் மேலமர்ந்துகொண்டு சாதி எனும் அடையாளத்திற்குள் சிக்கி, தனக்கு கீழானவர்களை ஒடுக்கவே செய்யும்.

மத - சாதி அடையாளங்கள் இரண்டும் சேர்ந்து, ஜனநாயகத்தின் தூண்களாக உள்ள சட்டசபை-நாடாளுமன்றம்- அதிகார வர்க்கம்- நீதித்துறை - ஆகியவற்றினுள் தனது அடையாளங்களை ஆழமாக உறுதிப்படுத்திக்கொள்வது மட்டுமல்லாது, கல்வி - ஊடகம் - தேர்தலின் வாயிலாகவும் தங்களது அடையாளங்களை பரவலாக்கிடவும் செய்கின்றன. இவ்விரண்டும் சேர்ந்து சமூகத்தில் கலப்பை, கலந்துண்ணலை மறுக்கும் விதமாகவும், காதல்திருமணங்களுக்கு எதிராக ஆணவப்படுகொலைகளை நிகழ்த்துபவர்களாகவும் இருக்கின்றன.மதம்-சாதி சார்ந்த அடையாள அரசியல் பெரும்பாலும், கடந்தகால வரலாறு - கலாச்சாரம் பற்றி கேள்வி எழுப்புவதை சர்ச்சைக்கு உள்ளாக்குகிறது. அதேசமயம் நிகழ்காலத்தில் பொது - உரிமை- ஜனநாயகம் - வர்க்கம் பற்றியெல்லாம் கவலைப்படுவதில்லை. அனைத்துமட்டத்திலும் அதிகாரத்தினூடாகதன்னைநிலைநிறுத்திக்கொண்டு, பிறரை ஒடுக்குகிறது. அதுவே கைநழுவினால் ஒதுங்கிக்கொள்கிறது. படிநிலையில் கீழுள்ள சாதிகளை பிளவுபடுத்தி தனது அதிகாரத்திற்கு கீழ்பணிய வைக்கிறது. தகவல் தொடர்பு-தொழில்நுட்பம் இவற்றினை கையிலேந்தி தனது வெளியை இட்டு நிரப்பிக்கொள்கிறது. அதாவது, பொய்களை கட்டமைப்பது ; போலி விஞ்ஞானச் சிந்தனைமுறைக்கு முக்கியத்துவம் ; தெரிந்தே பிறரை ஒதுக்கி வைப்பது என்பதாக இருக்கின்றது. இத்தகைய அடையாளஅரசியலானது, ஜனநாயத்தை மறுப்பதாக இருப்பது மட்டுமின்றி, அதனோடு இயைந்து நிற்கிற மனிதநேயத்தையும் சேர்த்து அழிப்பதாக இருக்கின்றது.

எங்கெல்லாம், ஜனநாயகத்தின் குறிக்கோள்கள் மற்றும் நடைமுறைகளின் மீது அலட்சியம் அல்லது வெறுப்பு காட்டப்படுகிறதோ : வன்முறையை கட்டவிழ்த்து விடப்படுகிறதோ : ஜனநாயகத்திற்கு எதிரான சிந்தனைமுறையை கொண்டிருப்பது மட்டுமின்றி நடந்து கொள்ளவும் செய்கின்றனரோ; சிறுபான்மை - விளிம்பிநிலையினர்களை பலிகடாவாக ஆக்குகின்றனரோ, அங்கெல்லாம் மதம்-சாதி சார்ந்த பாஸிச அல்லது வலதுசாரி அடையாளஅரசியலின் ஆட்டம் அதிகமாக இருப்பதை உணர்ந்து அதற்கேற்றவாறு போராட்டத்தின் பாதையை வகுத்துக்கொள்வது அவசியமாகிறது.

- மதம் - சாதி அடையாள அரசியலை முன்னெடுப்பவர்களுக்கு எதிராக, ஜனநாயகம் - மதச்சார்பின்மை - பன்மைத்துவ அணுகல் - சட்டத்தின் ஆட்சி சார்ந்த கருத்தியல்களை முன்னெடுப்பது தேவை -
- வலதுசாரிகள் ஒரேதேசம் - ஒரேமொழி - ஒரேதேர்தல் என்பதை முன்னெடுப்பதற்கு எதிராக மாநில அளவிலான மொழி - இனம் - உரிமை அடிப்படையிலான தனித்துவ அடையாளத்தினை வலுவாக முன்னெடுப்பது -
- வலதுசாரி மத அடையாள அரசியலானது, பிராமணர்களால் வழி நடத்தப்படுவது போல், சாதி அடையாள அரசியலானது பகுதிசார்ந்த ஆதிக்கச்சாதிகளால் முன்னெடுக்கப்படுகிறது. இதனால் சமூகநீதியென்பது கேள்விக்குறியாகிவிடுகிறது, சமத்துவ, சமூகநீதியை அனைத்து மட்டத்திலும் இட்டுநிரப்புவது -
- மதம்-சாதி அடையாள அரசியலை முன்னெடுப்பவர்களின் கட்டுப்பாட்டில்தான் சமயச்சடங்கு - சம்பிரதாயங்கள் யாவும் நிரம்ப இருக்கின்றன. கல்வியும் - ஊடகங்களும் இதற்கு துணை நிற்கின்றன. மதம்- சாதி அடையாளத்திற்குள் வராதவர்களும்கூட இதற்குள் சிக்கிச்சீரழிய வேண்டியிருக்கின்றது. இதனை உரையாடலுக்குவது -பகுத்தறிவுக்கு மாறான கட்டமைப்புகள் மற்றும் புனைவுகளை கேள்விக்குட்படுத்தி, விஞ்ஞானச்சிந்தனைமுறைகளை கல்வி - ஊடகங்களின் வழியாக வளர்த்தெடுப்பது -
- தேர்தலின்போது மக்களை பிளவுபடுத்தும் நோக்கங்கொண்ட வலதுசாரி மத - சாதி அடையாள அரசியலை இனங்கண்டு விலக்கிவைப்பது -

எப்படி, ஒருகிருமி உயிருள்ள உடம்பிற்குள் புகுந்து பரவலாகி, உடலியக்கத்தைக்கட்டுப்படுத்தி தனதாக்கிக்கொள்வதுபோல, மதம்-சாதி சார்ந்த வலதுசாரி அடையாளஅரசியல்வாதிகளும் இதுபோன்று ஊடுருவி சமூக இயக்கத்தைக்கட்டுப்படுத்தி தனதாக்கிட முயல்கின்றனர். கவனம் !



Printed by H. Dhanasekaran and Owned, published by V. Muthaiah and Printed at Sekar Offset Printers, New No. 50 (Old No. 168/1) Big Street, Chepauk, Chennai - 600 005 and Published at 17/14, Diwan Rama Road, Purasaivakkam, Chennai - 600 084. Editor: V. Muthaiah

ஒரு நினைவுப்பதிவு

## கவிஞரும் இயக்குநருமான தாமிரா தன் மகனுக்கு எழுதிய கடிதம்



# உறுதியாய் நின்று போராடு... உயிர் தொலைக்காமல் களமாடு...!

அன்பு மகனே...!
அரசியல்சூது நிறைந்த இந்ததேசத்தில்,
உனதுஎதிர்காலம் குறித்த அச்சம் தான்
இந்தக்கடிதத்தை எழுதத் தூண்டுகிறது !

உன்னுள்ளிருக்கும்
அன்பையும், அறத்தையும்
காவுகேட்கின்ற காலமாக இருக்கிறது,
இந்தக் காலம்.

என்போன்ற தந்தைகளெல்லாம்,
தன்மக்களை
தற்கொலைக்குத் தப்பிய உயிராகப்பார்ப்பது
எத்தனை வன்கொடுமை!

இப்போதுதான்
நீ உறுதியான நம்பிக்கையுடனும், தெளிவுடனும்
இருக்கவேண்டும் மகனே!

அவர்கள் என்நிகழ்காலத்தையும்
உன்எதிர்காலத்தையும்
நசுக்கும் வன்மத்துடன்
காய்நகர்த்துகிறார்கள்.

இந்த சதுரங்கஆட்டத்தில்
எண்ணிக்கையில் நமக்கு பலம்அதிகம்.

ஆனால் மகனே!
ஒற்றுமையிலும், அதிகாரத்திலும்
அவர்களதுகை ஓங்கி நிற்கிறது.

ஆட்டத்தின் விதிமுறைகள்
நமக்கு மட்டும்தான் !
அவர்கள்
எத்தனைக் கட்டம் வேண்டுமானாலும்
தாண்டி வருவார்கள்.
நம்மை வீழ்த்துதல் மட்டுமே
அவர்களது நோக்கம் !
இங்கே வெற்றிகொள்தலை விட
நம்மை தக்கவைத்துக் கொள்தலே முக்கியம்.

உயிர்ஆயுதம் என்ற சொல்லை
சற்று ஒதுக்கிவை மகனே !
உனது தூக்குக்கயிற்றை
உன்கையில் கொடுத்திருக்கிறார்களே !
அதுதான் அவர்களது சூழ்ச்சி.
நீ அதை பயன்படுத்தினால்
அவர்களுக்குத்தான் வெற்றி !

உன் மரணத்தால்
அவர்களை வெற்றிகொள்ளச் செய்யாதே!
அதிகாரம்என்பது சுற்றப்பட்ட பம்பரக்கயிறு!
ஆட்சிஎன்பது சுழல்கின்ற பம்பரம்!
சுழலும் ஆட்சிப் பம்பரம்
ஒருநாள் வீழ்ந்தே தீரும்!

காலமெலாம் சுழல்வதற்கு
இது சனாதனம் அல்ல
ஜனநாயகம்!

சோர்ந்து போகாதே மகனே!
சற்று பொறு
ஒன்றுபடு!

நாம் இணைந்து நின்றால்
நம் மூச்சுக்காற்றில்
அணைந்துவிடக் கூடியதுதான்
அவர்களது அதிகாரவெளிச்சம்..!

இது தமிழ்நிலம்
நாம் தமிழ்இனம்..
இதுதவிர்த்து நம்மில்
எந்த பேதமுமில்லை..
சாதியாகவோ மதமாகவோ
யாரையும் விலக்கி வைக்காதே மகனே!

குறிப்பாக
சங்கிகளென யாரையும் இகழாதே விலக்காதே!
அவர்கள்
தங்கள் கழுத்திற்குவரும் குறுவாளை
அணிகலன் என எண்ணி மகிழும் அப்பாவிகள்!
தனக்காக கண்ணீர்சிந்தும்
முதலைகளை
நம்பும் ஆடுகள்!

நீ எதைஇழக்கிறாயோ?
அதைத்தான்
அவர்களும் இழக்கிறார்கள்
உனக்கு என்னதுரோகம் இழைக்கப்படுகிறதோ?
அதே துரோகம்தான்
அவர்களுக்கும் இழைக்கப்படுகிறது.

கடவுள் என்கிற
ஒரு மந்திரச்சொல்லை உபயோகித்து
அவர்களை மயக்கி வைத்திருக்கிறார்கள்.

Kaakkai Cirakinile (Monthly) Register of Newspapers for India No. TNTAM / 2012 / 43921
Postal Registration No. TN / CCN / 588 / 2019-2021 WPP No. TN/PMG (CCR) / WPP-354/2019-2021.
ISSN 2348 - 4160 Date of Publication, 25th of Every Month Posted at patrika channel,Egmore. between 29th-4th of every month



ஜிடிபி குறைகிறதா?
ஒரு கடவுளை சுழற்றிப்போடு..
கல்வியைக் களவாட வேண்டுமா?
மற்றொரு கடவுளை சுழற்றிப்போடு.
எதற்கும் சிக்கவில்லையென்றால்
தேசபக்தியைத் திருப்பிப்போடு.

அவர்களது ஆட்டத்தில்
கடவுளும் தேசபக்தியும்
ஒரு பகடைக்காய்!

நமக்குத்தான்
விநாயகன், முருகன் ,
ராமர், யேசு, அல்லா....
அவர்களுக்கு கார்ப்பரேட்தான் கடவுள்.

நம் வளங்களைக்
கொள்ளை கொள்தல்தான் நோக்கம்.
நமது பண்பாடுகளையும்
பழக்க வழக்கங்களையும்
அரித்தெடுக்க போடப்பட்டிருக்கிறது.
அவர்களது மடிவலை..!

கடவுளைத் திருடுவதிலிருந்து
காய்கறிகளை மலடாக்குவதுவரை
யாவற்றையும் கவனத்துடன் செய்கிறார்கள்..!

இப்போது
கல்வியை நோக்கி நீண்டிருக்கிறது
அவர்களது ஆயுதம்.
தகுதிப்படுத்துகிறோம் என
சொம்படிப்பார்கள் மகனே
நம்பி விடாதே...!

நாம் யாருக்கும் குறைந்தவர்கள் அல்ல..!
ஆழத்தோண்டி தேடிஎடுக்கும்
நம் பண்டைய வரலாற்றில்
திமிறித்திமிறி மேலெழுகிறது
நமது அறிவும், நாகரீகமும்,கட்டுமானமும்...!

அங்கு
அவர்களது கடவுளர் இல்லை.
இந்தத் தரவொன்று போதும் மகனே...!
பிறப்பில் இழிவில்லை
நாம் எவனுக்கும் அடிமையில்லை...
பதட்டம் கொள்ளாதே
பசப்பு வார்த்தைகளில்
ஒருபோதும் மயங்காதே...

எதிரிகளின் இலக்குகளை
கவனத்தில் கொள்..
அதை
அருகிருக்கும் சகோதரனை உணரச் செய்.

ஒன்றுபடுதலும்
உறுதி கொள்ளலும் தான்
இப்போதையத் தேவை.

அந்த விற்பனைச் சந்தை
துவங்கி விட்டது.
வியாபாரமும்
நடந்து கொண்டிருக்கிறது.
நாம் வேடிக்கை பார்க்கும்
மனிதர்களாக இருக்கிறோம்.

நம்மில் அந்த வியாபாரத்திற்கு
முட்டுக்கொடுக்கும் மனிதர்களும் இருக்கிறார்கள்.
முற்றுமுதலாக விற்றுத் தீர்ந்தபின்..

அதை மீட்டெடுக்கும் போர்
உன் கைவசப்படலாம்..

நீ
சுழியத்திலிருந்து துவங்க நேரலாம்.
எதற்கும் கவலை கொள்ளாதே மகனே..

சுழியத்திலிருந்து துவங்கி வென்றெடுக்கலாம்.
உலகிற்கே சுழியத்தை கற்றுத் தந்தவர்கள் நாம்.
அச்சம் கொள்ளாதே...!

இந்தப் போருக்கு வேர்எது என கண்டுணர்..
மூலம் அறி
அதை வேரோடுஅழி
இத்தனைக்கும் காரணம்
ஒரு நூலிழைத் தவறுதான்..
சில நூற்றாண்டுகளாய் தொடர்கிறது....

அறுத்தெறிவது அத்தனை கடினமில்லை
அத்தனை எளிதுமில்லை.....
இனி யாவும் உன்கையில்
தலைமுறைத்தவறை
சீர் செய்யும் பொறுப்பு
உன்னிடம் இருக்கிறது..

உறுதியாய் நின்று போராடு..
உயிர் தொலைக்காமல் களமாடு....!